## அகத்தியர் - நாகமுனிவர்

# நயனவிதி

(உரையுடன்)



59/ நூ-தொ 18/ நயன 4.
அகத்தியர் நயன விதி
பக்கம் 216

அருள்மிகு பழநி தண்டாயுதபாணிசுவாமி
திருக்கோயில் சித்தமருத்துவ நூல்
வெளியீட்டுக்குழு

1976

வெளியீட்டுத் தொடர் எண் : 30

# அகத்தியர் - நாகமுனிவர்

# நயனவிதி

(உரையுடன்)

அகத்தியர் நயனவிதி உரையாசிரியர் :
கரந்தைக் கண்மருத்துவர் டி.எஸ். அமிர்தலிங்கம் பிள்ளை

நாகமுனிவர் நயனவிதி உரையாசிரியர் :
டாக்டர் வி. விசுவநாதன், எல்.ஐ.எம்.,
சிறப்பு அலுவலர், சித்த மருத்துவ அறிவியல்
வளர்ச்சிக் குழு, சென்னை-29.



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினருக்காக

கௌரவத் தலைவர் :
டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்.,
அவர்களால் பதிப்பிக்கப்பட்டு
தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பெற்றது

கி.பி. 1976 விலை ரூ. 10-65

முதற் பதிப்பு : 1923
இரண்டாம் பதிப்பு : 1976

உரிமை :
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600 029.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில்

அறங்காவலர் குழு

திரு. கு. சின்னப்பன், தலைவர், அறங்காவலர் குழு
,, அ. தமிழரசு அறங்காவலர்
,, இரா. சின்னதுரை ,,
,, புலவர் சி. பழனிச்சாமி, எம்.எல்.ஏ. ,,
,, ஏ. பச்சையப்ப கவுண்டர் ,,

சி. எஸ். தீனதயாளு, பி.எஸ்ஸி., பி.எல்.
துணை ஆணையர், நிருவாக அதிகாரி.

அச்சிட்டோர் :
மேகலா அச்சகம்,
13-B, கந்தப்ப கிராமணி தெரு,
புரசைப்பாக்கம், சென்னை-600 007.

அருள்மிகு
பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
**சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு**

டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600029. ... தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி.சி.ஐ.எம்.,
தலைவர், இந்திய மருத்துவ மத்திய கழகம்,
சென்னை-600005. ... பொருளாளர்

திரு. கு. சின்னப்பன்,
தலைவர், அறங்காவலர் குழு,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி. ... உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, ஆர்.ஐ.எம்.பி.,
துணைத் தலைவர்,
இந்திய மருத்துவ மத்திய கழகம். ... உறுப்பினர்

திரு. சி. எஸ். தீனதயாளு, பி.எஸ் சி., பி.எல்.,
நிருவாக அதிகாரி, அருள்மிகு பழநி
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழநி. ... உறுப்பினர்

டாக்டர் பு. மு. வேணுகோபால், எச்.பி.ஐ.எம்.,
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை
சென்னை-600029. ... சிறப்பு அழைப்பினர்

சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு
**உறுப்பினர்கள்**

1. டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்., பொறுப்பு அலுவலர், சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம், சென்னை-600029. ... தலைவர்
2. டாக்டர் பு. மு. வேணுகோபால், எச்.பி.ஐ.எம்., இயக்குநர், இந்திய மருத்துவத்துறை, சென்னை-600029. ... உறுப்பினர்-செயலாளர்
3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன், எச்.பி.ஐ.எம்., முன்னாள் இயக்குநர், இந்திய மருத்துவத்துறை, சென்னை-600005. ... உறுப்பினர்
4. டாக்டர் எம். சண்முகவேலு, எச். பி.ஐ.எம்., முன்னாள் மருத்துவப் பேராசிரியர், இராமநாதபுரம். ... உறுப்பினர்

5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன், எல்.ஐ.எம்.,
ஒய்வு பெற்ற மருத்துவ அலுவலர், ஊராட்சி ஒன்றிய-
மருந்தகம், காவேரிப்பாக்கம், வட ஆர்க்காடு. ,,

6. டாக்டர் எ. சிறில்ஹென்றி, எல்.ஐ.எம்.,
ஒய்வுபெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி. ,,

7. டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி.சி.ஐ.எம்.,
தலைவர், இந்திய மருத்துவ மத்திய கழகம்,
சென்னை-600005. உறுப்பினர்

8. டாக்டர் ப. சிற்சபை, ஆர்.ஐ.எம்.பி.,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்திய கழகம். ,,

9. பண்டிட் பெ. முத்துகருப்பப்பிள்ளை, ஆர்.ஐ.எம்.பி.,
தலைவர், சித்த மருத்துவ சங்கம், மதுரை. ,,

10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம், ஆர்.ஐ.எம்.பி.,
தலைவர், சென்டிரல் சித்தா மெடிக்கல் கவுன்சில்,
சென்னை-600012. ,,

11. டாக்டர் என். சேதுரகுநாதன்,
தமிழ்ப்பேராசிரியர், ,,
விருதுநகர்.

12. திரு. நீ. கந்தசாமிப்பிள்ளை,
முன்னுள் செயலாளர்,
தஞ்சை சரசுவதி மகால் நூலகம்,
சென்னை-600020. ,,

## சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி பி.ஏ., ஜி.சி.ஐ.எம்.,
முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

2. டாக்டர் மு. வெ. ரமணன், எல்.ஐ.எம்.,
பேராசிரியர், மேல் பட்டப்படிப்பு,
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

3. டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி, கௌரவ இயக்குநர்,
இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலையம்,
ஐதராபாத்.

4. டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம்,
பி.எஸ்ஸி.,எம்.டி.,எம்.ஆர்.சி.பி. (லண்டன்),
சென்னை-600010.

**மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**

**மாண்புமிகு**

## க. அன்பழகன்

**அவர்கள் அளித்த**

# அணிந்துரை

முன்தோன்றிய—மூவா முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்துவிடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால்—வழிவழியாகவும், கற்றறிந்தும்—கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலைபெறுவதற்கு நாம் ஆற்றவேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும் இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச்சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்ளுமாறு ஆய்வுகள்மூலம் நிலைநிறுத்தப்பட்டாக வேண்டும். அந்தநிலை உருவாவதற்கு—ஓலைச்சுவடிகளாகவும் ஒரு காலத்திலே அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகியும், உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள் உடனடியாகப் பதிப்பிக்கப்படவேண்டும். இவை வெளிவந்தால்தான் இன்று சித்த மருத்துவம் பயிலும் மாணவரும் இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன்பெற இயலும். மருந்து செய்முறைகளை ஒப்புநோக்கி உண்மை தெளியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தவும். அரிய மூலப்

பொருள்கள் கிட்டாத விடத்து மாற்று மூலப்பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும் மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்ப தால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடுகொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டுமென்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவல் குழு வினரும்—அதன் முன்னாள் தலைவர் திரு. பு. மனோகரன் அவர்களும் இதற்காக இரண்டு லட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன்வந்ததுடன் சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்கென டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்., அவர்களைத் தலைவராகக்கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல் படுத்தலாயினர்.

இக் குழுவின் தலைவரும், உறுப்பினர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும்—பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணைநிற்போர் ஆற்றும் பணியும்—இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக் குரியனவாகும்.

அருள்மிகு பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவின ருக்கும், அக் குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியனவாகும்.

இந்தநூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையில் 30-வது நூலாகும்.

அகத்தியர் நயனவிதி 500 என்னும் நூலுக்கு உரை எழுதிய கண் மருத்துவர் டி.எஸ். அமிர்தலிங்கம் பிள்ளை அவர்கள் மனித உடலிலுள்ள எல்லா உறுப்புகளிலும் கண்ணையே அதிக கவனமாகக் காப்பாற்றி வரவேண்டும் என்னும் நோக்கத்தில், தேர்ந்த தெளிவுடன் எழுதிய இந்த நூலைத் தமிழ் நாட்டார் பெரிதும் போற்றக் கடமைப் பட்டுள்ளனர். மேலும் பல ஆண்டுகள் பாடுபட்டுப் பயன்

படுத்தித் தேர்ந்து தெளிந்து—உலகோர்க்குப் பயன்பட வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அரிய சித்த மருத்துவ நூலினை இயற்றி வெளியிட்ட பெருமை அவரையே சாரும்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு, அதனுலேயே உருவழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள்—இருட்டறையிலிருந்து வெளிக் கொணரப்பட்டு—ஒளிகாண்பதற்கு வழிகண்ட வல்லுநரில் அவர் தலைசிறந்தவராவார் என்னில் மிகையாது.

சித்த மருத்துவத்தின் அக்கால நிலைமையை விளக்க மாகவும், நம்மவர் கடமையை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ள இக் குறிப்பினைக் காண்க.

மிகக் கொடிய நோய்களையும் அறத் தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவநூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிருர்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது.

'அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கில முறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய் வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது. ஆனல். நாட்பட்ட நோய்களையும் பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய் நோய், பாண்டு, மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத் தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மை யானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப் பட்ட பற்ப செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை' என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும், உத்தமமானதெனவும், அதிகம் வாய்மையானதெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக் கொள்வார்கள்.

இக் கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சி யால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி

மருத்துவமும் ஏற்கும்வண்ணம் நடைமுறையில் செயல் படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்கவேண்டுமென்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகுமாறு இவ்வரிய நூலைப் பதிப்பித்து வழங்கியுள்ள அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினரின் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

இவ் வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப்படுத்துவதற்குத் துணை செய்வதாகுமென நம்புகிறேன். அவர்கள் தம் முயற்சி வளர வாழ்த்துகிறேன்.

சென்னை
20—10—1975

க. அன்பழகன்

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி; அது போல் தமிழ் மருத்துவமுறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம் மருவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று, அச் சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும், மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓது வித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின்—நிலநடுக்கம், கடற்கோள்போன்ற—சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்கு தலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில மேலைநாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனவென கூறப்படுகின்றது. இன்னும் எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம் மருத்துவக் கலையைத் தொன்றுதொட்டுக் கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப் படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலை பெற்றிருக்கிறது.

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுள்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருந்து செய்முறையும், பிணித்தீர்வும் அவர் ஏற்படுத்திய தன் வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்து வரலாயிற்று.

மிக அண்மையில் வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சிச் சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924-ல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்தும் பல கிராம மருத்துவ மனைகளை அமைத்தும் இயங்கச் செய்து சித்த மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறு மலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக் காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டப்படி கற்பிக்கப் போதிய பாடப் புத்தகங்களும் முதல் (மூல) நூல்களும்

இல்லாக்குறையை ஓர்ந்து பாடப் புத்தக ஆக்கக்குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறைத் தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட் வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற திரு. க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தம் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசுவழி வெளியிட்ட நஞ்சு நூல், பாலவாகடம் என்ற நூல்களைப் பார்வையிட்டும் உதவினர். அக் குழுவினர் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து, ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950-ல் சித்த மருத்துவம், மருந்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம், மூலிகை வகுப்பு, தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர் களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப் பெற்றன.

அக் கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங் கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட பாடநூல்களும் துணைநூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவ தாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளையும் கையேடுகளையும் ஒருமுறை அச்சாகிப்பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாடநூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (Pharmacopea committee 1666 G. O. M. S. 2163 Dt. 23-8-60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாடநூற் குழு என்று G. O. MS. NO. 1060 health Dt. 13-6-66) ஒரு குழுவும் திருவருட்பா, திருப்புகழ் முதலியவகைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளையும் ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன.

மீண்டும் விரைவில் பயன்காணவேண்டி 1973ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 15ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்து சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு என்னும் ஒரு குழுவைத் (G. O. MS. No. 2571 of 23-10-73) தோற்றுவித்தார்கள். அக் குழுவின் பணிகளாவன: சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்

கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, தட்டெழுத்துப்படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல்; ஒருமுறை அச்சில் வெளி வந்து விற்பனைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப் பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக் குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத்துப் பிரதிகளையும் 210 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக் குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற, இந்திய மருத்துவத் துறை இயக்குநர் அலுவகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவருக்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்து அச்சியற்றத் தக்கவகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப் பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப் பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு ஏற்படுத்தப்பட்டது. அக் குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் 30-வது நூலாக இந்த அகத்தியர்—நாகமுனிவர் நயனவிதி வெளியாகிறது. இந் நூல் இவர் தஞ்சை மன்னர் சரபோஜியின் தன்வந்தரி மகாலை அலங்கரித்த மருத்துவர் ஒருவரின் வழித்தோன்றல் ஆவர். அவர் பரம்பரை மருத்துவர். சித்த, யூனானி ஆகிய இம் முறைகளில் செய்பாகம், கைபாகம், நோய்தீர்வு முதலிய எல்லாக் கலைகளிலும் மிக்க தேர்ச்சி பெற்றவர். இவர் தனக்குச் சொந்தமாகக் கண் நோய் மருத்துவமனையும் மருந்து செய் சாலையும் நடத்தி வந்தார்.

இவர் கடவுள் நம்பிக்கை, பிறர் நலம் பேணல், கொடை, பரிவு ஆகிய நற்பண்புகள் நிறைந்தவர்.

இந்த, அகத்தியர்—நாகமுனிவர் நயனவிதி என்னும் நூல் ஒவ்வொரு கண் நோய்க்கும் உதவும் மருந்துகளின் பெயர்களைக் கூறுவதாய் அமைந்துள்ளது. இது கண் மருத்துவம் செய்பவர் களுக்கு ஒரு முக்கியமான வழிகாட்டியாய் உதவுமென்பதில் யாதொரு ஐயப்பாடுமில்லை.

மேற்கண்ட அரிய நூலின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந் தொகை தேவைப்படுவதால், இப் பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு. க. அன்பழகன், எம். ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண் டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தார். மேலும் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும் சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும் காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக்கொண்டு காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனார் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழு மனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி திருக்கோயில் அறங் காவலர் குழு முன்னாள் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகளுக் கிடையேயும் இக் குழுவின் கூட்டங்களில் பங்கு கொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும், ஆலோசனைகளையும், வழங்கி வெளியீட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி நூல்கள் வெளிவர மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக்கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கச் செய்ததோடு சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும் சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும் இக் குழுவினரும் இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறு துணையாக இருந்து ஒத்துழைத்து வரும் மேற்படி திருக்கோயில் நிர்வாக அதிகாரி அவர்களுக்கும் இப் பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்துவரும் இந்து

சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுத்தலைவர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ், அவர்களுக்கும் இக் குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இக்குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும் பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து பணி இடையீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத் துறை இயக்குநர் உயர்திரு. டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்., அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடக்க விலையில், மிக விரைவில், அச்சடிக்கும் தாள்கள் சேஷசாயி பேப்பர் மில்சாரிமிடருந்து கிடைக்கும்படி செய்த முத்தமிழ்க் காவலர் உயர்திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக் குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மற்றும் இந் நூல்களை அச்சியற்ற ஏற்ற வண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இந் நூலுக்கு உரை எழுதியும் இக் குழுவுக்குத் துணைபுரிந்துவரும் தனி அலுவலர் டாக்டர் வி. விசுவநாதன், எல். ஐ. எம்., அவர்களையும் அன்னாருக்குத் துணைபுரிந்துவரும் டாக்டர் மு. சௌரிராசன், புலவர்கள் வை.முரு. முத்துக்குமாரசாமி, வி. செ. விநாயகம், நா.மு. மாணிக்கம், தா. சிங்காரவேலு ஆகியவர்களையும் இக் குழு மனமுவந்து பாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய காஞ்சிபுரம், சித்த மருத்துவர் திரு சிற்சபை அவர்களுக்கு இக் குழுவின் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

இந் நூலைக் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய மேகலா அச்சகத்தாரின் சேவைக்கு இக் குழு மனமுவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ் வுலகு இந் நூல்களில் காணும் குற்றங் கண்டு முனியாது நனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிவுடன் இந் நூலை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்.,
தலைவர்
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு

இந்திய மருத்துவத்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

# அகத்தியர் நயனவிதி ஐந்நூறு
## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| அக்கரம் | 41 |
| அக்கிர ரோகம் | 25 |
| அஞ்சனுதி மாத்திரை | 62 |
| அஞ்சனக்கோல் | 22 |
| அஞ்சனம் | 118, 119, 121 |
| அடைந்தெழுந்திடுதல் | 35 |
| அட்டைவிடுதல் | 14 |
| அட்டை சாதிபேதம் | 143 |
| அட்டைஆண் பெண் | 144, 145 |
| அதிமந்தம் | 29 |
| அதிமந்தாரம் | 38 |
| அந்திரகாசம் | 54 |
| அந்திமாலைக்கு மாத்திரை | 56 |
| அந்திமாலைக்கு உள்ளுக்கு மருந்து | 56 |
| அந்தாதி மாத்திரை | 61 |
| அந்தி மாலைக்கு | 107 |
| அபான சுத்தி | 128 |
| அப்பிரகாதி மாத்திரை | 85 |
| அமரம் | 37 |
| அமர மாத்திரை | 76 |
| அமராஞ்சனம் | 118 |
| அமுதநிலை | 146—149 |
| அரிதகி மாத்திரை | 65 |
| அருபம் | 32 |
| அவிகாய விரணம் | 25 |
| அழற்சி | 53 |
| அழித்திடும் பிரித்தல் | 42 |
| அழிகண் பிரித்தல் | 30 |
| அறுவைக்கருவி வகை | 149—153 |
| அறுசுவையின் இயல்பு | 8 |
| அன்ன கோபதிற்குத் தைலம் | 129 |

| | பக்கம் |
|---|---|
| அன்னகோபம் | 28 |
| ஆக்கிராணம் | 138, 139 |
| ஆக்குரோச மாத்திரை | 92 |
| ஆணிப்பூவுக்கு அஞ்சனம் | 104 |
| இந்தாதி மாத்திரை | 86 |
| இமைத்தடிப்பு | 26 |
| இமையோடுறுத்தல் | 54 |
| இரத்தப்படலம் | 52 |
| இரத்தினுதி மாத்திரை | 69 |
| இரணசிங்கி மாத்திரை | 99 |
| இரத்தம் வாங்கும் வகை | 14 |
| இராமயாண மாத்திரை | 97 |
| இலகு சந்தனுதி மாத்திரை | 93 |
| இலகு இரத்தினுதி மாத்திரை | 71 |
| இலிங்காதி மாத்திரை | 95 |
| இளநீர்க்குழம்பு | 111, 112 |
| இளநீர் எண்ணெய் | 127 |
| இன்னவிடத்தில் இத்தனை நோய் என்பது | 7 |
| இன்ன காலத்திலின்னது செய்ய நன்று என்பது | 9 |
| உக்கிர ரோகம் | 25 |
| உடைந்தெழுகாசம் | 26 |
| உருண்டை யெழுச்சி | 47 |
| உயர்ந்த கண்புடைத்தல் | 48 |
| உருவிழி புடைத்தல் | 36 |
| எண்ணெய் முகூர்த்தம் | 13 |
| எரிவிழி மழுங்குதல் | 29 |
| எருக்கிலை மை | 122 |
| எழுச்சி | 35 |
| எழுநாயிறு | 25 |

| | பக்கம் |
|---|---|
| ஒழுக்கு மருந்து | 111 |
| ஒளிவாதி மாத்திரை | 83 |
| | |
| கண் தினவு | 27 |
| கண் இரணம் | 32 |
| கண் குருடு | 34 |
| கண்ணோய்களின் பெயர் | 3 |
| கண்ணோய் வரும் காரணம் | 11 |
| கண் நோய் | 51, 105 |
| கண் நோய்களின் சூளுரை | 11 |
| கண் தெளிவுக்கு | 106 |
| கண்பூவுக்கு பிழி மருந்து | 108 |
| கண் ஆணிப்பூவுக்கு | 108 |
| கண் குளிர்ச்சிக்கு | 12 |
| கண்டர் அஞ்சனம் | 121 |
| கண் நோய் தொண்ணூற்ருறுக்கும் | 105 |
| கண்டுஷம் பண்ணுதல் | 107 |
| கபாலாதி மாத்திரை | 62,63,64 |
| கபாலாதி பச்சை மாத்திரை | 63 |
| கபாலமை | 121 |
| கருமேக மாத்திரை | 98 |
| கற்பூராதிக் குழம்பு | 114 |
| கற்பூராதி மாத்திரை | 58, 59 |
| கனக தாம்பிராதி மாத்திரை | 68 |
| கனத்த தாம்பிராதி மாத்திரை | 64 |
| கனகமாமணி | 98 |
| | |
| காக்கணக் குழம்பு | 114 |
| காக்கண மாத்திரை | 87 |
| காச நிதானம் | 18 |
| காச வகை | 19 |
| காச முறுக்கி | 40 |
| காச மாத்திரை | 91 |
| காசக் குளிகை | 57 |
| காச மாத்திரை | 57 |
| காச மாத்திரை வேறு | |

| | பக்கம் |
|---|---|
| காசக் குழம்பு | 109 |
| காடி வேது | 137 |
| காப்பு | |
| காளமேகக் குழம்பு | 116 |
| | |
| குக்குடாதி மாத்திரை | 84 |
| குங்கும தாம்பிராதி மாத்திரை | 68 |
| குடோரி செய்முறை | 18 |
| குணவாகடம் | 1 |
| குத்துக் கண்ணுக்கு மை | 123 |
| குந்தத்திற்கு மாத்திரை | 91 |
| குமரிக் காசம் | 33 |
| குமரிமை | 123 |
| கும்பிமை தடித்தல் | 49 |
| குவளை நெரித்தல் | 30, 39 |
| குவளை விப்புருதி | 49 |
| குவளைக் காசம் | 33, 49 |
| குவளைப் படுவன் | 50 |
| | |
| கூசி விழித்தல் | 52 |
| | |
| கையாந்தகரைத் தைலம் | 131 |
| | |
| கொடும் புழுவெட்டு | 54 |
| கொத்திக் கட்டுகிற உருண்டை | 18 |
| | |
| கோதந்தாதி குளிகை | 60 |
| கோரோசனக் குழம்பு | 115 |
| | |
| சங்காதி மாத்திரை | 64, 69, |
| சத்துரு இரத்தினுதி மாத்திரை | 75 |
| சட்ரசகுணம், செயசிந்தாமணி மாத்திரை | |
| சந்திர தரிசனம் | |
| சந்திரோதய மாத்திரை | 101 |
| சந்திர ரோகம் | 51 |
| சந்திரப் பிரகாசம் | 103 |
| சந்தனுதி மாத்திரை | 55, 57 |

| | பக்கம் |
|---|---|
| சந்தனாதி நெய் | 126 |
| சயசிந்தாமணி மாத்திரை | 89 |
| சரவண விதி | 16 |
| சாய்கண் குருடு | 26 |
| சிங்காதி மாத்திரை | 65 |
| சிரவத்தி மாத்திரை | 66 |
| சிலேத்தும காசம் | 39 |
| சிறுகீரை நெய் | 126 |
| சுக்கிர ரோகம் | 27 |
| சுக்கிரனுக்குக்கோகனநெய் | 125 |
| சுடரதி மாமிசம் | 47 |
| சுடர் பலத்தோன்றல் | 46 |
| சுத்த அஞ்சனம் | 120 |
| சுழல் வண்டெரிதல் | 28 |
| சுழல் விழி எரித்தல் | 41 |
| சூதரத்தினாதி மாத்திரை | 92 |
| சூதரஞ்சனம் | 118 |
| சூரியகாந்திக் கயிறு | 95 |
| சூழ்ந்திடும் பில்லம் | 44 |
| செங்கழுநீர் நெய் | 126 |
| செங்கல் வேது | 136 |
| செம்பிராதி மாத்திரை | 96 |
| செவ்வேர் | 39 |
| சோதிகா விரணம் | 30 |
| சோதிநெறி | 38 |
| சோராக்கண் துடிப்பு | 44 |
| தங்க சுத்தி | |
| தந்த இரத்தினாதி மாத்திரை | 75 |
| தர்க்கம் வினா | 23 |
| தர்க்கம் விடை | 23 |
| தற்பணம் | 141, 142 |
| தாம்பிராதி மாத்திரை | 77,79,80 |
| தாலாதி உருண்டை | 87 |
| திரிகாதி மாத்திரை | 85 |

| | பக்கம் |
|---|---|
| திமிராதி மாத்திரை | 86 |
| திமிரம் | 38 |
| தேத்தாதி மாத்திரை | 90 |
| துண்ணு காசம் | 40 |
| துண்ணு வெண்புகைச்சல் | 43 |
| துத்திடுங் காசம் | 43 |
| துத்த மாத்திரை | 87 |
| துர்மாமிசம் | 36 |
| தூயகண் குருடு | 27 |
| தொண்ணூற்றாறு நோய்களின் பெயர் | 24 |
| நசியம் | 130, 139, 141 |
| நத்தைப்படுவன் | 50 |
| நயனாமிர்த மாத்திரை | |
| நயனாமிர்தமை | 116, 117, 118 |
| நயன நோய்களுக்குத் தைலம் | 130 |
| நயனப்படுவனுக்குப் பற்று | 142 |
| நல்லகண்ணின் இயல்பு | 2 |
| நவரத்தினாதி மாத்திரை | 94, |
| நவலோக இரத்தினாதி மாத்திரை | 67 |
| நாகப் படலம் | 31 |
| நாகப்படலம் எடுக்கிற நிதானம் | 15 |
| நாடிநிதானம் | 17 |
| நீரேழு காசம் | 33 |
| நீர்ப்பில்லம் | 48 |
| நீர்ப்படலம் | 53 |
| நீர்ப்பாய்ச்சல் | 32 |
| நீலகாசம் | 33 |
| நீலகண்ட மாத்திரை | 102 |
| நீலகருடாஞ்சனம் | 119 |
| நூல் | 1 |

| | பக்கம் |
|---|---|
| நெய் நசியம் | 139 |
| நெற்றியில் உருண்டை பாய்ச்சுவது | 17 |
| நேத்திர சூலே | 21 |
| நோயணுகாதிருக்க | 9 |
| பக்கப்படுவன் | 41 |
| பச்சை தாம்பிராதி மாத்திரை | 81, 82 |
| பஞ்சலோக மாத்திரை | 60 |
| படலம் திமிரம் தினவுக்கு | 109 |
| பஞ்சுநீப் படலம் | 37 |
| பஞ்சாதி மாத்திரை | 87 |
| படலாதி மாத்திரை | 86 |
| படலாதி மை | 122 |
| படலங்களுக்கு நெய் | 126 |
| படிகுந்தம் | 31 |
| பருமுளை | 35 |
| பறவைப்பூ | 37 |
| பற்று (பலவிதம்) | 132 - 135 |
| பற்ப ரோகம் | 29 |
| பித்த காசத்திற்கு மாத்திரை | 90 |
| பித்தகாச சத்திரம் செய்முறை | 19 |
| பித்த காசம் | 42, 43 |
| பில்லம் | 41 |
| பில்லத்துக்கு உக்கா உருண்டை | 108 |
| பிறவிக் குருடு | 53 |
| பீதரோகணி மாத்திரை | 83, 84 |
| புகை | 136 |
| புகைச்சல் | 38 |
| புங்காதி மாத்திரை | 85 |
| புண்மேல் கொழுப்புக்கு | 104 |

| | பக்கம் |
|---|---|
| புத்தியழித்தல் | 50 |
| புழுவெட்டுக்கு மை | 124 |
| பூ சதைக்கு உருண்டை | 108 |
| பூ படலங்களுக்கு | 109 |
| பூபதி மாத்திரை | 89 |
| பூரக்குழம்பு | 116 |
| பூவந்தாதி மாத்திரை | 61 |
| பூவுக்கு | 109 |
| பொக்கணம் | 135 |
| பொங்கிய விதனம் | 51 |
| பொடுதலேக் குழம்பு | 113 |
| பொன்னுங்காணித் தைலம் | 131 |
| மகா இரத்தினுதி மாத்திரை | 71, 73 |
| மகா தாம்பிராதி மாத்திரை | 78 |
| மச்ச இரத்தின அஞ்சனம் | 120 |
| மஞ்சட் காமாலேக்கு நசியம் | 140 |
| மணி நீலகாசம் | 30 |
| மதன மந்தாரம் | 31, 46 |
| மதுராதி உருண்டை | 88 |
| மயிர்ப் புழுவெட்டு | 45 |
| மந்தார காசம் | 49 |
| மருந்திடும் நேரம் | 9 |
| மருந்து இத்தனை முறை விட்டால் இன்ன பலன் என்பது | 12 |
| மருவுகண் சிவப்பு | 28 |
| மருந்திடா நாள் | 21 |
| மலரஞ்சனம் | 119 |
| மாலேக்காசம் | 27 |
| மாலேக் கண் | 40 |
| மாலேத் திருமணி | 100 |
| மாலேக்கண்ணுக்கு மை | 122 |
| மாறியாடி உருண்டை | 88 |
| மான் குழம்பு | 113 |

| | பக்கம் |
|---|---|
| மீன் இரத்திஞதி மாத்திரை | 76 |
| முசுமுசுக்கை மை | 127 |
| முட மயிர் | 34 |
| முட்டை வெண்கரு விடுதல் | 142 |
| மூலிகை நசியம் | 139 |
| மேருத் தைலம் | 131 |
| மை | 121, 125 |
| லவணக் குழம்பு | 110 |
| வச்சிராயுத மாத்திரை | 96 |
| வச்சிரகாந்திக் குழம்பு | 115 |
| வத்திப் புகை | 137, 138 |
| வரால்மீன் மை | 122 |
| வருஞ்சல ரோகம் | 54 |
| வல்லாரை மை | 123 |
| வளர்ந்ததெழு ரோகம் | 45 |
| வாதகாசத்திற்குத் தைலம் | 129 |

| | பக்கம் |
|---|---|
| வாதகாசம் | 34 |
| வாரகாதி மாத்திரை | 82 |
| வாரெழு காசம் | 47 |
| வாலகாசம் | 48 |
| விதன மந்தாரம் | 45 |
| விமலாதி மாத்திரை | 83 |
| வியாதி வருமாறு | 5 |
| விரணச் சதைக்கு | 103 |
| விழிப் புகைச்சலுக்கு | 104 |
| வீங்கி விழித்தல் | 46 |
| வெண்ஞேக்காடு | 44 |
| வெள்ளெழுத்து | 36,106 |
| வெள்ளைப் படலம் | 32 |
| வேட்டுவன் குழம்பு | 115 |
| வைத்தியனுக்கு புத்திகூறல் | 22 |


அகத்தியர் நயனவிதி ஐந்நூறு உள்ளுரை முற்றிற்று.

---

# நாகமுனிவர் நயனவிதி இருநூறு
## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| அமரப்பில்லம் | 199 |
| அமிர்தயோகம் | 216 |
| அதிமாங்கிசப் படலம் | 170 |
| அனற்சுக்கிரன் | 180 |
| இமைதோடம் 16-க்கும் பெயர் | 198 |
| இமைத்தடிப்பின் குணம் | 203 |
| இமைத்தடிப்புக்குத் திரிபலாதி எண்ணெய் | 203 |
| இமைத்தடிப்புக்கு அஞ்சனப் பொடி | 204 |
| இமைநீர்ப் பாய்ச்சல் | 209 |
| இமைநீர்ப் பாய்ச்சலுக்கு வில்வாதித் தைலம் | 209 |
| இமை உயர்ச்சி | 211 |
| இரத்தப் படலம் | 170 |
| இழிச்சக்கண்ணின் குணமும் மருந்தும் | 204 |
| இழிச்சக்கண்ணுக்கு நவச்சாரக் குழும்பு | 204 |
| உஷ்ண நெரிசலின் குணம் | 177 |
| எழுச்சியின் குணம் | 192 |
| எழுச்சியின் புறவளையம் | 192 |
| எழுச்சிக்கு இரட்சை | 193 |
| கடைக்கண் தோஷம் 15-க்கும் பெயர் | 211 |
| கண்ணோக்காட்டின் குணம் | 211 |
| கண்ணோய் 96-க்கும் விபரம் | 155 |
| கண்ணோயின் குணம் | 215 |
| கண்ணோயிக்கு ஒத்தணம் | 215 |
| கண்ணோய்க்கு மாத்திரை | 215 |
| கண்ணோய்க்குச் சூலைமருந்து | 215 |
| கருப்பிழலகிதான குளிகை | 216 |

| | பக்கம் |
|---|---|
| கருவிழி 45-க்கும் விபரம் | 155 |
| கருநாகப் படலம் | 170 |
| கருங்குமுதத்தின் குணம் | 173 |
| கழலை மூன்றின் குணம் | 208 |
| காசங்களின் குணமும் சாத்தியா சாத்தியமும் | 156 |
| காசங்களுக்குச் சந்தனுதி எண்ணெய் | 163 |
| காசத்திற்கு இரத்தினுதி மாத்திரை | 165 |
| காசத்திற்குக் குழம்பு | 166 |
| காசத்திற்குப் புடலாதி கிருதம் | 167 |
| காசத்திற்கு நெல்லிக்காய்த் தைலம் | 161 |
| குடற் பில்லம் | 199 |
| குத்தின கண்ணுக்கு ஒழுக்கு மருந்து | 160 |
| குந்தநோய் மூன்றின் குணமும் மருந்தும் | 190 |
| குமிளம் மூன்றின் குணம் | 196 |
| குமிளத்திற்குக் குழம்பு | 197 |
| குமுதங்களுக்கு பசுவின் பல் மாத்திரை | 174 |
| குமுதத்திற்குப் பொடி | 175 |
| குமுதத்திற்குக் குழம்பு | 175 |
| குமுதம் மூன்றுக்கும் பெயர் | 173 |
| சதைப் படலம் | 169 |
| சுக்கிரன் ஐந்தின் பெயர் | 179 |
| சுக்கிரனுக்கு நெய் | 180 |
| சுக்கிரனுக்குப் புறவளையம் | 181 |
| சுக்கிரனுக்குப் பொடி | 181 |
| சுக்கிரனுக்குச் சுவர்ணுதி உருண்டை | 182 |

| | பக்கம் |
|---|---|
| சுக்கிரனுக்குக் கற்பூராதிப் பொடி | 183 |
| சுக்கிரனுக்கு ரெட்சை | 183 |
| சுற்றுக்குலேவு | 210 |
| சுற்றுக்குலேவுக்கு மருந்து | 210 |
| செங்குமுதத்தின் குணம் | 173 |
| திமிரத்திற்குக் குழம்பு | 186 |
| திமிரத்திற்குப் பச்சைத் தாம்பிராதி மாத்திரை | 187 |
| திமிரத்திற்குச் சந்தனுதி உருண்டை | 188 |
| திமிரம் 7-க்கும் பெயர் | 184 |
| நீர்க்குவை, இரத்தக்குவை, மாங்கிசக் குவை | 212 |
| நீர்ப்பில்லம் | 199 |
| நீர்ப்பில்லத்திற்கு மருந்து | 200 |
| நீர்ப்படர்த்தி, இரத்தப் படர்த்தி, சதைப்படர்த்தி | 212 |
| நீர்த்திமிரத்தின் குணம் | 185 |
| நீர்ப்படலம் | 169 |
| நெரிசல் மூன்றின் குணமும் மருந்தும் | 194 |
| நெரிசலுக்கு மருந்து | 177, 194 |
| நெரிசல் மூன்றின் பெயர் | 176 |
| நேத்திரவாயுவுக்கு மருந்து | 214 |
| பசுவிழிப் படலம் | 171 |
| பச்சை மாத்திரை | 188 |
| படர்த்தி மூன்றின் குணம் | 193 |
| படர்த்திக்கு அமுதாஞ்சனப் பொடி | 193 |
| படலங்களுக்குத் தைலம் | 162 |
| படலங்களுக்கு மருந்து | 171 |
| படலங்களுக்குப் புறவளேயம் | 172 |
| படலங்களுக்கு ரட்சை | 172 |
| பற்பரோகம் மூன்றுக்கும் பெயர் | 206 |
| பற்பரோகத்திற்குத் திரிபலாதி அஞ்சனப்பொடி | 207 |

| | பக்கம் |
|---|---|
| பித்தகாசம் குத்துகிறவிதம் | 158 |
| பில்லத்திற்கு மருந்து | 213 |
| பில்லத்திற்கு மிரியலாதித் தைலம் | 202 |
| புழுக்கடி அல்லது கிருமித் தோலின் குணம் | 210 |
| புழுக்கடிக்கு மருந்து | 211 |
| புற்று மூன்றின் குணம் | 194 |
| புற்றுக்கு அஞ்சனப்பொடி | 195 |
| பூச்சாந்திரத்தின் குணம் | 212 |
| பூ மூன்றின் பெயரும் குணமும் | 189 |
| பூவிற்குக் குளிகை | 190 |
| மந்தாரத் திமிரத்தின் குணம் | 185 |
| முடமயிரின் குணம் | 205 |
| முடமயிருக்குக் கருவியாடல் | 205 |
| முடமயிருக்குக் களிம்பு | 206 |
| மூளே வறட்சித் திமிரத்தின் குணம் | 185 |
| மேகத் திமிரம் | 186 |
| வரி மூன்றின் குணம் | 177, 197 |
| வரியெழுச்சிப் படலம் | 170 |
| வரி மூன்றுக்கு அஞ்சனம் | 178 |
| வாயுத் திமிரத்தின் குணம் | 186 |
| விரணப்பரு, விப்புருதி, இமைக்குரு, இமைக்குமிழ் | 213 |
| விரணச் சுக்கிரன்-கருத்த சுக்கிரன் | 179 |
| விழிவிழுங்கிச் சுக்கிரன் | 179 |
| விழிவாதம் | 213 |
| விழியுந்தல் மூன்றின் குணம் | 175 |
| விழியுந்தலுக்கு இரட்சை | 176 |
| வெண்குமுதத்தின் குணம் | 173 |
| வெண்சுக்கிரன் | 179 |
| வெள்ளே விழியின் நோய் 20-க்கும் பெயர்கள் | 191 |
| வெள்ளெழுத்து | 184 |

# கண்களின் அமைப்பு

இயற்கையின் அருளால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஐம்பொறிகளுள் கண்களே முக்கியமானவை. அவற்றின் அமைப்பைக் கூறுவோம்.

**கண்களின் அளவு**

கண்கள், மண்டையோட்டின் முன்புறமுள்ள குழியில் அமைந்துள்ளன. இவை உருண்டை வடிவமானவை. தக்க வயது வந்தவர்களுடைய கண்களின் நீளம் இரண்டு அங்குலம், அகலம் $\frac{1}{2}$ அங்குலம், அதாவது கட்டை விரல்பருமனாகும். அதன் ஆழம் $1\frac{1}{8}$ முதல் $1\frac{1}{2}$ அங்குலம் ஆகும்.

**வெளியே புலப்படக்கூடிய பகுதிகள்**

கண்ணின் வெளியே புலப்படக்கூடிய பகுதிகளுக்குப் புற மண்டலங்கள் என்று பெயர். இவை 5 வகைப்படும்.

1. இமை மண்டலம்: அதாவது இமை மயிர் வரிசைகள். இவைகள் கண்களுக்குள் வியர்வை, தூசி முதலியவை விழாமற் காப்பாற்றுகின்றன.

2. குவளை மண்டலம்: அதாவது இரெப்பைகள். கண்களின் மேலிமையும் கீழிமையும் சேர்ந்து இரெப்பைகள் எனப்படும். மேலிமைக்கு 'இமை' என்றும் கீழிமைக்குக் 'குவளை' என்றும் பெயர். இவை அதிக வெளிச்சம், தூசி இவற்றிலிருந்து கண்களைப் பாதுகாக்கின்றன.

3. வெள்ளை மண்டலம்: அதாவது வெள்ளைவிழி. இது 'கடினை' (Sclera) என்னும் சவ்வினாலாகியது.

4. கருமை மண்டலம்: அதாவது கருவிழி. இது வெள்விழியில் மூன்றிலொரு பாகமுள்ளது. இது 'சிருங்கை' (Cornea) என்னும் வலுவுள்ள சவ்வினாலாகியது. இது மிகவும் உறுதியுள்ளதாகையால், கண்களை அடிபடுதலினின்றும் காப்பாற்றுகிறது. சிருங்கையில் இரத்தவோட்டம் கிடையாது. இது ரசத் தாதுவினாலேயே (Lymph) ஊட்டம் பெற்று இயங்குகிறது.

5. பார்வை மண்டலம்: அதாவது பாப்பா, இதைச் சோதி என்றும் 'தாரை' என்றும் கூறுவர். கண்களின் பார்வைக்குக் காரணமாகிய 'இயவம்' (Lens) இந்த மண்டலத்தில்தான் இருக்கிறது. மேலும், ஒளிமயமான அலோசக பித்தத்தின் சத்துவே பார்வைக்கு ஆதாரமாகிறது. இம் மண்டலம் கருவிழியில் ஏழிலொரு பங்காகும்.

## ஐம்பூத சேர்க்கை

1. மண் (பிருதிவி) : மண்ணின்கூருக கண்கோளத்திலுள்ள பாகங்கள் அமைந்துள்ளன.

2. நீர் (அப்பு) : நீரின்கூருக வெள்ளேவிழி அமைந்துள்ளது.

3. தீ (தேயு) : தீயின்கூருக அதிலுள்ள இரத்தமும் பித்தமும் அமைந்துள்ளது.

4. வளி (வாயு) : வளியின்கூருகக் கருவிழி அமைந்துள்ளது.

5. விண் (ஆகாயம்) : விண் பூதச்சேர்க்கையினுல் கண்ணீர் துவாரங்களும் உண்டாகின்றன.

**கண்ணிலுள்ள சந்திகள் (சேருமிடங்கள்) ஆறு வகைப்படும்.** அவை :

1. இமை மயிர்களும், இமையும் சேருமிடம். அதாவது இமையின் ஓரங்கள்.
2. இரெப்பையும் வெள்விழியும் சேரும் சந்திகள், நமக்கு இவை எளிதில் புலப்படாது.
3. வெள்விழியும் கருவிழியும் சேருமிடம்.
4. கருவிழியும் சோதியும் சேருமிடம்.
5. மூக்கின் அருகிலுள்ள கடைக்கண்.
6. பொட்டுப் பக்கத்திலிருக்கும் கடைக்கண்.

### கண்ணிலுள்ள படலங்கள் (திரைகள்)

இரெப்பைகளில் 2 படலங்களும், கேந்திர கோளத்தில் 4 படலங்களும் உள்ளன. திமிரம், காசம், லிங்ககாசம் முதலிய நோய்கள் இப் படலங்களேப் பற்றி உண்டாகின்றன. கண்களிலுள்ள 4 படலங்களில் மேலே உள்ள முதற் படலத்தில் நீரும், கண்ணின் பார்வைக்குக் காரணமான ஆலோசகப் பித்தத்தோடு செல்லும் இரத்தக் குழாய்களும் அமைந்திருக்கின்றன.

இரண்டாவது படலத்தில் பெரும்பாலும் தசை உள்ளது.

மூன்ருவது படலத்தில் பெரும்பாலும் கொழுப்பு (மேதஸ்) உள்ளது.

அதற்குப்பின் இருப்பது நான்காவது படலம். இது எலும்பினுலாகியது.

இந்த ஒவ்வொரு படலமும் கண்ணின் மொத்தப் பருமனில் ஐந்தில் ஒரு பங்காகும்.

இப் படலங்களுள் குருதிக் குழாய்கள், (சிரைகள், தமனிகள்)' நரம்புகள் (கண்டரங்கள்), கொழுப்பு (மேதஸ்), காளகம் என்னும் எலும்பு அதற்குப் பின்னுள்ள (சிலேஷ்மா) கபம் இவைகளில் உண்டாகும் இணைக்கும் சத்துவே கண்ணில் பல பாகங்களேச் சேர்த்து ஒன்ருக்கி உள்ளது.

சித்த மருத்துவ நூல்களில் சவ்வுப் படலங்கள் என்பதைப் பற்றி அடியில் கண்ட விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன :

முதல் படலம் 'கடினே' என்ற சவ்விஞலும், 'சிருங்கை' என்னும் சவ்விஞலும் ஆகியது.

இரண்டாவது சவ்வுப் படலம், 'தரணிசம்' 'வருணி' 'பரிதிகம்' என்ற சவ்வுகளிஞலும்,

தரணிசத்தில் நயன கோளங்களைக் காப்பாற்றச் செய்யும் இரத்தக் குழாய்கள் வலைபோல் பின்னப்பட்டு 'நேத்திரகோளம்' முழுவதையும் சூழ்கின்றன. இதையே ஆங்கிலத்தில் (Choroid) என்று கூறுகின்றனர்.

வருணி என்னும் சவ்வின்மேல் கண்ணிற்குப் புலப்படாத 7 வித மண்டலங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:

1. இது பாவை அல்லது தாரையாகும் (Iris) இது கண்ணில் படும் வெளிச்சத்திற்குத் தக்கதாக விரிந்து சுருங்கும் தன்மையை யுடையது. 2. மஞ்சள் வட்டம். 3. சிகப்பு வட்டம். 4. பச்சை வட்டம். 5. புகையாலான வட்டம். 6. வெண்மையான வட்டம். 7. கருமைநிற வட்டம் என்பன.

முதல் மண்டலத்திஞல் உறுப்புகளின் அளவு உருண்டை, சதுரம் முதலிய விவரங்கள் நமக்குத் தெரிகின்றது. பின்பு, ஒவ்வொரு வட்டங்களும் முறையே மஞ்சள், சிவப்பு, பச்சை, கறுப்பு, வெண்மை முதலிய நிறங்களை உணர்த்துகின்றன. கருமை நிற வட்டத்தின் உதவியால்தான் நாம் இருட்டில் நடமாட முடிகிறது. இவ்வித மண்டலங்கள் சேர்ந்த முழு வட்டத்திற்கும் 'பரிதிகம்' (Giliary body) என்று பெயர்.

தரணிசம் என்னும் சவ்விற்கு அடுத்தாற்போல் கண்ணி ஞுள்ளே இருக்கும் மெல்லிய வெள்ளை சவ்விற்குத் 'தரிசியம்' (Retina) என்று பெயர். கண்களுக்குள் ஊடுருவிச் செல்லும் உருவ ஒளிக்கதிர்கள் தரிசியத்தின்மேலே விழுவதால் அங்குள்ள நுண்ணிய நரம்புவலைகள் தூண்டப்படுகின்றன. மேலும், பார்வை நரம்புகள் மூளையோடு சம்பந்தப்பட்டிருப்பதால் உருவம் நமக்குப் புலப்படுகிறது.

'இயவம்' (Lens) என்னும் உறுப்பு, ஓர் பளிங்குக்குச் சமானமாக இருந்து, உருவ ஒளிகளைக் கண்களுள் விடுகிறது. இயவத்திற்கு முன்பாகத்தில் படிகம்போன்ற நீர் இருக்கிறது. இதற்கு 'வனம்' (Aqueous Humor) என்று பெயர். இதை வருணி என்னும் சவ்வுதான் படலங்களிலிருந்து பிரிக்கிறது. இயவத்திற்குப் பின்புறம் 'படிகம்' (Vitreous Humor) என்னும் நீர் கண்கோளம்

முழுவதையும் நிரப்புகிறது. இது ஏறக்குறைய கோழிமுட்டையின் வெள்ளைக் கருவைப்போன்ற தடிப்பையுடையது. இயவம் நாளா வட்டத்தில் சுமார் 45 வயதிற்குப்பின் கெட்டியாவதால் ஒளி ஊடுருவ முடியாத நிலைமையை அடைகிறது. இதற்குப் பித்த காசம் (Cataract) என்று பெயர்.

கண்களில் நிணம் நிரம்பியிருப்பதனல் அவை அதிர்ச்சியைத் தாங்குவதுமன்றி விழியையும் நாலா பக்கங்களிலும் சுழற்றவும் முடிகிறது. கண் கோளங்கள் வெளியே விழாதபடி பேசிகளினுலும், மருந்துகளினுலும் (Muscles and Tendons) கட்டப்பட்டிருக்கின்றன.

கடைக்கண் பக்கமாய் 'கண்ணீர் கோளங்கள்' (Lachrymal glands) என்னும் கண்ணீர் சுரப்பிகள் இருக்கின்றன. அதிலிருந்து கண்ணீர் ஊற்று நீர் ஊறுவதுபோல் ஊறி சில நுட்பமான துவாரங்களின் வழியாய்க் கண்ணிலே பரவி வருவதால் அவை எப்பொழுதும் பசுமையாகவும், பளபளப்பாகவும் இருக்க ஏதுவாகிறது. கண்ணில் அழற்சி காணும்போதும், மனக்கவலை உண்டாகும் வேளையிலும் கண்ணீர் 'கனீனகத்தின்' பக்கத்திலிருக்கும் இரண்டு குழாய்கள் (Lachrymal Ducts) வழியாக மூக்கிலே சென்று அளவுக்கு மிஞ்சி ஊறுவதால் மூக்கு வழியாகவும் கடைக்கண் வழியாகவும் கண்ணீர் வழிகின்றது.

கண்களின் பார்வைக்கு வெளிச்சம் அவசியமாகும். ஒளி இல்லையெனில் உருவங்கள் புலப்படாது. ஒளி முக்கியமாகச் சூரியனிடமிருந்து கிடைக்கின்றபடியால் சூரியனைக் கண்களுக்கு நலங்காக்கும் தெய்வமாகக் கொண்டாடுகின்றனர்.

**கண்நோய்கள் வருவதற்கான அறிகுறிகள்**

கண்களிலுள்ள இரத்தக் குழாய்களோடு வரும் தோடங்கள் மாறுதலடைந்து, கண் உறுப்புகளுக்குள் சென்று மிகக் கடுமையான கண்நோய்களை உண்டாக்குகின்றன. அவையாவன:

1. கண் கலிக்கம், 2. கண் வீக்கம், 3. பீளை சாரல், 4. கனத்தல், 5. அனத்தல், 6. கண்களில் வலி, 7. கண்களில் சிவப்பு, 8. இமைகளில் குத்துவலி, 9. இமைகளினடியில் உருத்தல், 10. கண் கூச்சம், 11. பார்வைக் குறைவு முதலியன.

இக் குறிகள் ஏதேனும் காண ஆரம்பித்தால் உடனே தகுந்த மருத்துவம் செய்துகொள்ளவேண்டும்.

# அகத்தியர் நயனவிதி ஐந்நூறு

## குணவாகடம்

### காப்பு

கார்நிற வண்ண மாலும் கைலையாள் கடவு ளானும்
தார்நிறை வடிவேலா னுந் தந்திமா முகனும் வேதச்
சீர்நிறை பலநூற் தம்மில் செப்பிய நிதானங்கண்டு
பார்நிறை தமிழி னுலே பகர்ந்திடக் காப்புத் தானே. 1

**சிறப்புப் பொருந்திய பலநூல்களில் சொல்லப்பட்டிருக்கும் நோய்நாடல் விதியைக் கொண்டு தமிழில் இந் நூலைச் செய்வதற்கு மாலும் பரமசிவனும், முருகக் கடவுளும், விநாயகக் கடவுளும் காப்பாவர்.**

கண்ணினில் தொண்ணூற் ருருக் கலந்தநோ யென்று சொல்வார்
எண்ணிது வென்று தாழ இருந்தபண் டிதநூல் கண்டு
பண்ணுறு தமிழோருய்ய பாதமே பணிந்து யானும்
தண்ணுறு மொழியின்மாதே தமிழினுல் சாற்று வேனே. 2

**கண்ணினில் தொண்ணூற்ருறு நோயென்று சொல்வார்கள் : வட நூலில் இந் நோயின் தொகை குறைவாயிருப்பதை நினைத்துத் தமிழிலே இந்த நூலைச் சொல்லலுற்றேன்.**

### நூல்

பூங்கொடி யுமையாள் கேட்கப் புரிசடை யரனு ரன்பாய்ப்
பாங்குறு நயன நோயின் பண்பினை யுரைக்க லுற்ருர்
ஈங்குல கதனை யோர்ந்தே யின்புற விருத்தப் பாவால்
தீங்கனி யதர மாதே செப்புவே னினிது பாரே. 3

**உமையவள் கேட்கப் பரமசிவன் கண் நோய்களின் தன்மையைச் சொல்லுவாராயினர். உலகத்தவர்கள் அதனைக் கற்றுச் சுகத்திலிருக்கும்படி விருத்தப் பாவினுல் நான் சொல்லுவேனுக.**

மாதுமை பாகர் சொன்ன மாமறை யாய்ந்து நன்கு
தீதுகள் வாராவண்ணந் திருவுளத் துற்ற போது
ஆதிமா முனிதான் சொன்ன ஆந்தமா மறைகட்குள்ளே
நாதனுர் தெளிந்து தந்த நயனமாம் விதியி தாமால். 4

**பரமசிவனுல் சொல்லப்பட்ட நூலே நன்ருய் ஆராய்ச்சி செய்து, அகத்தியரால் சொல்லப்பட்ட நயன விதி இதுவாகும்.**

உயர்ந்திடும் நயனந் தன்னில் உறுபல வியாதிக் கெல்லாம்
மயங்கிட இருளா லுற்று வருந்திரி தோடத் தாலும்
வியந்திட மேவி நிற்கும் விரவிய மருந்து தானும்
தயங்கிடக் கிரியை செய்யும் தன்மையைக் கூற லுற்றேன். 5

**கண்ணில் வரப்பட்ட பல நோய்களுக்கும், முக் குற்றத்தால் இருண்ட கண்களுக்கும், மருந்துகளேயும், கிரியை செய்யும் தன்மையையும் கூறுவேன்.**

**நல்ல கண்ணின் இயல்பு**

வெள்ளேயில் சிவப்பு ருது விளங்குநற் படிகம் போன்று
ஒள்ளிய சோதி தன்னில் ஒளிநிற வண்ண மாகில்
உள்ளொளி பொருந்தவங்கே உன்முகம் விளங்கத் தோன்றில்
ஒள்ளிய நயன மாகும் உண்மையீ தறிந்தி டாயே. 6

**வெள்ளே விழியில் எவ்வித சிவப்பு நிறமுமில்லாமல் நல்ல படிகம்போன்ற வெண்ணிறத்தோடும் சோதி யென்று சொல்லப் பட்ட தாரையானது கருநிறத்தோடும், பார்ப்பவர் முகமானது அதில் நன்கு தெரியும்படி இருந்தால் அந்தக் கண்ணே நல்ல கண் ணென்று தெரிந்து கொள்வாயாக.**

பங்கமில் விழியி னீளம் பகர்தரு மகலந் தன்னே
டிங்கத ஞழ நீதான் இயல்புட னுரைக்கக் கேளாய்
அங்குல மிரண்டி னேடே யரையுமொன் றுமென லாகும்
செங்கயல் விழியின்மாதே செகத்துளோர்க் கறிந்து கொள்ளே. 7

**கண் விழியின் நீளம் இரண்டங்குலம், அகலம் அரையங்குலம், ஆழம் ஓர் அங்குலம் என்று அறிவாயாக.**

நயனத்தில் மூன்றத் தொன்று நகைகரு விழியே யென்ப
பயனெத்து நிலவு மாறு பகுத்திடு மேழி லொன்று
வியனெத்த சோதி யென்ப மேதினி தனில்வாழ் மக்கட்
கயனெத்துப் படைத்தான் கண்டாய் யன்னமென் னடைய
ணங்கே. 8

**கண்ணிலுள்ள கரு விழியானது முழுக் கண்ணில் மூன்றில் ஒரு பங்காகும். சோதி எனப்படும் தாரையானது கருவிழியில் ஏழில் ஒரு பங்காகும்.**

## கண்ணோய்களின் பெயர்

பூங்கொடி யுமையாள் பொருந்தியே கேட்க
வீங்குநீர்க் கங்கை விரிசடை யரனுர்
ஓங்கிய விழியில் உறும்பிணி யவற்றின்
பாங்குறு பலவாம் பண்பினை யுரைத்தார்.
வாதமும் பித்தமும் சிலேத்துமந் தன்னுல்
தீதுற விழியில் சேர்ந்தநோய் வகையும்
அன்னவை தீர்க்கும் அவிழ்தநன் முறையும்
சத்திர வினமும் சாத்திர விதியும்
நரம்பறிந் தனற்கோல் நாட்டிடு நெறியும்
சாத்தியா சாத்தியம் தானறி வழியும்
நேர்த்தியாய் விரித்து நிகழ்த்திடு வாமால்
நேத்திர ரோக நெடும்பெயர் கேளாய்
சுக்கிரப் படுவன் சோதி நெறித்தல்
மிக்க வீக்கம் விதன முடமயிர்
நத்தைத் தூறுபோல் நடுவிழி புடைத்தல்
பித்த காசம் பிறவிக் குருடு
நாக படலம் நன்விழி விழுங்கி
திமிலம் திமிரம் சிலேத்தும காசம்
அமர மெழுச்சி அந்திர காசம்
சோதிவிரணம் துர்மாமிச வளர்ச்சி
கோதிலா விழியில் குருதிசீழ்ப் பிடித்தல்
நிமைவிழி மாமிசம் நெறுக்கிப் பிடித்தல்
முழிகண் குருடு முன்னிமைக் குத்து
அழிகண் புழுவெட் டடர்ந்துகண் பிரித்தல்
முத்த காசம் முதுதிமிர் காசம்
இரத்தப்படலம் நீர்ப்பற்ப ரோகம்
கருவிழி யுடைந்து கண்மணி விழுதல்
சிறிய பயறுபோல் சிதறின முளைகள்
பரவைப் பூவொடு பஞ்சுநீர்ப் படலம்
அருவிநீர்த் தும்மல் மதுவர்ண காசம்
கடைக்கண் படலம் கண்குரு காசம்
கூறிய உதிரம் குருதியாய் வடிதல்
புடலம் பூப்போல் பிரிந்து பூப்படர்தல்
குவளைக் காசம் கூர்மைவெள் ளெழுத்து
கவலைகள் மிகவாய்க் கண்விழி கனத்தல்
சிதறின புள்ளிபோல் சிறிது பூக்கள்
மாலை காசம் மயிர்க்குத் துடனே
நீலகாசம் நிமைக்கண் துடிப்பு

உருவிழி புடைத்து டைந்தெழுங் காளான்
கருவிழி வெண்விழி கனக்கவே புடைத்தல்
வெள்ளைவிழியில் விளங்குதுர் மாமிசம்
ஒள்ளிய விதழ்போ லுதித்திடும் பில்லம்
வலிசிவப் பாலே வருஞ்சில பூக்கள்
அலரிப் பூப்போல் அதுசில சிவப்பு
புத்து வளர்ந்து புடைப்புப் புடைப்பாய்
துத்திடு மாமிசம் சொரிநீர்ப் பில்லம்
மையிருள் காசம் வளர்சொரிப் பில்லம்
மேனிமைப் படுவன் வியன்குந்த விரணம்
கருக்காய்ப் பழம்போல் கனத்த முளைகள்
புருவக் குடைச்சல் பொங்கி யுறுத்துதல்
அந்தி மாலை யானகண் கட்டி
நத்தைப் படுவன் நற்புழு மேய்ச்சல்
வெள்ளை விழியில் விரணம் சீழ்ப்பற்றி
தள்ளிய சூடு தான்வளைந் திடுதல்
பீளைகள் சாரல் பொங்கிநீர் வீழ்தல்
நீளவே நிமையில் உறுத்தல் நிமைப்பரு
கரணை முளைபோல் கண்டிடும் நிமையில்
குருவு களினாலே கொதறிப்பூப் படுதல்
மாதுளம் பூப்போல் வலித்திடும் சிவப்பு
வாத காசம் வருங்குமரி காசம்
அதிக புணர்ச்சியால் ஆனதோர்மந்தம்
கூர்மைப் பார்வையால் கூடின மந்தம்
சூரிய கிரணத்தால் தோன்றிடு மந்தம்
உட்டண வளர்த்தியால் உதித்திடு மந்தம்
மேக வெட்டையால் மிகுத்திடு மந்தம்
சாத்திர நெறியைத் தவிர்ந்து செய்கின்ற
தைல மதனாற் சார்ந்திடு மந்தம்
கிரந்தி சூலையால் கெட்டிடு மந்தம்
அடிகள் பட்டு அடைந்திடு மந்தம்
படிகவெண் விழியில் பலவிதம் புடைத்தல்
உழுத்தம் பயறுபோல் ஒருதர முனைகள்
தெளிந்தவெண் விழியில் செவ்வேர் வீழ்தல்
இஷ்டநீர்க் காசம் எழுநிமைக் கழலை
அன்ன கோபம் அழற்றிய கூச்சம்
மேனிமை சரிந்து விழுந்திடுந் தொங்கல்
தினவு தடிப்பு தேர்ந்தெழு நாயிறு
கண்கரு விழியில் கண்சவ்வு மூடுதல்

கருகின புகைபோல் கறுத்த சிவப்பு
வெருவிய கருவிழி விழுகும் செவ்வேர்
நவ்விவேல் விழியில் நயந்திடும் சூம்பல்
கொவ்வைப் பழத்துக் கொத்துபோல் மாமிசம்
கண்விழி கபாலம் கண்ணிமைக் குடைச்சல்
கொம்மையாய் வருகுங் குவளைவிப் புருதி
வால காசம் வகையறி பயனும்
ஏலவார் குழலார்க் கிதமுட னுரைத்த
எண்ணிய வியாதிகள் தொண்ணூற் ருறும்
கண்ணினில் வினையெனக் கருத லாமே. 9

**இதனுல் கண்ணேய்கள் தொன்னூற்ருரின் பெயர்களும் கூறினமை கண்டு கொள்க.**

### வயதும் பார்வைத் திறனும்

தெளிவது ஒழியா நிற்கும் தீங்கில்லை முப்பத் தைந்தில்
ஒளியது புகைந்து சற்றே ஒதுங்கிடும் நாற்பத் தஞ்சில்
வெளியுறப் புகைந்து காட்டும் மேவிய ஐம்பத் தேழில்
அளியுற விருளுங் கண்டாய் ஆண்டது நூற தாமே. 10

**மனிதருக்கு முப்பத்தைந்து வயது வரையில் கண்ணில் ஒருவித பார்வை வித்தியாசமும் உண்டாகமாட்டாது. அதற்குமேல் பார்வை சிறிது புகைச்சலோடிருந்து நாற்பத்தைந்துக்குமேல் புகைச்சல் விலகி விடும். அதற்குமேல் தூரத்துப் பார்வை ஐம்பத்தேழு வரையில் புகைச்சலோடிருக்கும். அதற்குமேல் பார்வை கொஞ்சம் கொஞ்சமாய் குறைவுபட்டுக் கொண்டு வந்து நூறு வயதான பிறகு பார்வை இருண்டு போகும்.**

### நோய் வருமாறு

கெர்ப்பத்தில் சிசுவாழ் போது கிருமிகள் சேர்ந்திட் டாலும்
கப்பிய பசியுற் ருலுங் கலக்கங்கொள் திகில்நேர்ந் தாலும்
செப்புமாங் கனிகாய் மெத்தத் தேடியே புசித்திட் டாலும்
ஒப்பறு மகவின் கண்ணில் வியாதிவந் தணுகுந் தானே. 11

**சிசுவானது தாயின் கர்ப்பத்தில் இருக்கும்பொழுது, தாயின் வயிற்றில் கிருமிகள் சேர்ந்திருந்தாலும், தாயானவள் பசியால் வருந்தினுலும், தாயானவள் கலங்கும்படியான திகிலடைந்தாலும், தாயானவள் மாங்காய், மாம்பழம் இவைகளை விரும்பித் தின்ருலும், சிசு பிறந்தவுடன் சிசுவின் கண்களில் நோய்கள் உண்டாகும்.**

கடுகிய வெயிலி னுலும் கனத்தடி சுடுகை யாலும்
தடியடி படுகை யாலும் தலையது சுமையி னுலும்

முடுகவே எண்ணெய் வார்த்து மூழ்கிப்பின் படுக்கை யாலும்
படிப்பினிற் கூர்மை யாலும் படர்ந்திடுங் கண்ணி னேயே. 12

அதிக வெயிலினாலும், காலில் வெயில் சூடேறுவதாலும், தடியினால் அடிபடுதலாலும், தலையில் பாரம் சுமத்தலாலும் எண்ணெய் தேய்த்துக்கொண்டு தலைமுழுக்குச் செய்து பகலில் உறக்கம் செய்வதாலும், கூர்மையான பார்வையோடு வாசிப்பதாலும் கண்ணில் நோயுண்டாகும்.

உட்டண மதிகத் தாலும் உதித்திடு மந்தத் தாலும்
உட்டணப் பொருள்க டம்மை யுகந்துதான் முகர லாலும்
உட்டண வெயிலில் நாளு முழன்றுநீ ராட லாலும்
உட்டண மதிக மீறி உதித்திடுங் கண்ணி னேயே. 13

உடலில் வெப்பம் அதிகரித்தாலும், வயிற்றில் மந்தம் ஏற்பட்டாலும், வெப்பம் தரும் சண்பகமலர், கோரோசனை, கற்பூரம், நவாச்சாரம் முதலிய வெம்மைதரும் பொருள்களை முகர்வதாலும், வெப்பமான வெயிலில் அலைந்து வந்து தலைமுழுக்குச் செய்வதாலும், வெப்பம் அதிகப்பட்டுக் கண்ணில் நோயுண்டாகும்.

நித்திரை யிலாத தாலும் நீள்வெயி லொழுகல் தன்னால்
நித்திரை சமயந் தன்னில் நிமிர்தலை கவிழ்தல் தன்னால்
பத்தியங் காடி கொள்ளல் பருகுநீ ரதிகங் கொள்ளல்
மத்திய மதிகக் காற்றால் வந்திடுங் கண்ணி னேயே. 14

தூக்கம் இல்லாததாலும், நீண்ட தூரம் வெயிலில் போவதாலும், உறக்கச் சமயத்தில் படுத்துத் தூங்காமல் உட்கார்ந்து கொண்டு உறங்குதலாலும், பத்தியங் காக்கும்போது காடி முதலிய புளிப்பு உணவுகளை அருந்தலாலும், அதிக தண்ணீர் அருந்தலாலும், கள் முதலியன அருந்தலாலும், உடலில் அதிக காற்றுப்படும்படி விடுதலாலும் கண்ணில் நோய் உண்டாகும்.

மனமிடை குன்றி னாலும் மாதர்தம் மாசை யாலும்
கனமலச் சேர்க்கை யாலும் கவிழ்ந்திடு பார்வை யாலும்
தனமிகக் கெடுகை யாலும் தணிவிலா நடையி னாலும்
சினமிகக் கொள்ள லாலும் சேர்ந்திடும் நயன நோயே. 15

மன வருத்தத்தாலும், பெண்களின்மீது மையல் கொள்வதாலும், வயிற்றில் பழைய மலங்கள் சேர்ந்திருப்பதாலும், கவிழ்ந்த பார்வையாயிருந்து ஒரு வேலையைச் செய்வதாலும், பொருள் இழப்பு உண்டாவதாலும், ஓய்வில்லாமல் நீண்ட தூரம் நடத்தலாலும், அடிக்கடி கோபித்தலாலும் கண்ணில் நோய் உண்டாகும்.

கண்ணினி லழன்றெ ரித்த காரண மேதோ வென்னில்
நண்ணிய வப்பு தன்னை நலமிகப் பருகை யாலும்
திண்ணிய வறட்சி யாலும் சேர்ந்தெண்ணெய் போகா தாலும்
விண்ணெழு மின்ன லோடு விளங்குதீப் பார்ப்ப தாலும். 16

**தண்ணீரை அதிகமாக அருந்துவதாலும், உடலில் அதிக வறட்சியாலும், எண்ணெய் தேய்த்து முழுகும்போது முடியில் எண்ணெய் போகாமலிருந்தாலும், ஆகாயத்தில் உண்டாகும் மின்னலைப் பார்ப்பதாலும், நெருப்பைப் பார்ப்பதாலும் கண்ணில் நோய் உண்டாகும்.**

தடியடி படுகை யாலும் தலையதிற் சுமையி னாலும்
கடிவிரை நடையி னாலும் கவிழ்ந்திடும் பார்வை யாலும்
நெடுவிரல் நகத்தி னாலும் நெருங்குநித் திரையி னாலும்
படியெழு கூர்மை யாலும் பாவையிற் படரு நோயே. 17

**தடியினால் அடிபடுதலாலும், தலையில் சுமை எடுப்பதாலும், விரைவாக நடத்தலாலும், கவிழ்ந்த பார்வையாக இருந்து ஒரு தொழிலைச் செய்வதாலும், விரல்களில் நகங்கள் வளர்ந்திருப்பதாலும், அதிகமாய்த் தூங்குவதாலும், உற்றுப் பார்த்துப் படிப்பதாலும் கண்ணில் நோயுண்டாகும்.**

உண்டிடு மசனந் தன்னி லுகந்துகல் கடிக்கை யாலும்
கொண்டகல் மயிரி னாலுங் கொடுமலச் சேர்க்கை யாலும்
பண்டுவெற் றிலையும் பாக்கும் பக்கரை யடக்கை யாலும்
கண்டநேத் திரந்த னக்குக் கருதிய நோய்க்குத் தாயாம். 18

**உண்ணும் உணவிலிருந்து கல் கடிபடுதலாலும், கல், முடி இவை ஆகாரத்தோடு கலந்து உட்செல்லுவதாலும், பழைய மலங்கள் வயிற்றில் சேர்வதாலும், பாக்கு வெற்றிலையைக் கன்னக் குறடுகளில் அடக்கி வைத்தலாலும் கண்ணில் நோயுண்டாகும்.**

### இன்னவிடத்தில் இத்தனை நோய் என்பது

சோதியி லிருபத் தேழு தொல்கரு விழியில் பத்து
தீதுபன் மூன்றும் வெள்ளை சிறந்திடு சந்தி லொன்பான்
கோதைகேள் மூவெட் டாகும் குவளையி னிமையி னுள்ளே
ஏதமில் நயன மெங்கும் எழுந்தநோய் பதின்மூன் றுமே. 19

**சோதியென்று சொல்லப்பட்ட பாவையில் 27, கருப்புவிழியில் 10, வெள்ளை விழியில் 13, கருப்பு விழிக்கும் வெள்ளை விழிக்கும் இடையில் சந்து என்று சொல்லப்படும் இடத்தில் 9, குவளையென்று சொல்லப்படும் கீழ் இமையினும் மேலிமையினும் 24, கண் முழுவதும் உண்டாகும் நோய் 13. ஆக 96 நோய்களாகும்.**

சேரவே தொண்ணூற் ருறும் திறந்திற மாக நிற்கும்
மாறுறு நாற்பத் தஞ்சும் மார்கபம் இருப தென்க
சீறிய பித்தி னேடு சிறந்தவை முப்பத் தொன்று
பேர்பெறு நயன ரோகம் பேணிமுன் பிறக்கும் வாறே. 20

வளிகோபத்தால் 45-ம் கபகோபத்தால் 20-ம் அழல்கோபத்தால் 31-ம் கண்ணில் நோய்கள் உண்டாகின்றன.

## மருந்திடா நாள்

தனக்குமந் தாரநாளும் தலையது முழுகும்நாளும்
வினக்குறு மாதர்மாத விடாயினுல் வெளிநில்நாளும்
மனக்குறு பத்துத்தானும் மருந்துதான் இடுதல்தானும்
கனக்குமே கண்ணில்நோவு காண்பிக்கும் செய்யாநாளே. 21

மழை பெய்யும்போதும், எண்ணெய் தேய்த்து முழுகினபிறகும், பெண்கள் மாதவிடாயினுல் வெளியே இருக்கும் பொழுதும், கண்ணுக்கு வெளியே பற்றுகள் போடுதலும், கண்ணுக்குள் மருந்துகள் இடுதலும் கூடாவாம். அவ்வாறு செய்தால் நோய் அதிகப்படும்.

## அறுசுவையின் இயல்பு

அறுசுவைக்குள் தித்திப்பால் அதிகசுக் கிலங்கரிப்பு
பெருசுவை மேதையாகும் பெருந்துவர்ப்பு திரமாகு
முருசுவைக் கைப்புக்கென்பா முறைப்பினுல் தசையாமற்று
வருசுவைப் புளிப்பாலென்பு நரம்புக்குள் தசைவளர்த்திக்கும். 22

இனிப்பினுல் அதிக விந்து உண்டாகும். கரிப்பினுல் மேதை ஆகும். துவர்ப்பினுல் குருதி பெருகும். கசப்பினுல் எலும்பு வலுக்கும். உறைப்பினுல் மாமிசம் வளரும். புளிப்பினுல் எலும்பு, நரம்புக்குள் தசை வளரும்.

செய்திடும் கறிகள்தன்னில் திகழ்கடு லவண மிக்கால்
உய்திடும் பித்த மெல்லாம் விரைப்புளித் துவர்ப்பு மிஞ்சில்
எய்திய வாத மெல்லாம் இசைந்த தித்திப்புக் கசப்பால்
கொய்திடும் கபம்மே லாகும் கொள்கையும் தரித்துக் கொள்வாய்

உண்ணும் ஆகாரங்களில் உப்பு அதிகமானுல் அழல் அதிகரிக்கும். புளிப்பு, துவர்ப்பு அதிகமானுல் வளி அதிகரிக்கும். இனிப்பு, கசப்பு அதிகமானுல் ஐயம் அதிகரிக்கும்.

### நோய் அணுகாதிருக்க

நிலமிசை மாந்தர் நோய்கள் நீங்கிடத் திங்க ளாறில்
சலமறச் சத்தி செய்யத் தக்கதாம் திவிமா தத்தில்
மலமறப் பேதி செய்ய மாதமொன் றினிலே நசியம்
பலமுற மூன்றும் நாளஞ் சனமிடப் பகர்ந்த தாமால். 24

**ஆறுமாதத்திற்கு ஒருமுறை கக்கல் மருந்தும், இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கழிச்சல் மருந்தும், ஒரு மாதத்திற்கு ஒருமுறை மூக்கிலே நசியமும், மூன்று நாட்களுக்கு ஒருமுறை கண்மருந்தும் பயன்படுத்தவேண்டும்.**

ஆதி முப் பிணிகடீர அமைத்திடத் தொழில்கள் நான்கில்
பேதியில் தாழும்வாதம் பித்தம் சத்திக்கத் தாழும்
ஓதிய நசியத் தாலே உயர்கபந் தீரும் மிக்க
நீதியஞ் சனத்தால் கண்ணில் நிகரில்லா ஒளியுண் டாகும். 25

**முன்கூறிய நான்கு உபாயங்களில் கழிச்சல் செய்வதால் வளி குறையும். கக்கல் செய்வதனல் அழல் குறையும். நசியம் செய்வதால் ஐயம் குறையும். கண்ணில் மருந்திடுவதால் கண்ணில் ஒப்பற்ற ஒளி உண்டாகும்.**

### இன்ன காலத்தில் இன்னது செய்ய நன்று என்பது

செய்யநற் பேதி தானும் செய்வதும் கால மேற்க
உய்யு மோக்காளத் துக்கே உகந்ததோர் சாமத் துள்ளாம்
பொய்யுமா நசியந் தானும் பெரும்பதி னேழுக் குள்ளாம்
மெய்யுறு மருந்தே கண்ணில் மிகுந்திடும் அந்தி மிக்காம். 26

**கழிச்சல் செய்வதற்கு காலை நேரமும், கக்கல் செய்வதற்கு ஒரு சாமத்திற்குள்ளும், நசியம் செய்வதற்கு பதினேழு நாழிகைக் குள்ளும், கண்ணில் மருந்திடுவதற்கு அந்தி நேரத்திற்குள்ளும் நன்று.**

### மருந்திடும் நேரம்

மிக்கவ ரெழுது காலம் யாவுமா மிதுன நன்றே
டொக்கவே துலாந்தேள் மாசம் காலையாம் உயர்வில் லோடு
தக்கமா மகரம் கும்பம் மீனமத் தியானம் மற்ற
பக்கமா தங்கள் கண்ணில் பதினெட் டாமஞ் சனங்கள். 27

**ஆனி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் காலை நேரத்திலும், மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களில் பகல்**

நேரத்திலும், மற்ற சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில் பதினெட்டு நாழிகைக்குள்ளும் மேலோர்கள் கண்ணில் மருந்திடுவார்கள்.

களவுறு நரம்பு குத்தல் கருவிக ளாடல் காலை
ளவுறு கொம்பு வைத்தங் குதிரம்வாங் குதல்மத் தியானம்
அளவுற அட்டை விட்டே ஆற்றுவ தந்திக் காலம்
தளவுறு நகைப்பால் வெய்யோர் புரஞ்செற்றூர் சாற்றி னுரே. 28

நரம்பு குத்தல், அறுவைசெய்தல் இவைகட்குக் காலைநேரமும், கொம்புவைத்து இரத்தம் வாங்குதற்கு பகல் நேரமும், அட்டை விட்டு இரத்தம் வாங்குதற்கு மாலை நேரமும் ஏற்றவை என்று திரிபுரத்தைச் சிரித்தெரித்த சிவனுர் கூறினுர்.

### 1. கண்ணொளி பெருக்க பல் தூய்தாக்கல்

சீர்பெறு நயனந் தன்னில் சேர்ந்தநோய் வாரா வண்ணம்
கார்செறி குழலி னுளே கருதிடு தந்த சுத்தி
நீர்திகழா லெருக்கு நிறை வேலந் திறம் பூலா
சேரிடப் பக்க முற்றித் தேய்த்திட வலத்தில் பின்னை. 29

ஆல், எருக்கு, வேல், பூலா இவற்றின் குச்சியால் முன்னம் இடதுபக்கத்தில் தேய்க்க ஆரம்பித்து பிறகு வலதுபக்கத்தில் பல் தேய்க்க கண்ணோய்கள் வராமல் காக்கும்.

### 2. நிலவைப் பார்த்தல்

கைவிரல் தன்னைக் கொண்டு கலந்துபல கணிபோல் விட்டு
துய்யசந் திரனை மெள்ள தெளியவே நோக்கிப் பாரும்
வெய்யொளி யுண்டு நீயும் விரவிய கண்ணில் நீரை
துய்யமாய் விட்ட லம்பித் துவளாகப் பிசைந்தி டாயே. 30

கைவிரல்களை பலகணிபோல் கோத்துக்கொண்டு ஆகாயத்தில் மாசுகள் இல்லாத காலங்களில் சந்திரனையப் பலகணி வழியாய் சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்து பிறகு கண்ணில் தண்ணீரை விட்டு அலம்பிவிட்டுக் கண்களைப் பிசைந்திடுவாயாக. இவ்வாறு செய்தால் கண்ணுக்கு ஒளி உண்டாகும்.

உண்டுகை கழுவிப் பின்னை உறுமைய மூன்று துள்ளி
வண்டணி குழலால் வார்த்து வளமிகும் நிமையைத் தேய்த்து
கொண்டொரு கடிகை நேரம் குணமிகுங் கதிரைப் பார்த்து
பண்டுபோ லிருக்கும் போது பரிவுகண் அமிர்த யோகம். 31

சாப்பிட்டுவிட்டு கை கழுவிய பின்னர் கண்ணுக்குள் மூன்று சொட்டுத் தண்ணீரைவிட்டு இமைகளை நன்ருய்த்தேய்த்து ஒரு கடிகை நேரம் சந்திரனைப் பார்த்து வந்தால் கண்ணுக்கு அமிர்த யோகம் என்று சொல்லப்படும்.

### கண்ணோய் வருங் காரணம்

தின்ஞர் பண்ணைச் சிறுகீரை தின்ன மறந்தார் சீர்கேடாய்
பொன்னுங் காணிக் கறிகூட்டார் பூசார் பாதம் நெய்யுண்ணுர்
பண்ணுர் மதியந் தனைப்பாரார் பால்வார்த் துண்ணுர் பல்தேயார்
கண்ணுர் நோயாற் கவல்வரதை யாமும் சொல்லக் கடவோமே. 32

பண்ணைக்கீரை, சிறுகீரை, பொன்னுங்காணிக்கீரை இவற்றைச் சாப்பிடாதவர், பாதங்களில் இரவில் பசுவின் நெய்யைப் பூசா தவர், அன்னத்தில் நெய் கலந்து ஆகாரம் கொள்ளாதவர், சந்திர தரிசனம் செய்யாதவர், இரவில் அன்னத்தில் பால் சேர்த்து உண்ணுதவர், பல் தேய்த்தலை முறைப்படி பெய்யாதவர் ஆகிய இவர்கள் கண்ணோய்களால் வருந்திக் கவலைப்படுவார்கள். அதனை நாம் கூறக் கடமைப்பட்டவராவோம்.

### கண்ணோயாளிகள் சூளுரை

செங்கயற்கண் மிகநொந்தால் சேர்க்கே னிலைக்கறிநீர்மோர்
பங்கயச் சீரடிநோகப் பருக்கையு முறுத்திட நடவேன்
அங்கயற் கண்ணியினைச் சேரேனருகிருந் தாலும்பேசேன்
மங்கையை யுகப்பதுமப்பாலே மருத்துவன் சொல்வதுபோலே. 33

கண்ணில் வேதனையுண்டானுல், கீரை வகைகள், மோர் இவற்றைச் சேர்க்கமாட்டேன்; காலடியில் வருந்தும்படியாகவும் பருக்கைக் கற்கள் காலடிகளில் உறுத்தும்படியாகவும் நடக்க மாட்டேன்: பெண்களை அணையமாட்டேன்: அவர்கள் சமீபத்தி லிருந்தாலும் பேசக்கூட மாட்டேன்: நோய் குணமான பிறகு மருத்துவன் கட்டளைப்படியே பெண்போகம் கொள்வதிலும் உறுதியுடன் நிற்பேன்.

குடிப்பது வெந்நீ ராகும் கொள்வது சாறு மாகா
பொடிப்புறு மிளகு சுக்கும் பொருந்திய குளமுங் கூட்டி
தடிப்புள தயிருஞ் சோறுந் தானது மிகவு மாகா
வெடிப்புறு மீனி றைச்சி யிவைபத்திய மாகா தென்னே. 34

வெந்நீர் குடித்தல் வேண்டும். உறைப்பு அதிகமான குழம்புகள் கூடாது. குழம்புகளில் சுக்கு, மிளகு, வெல்லம் சேர்ந்ததா

யிருக்கவேண்டும். தயிர் கலந்த சாதம் மிகுதியாகக் கூடாது. மீன் கூடாது.

சுக்கது நீரிற் காய்ச்சிச் சுகம்பெற குடிக்க நன்று
மிக்கதோர் வழுத லங்காய் விரும்பிய தகரை மற்றும்
புக்கது சிறிய கீரை புனல்முருங் கைக்காணி கொளத்
தக்கது பயறுபாலாம் தானது நிறையக்கொள்ளே. 35

சுக்கைப் போட்டுக் காய்ச்சிய வெந்நீர் குடிக்கவேண்டும். வழுதலங்காய், கையாந்தகரை, சிறுகீரை, முருங்கைக்கீரை பொன்னுங்காணி, பாசிப்பயறு, பசும்பால் இவைகளை உட்கொள்ளலாம். (தகரை என்பது மலைநாட்டார் தகரைக் கீரையையும் உண்பது உண்டு).

## கண் குளிர்ச்சிக்கு

கண்ணது பலகால் நொந்து கடுகியே அழன்று வந்தால்
நண்ணிய உள்ளங் காலில் நறுநெய்யை மிகவும் தேய்த்து
திண்ணிய தவிடு மாவால் சிறக்கவே தூவி வைத்து
தண்ணெனக் கழுவி நல்ல சந்தனம் பூசத் தீரும். 36

கண்ணனது நோக்காடடைந்து, அழன்றிருக்குமானுல், இரவில் படுக்கைக்குப் போகும்போது உள்ளங்காலில் பசுவின் நெய்யை நன்ருய்த் தேய்த்து, ஒருதட்டில் தவிடு மாவைப்போட்டு அதில் இரண்டு கால்களையும் வைத்து அழுத்த கால்களில் தவிடு ஒட்டிக்கொள்ளும். அப்படியே படுத்துக்கொள்ளவேண்டும். காலையிலெழுந்து குளிர்ந்த நீரில் அலம்பிவிட்டு இரண்டு உள்ளங் கால்களையும் துடைத்துவிட்டு சந்தனத்தை இழைத்துப் பூசிவிட வேண்டும். அழலை மாறும்.

## மருந்து இத்தனைமுறை இட்டால் என்ன பலன் என்பது

மருந்திடும் நேரந் தன்னில் மகிழ்ந்திரு நேர மிட்டால்
திருந்திட இருள்கள் நீங்கும் தீர்ந்திடும் நோய்க ளினின்றும்
பரிந்திடும் நேர மொன்றில் பண்பினுல் விடியற் காலம்
விரைந்திடும் அந்தி நேரம் வினையறும் நயன மீதே. 37

மருந்திடும் நேரங்களில் இரண்டு வேளையும் மருந்திட்டால் கண்களில் இருள் விலகி நோய்தீரும். இரண்டுவேளையாவது: அதிகாலையிலும், மாலையிலுமாம். சூரியன் மறைந்த பின்னர் மாலையில் மருந்து போடலாகாது.

ஒருபொழுதே இடுமருந்துக் குகந் தந்திக் கால மாமற்
றிருபொழுதிட்டாற் கண்ணில் இருளறும் ரோகம் நீங்கும்
மறை யிருள் காலைநேரம் மருவந்திக் காலத் திட்டால்
வரிபரந்திருந்து கண்ணில் வருமிடர் தீராதென்னே. 38

**ஒருதடவை மட்டும் மருந்திட அவசியமேற்பட்டால் மாலை நேரம் நல்லது.** இருபொழுதும் மருந்திட்டால் கண்ணில் இருள் அகன்று நோய் நீங்கும். காலையில் இருள்தெளியு முன்னும் மாலையில் சூரியன் மறைந்த பின்னும் மருந்திட்டால் கண்ணில் நோய் தீராதென்று உணர்க.

மருந்துகள் கண்ணி லங்கும் மகிழ்ந்துட னிட்ட பின்பு
திருந்துநீர் கரிப்புக் கொண்டு திகழ்ந்த நீரதுவு மாறில்
அறிந்திடு மவைகள் போக அனலுறு நீரால் மாற்ற
இருண்டெழு குழலி னளே யினிதுநீ கண்டிடர்யே. 39

மருந்து கண்ணிலிட்ட பிறகு கண்ணுனது கரித்து நீர்வடிந்து நின்ற பிறகு வெந்நீரால் கண்ணைத் துடைத்துவிடுவது நலம்.

## வாய்க் கொப்பளித்தல்

தக்கதோர் மருந்து சொல்வேன் தானிது வாய்க் கொப்பளிக்க
மிக்கதோர் கடுக்காய் சுக்கு மிளகுதிப் பிலியிந் துப்பு
புக்கதோர் தேசிச் சாற்றில் புறவற நறுக்கித் தேனும்
ஒக்கவே கூட்டிப் பின்னை ஒளிபெற நிறுத்திப் போடே. 40

அடக்கிநீ நிறுத்திப் போட்டு அடைவுற வெந்நீர் கொண்டு
சடக்கென கொப் புளித்து சலிப்பற மாத்திப் பின்னை
மிடற்றினி லெண்ணெய் கொண்டு மிகவதி ஒத்து மென்று
படித்திரும் புலவோர்க் கீது பரிவுடன் செப்பி னரே. 41

## எண்ணெய் முகூர்த்தம்

மார்கழி தையி ரண்டாம் மாசிபங் குனியே மூன்றும்
சீருடன் மேஷ ராசி சிறந்தவை காசி யஞ்சாம்
ஆறிட ஆனி ஆடி ஆவணி கடிகை யாறும்
வாருடன் எண்ணெய் தன்னில் மற்றிவை கடிகை மூன்றே. 42

மார்கழி, தை இந்த மாதங்களில் 2 கடிகை நேரமும்; மாசி, பங்குனிக்கு 3 கடிகையும்; சித்திரை, வைகாசிக்கு 5 கடிகையும், ஆனி, ஆடி, ஆவணிக்கு 6 கடிகையும்; மற்ற மாதங்களுக்கு 3 கடிகை நேரமும் எண்ணெயைத் தலையில்ஊற வைத்து தலைமுழுக்கு செய்யவும்.

## அட்டை விடுதல்

கண்ணது கனத்து நொந்து கண்ணில்நீ ரொழுகு மாயின்
விண்ணுடன் புருவத் தோடு மேலுற வலித்த போது
நிண்ணிய அட்டை விட்டு நிமைபெறு நீளந் தன்னில்
திண்ணிய சிரமத் தாலே செய்வதோர் கருமம் நன்றும். 43

**கண்ணுனது கனத்து, நோக்காடடைந்து, தண்ணீர்வடிந்து, புருவமும் இமையும் வலி காணுமானுல் இமையில் அட்டை விடுவது நன்ருகும்.**

## இரத்தம் வாங்கும் வகை

இவையிது அடைவே செய்து இயல்பினுல் மாரு தாகில்
நவைவிட நெற்றி தன்னில் நரம்புடன் குறியே யிட்டு
இயல்புடன் கட்டிச் சுட்டு இனிதுடன் ஒத்து மாகில்
அடையிமை மந்தந் தானும் அளவதாய் மாறுங் காணே. 44

**அட்டைவிட்டு வியாதியானது குறையாவிட்டால், நெற்றியில் நரம்பைக் குறித்துக்கொண்டு சுட்டு புண்செய்து ஆற்றிவிட்டால் வியாதியும் தீர்ந்து கண்ணிலுள்ள மந்தமும் நீங்கிவிடும்.**

கருகிய யிமைகள் தம்மைக் கதித்துறப் பிடித்துப் பார்த்தால்
பரவியே சதைதி ரண்டு பருத்துமாங் கிச மட்டும்
விரவியே சிவந்து தோன்றில் யிதுபற்ப ரோக மென்று
மருவியே மண்டலாக் கிரத்தால் மலத்தில்நீர் சோதி யென்ருர் 45

**இமைகளை நன்ருய் அழுத்திக் கசக்கிப் பிடித்து இமைகளைப் புரட்டிப் பார்க்க சதைவளர்ந்து சிவப்பாகத் தோன்றுமானுல் இது பற்பரோகமென்று மண்டலாக்கிரத்தால் மலத்திலும், நீரிலும் சோதனை செய்வாயாக.**

பில்லமே மிகுந்தபோது பிடித்ததுபோகநீளம்
நெல்லது ரெண் டதாக நின்றது அளவே கொண்டு
வல்லவர் குத்தி வாங்கும் வகையது சொல்லக் கேளாய்
அல்லமாங் குழலி ளுளே அங்கதி லொன்று தானே. 46

**பில்லமானது அதிகரித்தபோது நன்ருய் சதையைப் பிடித்து இரண்டு நெல் நீளத்திற்கு நிபுணர்கள் குத்திவாங்கும் வகையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக.**

இமையடி புருவ முற்றும் இகந்துறப் புடைத்து விம்மி
சமையவே பிடித்துப் பார்த்தால் சலமுறத் திரண்டு காட்டும்

அமையவே இதனை நீயும் அறிந்துற பில்ல மென்று
இமையடி இறுக்கிக் கொண்டு நீயது குத்தி வாங்கே. 47

இமையும் புருவமும் கனத்து விம்மியிருந்து விரல்களால் பிடித்துப் பார்த்தால் தண்ணீரும் சுரக்குமானுல் இதனைப் பில்ல மென்று தீர்மானித்து இமையை இறுக்கிப் பிடித்துக்கொண்டு குத்தி வாங்குவாயாக.

இருவிரல் தன்னைக் கொண்டு இமையடி விம்மப் பண்ணி
உருவவே புடைத்து நிற்கில் குத்திடும் இறுக்கிக் கொண்டு
விரவிய நெட்டி போலே விரைந்தெழு மிதனை வாங்கி
பரவியே எண்ணெய் நெய்யால் பதம்பெற ஒத்து மென்றே. 48

இரண்டு விரல்களால் இமையைப் பிடித்து அழுத்தி விம்மச் செய்து குத்தி இரத்தத்தைப் போக்கி நெட்டியைப்போல வெளுத்து இலேசாய் ஆன பிறகு எண்ணெய் அல்லது நெய்யைக்கொண்டு ஒத்தணம் கொடுப்பாயாக.

பதம்பட ஒத்திப் பின்னை பச்சை கற்பூர மிட்டு
விதம்பட நெய்யிற் சீலை வினவின மேலிமையிலிட்டு
பதம்பட புகையு மிங்கும் பரவியே சிதறிக் கொண்டு
விதம்பட எட்டு நாளும் இப்படிச் செய்வ தென்றே. 49

பதப்படும்படி ஒத்தணம் கொடுத்த பிறகு பச்சை கற்பூ ரத்தை நெய்யிலிட்டு அரைத்து ஒரு துணியில் தடவி இமையில் ஒட்டிவைத்து புகைபோட வேண்டும். இப்படியாக எட்டுநாளும் செய்ய வேண்டும்.

### நாகபடலம் எடுக்கிற நிதானம்

கருதாய் விழியிற் கடையுற்று கருத்த சோதி யதனுள்ளே
மருவாய் வெள்ளை மேலோடி மருவிச் செந்நூ லதுஒப்பாய்
உருவாய் மேவித் திரண்ட செவ்வேர் உரித்ததோல் தன்தசை போல
வெருவாய் வந்த நற்கண்ணி விலிசங் கொண்டே உரியாயே. 50

கடைக்கண்ணிலிருந்து உண்டாகி வெள்ளை விழியின்மேல் படர்ந்து சிவப்பு நூல்போல தோன்றி சதைபோல் தடித்து கருப்பு விழியையும் கடந்து ஜோதிக்கு சமீபத்தில் எட்டிப்பார்க்கும் இதை பலிசம் என்னும் ஆயுதத்தைக்கொண்டு உரித்துவிடுவாயாக.

விலிசங் கொண்டே உரித்த பின்னர் வினவிக்கிரியை நீகேளாய்
தெளியும் படியே நெய்கொண்டு தியங்க ஒத்தி தாஞெழுக்கி

புளியந் துளிர் பூலாவேர் புதிய தேறல் தன்னுடனே
தெளியச் சீவி தாய்ப்பாலில் தியங்க நறுக்கி வார்த்திடுமே. 51

விலிசம் என்னும் ஆயுதத்தைக்கொண்டு உரித்த பிற்பாடு செய்ய வேண்டிய கிரியைகளை நீ கேட்பாயாக. நெய் ஒத்தணம் செய்தும், கண்ணுக்குள் நெய்யை விட்டும், புளியங் கொழுந்து, பூலாவேர் இவைகளாடு புதிய தேனைக் கூட்டி நறுக்கிப் பிழிந்து தாய்ப்பாலையும் சேர்த்து கண்ணில் இடுவாயாக,

## சரவண விதி

பத்திரச் சுணை யினுலே பருவிரல் தருணந் தன்னில்
சுத்தமா முத்தினக் கால் குட்சமா யதற் குத்தக்க
சத்திரந் தன்னினுலே தான் மிகப் பரவிக் கீறல்
இத்துடன் குத்தி வாங்க இமைத் தோட மேகுந்தானே. 52

சரவணம் என்பது சுணைப்பாத்திரம், சுணைப்பாத்திரங்களாவன: பவளமல்லிகை இலை, பெராமரத்தின் இலை, கையாந்தகரை இலை, பூவரசம் பூவின் இதழ்கள், தர்ப்பையென்று சொல்லப்படும் நாணல் புல் முதலியவை. மேற்கண்ட சுணையுள்ள முதிர்ந்த இலைகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு இமையைப் புரட்டி பரவிக் கீறிவிட்டால் இரத்தம் வடிந்து இமைத்தோஷங்கள் தீரும்.

பரிவற வலிக்கு மாகில் பச்செள்ளு பொடிகள் செய்து
திரவிச் சக்கரை குழைத்து சிக்கெனப் பொட்டணங்கள்
வெளிபட எண்ணெய் நெய்யால் வெச்செனப் புருவம் நெற்றி
உருவுள கண்கள் கன்னம் ஒட்டியே ஒத்து மென்றே. 53

இரத்தம் போக்கியபின் வலியுண்டாகுமாகுல் பச்சை எள்ளைப் பொடி செய்து அதோடு சர்க்கரையும் சேர்த்து ஒரு துணியில் பொக்கணமாகக் கட்டிக்கொண்டு எண்ணெய் அல்லது நெய்யைக் காய்ச்சிக் கொண்டு அதில் பொக்கணத்தை நனைத்து இளஞ்சூட்டினில் புருவம், நெற்றி, கண், கன்னம் இந்த இடங்களில் நன்ருய் ஒத்தணம் போடுவாயாக.

கடையது கண்ணி லங்கே கனத்துற பரந்து நின்று
மிடைபட அருவி நொந்து விதனமே செய்யு மாகில்
அடைவிது பார்த்து நீயும் அலரது விரித்துக் கொண்டு
சடை யவன் அருளி ஞலே சரவணம் வாங்கிடாயே. 54

கடைக்கண்ணில் தசையானது கனத்து பரவியிருந்து, அருவி, நொந்து வலியுண்டுபண்ணுமாகில் கண்ணைப் பிரித்துக்கொண்டு சடையையுடைய பரமேஸ்வரனைத் தியானித்து சரவணப் பிரயோகம் செய்வாயாக.

விதத்தொரு எழுச்சி விம்மி நிமையடி நரம்பு தானும்
பதத்திடும் சுழியிற் குத்த பரந்து வெண் மாசுமூடி
கதித்தெழுஞ் சோதி தன்னில் கரகரப் புற்று நின்றால்
மதித்தெழும் திருவையூன்றி மகிழ்ந்து இறைச்சியை வாங்கே. 55

**எழுச்சி என்னும் வியாதியானது விம்மி இமையின் அடி நரம்பு தடித்துக் குத்தலுண்டாகி, சோதியில் மாசுமூடி கரகரப்புற்றிருந்தால், ஈசுவரனைத் தியானித்து மாமிசத்தை நீக்குவாயாக.**

வாங்கி நீர் போனபின்பு மருந்துதான் சொல்லக் கேளு
ஓங்கியே புசிக்கு முன்னே உடனிது குறித்துக் கொண்டு
பாங்கினால் மதுர நெய்யில் பதத்தினி லுரைக்கக் காய்ச்சி
தேங்கவே கண்ணில் வார்க்க தீர்ந்திடும் நயன நோயே. 56

**மாமிசத்தை வாங்கி நீர் போனபின்பு பசுவின் நெய்யைக் காய்ச்சி இளஞ் சூட்டோடு கண்ணில் வார்க்க நிவர்த்தியாகும்.**

தலையெழு நயனந் தன்னில் தான்வலி யுற்ற போது
நலமிகும் பக்கந் தன்னில் நரம்பினைத் தெறிப்ப தானால்
அலமிகு பக்கந் தன்னி லறைசிலை விடுவா யாகில்
மலமிகு மூவர் நாடி மாறியே யேகுந் தானே. 57

**கண்ணில் வலி உண்டாகி தலையும் வலிக்குமானால், நெற்றியில் நரம்பினைக் குறித்துக்கொண்டு, அறைசிலை யென்ற ஆயுதத்தைப் பிரயோகம் செய்வாயாகில் வலி நின்றுவிடும்.**

## நெற்றியில் உருண்டை பாய்ச்சுவது

நெற்றியில் நீர்கனத்து நீடுவே தனையுண் டாகில்
தெற்றெனப் புறத்தி லந்த தெளிதரு நரம்பை நாடி
கற்றது விரும்பிக் கேட்டு கண்சூலை மிகுந்த தென்றால்
உற்றதோர் நரம்பைக் கண்டு உறுப்படக் குத்தி டாயே. 58

**நெற்றியில் நீர் சுரந்து, கனத்து வலியுண்டாகி கண்ணில் சூலை உண்டானால், நெற்றி நரம்பைக் குறித்துக்கொண்டு குத்தி இரத்தத்தை வாங்குவாயாக.**

## நாடி நிதானம்

கண்ணி னுடைய நாடி கலந்து கைபிடரி யுற்று
எண்ணிய வாக்கி லோடி இசைந்ததோர் நீரைப் பற்றி
நண்ணிய இந்தநாடி நரம்புதான் விழியி லோடி
திண்ணிய உதட்டைப் பற்றிச் சிறந்தகை விரல தாமே. 59

**கண்ணினுடைய நாடியானது, கை பிடரியிலிருந்து வாயிலோடி அங்குள்ள நீரைப்பற்றி, இந்த நாடியானது கண் நரம்பில் கலந்து உதட்டில் பிடித்து கை விரல்களில் கலந்திருக்கும்.**

நாக்கடி யுற்ற நாடி நடுத்தட மாக வோடி
நீக்கிடா கோசம் பற்றி பெருவிர லுற்று நிற்கும்
தாக்கிடும் பின்னு மந்த தயங்கிய வாக்கி லோடி
நோக்கிய பெருவி ரலுற்று நுண்சிறு விரலைப் பற்றும். 60

**நாக்கின் அடியிலுள்ள நாடியானது, நாக்கின் நடு மையமாக ஓடி கோசத்தில் சம்பந்தப்பட்டு, பெருவிரலைப்பற்றி நிற்ப தோடன்றி, சிறு விரலையும்பற்றி நிற்கும்.**

**குடோரி செய்முறை**

கண்ணினில் வாதம் வந்தால் கடிய சுக்கிரன தாகும்
எண்ணிய நிமையின் மேலே யிருவிரல் மேல தாக
நண்ணிய தலைநெறுக்கி நரம்பதை குறித்துக் கொண்டு
திண்ணிய குடோரி யூன்றி சினந்தனை போக்கு மென்றே. 61

**கண்ணில் வாயு வந்தால் சுக்கிரன் என்று சொல்லப் படும். இமைக்கு இரண்டு விரல் மேலே நெற்றியில், தலையை நெறுக்கினல் நரம்பு புடைக்கும். அந்த நரம்பைக் குறித்துக் கொண்டு குடோரி என்னும் பிரயோகம் செய்து வலியைப் போக்குக.**

**கொத்திக் கட்டுகிற உருண்டை**

துத்தந் துரிசி யரிதாரம் தூய தான கெந்தகமும்
மற்றுஞ் சிலையும் நேர்வாளம் வடிவாய் வெண்ணெ யுடன்கூட்டி
மெற்றும்மேனி யிலைச்சாற்றில் மெலியரைத்து உருண்டைசெய்து
கொத்திக் கட்ட நெற்றிநெரி குலைந்தே போகுங் கண்ணேயே. 62

**துத்தம், துருசு, அரிதாரம், கெந்தகம், மனேசிலை, நேர்வாளம், வெண்ணெய் ஆகிய ஏழு சரக்குகளையும் சமன் எடையாய்ச் சேர்த்து குப்பைமேனி இலைச்சாறுவிட்டு அரைத்து, உருண்டை செய்து வைத்துக்கொண்டு, நெற்றியில் கொத்திவிட்டு இந்த மருந்தை வைத்துக்கட்ட கண்நோய்கள் தீரும்.**

**காச நிதானம்**

வாதத்தின் காச னிலம் வரும்பித்தம் சிவப்ப தாகும்
ஓதத்தின் வண்ணம் வெள்ளை ஓங்கியே மேக நீலம்
நாதமாம் வால காசம் நலத்தையே ரண்ட மாகும்
போதமந் தாரகாசம் பொருந்து குங்குமம் பாரே. 63

**வாதகாசத்தின் நிறம்-நீலம்; அழல்காசத்தின் நிறம்-சிவப்பு, வெள்ளை, மேகவண்ணம்; வாலகாசத்தின்நிறம்-கொட்டை முத்தின் நிறம்; மந்தாரகாசத்தின் நிறம்-குங்கும நிறம்.**

### காச வகை

கண்தனிற் காச மெல்லாம் கருத்துட னுரைக்கக் கேளாய்
பண்பெறு நீல காசம் பயந்தரும் பித்த காசம்
எண்பெறும் வாத காசம் இசைந்திடும் வால காசம்
நண்பக லிருளு மந்தம் நயந்தமந் தார காசம். 64

**கண்ணில் உண்டாகும் காசங்களாவன:— 1. நீலகாசம் 2. அழல்காசம் 3. வளிகாசம் 4. வாலகாசம் 5. மந்தாரகாசம்.**

மந்தமே தந்து நாளும் வந்த சேத்து மத்தின் காசம்
அந்தமாம் வலியுங் காசம் அமர்ந்திடும் அந்நீர காசம்
சிந்துர நுதலி ளுளே செய்திகேள் காச மெட்டும்
வந்தபே தமையே யாகில் மறைந்திடுங் கண்ணுந் தானே. 65

**6. சிலேத்தும காசம் 7. வலியுங் காசம் (இதைக் குமரிகாசம் எனவும் சொல்லலாம்) 8. அந்தரகாசம். இவ் வெட்டுக் காசமும் வந்தவுடன் அறியாது இருந்து விட்டால் கண்ணை மறைத்துவிடும்.**

### பித்தகாச சத்திரம் செய்முறை

காச வகையில் வரும்பித்தக் காசந் தீர்க்கும் வகைகேளீர்
ஆதிதன்னிலெண் ணெய்தன்னுல் அவிழ்த மதனுல் தான்பலிக்கும்
பாதி சென்ருல் பலியாது பலியாப் பலிக்கும் சத்திரத்தால்
நீதி யுடைய பண்டிதர்க் கேநிற்கும் நில்லா மூடர்க்கே. 66

**முன்கூறிய எட்டுவகைக் காசத்துள் ஒன்ருகிய அழல்காச நோயை நிவர்த்திக்கும் வகையைக் கேட்பீராக. வியாதி ஆரம்ப காலமாயிருந்தால் தைலத் தலை முழுக்கினுலும் மருந்தினுலும் நிவர்த்தியாகும். வியாதிக்குப் பாதி வயதாகி விட்டால் தைலத் தினுலும் மருந்தினுலும் நிவர்த்தியாகாது. நீதியுள்ள பண்டிதர் களால் சத்திரப்பிரயோகம் செய்யப்பட்டால் ஒரு சமயம் பலித் தாலும் பலிக்கலாம். பயன் தராமல் போனுலும் போகலாம். மூட வைத்தியராய் இருந்தால் கொஞ்சம்கூட பலிக்காது.**

மூடர் குத்தும் சத்திரந்தான் முட்டைத் தூர்போல் முளையாமே
வாடா நீளம் நல்விரலால் வைக்கோல் தாளின் பருமனதாய்
நாடாய் நீயுமித னுடைய நவச்சித்திர னிலையறிந்து
கோடா வண்ணம் நெல்லளவு குறித்துத் தானுங் குத்திவிடே. 67

மூடர்கள் செய்யும் சத்திரப் பிரயோகத்தால் கண்ணில் முட்டைத் தூர்போல் முளைகள் உண்டாகும். அந்த முளையானது விரல் நீளமும் வைக்கோல் தாளின் பருமனுள்ளதாய் இருக்கும். நீ அதைக் கவனித்து அந்த முளையில் நெல் அளவு குறித்துக்கொண்டு குத்திவிடவேண்டும்.

குத்துங் காசம் முத்துப்போல் கூடிப் பிரியுங் குன்ருமல்
சற்றுங் களிம்பொன் றில்லாமல் தாம்பிரச் சிலாகை முப்பட்டம்
போற்றும் ஆறுவிரல் நீளம் முன்னும் பின்னும் விரல்நீக்கி
மாற்று நிலையை வைத்தணைத்து வைத்துக் கட்டி குறைதீரே. 68

குத்துவதற்கு அதாவது சத்திரப் பிரயோகம் செய்வதற்குப் பக்குவமாயிருக்கும் கண்ணுனது காசநீர் முத்தைப்போல வெண்ணிறமாய் இருக்கவேண்டும். கண்ணைக் கசக்கி திறந்தால் நீரானது விரிந்து பிறகு குவியும். இப்பேர்ப்பட்ட குணங்களிருக்குமானல், ஆறுவிரல் நீளமுள்ள தாம்பிரத்தினுல் முப்பட்டையாகச் செய்யப்பட்ட சிலாகையைக் களிம்பில்லாமல் துலக்கிவிட்டுத் துடைத்து வைத்துக்கொள்க.

குத்துகை காசங் கேளீர் குவளை வெண்மேகம் போல
மற்றதின் கருப்பதுள்ளே வளைசங்கு நிறம தாகி
உற்றதின் பாவைப் பிள்ளை உளுந்தினிற் பாதி போன்றும்
குற்றங்கள் தெரியா தாகில் குவளையிற் குறித்துக் கொள்ளே. 69

குத்தும்படியான காச நிதானம் கேட்பாயாக: வெண்மேகத்தைப் போலவும், கருவிழியின் மத்தியில் சங்குபோன்ற வெண்ணிறமாகவும், பாவையானது பாதி உளுந்து அளவாகவும் காணப்பட்டு வேறுவிதமான குற்றங்கள் ஒன்றும் இல்லையாகில் கடைக்கண்ணில் குறித்துக் கொள்க.

பத்தி நெல்லிடை விட்டப்பால் பலப்பட நூலால் சுற்றி
சித்திரமாகக் குத்தி சிறந்த தோர் சலாகை விட்டு
சுற்றியே மூன்று காலஞ் சுழிதனில் நீலம் பாரில்
வெற்றியாய்த் தெளிந்து நன்ருய் விரைவுடன் வெளியதாமே. 70

கத்தியின் நுனியில் நெல்கனம்விட்டு, மற்றப்பக்கங்களில் எல்லாம் நூல்கொண்டு சுற்றிவைத்திருக்கும் கத்தியின் நுனியால் கடைக்கண்ணில் கவனமாகக் குத்திவிட்டு, முன்சொன்ன சலாகைக் குத்துவாயில் மெதுவாய்விட்டு மூன்று தடவை கவனமுடன் சுற்றவேண்டும். பாவையானது நீல நிறமாகக் காணப்படுமாகில், குணமாகி விட்டது என்று தெரிந்துகொள்க.

வெளியது ஆன பின்பு வெச்சென அனல்தான் காட்டி
தெளியவே பஞ்சில் மஞ்சள் சீர்பொடி தன்னை விட்டு
விழிதனில் கட்டி வைத்து மெத்தென பேச்சுக் கொண்டு
புளியிலை யிடித்துக் கட்டி பெய்துதான விழ்த்துக் கட்டே. 71

பாவையானது, காச நீரைவிட்டு வெளிப்பட்ட பின்பு, ஒரு கரண்டியில் நெருப்பை எடுத்துவைத்துச் சூடுகாட்டிவிட்டு, வடிகட்டின மஞ்சள் பொடியைப் பஞ்சில்வைத்துக் கண்மேலிட்டுக் கட்டிவிடவேண்டும். நோயாளியை மெதுவாய்ப் பேசும்படி சொல்லவேண்டும். மறுநாள் புளியிலையை இடித்து இலகுவாக வறுத்துக் கட்டவேண்டும்.

இப்படி மூன்று நாளு மிருந்தபின் னவிழ்த்துவிட்டு
ஒப்புடன் பற்று வேது உகந்தநற் காய்ச்சுந் தண்ணீர்
செப்பமாய் மருந்து யெண்ணெய் செயலுடன நிந்துசெய்ய
ஒப்பமாய் பித்த காசம் ஓடியே போகுந் தானே. 72

இப்படியாக மூன்று நாள் புளியிலையைக்கட்டி அவிழ்த்துவிட்டு, பற்று, வேது இவற்றை அவசியமானால் செய்து, நோயாளியை வெந்நீர் சாப்பிடும்படியாயும் பின்னும் வேண்டிய பத்தியங்களோடு இருக்கும்படி செய்து, இன்னும் அவசியமானல் கண்மருந்து, தைலம் முதலியவைகளால் சமயோசிதத்திற்குத் தக்கபடி செய்வாயாகில் அழல்காசம் பறந்துவிடும்.

## நேத்திர சூலை

நயனத்தில் வாயு நின்று நவில்புரு வத்திற் குத்தி
செயல்கெட விரண முண்டாய்த் திரண்டுநீர் மூக்கில் வீழும்
இயல்பினை யறிந்து கொண்டு இவ்வலி ரோக மாற்ற
அயனுரை செய்த வுண்மை மருந்து நீ யறிந்து செய்யே. 73

கண்ணில் வாயு தங்கி புருவத்தில் குத்தல் வலியுண்டாகும். கண் இரணமாயிருப்பதுபோல் நோயாளிக்குத் தோற்றும். மூக்கில் நீர் சுரந்து வடியும்; இத் தன்மையை அறிந்துகொண்டு இந்த வலி நோயை நிவர்த்திப்பதற்கு மருந்தை தெரிந்து கொண்டு மருத்துவம் செய்துகொள்க.

தீருமே வாத நோவு சிவப்புண்டாய்க் கனத்துக் கண்ணைச்
சேருமே பரிக்குமாப்போல் தினவுடன் வலியு முண்டாம்
நீருமே நனைத்துப் போட்டால் நின்விரல் உலர்ந்து காணும்
சாருமே யிரவில் நோவு தானது மிகவுண் டாமே. 74

கண்ணிலே சூலை வந்தால் கண் சிவந்து, கனத்து, கண்ணைப் பிடுங்குவதுபோல் அரிப்பும், வலியும் உண்டாகும். கண்ணிலிருந்து நீர் பொசியும். அந்த நீரை விரலால் நனைத்துப் பார்த்தால் சீக்கிரம் உலர்ந்து விடும். இரவிலே வலி அதிகமாயிருக்கும்.

நேத்திர வாயு நின்று நெருங்கிய இடி உண்டாகி
மாத்திர கண் சிவந்து வலித்திடுஞ் சிரசிற் குத்தும்
கேத்திர கேதஞ் சூகம் தம்பவம் கீச முற்றி
நீத்திலா காசம் போல நின்விழி குருடதாமே. 75

**நேத்திரத்தில் வாயு இருந்து அதிக வலி உண்டாகி, கண் சிவப்பு உண்டாகி தலையில் குத்தல் உண்டாகும். கேத்திரம், கேதம், சூகம், தம்பவம், கீசம் இவைகள் முற்றி காசமானது குருடாக்குவது போல் கண் பார்வை போய்விடும்.**

### வைத்தியனுக்குப் புத்தி கூறல்

மருந்துதா னெழுதும் போது வாய்த்தவா சனத்தி ருந்து
கருங்குழல் மானே கேளாய் கவினம்போல் கிழக்கு நோக்கி
இருந்தபின் னப்பால் நீயும் இயல்புற இடத்தி லிட்டு
வருந்திப்பின் வலத்திலிட்டால் மாசறத்திருங் காணே. 76

**கண்ணில் மருந்தைத் தீட்டும்பொழுது உனக்காக ஏற்படுத்தப் பட்ட ஆசனத்தில், வெண்ணெயைப் போல களங்கமற்ற, இலகுவில் இளகக்கூடிய மனத்தோடு கிழக்குமுகமாக உட்கார்ந்துகொண்டு முதலில் இடது கண்ணில் மருந்தையிட்டு பிறகு வலது கண்ணில் மருந்திடுவாயாகில் குற்றமற நோயானது நீங்கும்.**

### அஞ்சனக் கோல்

அஞ்சன மெழுதுங் கோலின் அளவினை அறியக் கேளாய்
சஞ்சல மில்லாச் செம்பு வெள்ளியால் தங்கத் தாலும்
மிஞ்சுநல் விரலாலஞ்சு விரற்கடை மீறி டாமல்
கஞ்சமாம் விழியிலாடும் காரீயக் கோல்க ணக்கே. 77

**அஞ்சனக்கோலின் அளவைச் சொல்லுகிறேன் கேட்பாயாக: குற்றமற்ற செம்பு, வெள்ளி, தங்கம் இவற்றில் ஏதேனும் ஒன்றினல் அஞ்சு விரற்கடை நீளத்திற்கு மேற்படாமல் மத்தியில் மேடுவைத்து இருகடைப் புறங்களும் மலர் மொட்டைப்போல திரண்டு மெலிந்திருக்கவேண்டும். இனி காரீயக்கோலின் கணக்கைக் கேட்பாயாக.**

### காரீயக் கோல்

கருத்துடன் வகுப்புக் கேளாய் கடியதிப்பிலி தேன் நெய்யும்
மருப்புறு காணிக் கீரை மரீசமும் முத்தக் காசு
வெறுப்புறு வெள்ளாட் டின்பால் விரவு கோசலமுங் கொண்டு
பொறுப்புறு திரிபலையும் போதவே அரைத்துக் காய்ச்சே. 78

**திப்பிலி, தேன், பசுவின் நெய், பொன்னுங்காணிக் கீரை, மிளகு, கோரைக்கிழங்கு, வெள்ளாட்டுப்பால், பசுவின் நீர், கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிவற்றல் தோல் இவைகளை எல்லாம் அரைத்துக் காய்ச்சி விடுவாயாக.**

காய்ச்சிய குடிநீர் தன்னில் கதித்தொரு பலம் காரீயம்
உச்சித மாக விட்டு ஒன்பது தரமே யுருக்கி
சாச்சுப் பின்னெடுத்துக் கொண்டு சரிபத்தங் குலம தாக
காச்சி மாயத் திரட்ட காரீயக் கோலதாமே. 79

**காய்ச்சிய குடிநீரில் 1 பலம் காரீயத்தை, ஒன்பது முறை உருக்கிச் சாய்த்து, பின்பு அதை எடுத்து 10 அங்குல நீளமுள்ள தாகத் திரட்டிக் கோலாகச் செய்துகொள்ள வேண்டும்.**

காரீயக் கோல்கள் தன்னிற் கருது மஞ்சனத்தை வாங்கி
நேரதாய் விழியில் தீட்ட நிலைநில்லா ரோகமாகும்
மூரி வெண் முறுவலீசன் மொழிந்திட வுமையாள் கேட்க
காரீயக் கோலின் வண்ணம் கனகமா முனியு ரைத்தார். 80

**இவ்வாறு செய்யப்பட்ட கோல்களில் அஞ்சனத்தை எடுத்துக் கண்ணில் தீட்ட நோய்கள் நிலை நிற்காமல் ஓடும்.**

## தருக்கம் (வினு)

பிடித்திருந்த கல்லுக்குத் தேவதை தானேது
பிறமூல தேவதையின் பேர்தா னேது
அடுத்திருந்த தனப்பால் தானுவ தேது
அணிவிரலும் சிறுவிரலு மாவ தேது
தடுத்திருந்த கயிறேது பைதா னேது
தவருமலுரைத்தபின் வாங்குவிர லேது
படித்தவரே எவ்விரலால் மருந் தெழுதல்
பதருமலின்ன தென்று பகரு வீரே. 81

## விடை

பிடித்திருந்த கல்லுக்குத் தேவைதான் மாயோன்
பிறமூல தேவதையிந் திரனே டீசன்
அடுத்திருந்த தனப்பால் தானமுத மாகும்
அணிவிரலும் சிறுவிரலும் சிவநந்தி யாகும்
தடுத்திருந்தபை வைகுண்டம் கயிறு சக்தி
தவருமலுரைத் தோம்நாம் தரணி மீதில்
படித்திருந்த பண்டிதரே பெருவிரலும் நடுவிரலால்
பண்பினுல் மருந்திடுதல் பசுமை தானே. 82

## தொண்ணூற்றாறு நோய்களின் பெயர்

### அகவல்

அக்கிர ரோகம் அவிகாய விரணம்
உக்கிர ரோகம் உடைந்தெழுந் திடுதல்
சாய்கண் குருடு தடிப்புத் தினவு
தூய வெண்குருடு சுக்கிர ரோகம்
மாலை காசம் மருவுகண் சிவப்பு
நீல காசம் நெரியொளி மழுங்குதல்
அருவிநீர்த் தும்மல் அடைந்தெழுந் திடுதல்
பருமூலை யெழுச்சி படர்வெள் ளெழுத்து
சோதியில் இரணம் துர்மாமிச வளர்ச்சி
கோதிலா விழியில் குருதிசீழ்ப் பிடித்தல்
நிமைவிழி மாமிசம் நெருக்கிப் பிடித்தல்
அழிகண் புழுவெட் டடர்ந்தெழுந் திடுதல்
நாக படலம் நன்விழி விழுங்கி
மேக வெட்டையால் மேவிடு மந்தம்
விழிகண் குருடு முன்னிமைக் குத்து
வாத காசம் மணிகாசம் கண்குருடு
உருவிழி புடைத்து உயர்ந்தெழுங் காளான்
பாவைப் பூவொடு பஞ்சுநீர்ப் படலம்
அமரம் புகைச்சல் அதிகமந்தாரம்
திமிரம் சேர்நெறி செவ்வேர் முடமயிர்
அந்திர காசம் அழற்றின கண்ணோய்
சந்திர ரோகம் தலையெழு நாயறு
கூசி விழித்தல் குவளை நெரித்தல்
காச மிருட்சி கண்விர ணப்பூ
துண்ணு காசம் சுழல்விழி யெரித்தல்
அன்ன கோபம் அழற்றிய மாலை
கண்பக்கப் படலம் பற்பமா ரோகம்
அக்கரம் பில்லம் அளித்திடும் பிரித்தல்
பித்த காசம் பிறவிக் குருடு
துத்திடுங் காளான் துன்னுவெண் புகைச்சல்
கண்ணி லெழுச்சி கண்குவளை நெரித்தல்
இரண சுக்கிரன் வெண்ணோக் காடு
சூழ்ந்திடும் பில்லம் சோராக்கண் துடிப்பு
வருஞ்சல ரோகம் மயிர்ப்புழு வெட்டு
விதன மந்தாரம் வீங்குதல் விழியனல்
மதன மந்தாரம் வளர்ந்தெழு ரோகம்
சுடர்பல தோன்றல் சுடாதி மாமிசம்

உயர்ந்தகண் புடைத்தல் உவரெழு காசம்
வால காசம் மருவிழி காசம்
ஒருநீர்ப் பில்லம் ஒருநீர்ப் பாய்ச்சல்
குவளை விப்புருதி குன்றிமைத் தடிப்பு
குவளை காசம் கொடும்புழு வெட்டு
மந்தார காசம் வாலையிற் காசம்
அந்திர விரணம் இமையோ டுறுத்தல்
நத்தைப் படுவன் நற்குவ ளையொடு
புத்து எழுந்திடும் பொங்கிய விதனம்
எண்ணிய நோய்கள் தொண்ணூற் றுறும்
கண்ணினில் வினையெனக் கருத லாமே. 83

### 1. அக்கிர ரோகம்

மெய்க்கரப் புத்துக் கண்ணில் மேனிமை கனத்துப் புண்ணும்
உக்கிர மாக நொந்து ஊறியே நீரும் பாயும்
சிக்கறத் தினவும் பீளை சினத்திடு முகங்கள் தானும்
அக்கிர ரோக மென்றே அறிந்தனர் புலவர் தாமே. 84

கண்ணின் மேல் இமை கனத்துப் புண்ணாகும்; வலியுண்டாகித் தண்ணீர் வடியும்; பீளை சேரும்; முகம் சிவந்து காணும். இக் குணங்கள் இருக்குமாயின் அக்கிர நோய் என்று புலவர்கள் அறிவார்கள்.

### 2. அவிகாய விரணம்

செவிவாய் கண்மூக்குத் தினவுடன் சிவப்புண்டாகும்
கவிதாக விழிக்கு மூடும் கனத்திடும் பீளைகட்டும்
நவிதாக வுறங்கொட் டாது நடுவிழி தன்னிற் குத்தும்
அவிகாய விரணமென் றறிவுள்ளோ ருரைத்தவாறே. 85

காது, வாய், கண், மூக்கு இவைகளில் அரிப்புண்டாகி சிவப்பு உண்டாகும்; கண்ணனது அடிக்கடி மூடித் திறக்கும்; கண் கனத் திருக்கும்; பீளை சேரும்; இரவில் தூங்க இயலாது; விழியின் நடுவில் குத்தலுண்டாகும். இக் குணங்களிருக்குமாயின் அவிகாய விரணமென்று அறியலாம்.

### 3. உக்கிர ரோகம்

சக்கரம் போலக்கண்ணில் தடிப்புண்டாய் நீரும் பாயும்
அக்கர மாகமூட வலிதின வெரிப்புண் டாகும்
மிக்கர வொன்றைநோக்கில் மேதினியில் புகைந்து காட்டும்
உக்கிர ரோக மென்று உரைத்தனர் தமிழ்வல்லோரே. 86

கண்ணில் சக்கரம் போல் தடிப்புண்டாகித் தண்ணீர் வடியும்; கண்ணை மூடுவதற்கு முடியாமல் வலியுண்டாகும்; அரிப்பும் எரிச்சலும் உண்டாகும்; ஒரு பொருளைப் பார்த்தால் புகைச்சலாய்த் தெரியும்; அதாவது மங்கினாற் போலத் தெரியும். இக் குணங்களிருக்குமாயின் உக்கிர நோய் என்று சொல்லப்படும்.

### 4. உடைந்தெழு காசம்

அடைந்தெழும் பீளைகட்டும் அதிகமாய் சிவப்புநீரும்
கடைந்திடும் கருவிபோல கடைக்கண்ணைக் குத்திவாங்கும்
குடைந்திடு நெற்றிகாதும் குத்திடும் உச்சிதன்னில்
உடைந்தெழு காசமென்று உரைத்தனர் தமிழ்வல்லோரே. 87

கண்ணில் பீளை கட்டும்; அதிகமாய்ச் சிவப்பாயிருக்கும் நீர் வடியும்; மரங்களைக் கடையும் ஆயுதம்போல் கடைக்கண்ணில் குத்தல் வலியிருக்கும்; நெற்றி, காது, உச்சி முதலிய இடங்களில் குத்தல் வலியிருக்கும். இக் குணங்களிருக்குமானால் உடைந்தெழு காசமென்று கூறப்படும்.

### 5. சாய்கண் குருடு

வாய்கண் மூக்குநாக்கு வலமிட மிழுத்துநொந்து
காய்குணம் விழியும்நீரும் கடுகியே சிவந்துகாட்டும்
நோய்குணம் நீட்சியாக நொந்துதானு ளிற்றீரும்
சாய்கண் குருடிதென்று சாற்றினர் தரணியோர்க்கே. 88

வாய், கண், மூக்கு, நாக்கு இவைகள் வலப்புறமாகிலும், இடப்புறமாகிலும் இழுத்திருக்கும்; கண்கள் சிவந்து, எரிச்சலோடு நீர் வடியும்; அதிக நாள் சென்று நோய் குணமாகும். இக் குணங்களிருக்குமானால் சாய்கண் குருடு என்று சொல்லப்படும்.

### 6. இமைத் தடிப்பு

குமையவே குத்திநொந்து கூர்விழி நீரும்பாயும்
சமையவே புருவம்வீங்கிச் சதைபோல சிவந்துகாட்டும்
அமையவே பீளைபாயும் அண்டிதான் புகைந்துநிற்கும்
இமையடித் தடிப்பிதென்று யேற்றினர் தமிழ்வல்லோரே. 89

கண்கள் குத்தலுண்டாகி நீர் வடியும்; புருவம் வீங்கி சிவந்திருக்கும்; பீளை கட்டும்; பார்வை புகைந்து காட்டும். இக் குணங்கள் காணப்படுமாகில் இமையடித் தடிப்பு என்று சொல்லப்படும்.

### 7. கண் தினவு

ஊருஞ்சொரியும் கரகரக்கும் உள்ளேகண் ணுஞ் சிவந்திருக்கும்
நீரும்பொழியு மணலுண்டாம் நிருத்துமுறக்கந் தனைவேண்டார்
கூறும்விழியும் புகைந்திருக்கும் குறுகும்விழியும் குருநோவாம்
சேருமிந்த குணங்களெலாம் தினவுங்கண்ணின் குணந்தானே. 90

கண்ணில் அரிப்புண்டாகும்; உறுத்தலுண்டாகும்; கண்கள் சிவப்பாயிருக்கும்; நீர் வடியும்; எரிச்சல் இருக்கும்; தூக்கம் வராது; பார்வை புகைந்து காட்டும்; கண்கள் சிறுக்கும். இக் குணங்கள் காணப்படின் கண் தினவு என்று கூறப்படும்.

### 8. தூயகண் குருடு

கருமணி தெளிந்துநன்றாய் காண்பவர்போல தோற்றும்
பெருமணி வெள்ளைதன்னில் பேதிக்கும் சுழியிற்குத்தும்
ஒருமணி போலேகண்ணில் உறுத்தியே உள்ளில்குத்தும்
துருமணி பூணுமாதே துய்யகண் குருடுதானே. 91

கண்ணின் உள்ளிருக்கும் பாவையானது நல்ல பார்வையுள்ளவர்கள் பாவையைப்போல் தோன்றும். கருப்பு விழியும், வெள்ளை விழியும் சுயநிறம் மாறி பேதமாய்க் காட்டும்; நடுவிழியில் குத்தல் உண்டாகும்; இக் குணங்களிருந்தால் துய்ய கண் குருடு என்று சொல்லப்படும்.

### 9. சுக்கிர ரோகம்

வீங்கிடும் கண்ணில்வெள்ளை விதமுடன் பலவாய்க்காணும்
தாங்கியே கண்ணில்குத்தும் சதைமுளை குத்திநோகும்
ஏங்கியே சிரசில்குத்தும் யிருபுறம் கடைக்கண்புண்ணும்
தூங்கவு மொட்டாதிந்தச் சுக்கிர ரோகமாமே. 92

கண் வீங்கியிருக்கும்; வெள்ளை விழி சில சமயம் சிவப்பாயும் இருக்கும்; சில சமயம் வெள்ளையாயும் இருக்கும்; கண்ணில் குத்தல் வலி இருக்கும்; முளை போலச் சதை வளர்ந்து குத்தி வலிக்கும்; தலையில் வலியிருக்கும்; கடைக் கண்களிருபுறங்களிலும் புண்ணாக இருக்கும்; தூங்க முடியாது. இக் குணங்கள் இருக்குமாயின் சுக்கிர நோய் என்று சொல்லப்படும்.

### 10. மாலைகாசம்

மருவிய கண்கள்நொந்து வற்றியே எரிப்புண்டாகில்
கருவிழி தன்னில்சற்றே கலங்கியே ரூபம்வேறும்
அருவியே உருத்திநொந்து அதிகமாய்ப் புகைச்சலுண்டாம்
உருவியே சாயுங்காலம் உதிக்குமே மாலைகாசம். 93

கண்கள் நொந்து, சிறுத்து, எரிச்சலோடிருக்கும்; கருப்பு விழி கலங்கியிருக்கும்; உருத்தி, நொந்து, கண்ணில் புகைச்சலிருக்கும்; மாலை நேரத்தில் புகைச்சல் அதிகமாயிருக்கும். இக் குணங்களிருக்கு மானுல் மாலை காசம் எனப்படும்.

### 11. சுழல்வண் டெரிதல்

பறக்குங்கண்ணில் பூச்சிபோல் பார்க்குமிடங்கள் தனிற்ருேற்றும்
உறக்கந்தனிலு மவ்வடைவே ஓடித்திரியும் போல்காணும்
துறக்குங்கூசும் புகைந்திருக்கும் சுடரைப்பார்க்கில் பலவிதமாய்ப்
பிறக்குஞ்சுழல் வண்டெரிதலென்று பேசியிருப்பார் பெரியோரே.

பார்க்கிற இடங்களெல்லாம் பூச்சி பறப்பதுபோல் கண்ணுக்குத் தோற்றும்; தூங்குகிறபோதும் பூச்சி ஓடித் திரிவது போல் தோற்றும்; கண் கூசும்; பார்வை புகைச்சலாயிருக்கும்; விளக்கைப் பார்த்தால் பலவிதமாய்த் தோற்றும். இக் குணங் களிருந்தால் சுழல் வண்டெரிதலென்று பெரியோர் சொல்லுவர்.

### 12. அன்ன கோபம்

கனத்ததோர் நயனமுள்ளே கனலெழ லெரித்துவிம்மி
உனத்தமாம் விழியுடைத்து உலையினில் மெழுகுபோலச்
சினத்தது கண்ணும்நொந்து சிவந்துதா னருகிற்ருனல்
அனர்த்தமாம் அன்னகோபம் அறிந்துநீ மருந்துசெய்யே. 95

கண்ணுக்குள் எரிச்சலோடு விம்மி, விழி புடைப்பாய் இருந்து, சிவந்து உறுத்தலோடிருக்குமானுல் அன்ன கோபம் என்று சொல்லப்படும். எந்த மருந்தைப் போடுவதென்று தெரிந்து மருத்துவம் செய்யவேண்டும். இல்லையாகில் ஆபத்தாய் முடியும்.

### 13. மருவுகண் சிவப்பு

சிறுக்குங்கண்ணும் நீர்வடியும் சினத்துக்கனக்கும் சிரசுவலி
முறுக்குமனமும் வரண்டிருக்கும் முகிழாசிவந்த பூவதுபோல்
இருக்கும்சரீரம் தளர்ந்துவரும் எதிர்த்தஏப்பம் தானுண்டாம்
மறுக்குமிந்த குணங்களெலா மருவுகண் சிவப்புயிதுதானே. 96

கண்கள் சிறுத்திருக்கும்; நீர் வடியும்; கண் சிவந்து கனமாய்க் காட்டும்; தலையில் வலியிருக்கும். மனசு கெட்டிருக்கும்; உடல் இளைத்து வரும்; ஏப்பம் உண்டாகும். இந்தக் குணங்களிருக்கு மாயின் மருவுகண் சிவப்பு இதுதான் என்று தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

### 14. ஊறுகாசம்

கடுக்கும்கண்ணும் சிவந்தெரிக்கும் கட்டைபட்ட புண்போலாம்
படுக்குமிரவில் சதைவந்து பறந்துமூடும் விழியடங்கும்
இடுக்குமிமையுங் கனத்திருக்கும் இருண்டுதோற்றும் பலவிதமாய்
ஒடுக்கம்சற்றே மணிதோற்றும் ஊறுங்காச மெனலாமே. 97

புண்ணின்மேல் கட்டை விழுந்ததுபோல் கண்ணுனது கடுத்து, சிவந்து எரிச்சலோடிருக்கும். இரவில் படுக்கும்பொழுது விழி முழுவதும் சதை விரிந்து மூடிக்கொள்ளும்; கண் இடுங்கியிருக்கும்; இமைகள் கனமாயிருக்கும்; கண் இருண்டு பலவிதமாய்த் தோன்றும்; கண்மணி சற்று சிறுத்திருக்கும்; இவ்வித குணங்களிருந்தால் ஊறுகாசம் என்று சொல்லப்படும்.

### 15. எரிவிழி மழுங்குதல்

கண்ணது கனத்துநொந்து கருதிநீர் கலங்கிவீழ்ந்து
தண்ணது புருவம்கன்னம் நாசிகள் மூலமுற்றும்
விண்ணது அருக்கன்றன்னை மேவியே பார்க்கும்போது
எண்ணிய குணங்கள்காணும் எரிவிழி மழுங்கலாமே. 98

ஆகாயத்திலுள்ள சூரியனைப் பார்க்கும்போது கண் கனத்துக் கலங்கி, நீர் வடிந்து, புருவம், கன்னம், மூக்கு ஆகிய இவைகள் வலி உண்டானால் எரிவிழி மழுங்கல் என்று சொல்லப்படும்.

### 16. பற்ப ரோகம்

கருகியே மணிகள்தன்னைக் கனத்தது வெள்ளைமூடும்
அருவியே யிமைதடித்து அறுத்திடும் நீரும்பாயும்
விரவியே சுரந்துதோன்றில் விண்ணது நோக்கில்கூசும்
பரவிய குணங்கள் கண்டால் பற்பரோகம் பார்மாதே. 99

கருப்பு விழியில் வெள்ளை மூடும்; கண் அருவி, இமை கனத்துக் கொண்டு நீரை அறுத்துவிடும்; ஆகாயத்தைப் பார்க்க முடியாமல் கூசும். இந்தக் குணங்களிருக்கக் கண்டால் அதைப் பற்ப நோய் என்று சொல்லப்படும்.

### 17. அதிமந்தம்

கருகிய மணியினும் கலந்தவெள் விழியிலும்
பெருகிய சிவப்பொடு பிறண்டு வலிக்குமுன்
உருவியு முயர்ந்து உருத்திப் புகைந்திடும்
அருவிய விதனமும் அதிமந்த மென்னுமே. 100

வெள்ளை விழியில் சிவப்பேறி இருக்கும்; கருப்பு விழியில் வலி காணும்; கண்ணுனது சிறிது பெரிதாய்க் காணும்; கண்ணை

உறுத்தும்; பார்வை புகைச்சலாயிருக்கும். இக் குணங்களிருக்கு மாயின் அதிமந்தம் என்று சொல்லப்படும்.

### 18. குவளை நெறித்தல்

கண்ணினில் தடிப்புண்டாகில் கடுத்திடும் விழிக்கொணுது
திண்ணிய இமைகனத்து தினவுடன் சிவந்துகாட்டும்
நண்ணிய மயிர்க்கால்புண்ணும் நாற்றமாய் பீளைபாயில்
குண்ணிய மனமுமாகும் குவளைநெறித்தல் தானே. 101

கண்ணில் தடிப்புண்டாகி கடுக்கும்; கண்ணைத் திறக்க முடியாது; இமை கனத்து அரிப்பு காணும்; கண் சிவந்திருக்கும்; கண் மயிர்க் கால்களெல்லாம் புண்ணாகியிருக்கும்; துர்நாற்றத் தோடு கூடிய பீளை கட்டும்; மனமும் குன்றிவிடும். இக் குணங் களிருப்பின் அது குவளை நெறித்தலாகும்.

### 19. அழிகண் பிரித்தல்

சழியவே இடித்துநொந்து சதையது விழிகண்மூடி
பழியவே சூழப்புண்ணாய் பலவிதமாய்ப் பீளைபாயில்
விழியில்நோய் மாறுதாக்கும் வேண்டிய மருந்துசெய்தால்
அழிவது திண்ணங்கண்டாய் அழிகண் பிரித்தல்தானே. 102

கண்ணானது அதிகமாய் வலித்து நொந்திருக்கும்; விழியின் மேல் சதை மூடியிருக்கும்; கண்ணைச் சுற்றி புண்ணாகவிருக்கும்; பீளை கட்டும். அதற்கேற்ற மருந்துகளைத் தெரிந்து கண்ணிலிட் டால் நிச்சயமாய் நோய் விலகும்.

### 20. சோதிகா விரணம்

கண்டிடும் பூவுவெள்ளை கருவிழி யெங்குந்தோற்றும்
கொண்டிடும் நீரும்பாயும் கூசிடும் விழிக்கொண்ணுது
நண்டினேர் கண்கள்போல நடுவிழி தன்னில்காணும்
வெண்டிடும் சோதிகா விரணமு மாகுமன்றே. 103

வெள்ளைவிழி, கருவிழி எங்கும் பூவுண்டாகியிருக்கும்; நீர் வடியும்; கண் கூசும்; கண்ணை விழிக்க முடியாது; நடு விழியில் நண்டின் கண்ணைப்போலச் சிறியதாய் துருத்திக் கொண்டிருக்கும். இந்த நோய்க்குச் சோதிகா விரணமென்று பெயர்.

### 21. மணிநீல காசம்

கூசிடுங் குணமும்நீரும் கூர்விழி தன்னில்குத்தும்
வீசிடும் புகைந்துகாட்டும் விம்மியே வலிக்குமாகில்
பேசிடு மணியினுள்ளே பிணிபோலக் கருத்துக்காணும்
மாசிடுங் குணங்கள் கண்டால் மணிநீலகாசமாமே. 104

கண் கூசும்; நீர் வடியும்; விழியில் குத்தலுண்டாகும்; பார்வை புகைந்து காட்டும்; கண் விம்மியிருக்கும்; கண்மணி கருப்பாயிருக்கும். இக் குணங்களிருந்தால் மணிநீலகாசம் என்று சொல்லப்படும்.

## 22. படிகுந்தம்

உள்ளமே நொந்துகண்கள் உறுத்தியே வலிக்குமாகில்
மெள்ளவே சந்திரோதயம் மேவிலோர் கிரியைகாணும்
கள்ளமே யல்லநோய்கள் கருவிழி கருப்பிலுற்று
பள்ளமாய்ப் பார்வைதன்னில் படிகுந்த மென்றுசொல்லே. 105

மனது நொந்து கண்கள் உறுத்தி வலிக்கும்; சந்திரன் கண்ணுக்குத் தெரியாது; கருவிழி அதிக கருப்பாயிருக்கும்; பார்வை எதைப் பார்த்தாலும் பள்ளமாயிருப்பதுபோல் தோற்றும். இப்படிப்பட்ட குணங்களிருந்தால் படிகுந்தம் என்று அழைக்கப்படும்.

## 23. மதன மந்தாரம்

கூறிடும் விழியிற்குத்தும் குவளையிற் பீளைகட்டும்
சீறிடும் புகைந்துகாட்டும் சிறிதுநாள் வெளியதாகும்
தேறிடும் தினவுண்டாகும் சிதறியே சிவப்புகாட்டும்
மாறிடும் பச்சைபோலாம் மதன மந்தாரமாமே. 106

கண் விழியில் குத்தலுண்டாகும்; பீளை சேரும்; பார்வை புகைந்து காட்டும்; சில நாள் புகைச்சலில்லாமல் இருக்கும்; கண்ணில் அரிப்பு உண்டாகும்; கண் சிவந்திருக்கும்; அடிக்கடி பச்சோந்தியைப்போல மாறி மாறி குணங்கள் மாறுபடும். இக் குணங்களிருந்தால் மதன மந்தாரம் என்று கூறப்படும்.

## 24. நாகபடலம்

கடைக்கண் ணிருபுறத்தில் காணவே சிவப்புத்தோன்றில்
தொடைசதை போலவந்து சோதியைத் தின்னுனுளில்
அடைந்திடும் விழிகள்தன்னில் அதிகநீர் தினவுமுண்டாம்
நடைபடி குணங்களெல்லாம் நாகமாம் படலமாமே. 107

இரு கடைக்கண்ணிலும் சிவந்து அழுத்தமான சதை வளர்ந்து வந்து, வெள்ளை விழி முழுவதையும் கடந்து கருவிழியிலும் படர்ந்து, கருவிழியின் மத்தியில் இருக்கிற பாவையையும், நாள் செல்லச் செல்ல மறைக்கும்; கண்களில் நீர் வடியும்; அரிப்புண்டாகும். இவ்வளவு குணங்களுமிருக்குமானல் நாகபடலம் என்று கூறப்படும்.

### 25. நீர்ப் பாய்ச்சல்

சருவிநீ ரருகிக்காட்டி சதைவளருந் தீனவுண்டாகும்
கருவிழி யுறுத்திநொந்து கனத்துட னெரிப்புண்டாகும்
மருவிய கண்கள்நொந்து மாருதே நீரும்பாயும்
அரிவையே யிவைகள்தானும் அருவிநீர்ப் பாய்ச்சலாமே 108

கண்களில் நீர் வடியும்; சதை வளர்ந்திருக்கும்; அரிப்பு உண்டாகும்; கருப்பு விழி உறுத்தலோடு நொந்து கனத்திருக்கும்; எரிச்சலுண்டாகும்; நீர் வடியும். இக் குணங்களிருந்தால் நீர்ப் பாய்ச்சல் எனப்படும்.

### 26. அருபம்

ஊறிய வெள்ளைதன்னில் உதித்ததோர் நீருங்கொள்ளும்
பாரியே நீரும்பாயும் பகல்விளக் கொளிபோலாகும்
காரியே பீளைதள்ளும் தடமையம் எரிப்புண்டாகும்
ஆரியே நின்றெடுக்கும் அருபமா மென்றுசொல்லே. 109

வெள்ளை விழியில் நீர் கோத்துக்கொண்டு வடியும்; பகல் வெளிச்சம் விளக்கு வெளிச்சத்தைப்போலக் காணப்படும்; கண் களில் பீளை கட்டும்; கண்ணின் மத்தியில் எரிச்சலுண்டாகும். இவ்வளவு குணங்களுமிருந்தால் அருபம் என்று சொல்லப்படும்.

### 27. வெள்ளைப் படலம்

கண்ணினில் வெள்ளைதன்னில் கலந்ததோர் பாலினுடை
உண்ணியே விழிக்கும்போது உறுத்திடும் உரைத்துவைத்து
நண்ணிய பளிங்குபோல நலமயிர் புகைந்துகாட்டும்
வெண்ணிய மதிமுகத்தாய் வெள்ளையாம் படலமாமே. 110

பாலைக் காய்ச்சித் தோய்த்து வைத்திருந்தால் மேலே உண்டாகி யிருக்கும் ஆடையைப் போலக் கண்களை மூடித் திறக்கும் போதெல் லாம் உறுத்தும்; சிலருக்குப் பளிங்கைப்போல் வெண்ணிறமாயும் சிலருக்கு மயிரைப்போலக் கருத்துமிருக்கும்; பார்வை புகைச் சலாய் இருக்கும். இத்தகைய குணங்களிருக்குமாயின், அதை வெள்ளைப் படலமென்று சொல்லவேண்டும்.

### 28. கண் இரணம்

சுத்தெல்லாம் வரையும்புண்ணும் சூழவே தினவுண்டாகி
வத்தியே யிமைகளெங்கும் வலித்திடும் விழிசிவக்கும்
முத்தியே நோக்கிப்பார்க்கில் விழித்தொன்றும் செய்ய வொட்டார்
கத்தியே யிருக்குந்தூங்கார் கண்ணினில் விரணந்தானே. 111

கண்ணைச் சுற்றிப் புண்ணுயிருக்கும்; அரிப்புண்டாகும்; இமைகளெல்லாம் வலியுண்டாகும் கண்கள் சிவந்திருக்கும்; கண்ணை விழித்து ஒரு காரியமும் செய்யமுடியாது. இரவில் தூக்கம் இல்லாமல் கத்தும்படி செய்யும். இக் குணங்களிருந்தால் கண் விரணம் என்று சொல்லப்படும்.

## 29. நீரெழுகாசம்

கருவிழி கீழுமேலும் கலந்துதான் சிவப்பேயுற்று
வெருவிடு மின்னல்போல விசையுட னெந்துகுத்தும்
பெருகிடுஞ் சலமுமோடும் பேசிடில் கண்ணினேகும்
நெருங்கிட யிவைகள் செய்யில் நீரெழுகாசமாமே. 112

கருப்பு விழியில் கீழேயும் மேலேயும் அதாவது கருவிழி முழுவதும் சிவந்து ஆகாயத்தில் மின்னல் மின்னுவதுபோல் வலியுண்டாகும். கண்ணில் நீர் பெருகி ஓடும்; பேசினுல் கண்கள் வலியுண்டாகும். இக் குணங்களிருக்குமானுல் நீரெழு காசம் எனப்படும்.

## 30. நீலகாசம்

நல்லதோர் மணியும்நொந்து நாளிலே புகைந்துகாட்டும்
சொல்லவே பருவங்கண்ணில் சிரசினில் சேரநோகும்
சொல்லவே சோதிநிலம் சூட்சமாய் நீரும்பாயும்
நில்லிமை நீக்கும்நீங்கார் நீலமாம் காசந்தானே. 113

முதலில் தலையில் வலியுண்டாகிப் பிறகு கண்மணியில் வலியுண்டாகும். நாளுக்கு நாள் கண் புகைந்துகொண்டே வரும். பாவையானது நீல நிறமாகி வரும். வெகு நுட்பமாக நீரும் வடியும்; இக் குணங்களமைந்த கண் நீலகாசமென்று அழைக்கப்படும்.

## 31. குமரிகாசம் (வலியுங்காசமெனவும் கூறலாம்)

கடுவலி கண்கள்தன்னில் கலங்கியே பீளைசாறில்
நடுவிழி தன்னில்குத்தும் நன்மணி புடைத்துவீங்கி
வடுவென திரண்டுகாட்டி வாயுவும் சலமுங்கோக்கும்
குடிதனைக் கெடுக்குமிந்நோய் குமரிதன் காசமாமே. 114

கண்களில் தாங்கமுடியாத வலியுண்டாகும்; கண்கள் கலங்கி இருக்கும்; பீளை சாறும்; நடுவிழியில் குத்தலுண்டாகும்; கண்மணி பெருத்து வீங்கியிருக்கும்; கண்ணில் வாயு கொண்டிருக்கும்; நீர் கோத்துக் கொண்டிருக்கும்; குடி கெடுக்கும் இந்த நோயானது குமரிகாசம் என்றும், வலியுங் காசம் என்றும் பெயர் கொண்டு பார்வையையும் கெடுத்துவிடும்.

### 32. வாதகாசம்

சுழிதனைக் கடுத்துக்கண் ணும் சோரவே சுழித்துவாங்கும்
நெளியவே யிமையும்வீங்கி நின்றிடும் உறக்கமில்லை
சளியவே யிடித்துநொந்து சலம்வீழும் வாதையாகும்
வழிபட நோயுந்தீரா வாதமாம் காசமாமே. 115

நடு விழியைக் கடுத்து கண்ணும் சோர்வடையும்; அதாவது, அந்தக் கண்ணுக்குப் பார்வை கிடையாது; நடுவிழியைச் சுழித்து உள்ளே இழுக்கும்; இமைகள் வீங்கும்; தூக்கமே இராது; தலையை இடித்துக் கண்களிலிருந்து நீர் வடியும்; தொல்லை அதிகமாய் இருக்கும்; எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் இந்த நோய் தீராது. இதற்கு வாத காசம் என்று பெயராகும்.

### 33. முடமயிர்

கனத்திமை தடித்துக்கண்ணும் கவிழ்ந்திடும் பார்வையாகும்
சினத்துடன் மயிருங்குத்தி தினவும்நீர்ப்பீளை சேரும்
இனத்துடன் பூவுங்காணும் இமையினில் மயிரும் நான்று
முளைத்திடுமாசந் தோறும் முடமயி ரென்னலாமே. 116

கண்ணின் இமைகள் தடித்திருக்கும்; கவிழ்ந்த பார்வையாக இருக்கச் செய்யும்; கண்கள் சிவந்திருக்கும்; இமையிலுள்ள மயிர்கள் வளைந்து கண்ணுக்குள் உறுத்தும்; அரிப்புண்டாகும்; நீர் வடியும்: பீளை கட்டும்; கண்ணுக்குள் பூ உண்டாகும்; ஒவ்வொரு மாதமும் இமை மயிர்கள் உதிர்ந்து வளைவாகவே முளைக்கும்.

(வேறு)

சூழமுளைக்கு மிமையடங்கச் சுருண்டுகுத்தி நீர்வடியும்
தாழவிழிக்குங் கருமணியில் சற்றேவெளுக்கும் அடைந்துவரும்
ஆழவிழியு மடங்கிவரும் அதிகந்தலைநோய் நாசியினீர்
மூடவிழிதா னரிதாகும் முடமயிரிது தாமெனலாமே. 117

இமைகளில் முளைக்கும் மயிர்கள் சுருண்டிருப்பதால் அவை விழியில் குத்தி நீர் வடியும்; பூமியைப் பார்த்தவண்ணமாய்க் கண்ணை விழிக்கச் செய்யும்; கண்கள் சற்று வெளுத்துக் காணும்; விழிகளும் ஆழத்தில் போய்க்கொண்டிருக்கும்; தலை வலிக்கும்; மூக்கில் நீர்வரும்; கண்ணை மூடுவதும் திறப்பதும் கடினமாக இருக்கும். இக் குணங்களமைந்த நோய் முடமயிர் எனப்படும்.

### 34. கண்குருடு

மாசம்பக்கம் வலிகடுப்பு மருப்போல் கண்ணிலது தோற்றும்
நாசமாகும் பீளைவரும் நசுங்கி முளைக்குந்தினந் தோறும்
வாசமான தைலந்தான் முழுகில் வலுவாய் வாதைதரும்
நேசந்தலை முகம்பிடரிவலி நிச்சயங் கண்குருடென லாமே. 118

மாதத்திற்கு ஒரு முறையாவது, ஒரு பட்சத்திற்கு ஒரு முறை யாவது கண்ணில் வலி கடுப்புண்டாகும்; கண்ணில் மருவைப் போல் சதை முளைக்கும்; நாள்தோறும் வளரும்; நசுங்கிப் போகும்; பீளை கட்டும்; வாசனையுள்ள தைலங்கள் முழுகினுல் வலி அதிக மாகும்; தலை, முகம், பிடரி இவற்றில் வலியுண்டாகும்; இவை களிருந்தால் கண்குருடு என்று சொல்லப்படும்.

## 35. அடைந் தெழுந்திடுதல்

நீரும்பொழியும் விழிகடுக்கும் நித்தம்பலகுண மிமைவீங்கும்
சேரும்பீளை சிவந்தெரிப்பு சினத்துபுடைக்கு மிமையடங்கும்
ஊருஞ்சொரியு மூக்கிலுநீர் உணர்த்தியன்னம் உண்ண வொட்டார்
ஆருமறிய உரைத்தகுணம் அடைந்தெழுந்திடுதலெனலாமே. 119

கண்ணில் நீர் வடியும்; விழி கடுக்கும்; ஒருநாள் குணமாய் இருப்பதுபோல் காணும்; ஒருநாள் வலி அதிகமாயிருக்கும்; இமைகள் வீங்கும்; பீளை கட்டும்; கண் சிவந்திருக்கும்; எரிச்சல் உண்டாகும்; பூச்சி ஊர்வது போலிருக்கும்; அரிப்புண்டாகும்; மூக்கில் நீர் வடியும்; உணவு செல்லாது. இக் குணங்களிருந்தால் அடைந்தெழுந்திடுதலென்று சொல்லப்படும்.

## 36. பருமுளை

கடுத்துவலிக்கும் நீர்ப்பாயும் கனக்கசிவக்கும் யிமைவீங்கும்
இருக்கும்விழிக்க வொட்டாது யிருண்டுவெளுத்து முளைகாணும்
நடுக்குந்தலைவலி பிடரிமுகம் நரம்பையிழுத்து மிகநோகும்
படுக்குமிருக்கும் எழுந்திருக்கும் பருமுளையென்று பகர்வாரே. 120

கண்ணைக் கடுத்து வலிக்கும்; நீர் வடியும்; கண் கனமாயிருக் கும்; சிவந்திருக்கும்; இமைகள் வீங்கியிருக்கும்; கண்ணைத் திறக்க முடியாது; கருப்பாயும் வெளுப்பாயும் கண்ணுக்குள் முளைகள் உண்டாகும். நடுக்கலோடு தலையை வலிக்கும். பிடரியிலும் முகத் திலுமுள்ள நரம்புகளை இழுத்து வலிக்கும்; சற்றுநேரம் படுக்கும்படி யாயும் சிறிது நேரம் உட்காரும்படியாயும், சிறிது நேரம் எழுந் திருக்கும்படியாயும் இருக்கும். இவ்வித குணங்களிருக்குமானுல் பருமுளை என்று சொல்லப்படும்.

## 37. எழுச்சி

காதுகள் புருவம்நெற்றி கதிக்கவே குத்திவாங்கும்
தீதுகள் முளைக்குங்கண்ணில் திரண்டுதான் வெளுப்புகாட்டும்
மீதுதா னீரும்பாயும் மீன்விழிபோலே தோற்றும்
ஏதுதானிதன் குணங்கள் எழுச்சியாமென்று சொல்லே. 121

காதுகள், புருவங்கள், நெற்றி இவைகள் குத்தி வலிக்கும்; கண்ணுக்குள் சதை வெளுத்துத் திரண்டு முளைத்திருக்கும்; நீர் வடியும்; கண்ணைப் பார்த்தால் மீன் கண்ணைப் போலிருக்கும். இக் குணங்களிருந்தால் எழுச்சி எனப்படும்.

### 38 துர்மாமிசம்

வீங்கும்விதனம் சதைபோல வெளுத்தவிழியில் தனிற்காணும்
வாங்கும்வளரும் சிலகாலம் வாதைமிகவாம் நீர்ப்பீளை
தேங்கும்நடக்க வொட்டாது சினத்துமுகமும் கடுதுதென்று
தூங்கும்விழிக்கும் கிடைகொள்ளார் துர்மாமிச மெனலாமே. 122

இமைகள் வீங்கியிருக்கும்; வெள்ளை விழியில் சதை தோன்றும்; சில காலம் மறையும்; சில காலம் உண்டாகும்; துன்பம் அதிகமாய் இருக்கும்; நீர் வடியும்; பீளை கட்டும்; நடக்க முடியாமல் தயங்கச் செய்யும்; முகம் சிவக்கும்; வலி சகிக்க முடியாது; சற்று நேரம் தூங்கச் செய்யும்; சற்று நேரம் விழிக்கச் செய்யும்; கிடை கொடுக் காது. இந்த நோய்க்குத் துர்மாமிசமென்று பெயராகும்.

### 39. வெள்ளெழுத்து

கூசும் விழியும் புகைந்திருக்கும் குறுகும்பார்வை தோற்றுது
மாசுங் கண்ணும் பசிந்திருக்கும் மயங்குங் குணங்கள் பலவாகும்
தேசுங் குறையுமருட்சியுண்டாம் திறமாய் கருமம் செய்யாது
ஏசுங் குணங்கள் வெள்ளெழுத்து என்றே சொல்லு யிதுகண்டே.

கண்கள் கூசும்; பார்வை புகைந்து காட்டும்; சமீப பார்வை தெரியாது; கண்கள் பிரகாசமில்லாது மங்கிப் போயிருக்கும்; பார்வையில் மயங்கச் செய்யும்; இக் குணங்களிருப்பின் வெள் ளெழுத்து என்று சொல்லப்படும்.

### 40. உருவிழி புடைத்தல்

வளரும் வலிக்கும் மிகப்புடைக்கும் வாங்கும் விழியும் மேனோக்கி
தளரும் விழியும் சிவந்திருக்கும் தண்ணீர்பீளை தானுண்டாம்
குளரும் வாயும் தடுமாறும் குடித்த அன்னம் சத்திக்கும்
உளரும் கிடையும் கொள்ளாது உருவிழி புடைத்த லெனலாமே.

கண்கள் வலிக்கும்; புடைப்பாயிருக்கும்; பார்வை மேல் நோக்கும்; கண்கள் சிவந்திருக்கும்; நீர் வடியும்; பீளை சேரும்; வாய் குளரும்; சொல் தடுமாறும்; சாப்பிட்ட உணவு வாந்தியாகி விடும்; கிடை கொடுக்காது. இவ்வித குணங்கள் அமைந்திருந் தால் அதற்கு உருவிழி புடைத்தல் எனப்படும்.

## 41. பறவைப் பூ

சினக்கும் வலிப்பும் எரிப்புண்டாம் சிறுகபடரும் வெளுத்திருக்கும்
கனக்கும் தலைநெற்றியில் குத்தும் கண்ணும் சிவந்து நீர்வடியும்
இனக்குமுகமும் புகைந்திருக்கும் எதிர்த்துப் பார்க்கவொட்டாது
தனக்குக் குணங்கள் பறவைப்பூ தகாதகுணங்கள் வகைதாமே.

கண்களில் வலியும் எரிச்சலுமிருக்கும்; சிறியதாய் வெள்ளை நிறத்தோடு பூ படர்ந்திருக்கும்; தலை கனக்கும்; நெற்றியில் குத்தும்; கண்கள் சிவந்திருக்கும்; நீர் வடியும்; முகம் கருகியிருக்கும். நேராய்ப் பார்க்க முடியாது; இக் குணங்கள் காணப்பட்டால் அது பறவைப் பூ என்று சொல்லப்படும்.

## 42. பஞ்சுநீர்ப் படலம்

ஏற்கப்படரும் விழியடங்க இயல்பாய் நோகும் வெளுப்பேறும்
நீற்கப்படவே புகைந்துவரும் சிறுகநீரும் பீளைசேரும்
ஊற்கப்படவே கடைக்கண்ணில் உறுத்தி வலிக்கு மொருநேரம்
பார்க்கக் குணங்களிவைதானும் பஞ்சுநீர்ப்படல மெனலாமே. 126

கண்கள் முழுவதும் வெள்ளை படர்ந்து வலியுண்டாகும்; பார்வை புகைந்து காட்டும்; கொஞ்சமாய் நீர்வடியும்; பீளைகட்டும்; சில நேரங்களில் கடைக் கண்ணில் உறுத்தலோடு வலி உண்டாகும். இக் குணங்களைக் கண்டால் பஞ்சு நீர்ப்படலமென்று அறிவாயாக.

## 43. அமரம்

கதிக்குமி மையிற் சதைவளர்ந்து கண்ணும் மூடித் திறவாது
பதிக்கும் விழியில் பறந்துகுத்தி பலவாய் நீரும் பீளையிடும்
மதிக்கு மெவரை நோக்கரிதாம் மலர்ந்த பூப்போல் சிவந்திருக்கும்
அதிக்குங் குணங்களிவைதானும் அமரமென்றே அருளினரால்.

கண்ணிமைகள் கனத்திருக்கும்; இமைகளுக்குள் சதை வளர்ந்திருக்கும்; கண்கள் மூடிக்கொள்ளும்; திறக்க முடியாது; விழியில் குத்தலுண்டாகும்; (இது குழந்தைகளுக்கு உண்டாகும் நோய். விழியில் குத்தலுண்டாவது எப்படித் தெரியுமெனில் குழந்தைகள் அழுவதினால் உணர்வோம்.) பலவிதமாக நீர் வடியும்; (சில சமயம் கண்ணிலிருந்து வடியும் நீர் சீழ்போலிருக்கும். சில குழந்தைகளுக்கு இளஞ் சிவப்பாயிருக்கும்.) பீளைகட்டும்; ஒருவரையும் பார்க்க முடியாது. புதிதாய் மலர்ந்த மலர்போல் சிவந்து தோன்றும். இவ்வித குணங்களோடு அமரம் காணப்படும்.

### 44. புகைச்சல்

பகைக்கு முகமும் பலவிதமாய் பார்வைபலவாய்த் தோற்றுவிக்கும்
திகைத்து மிருக்கும் கூச்சமுண்டாம் சிறுகயிமையுந் தின வெடுக்கும்
தகைக்கும் கருமந்தனைச் செய்யார் சற்றே விழியா திருண்டுவரும்
புகைச்சல் குணங்களிவையென்று புகழ்ந்தார் பெரியோர் புவி தனிலே. 128

யாருடைய முகத்தைப் பார்த்தாலும் பார்வை பலவிதமாய்த் தோற்றும்; மனத்திற்குத் திகைப்பை உண்டாக்கும்; கண்களில் கூச்சமிருக்கும்; இமைகளில் சிறிது அரிப்புண்டாகும்; கண்கள் சிறிது இருண்டு காட்டும். புகைச்சலென்னும் நோயின் குணங் களிவையாகும்.

### 45. அதிமந்தாரம்

வலிக்கும் கடுக்கும் நீர்வடியும் வந்தே சோதிதனிற் குத்தும்
பலிக்கு மருந்தும் பலியாது பார்க்க அதிகம் படர்ந்தேறும்
சலிக்குந் துயராதிருண்டுவரும் சாந்தம்போல நடைகொடுக்கும்
அலிக்குங் குணங்களிவைதானும் அதிமந்தாரமெனலாமே. 129

கண்களில் வலி காணும்; கடுக்கும்; நீர்வடியும்; பாவையில் குத்தலுண்டாகும்; மருந்துகள் பலிக்கமாட்டா; மருந்துகளிட்டால் நோய் அதிகமாகும். மனத்திற்குச் சலிப்புண்டாகும்; பார்வை நாளுக்கு நாள் இருண்டுவரும்; நடை மெதுவாகும்; இக் குணங்களோடு அதிமந்தாரம் விளங்கும்.

### 46. திமிரம்

மறக்குங் கடுக்கும் கரகரக்கும் மாருவாதை தான்பெருக்கும்
உறக்கந் தலைமுகந் தந்திருக்கும் ஊரும்நீரும் பீளையிடும்
பறக்கும் விழியும் வெளுத்துவரும் பார்வை குணமும் பலவாகும்
திறக்குநயன குணந்தானே திமிரம் வகையின் செயல்தானே. 130

கண்கள் கடுக்கும்; கரகரக்கும்; துன்பம் அதிகமாயிருக்கும்; தூக்கம் வரும். தலையிலும் முகத்திலும் அரிப்புண்டாகும்; நீர் வடியும்; பீளை கட்டும்; கண்கள் வெளுத்து தோன்றும்; பார்வை பலவிதமாய்க் காணப்படும். இக் குணங்கள் அமைந்திருந்தால் திமிரமென்று சொல்லப்படும்.

### 47. சோதிநெறி

முளைக்குங் கண்ணில் பலவாக மூன்று நாளில் போகும்வரும்
கிளைக்குந் தினம்பின் வெளுப்பாகும் கீழே விழியும் பார்வையுமாம்
வளர்க்கும் சதையு மிமைசூழ வாதை தலைநோய் நீர்ப்பீளை
துளைக்கும் பிடரி சுழியில் குத்தும் சோதிநெறி யிதெனலாமே. 131

கண்ணில் முளைகள் உண்டாகும்; மூன்று நாள்களான பின் போய்விடும்; பிறகு முளைகள் உண்டாகும்; பிறகு அவை மறைந்து கண்கள் வெளுத்துப்போகும்; பூமியை நோக்கிய பார்வையாயிருக்கும்; இமையைச் சுற்றிலும் சதை வளர்ந்திருக்கும்; தலைவலி அதிகமாயிருக்கும்; நீர்வடியும்; பீளை கட்டும்; பிடரியில் வலி அதிகமாயிருக்கும்; நடு விழியில் குத்தலுண்டாகும்; இவ்வித குணங்களிருந்தால் அதற்குச் சோதிநெறியென்று சொல்லப்படும்.

### 48. செவ்வேர்

சிறுக்குங் கடுக்கும் வெளுத்தவிழி சிவந்து இமையுந் தடிப்பாகும்
மறுக்குந் தலையில் குடைந்து குத்தி மாருநீரும் கூச்சமுமாம்
இறுக்குமிமையும் அசைக்கவொட்டார் இருக்கும் கடைக்கண் தினவாகும்
குறுக்கும் வகைக ளிவைதானே குறித்த செவ்வேர் குணந்தானே.

கண் சிறுத்திருக்கும்; வெள்ளை விழி சிவந்திருக்கும்; இமை தடிப்பாயிருக்கும்; தலையில் குத்தல் வலி அதிகமாயிருக்கும்; ஓயாமல் கண்ணில் நீர்வடியும்; கண்களில் கூச்சமிருக்கும்; இமையை அசைக்கவொட்டாது; கடைக் கண்ணில் அரிப்புண்டாகும். இவ்வகையான குணங்களிருந்தால் செவ்வேர் என்று சொல்லப்படும்.

### 49. சிலேத்தும காசம்

வட்ட விழிக்கமாட்டார் மழைமுகில் சொரிந்தாற்போல
விட்டிலா நீரேநிற்கும் வேதனை வெகுவாய்த் தோன்றும்
கொட்டினாற் போலேநெற்றி குலையவே வலிக்குமாகில்
திட்டமே தெரியச் சொன்னோம் சிலேத்தும காசந்தானே. 133

கண்ணை நன்றாய் விழிக்க முடியாது; மேகமானது மழையைச் சொரிந்தாற்போல் ஓயாமல் நீர் வடியும்; வலி அதிகமாயிருக்கும்; தேள் முதலிய நச்சுயிர்கள் கொட்டினதுபோல் நெற்றியில் அதிகமாய் வலியிருக்கும்; இப்படிப்பட்ட குணங்களிருந்தால் சிலேத்துமக் காசமென்று அறியப்படும்.

### 50. குவளை நெரித்தல்

வாட்டும் புருவம் நெற்றியும் கண் வலித்துப் பீளை நீர் வடியும்
மீட்டும் வீணை தெரித்தாற்போல் முடுகிவலிக்கும் தலைநோவாம்
தீட்டுங் கருவிதனைப் போல சிக்கியறுக்கு மிமைவீங்கும்
கூட்டுங் குணங்க ளிவைதானும் குவளைநெரித்த லெனலாமே. 134

புருவம், நெற்றி, கண்கள் இவைகளில் வலியுண்டாகும்; பீளை கட்டும்; நீர் வடியும்; வீணையை மீட்டுவதுபோல் அதாவது வீணையின்

தந்திகளைத் தெரிப்பதுபோல் தலை வலிக்கும்; கத்தியினல் சொடுக்கி அறுப்பதுபோல் கண்ணில் தோன்றும்; இமைகள் வீங்கியிருக்கும்; இவ்வளவு குணங்களுமிருக்குமானல் குவளை நெரித்தலென்று சொல்லப்படும்.

## 51. காசமுறுக்கி

நல்லகருப்பு விழிதன்னில் நரம்புபோல சிவந்துவரும்
சொல்லவெளுத்த விழிமேலே தொடர்ந்துமா மிசம்வளரும்
வல்லகுவளை தனையுறுத்தி வடியுநீரு மிவரழுது
பல்லை வலிக்கும் தலையிடிக்கும் பகருங்காச முறுக்கியென்றே. 135

கருப்பு விழியில் நரம்பானது சிவந்துவரும்; வெள்ளை விழியில் மாமிசம் வளர்ந்து வரும்; குவளை அதாவது கீழிமையை யுறுத்தி நீர் வடியும்; வேதனை பொறுக்காமல் அழச் செய்யும்; பல்லை வலிக்கும்; தலையை வலிக்கும். இக் குணங்களிருந்தால் காசமுறுக்கி என்று சொல்லப்படும்.

## 52. மாலைக்கண்

காயம் வெளுத்து முகம் பசந்துகண்ணும் வேறே விகாரமுமாம்
மாயம் போலே தலைகனக்கும் மயங்குங் குணங்கள் மதிவேறும்
பாயும்பீளை மேனேக்கி பார்க்கவிழியும் கூசிவிடும்
சாயுங்காலம் மாலைக்கண் தரித்த விளக்குந் தெரியாதே. 136

உடல் வெளுத்திருக்கும்; முகம் பசந்திருக்கும்; கண்ணும் ஒளிமழுங்கி யிருக்கும்; மாயம்போல் தலைவலிக்கும்; புத்தி வேறு பட்டுக் கொண்டேயிருக்கும்; பீளை கட்டும்; அண்ணந்து பார்த்தால் கண் கூசும்; மாலை நேரத்தில் கண் தெரியாது; விளக்கும் கண்ணுக்குத் தெரியாது. இக் குணங்களமைந்த கண்ணிற்கு மாலைக்கண் என்றுபெயர்.

## 53. துண்ணுகாசம்

வளர்ந்திடும் சதைகள் சூழ வலித்திடும் இமைகனக்கும்
தளர்ந்திடும் நீரும்பாயும் சளியவே இடித்துக்குத்தும்
உளந்தனி லெரிப்புகூச்சம் உறுதியாய் புகைந்துகாட்டும்
துளங்கிய குணத்தினுளே துண்ணிய காசமாமே. 137

கண்ணுக்குள் சதை வளர்ந்திருக்கும்; கண்களில் வலிகாணும்; இமைகள் கனத்திருக்கும்; நீர் வடியும்; தலையை இடித்துக் குத்தல் உண்டாகும்; மனத்திலே எரிச்சலுண்டாகும்; கண்கள் கூசும்; பார்வை புகைந்து காட்டும். இக் குணங்கள் கண்டால் அதற்குத் துண்ணுகாசம் எனப்படும்.

### 54. சுழல்விழி எரித்தல்

எரியும் கண்ணும் பலவிதமாய் எதிர்த்தும் விழிக்க வொட்டாது
சரியும் தினவும் இமைகனத்து சாந்தமான வலியுண்டாம்
நெரியுமுளைக்கும் பீளைகட்டும் நித்திரைதன்னில் வெறுப்பாகும்
சொரியுங்கண்ணில் நீர்வடியும் சுழல்விழி யெரித்த லெனலாமே.

கண்கள் பலவிதமான எரிச்சலோடிருக்கும்; கண்ணை நேரே விழிக்கவொட்டாது; இமை கனத்து சரிந்திருக்கும்; அரிப்பு உண்டாகும்; கொடுமையில்லாத வலியிருக்கும்; நெற்றியின் நெறியில் உளையும்; பீளை சேரும்; தூக்கம் வெறுப்பாக இருக்கும்; கண்ணில் அரிப்பு உண்டாகும்; நீர் வடியும் இவ்வளவும் சுழல்விழி எரித்தலின் குணங்களாகும்.

### 55. பக்கப்படுவன்

விழியைக்கடுக்கும் சினத்திருக்கும் மீறிநொந்து வெள்ளைதனில்
அழியப் புண்போல் குத்துண்டாம் அந்தக் கணத்தில்:முளைபோல
வெளியில்தள்ளும் சீழ்கொள்ளும் வெடிக்கும்நீரும் தான்விழுகும்
பழியில் படுவாயிவை பார்க்கில் பக்கப்படுவ னெனலாமே. 139

கண்ணைக் கடுக்கும்; சிவந்திருக்கும்; வெள்ளை விழியில் அழிந்த புண்போல குத்தல் உண்டாகும். அதே நிமிடத்தில் முளையைப் போல படுவன் வெளியே தள்ளும்; சீழ்ப் பிடிக்கும்; படுவன் உடையும்; நீர் வடியும். இதைப் பக்கப்படுவன் என்று சொல்லப் படும். இதற்கு மருத்துவம் செய்தால் பழி வந்து சேரும்.

### 56. அக்கரம்

சிறுகச் சிவக்கும் நீர்வடியும் தினவும் சில நாளடங்கிவிடும்
மறுக்கக் கொடுக்கும் கூச்சமுண்டாம் மலரவிழிக்க வொட்டாது
முறுக்கயிமையும் கனத்திருக்கும் முரிதலை நோய் கொட்டாவி
அறுக்கக் கடைக்கண் பீளையிடும் அக்கரமிதுவென் றறிவீரே.

கண் உபாயமாய் சிவக்கும்; நீர் வடியும்; அரிப்புண்டாகும்; சில நாள் சென்றபின் மாறிவிடும்; கூச்சம் உண்டாகும்; கண் மலரும்படி விழிக்க முடியாது; இமை கனத்திருக்கும்; தலைநோய் இருக்கும்; கொட்டாவி உண்டாகும்; கடைக்கண்ணில் அறுப்பது போலிருக்கும்; பீளை கட்டும். இதை அக்கர நோய் என்று அறிவீர்களாக.

### 57. பில்லம்

கருகிய யிமையினுள்ளே கதித்ததுர் மாமிசம்போல்
அருவியே யுறுத்திநொந்து அதிகமாய்ச் சிவந்துகூசும்
மருவிய பூவுந்தோன்றும் மாருதே பீளைபாயும்
பெருகிய நீருமுண்டாம் பில்லமா மென்றுசொல்லே. 141

இமையின் உட்புறத்தில் தடித்த துர்மாமிசம் வளரும். கண்ணை இமைக்கும் பொழுதெல்லாம் வளர்ந்திருக்கும்; துர்மாமிசமானது விழியில் அருவி உறுத்தி நோயை உண்டாக்கும்; கண்கள் சிவந்திருக்கும்; கூச்சமுண்டாகும்; கருப்பு விழியில் பூ உண்டாகும். ஓயாமல் பீளை கட்டும்; ஏராளமான நீர் வடியும். இப்படியிருந்தால் அதற்குப் பில்லமென்று சொல்லுவாயாக.

## 58. அழித்திடும் பிரித்தல்

பிரித்திடுங் கண்ணுஞ்சூழ புண்ணுமாம் பீளைபாயும்
எரித்திடும் விழியிற்குத்தும் எதிர்த்தது நீருங்காணும்
சொரித்திடும் சீழும்போலச் சோர்ந்துகண் விழிக்கவொட்டார்
அரித்திடுங் கருவிபோலாம் அழித்திடும் பிரித்தல்தானே. 142

கண்ணைச் சுற்றிப் புண்ணாக இருக்கும்; பீளை சாறும்; கண் விழிகளில் குத்தலுண்டாகும்; நீர் வடியும்; சில சமயம் சீழும் வடியும்; கண்ணை விழிக்கவொட்டது. ஆயுதங் கொண்டு வேலை செய்வதுபோல் அரிப்புண்டாகும். இவ்வளவும் அழித்திடும் பிரித்தலின் குணங்களாகும்.

## 59. பித்தகாசம்

சினத்திடும் சிவப்பேயாகும் சிறுகவே பீளைகண்கள்
அனத்திடும் பீளைதோன்றும் அதிகமாய் சிவந்துகூசும்
சுனைத்தடஞ் சோனைமாரி சொரிதல்போல் நீரேதூவி
கனத்திடும் பைத்தியத்தின் காசமாய்க் கருதலாமே. 143

ஒருவனுக்குக் கோபமுண்டாகும்போது, கண்கள் சிவத்தல் போலச் சிவந்திருக்கும்; கண்கள் சிறுத்திருக்கும்; பீளை சேரும்; கண்களில் கூச்சமிருக்கும்; சுனையிலிருந்து விசாலமான மழை பொழிவதுபோல் நீர் வடியும். இக் குணங்களிருந்தால் பித்த காசமென்று கருதப்படும்.

(வேறு)

கண்ணினிற் காசம் வந்தால் கலங்கியே புகைந்துகாட்டும்
நண்ணிய வெள்ளைதன்னில் நரம்புகள் மிகுநீர்கோத்து
விண்ணிலே நோக்கிப்பார்க்கில் விதனமும் மிகவுண்டாகும்
அண்ணிலே பித்தகாசம் அதுவழி பிறக்கும்வாறே. 144

கண்ணிலே காசம் வந்தால், கண்ணனது கலக்கமடைந்து பார்வை புகைச்சலாயிருக்கும்; வெள்ளை விழியிலுள்ள நரம்புகள் நீர் கோத்துக்கொள்ளும்; ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தால், கண்ணிலும், புருவத்திலும், வலியுண்டாகும். இவைகளிருந்தால் பித்தகாசம் உண்டாகும் அறிகுறிகள் என்று அறிந்து கொள்க.

(வேறு)

பிறக்குமே காசந் தானும் பெருகிய மேகம்போல
மறைக்குமே கருப்பினுள்ளே வளர் சங்கு நிறமதாக
நிறக்குமே பித்தகாசம் நிச்சயமாகத் தானும்
துறக்கவே கடைக்கண் வெள்ளை தோன்றவே குத்தி வாங்கே. 145

கண்ணில் காசமானது உண்டாகும்போது, நீருண்ட மேகம் போல, கருவிழியின் மத்தியிலிருக்கும் பாவையைத் தினமும் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கிவந்து மறைத்துவிடும். முற்றிலும் காசநீர் இறங்கினபிறகு, பார்த்தால் சங்கு நிறமாகக் காணப்படும். இவ் வகையான குணங்களிருக்குமானல் பித்தகாசம் என்று நிச்சயித்துக்கொண்டு, கடைக்கண் பக்கமாய் வெள்ளை விழியில் குத்தி நீரைப் போக்கி விடுவாயாக. (குத்துகிற விபரம் குணவாகடம் 66-72 செய்யுள்களில் காண்க.)

## 60. துத்திடுங் காசம்

குத்திடுங் கண்ணைச் சூழ குவளையிலருவுறுத்தி
பத்திடும் வெள்ளையோடிப் பறந்திடும் விழியடங்க
உத்திடும் பார்வை குன்றில் ஒளியது மறைந்து காட்டும்
துத்திடுங் காசமென்று சொல்லுவர் பெரியோர்தாமே. 146

கண்ணைச் சுற்றிக் குத்தல் உண்டாகும்; குவளையில் அதாவது கீழிமையில் உறுத்தல் உண்டாகும்; கண் முழுவதும் விசாலமாக வெள்ளை படர்ந்திருக்கும்; நாளடைவில் பார்வை குறைந்து கொண்டுவரும். இந்த அறிகுறிகளெல்லாம் இருந்தால் துத்திடும் காசம் எனப்படும்.

## 61. துண்ணு வெண்புகைச்சல்

கனத்துவிழியும் சதை வளர்ந்து கருத்த ஜோதி வெளுப்பேறிச்
சினத்து முகமும் கடுப்புவலி சிறுகத் தினவும் பீளையிடும்
இனத்தும் பார்வை பலவிதமாய் ஏங்கும் வெளுப்பா மயக்குண்டாம்
மனத்துள் துண்ணு வெண்புகைச்சல் மாருதிருக்குங் குணந்தானே.

கண்விழியில் சதை வளர்ந்து, கருப்பாயிருக்க வேண்டிய பாவையானது வெள்ளை நிறமாக மாறி, கண் சிவந்து, முகத்தில் கடுப்பு, வலி உண்டாகும்; சிறிது அரிப்புண்டாகும்; பீளை கட்டும்; பார்வை பலவிதமாய்க் காட்டும். ஏக்கம் உண்டாக்கும்; மனத்திலே சந்தேகம் உண்டாகும். இவ் வகை குணங்கள் காணப்படுமாயின்' துண்ணு வெண்புகைச்சல் என்று சொல்லப்படும்.

## 62. சோராக் கண்துடிப்பு

கூர்கண் சோதிதனைக் கடுத்துக் குத்தி யதைக்க இமை யடங்க
நீர்க்கண் பொழிந்து உறக்கமற்று நிலையில் கிடக்கவொட்டாது
சீர்க்கண் போலச் சிலநாளாம் சினத்து எடுக்கும் சடுதியிலே
சோராக் கண்ணின் துடிப்பிதென்று சொல்லியிருப்பார் பெரியோரே.

கண்ணிலுள்ள பாவையும் இமையும் கடுத்து குத்தல் உண்டாகும். இமை கனத்திருக்கும்; கண்ணில் நீர் வடியும்; தூக்கம் வராது; கிடை கொள்ளாது. நல்ல கண்ணைப்போல சில தினங்களிருக்கும். உடனே சிவந்துகொண்டு மேற்கண்ட தொல்லைகளுண்டாகும்; இவை அனைத்தும் சோராக் கண்துடிப்பின் குணங்களென்று பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கிறது.

## 63. வெண்ணுக்காடு

கூசுங்கடுக்கும் நீர்முட்டும் குளிர்ந்தசரீரம் எரிவுண்டாம்
மாசுங்கண்ணும் சிறுசிவப்பாம் மதியந்தன்னில் விழிக்காது
தேசுங்குன்றும் நடக்கவொட்டார் தியக்கக்குணங்கள் பலவாகும்
பேசுங்குண வெண்ணுக்காடு பேரிட்டழைப்பார் பெரியோரே. 149

கண்ணைக் கூசும்; கடுக்கும்; நீர்வடியும்; உடலில் எரிச்சல் உண்டாகும்; கண் சிறு சிவப்பாய் இருக்கும்; நிலா வெளிச்சத்தில் விழிக்க முடியாது; கண்ணின் பிரகாசம் குறையும். நடக்க இயலாது; நோயாளியின் இயற்கைக் குணங்கள் வேறுபடும். இவ்வித குணங்களையுடைய நோய்க்கு வெண்ணுக்காடு என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

## 64. சூழ்ந்திடும் பில்லம்

வளர்ந்திடுங் கீழுமேலும் வலுப்படுஞ் சதைசிவப்பு
உளைந்திடுங் கண்ணைச்சுற்றி உறுத்தியே நீரும்பாயும்
கனத்திடும் மணிபோலாகும் கருமணி குறித்துநிற்கும்
சூழ்ந்திடும் பில்லமென்று சொல்லுவா ரிதனைக்கண்டே. 150

இமையிலும், குவளையிலும் அதாவது மேல் இமையிலும் கீழ் இமையிலும் சதை வளர்ந்திருக்கும்; முதிர்ந்த சிவப்பாய் இருக்கும்; கண்ணைச்சுற்றி உளையும்; கண்ணை உறுத்தி நீர்வடியும்; இமைகள் கனத்திருக்கும்; கருப்பு விழி அசைவில்லாமல் இருக்கும். இக் குணங்களிருந்தால் சூழ்ந்திடும் பில்லம் என்று சொல்லுவார்கள்.

## 65. மயிர்ப் புழுவெட்டு

நீட்டிய தினவுங்கூச்சம் நீர்வரு மிமையும்வீக்கம்
கூட்டிடும் பீளேசேரும் குருமுளே போலேதோற்றும்
நாட்டியே மயிருதிர்ந்து நற்சதை ரத்தம்வீழும்
காட்டிது மயிர்ப்புழுவெட்டு கண்டவ ருரைத்தவாறே. 151

இமையிலும் குவளேயிலும் அரிப்புண்டாகும்; கூச்சமிருக்கும்; நீர் வடியும்; இமைகள் வீங்கியிருக்கும்; பீளே கட்டும்; இமையிலும் குவளேயிலும் சிறுமுளேகள்போலக் காணப்படும்; இமையிலும் குவளேயிலும் உள்ள மயிர்கள் உதிர்ந்து சதையில் இரத்தம் வடியும். இத்தகைய குணங்களிருந்தால் மயிர்ப் புழுவெட்டு என்று சொல்லப் படும்.

## 66. விதன மந்தாரம்

கடுக்கும்வலிக்கும் குத்துண்டாம் கண்ணேச்சூழ சுறுக்கென்னும்
இடுக்குமிமையு மேல்நோக்கி இழுத்துவலிக்கும் தலேயடங்க
நடுக்கும்குளிரும் சுரமுண்டாம் நாவும் வரண்டு தாகமுமாம்
விடுக்குநீரும் பீளேகட்டும் விதனமந்தாரக் குணமிதுவே. 152

கண்ணேக் கடுக்கும்; வலிக்கும்; குத்தல் உண்டாகும், கண்ணேச் சுற்றி சுறுக்கெனக் குத்தும்; கண் இடுங்கியிருக்கும்; மேல் இமை மேல்நோக்கி இழுத்து வலிக்கும்; தலேநடுக்கம் உண்டாகும்; குளிரும் சுரமும் உண்டாகும்; நாக்கு வரட்சி அடைந்து தாகம் உண்டாகும். கண்ணில் நீர்வடியும்; பீளே கட்டும். இவ்வளவு குணங்களும் இருந்தால் அதை விதன மந்தாரம் என்று சொல்லப் படும்.

## 67. வளர்ந்தெழு ரோகம்

புருவங்குவளே கடைக்கண்ணில் புண்போல் சதையும்படர்ந்துவரும்
அருவும்சிவப்பு நீர்முட்டும் அண்ணுந்து விழிக்கவொட்டாது
உருவங்குலேக்கும் கண்முகமும் ஒளியுமழுங்கி புகைச்சலுண்டாம்
வருவதிவையின் குணந்தானும் வளர்ந்தெழுரோக மெனலாமே.

புருவமும், கீழிமை அதாவது குவளே இவைகளில் புண்ணுக விருக்கும்; கடைக் கண்ணில் சதை வளர்ந்திருக்கும்; கண்ணேமூடித் திறக்கும்போதெல்லாம் அருவும்; கண் சிவந்திருக்கும்; நீர் வடியும்; அண்ணுந்து பார்க்கமுடியாது; முகம் வேறுபடும்; கண் பார்வை குறைந்து, கண்ணெளி மழுங்கிவரும். இக் குணங்கள் இருந்தால் வளர்ந்தெழு நோயென்று சொல்லப்படும்.

## 68. சுடர்பலத் தோன்றல்

பார்க்கவிளக்கைப் பலவிதமாம் பரந்துகாணும் நீலம்போல்
கூர்க்கவிழிக்கில் வலியுண்டாம், குவளைதன்னி லுறுத்துவிக்கும்
கார்க்கவெள்ளை விழிசிவக்கும் கனக்கவலிக்கும் தலையடங்க
தூக்கமதிகம் வாராது சுடர்பலத் தோன்றலெனலாமே. 154

விளக்கைப் பார்த்தால் பலவிதமாய் விசாலித்துத் தோன்றும்; நீலநிறமாகக் காணப்படும்; கண்ணை நன்ருய்த் திறந்துபார்த்தால் வலியுண்டாகும்; குவளையாகிய கீழிமையில் உறுத்துவிக்கும்; வெள்ளை விழியில் சிவப்பாயிருக்கும்; தலைமுழுவதும் வலியாய் இருக்கும்; தூக்கம் அதிகமாய்ப் பிடிக்காது. இக் குணங்களிருந்தால் சுடர்பலத்தோன்றல் என்று சொல்லப்படும்.

## 69. வீங்கி விழித்தல்

தாங்கியுறுத்தி இமைகனத்துச் சற்றேவிழிக்கில் குத்துண்டாம்
மூங்கிமுளைபோல் கடைக்கண்ணில் முதிர்ந்தசதை தானெனக்
காணும்
ஏங்கும்விதனம் கண்சிவக்கும் எரித்தேயிருக்கு மெந்நேரம்
வீங்கும்புடைக்கும் நீர்முட்டும் வீங்கிவிழித்தல் குணந்தானே. 155

கண்ணை உறுத்தும்; இமை கனத்திருக்கும்; கண்ணைக் கொஞ்சம் திறந்தால் குத்தல் உண்டாகும்; கடைக்கண்ணில், மூங்கிலின் குருத்தைப்போலக் கூர்மையான சதை வளர்ந்திருக்கும்; வலியானது ஏங்கும்படியாயிருக்கும்; கண் சிவந்திருக்கும்; எப்பொழுதும் கண் எரிச்சலாயிருக்கும் கண் வீங்கியிருக்கும்; சில சமயம் புடைப்பாகவும் இருக்கும்; நீர்வடியும். இவ் வித குணங்களிருக்குமாயின், வீங்கிவிழித்தல் என்ற நோயாகும்.

## 70. மதன மந்தாரம்

இருண்டுகருத்துப் புகைசூழ்ந்து இரவிலதிகம் விதனமுண்டாம்
அருண்டுநடையும் தலைவலிக்கும் அமர்ந்துசிறு நாள்வந்தடுக்கும்
உருண்டுகண்ணும் பீளையுடன் உதிரம்போலே சிவந்திருக்கும்
மருண்டுதினந்தா னதிகமுண்டாம் மதனமந்தாரக் குணமிதுவே.

கண் இருளடைந்து கருநிறமாகப் புகைச்சலோடிருக்கும்; இரவு காலங்களில் வலியுண்டாகும்; நடை தளரும்; தலைவலியுண்டாகும்; சிலநாள் இல்லாதிருந்து, பிறகு உண்டாகும்; கண்ணில் பீளை சேரும்; இரத்தம்போல் சிவந்திருக்கும்; தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகப்பட்டுக்கொண்டேவரும். இவையெல்லாம் மதன மந்தார நோயின் குணங்களாகும்.

## 71. சுடரதி மாமிசம்

படரும்ஜோதி தன்னுள்ளே பச்சைவண்ணந் தான்காணும்
அடரும்புகைச்சல் நாள்தோறும் அடங்கும்விழியும் சதைவளரும்
இடரும்எரியும் நீர்பொழியும் எதிர்த்துப்பார்க்கில் அலகுகுத்தாம்
துடருங்குணங்க ளிவைதானும் சுடரதிமாமிச மெனலாமே. 157

கண்ணின் மத்தியிலுள்ள பாவையானது பச்சைநிறமாய் இருக்கும்; நாளுக்குநாள் புகைச்சல் அதிகப்பட்டுக்கொண்டே வந்து, கடைசியாகப் பார்வை போய்விடும்; சதை வளர்ந்துவரும்; எரிச்சலுண்டாகும்; நீர்வடியும்; கண்ணைத் திறந்து நேரே நிமிர்ந்து பார்த்தால், இரும்பால் செய்யப்பட்ட கூர்மையான அலகினல்; குத்துவதைப் போலிருக்கும். இவ்வித குணங்களிருந்தால், சுடரதி மாமிசமென்று சொல்லப்படும்.

## 72. உருண்டை யெழுச்சி

காதுகண்ணில் குத்தி நொந்து கனக்க வீங்கும் செவியடங்கும்
மோதி சிவந்து விழிகூசி முத்துசீயும் காதில் வரும்
ஜோதி தினவுங் கடைக்கண்ணைச் சுறுக இறுக்கும் நீர் வடியும்
ஊதி கண்ணுந் தினவுண்டாம் உருண்டையெழுச்சி யெனலாமே.

காது, கண் இவைகளில் குத்தலுண்டாகி வலித்து; வீக்கம் உண்டாகும். காது செவிடுபட்டுப்போகும்; கண் சிவந்திருக்கும்; கூச்சமுண்டாகும்; காதில் முத்துப்போல் சீழ் வரும்; நடு பாவையில் அரிப்புண்டாகும்; கடைக்கண்ணில் சுறுக்கென்று குத்தும்; நீர் வடியும்; கண்ணும் வீங்கியிருக்கும்; அரிப்பும் உண்டாகும். இக் குணங்கள் பொருந்தியிருந்தால், உருண்டையெழுச்சி எனப்படும்.

## 73. வாரெழு காசம்

நீர்விழும் புகைச்சலுண்டாம் நித்தமுங் கடுக்குங்கண்ணை
ஊர்வது சிவந்து கூசி உள்ளங்கை காலுங் குத்தும்
கார்முகில் போலே எங்கும் கண்ணது இருண்டு தோற்றும்
வாரெழுகாச மென்று வகையுட னுரைத்தவாறே. 159

கண்ணில் நீர்வடியும்; கண்ணில் பார்வை புகைச்சலாயிருக்கும்; ஒவ்வொருநாளும் கண்ணைக் கடுக்கும்; அரிப்புண்டாகும்; சிவப்பாய் இருக்கும்; கூசும்; உள்ளங்கையும், உள்ளங்காலும் குத்தல் உண்டாகும்; கரிய மேகம் சூழ்ந்தாற்போல் கண்ணனது இருண்டு காணும். இவ் வகைக் குணங்களெல்லாம் இருந்தால் வாரெழுகாசம் என்று சொல்லப்படும்.

### 74. உயர்ந்த கண்புடைத்தல்

மெத்தவே கண்கள் நொந்து மேவியே புடைத்து வீங்கி
நித்தமும் வாதை காட்டி நினைவற மூர்ச்சையாகும்
சுத்தமாய் சதை வளர்ந்து சுறுக்கிட்டு நீரும் பாயும்
உத்தவை குணங்கள் தானும் உயர்ந்தகண் புடைத்தலாமே. 160

கண்கள் அதிகமாய் வலிகண்டு, வீக்கமுண்டாகி தினமும் தொல்லை செய்விக்கும்; மெய்மறந்து மூர்ச்சையாகும்படிச் செய்யும்; கண்ணுக்குள் சதை வளர்ந்து சுறுக்கென்று குத்தும்; நீர் வடியும். இவைகளெல்லாம் உயர்ந்த கண்புடைத்தலின் குணங்கள் ஆகும்.

### 75. வால காசம்

காலமே புகைந்து யாமம் கலந்தபின் விட்டுப் போகும்
நீலம் போல் ஒருகால் தோற்றும் நீர்விழி வேறதாகும்
சாலேவே நீரும் பாயும் ஜலவர்ணம் பாவைப் பிள்ளை
வாலிப வயதிற் காணும் வாலமாங் காசந்தானே. 161

காலை நேரங்களில் கண்கள் புகைச்சலாய்த் தெரியும்; ஒரு சாம நேரம் ஆனபிறகு, புகைச்சல் நீங்கிப் போகும்; ஒரு சமயம் நீலம் போல் பார்வையிருக்கும். பிறகு வேறு விதமாய்ப் பார்வை தோற்றும். ஏராளமாக நீர் வடியும்; பாவையானது ஜலத்தின் நிறமாக இருக்கும்; இந்த வியாதி வாலிபர்களுக்கு உண்டாகும். ஆகையால் இதற்கு வாலகாசம் என்று பெயராயிற்று. (வாலிபர்களுக்கு வருகிற இந்த காசமானதுதான், வாலகாசமென்று பெயர் பூண்டதுமல்லாமல், வாலிபர்களுக்கு அதிக வசீகரமான ரூபத்தையும், அதிக புத்தியையும் கொடுத்து, வாலிப வயதிலேயே கொன்று விடும்).

### 76. நீர்ப்பில்லம்

இமையைக்கடுத்து மேல்கனத்து இடுக்கிநீரும் பீளையிடும்
குமையச்சிவந்து வெளுப்புண்டாம் கூசிவிழியும் கீழ்நோக்கும்
சமையத்திரண்டு புருவங்கீழ் சதையும்வளர்ந்து உறுத்துவிக்கும்
நிமையைத்திறக்கில் சதைமூடும் நீர்ப்பில்ல மீதெனலாமே. 162

இமையில் கடுப்புண்டாகி மேலிதழ் தடித்திருக்கும்; கண் இடுங்கியிருக்கும்; அதிகமாய் நீர்வடியும்; பீளைகட்டும்; ஒருநாள் கண்கள் சிவப்பாயிருக்கும்; ஒரு மருந்தும் கண்ணிலிடாமலே ஒரு நாள் தனக்குத் தானே வெளுத்துப்போகும். கண்கள் கூசும்; பார்வை பூமியைப் பார்த்தவண்ணமாயிருக்கும்; மேலிமைக்குள் சதைதிரண்டு வளர்ந்து உறுத்தலுண்டாக்கும்; மேலிமையைப் புரட்டிப் பார்த்தால் சதை மூடிக் கிடக்கும்; இவ் வகையான குணங்களிருந்தால் நீர்ப் பில்லம் என்று சொல்லப் படும்.

### 77. மந்தார காசம்

சாயுங் காலம் மழைமேகம் சண்டை கசப்பு புளிவிரும்பில்
காயங் கனக்கில் மலங்கட்டிக் கன்னி யுடனே பேசிடுகில்
ஆய மான சோதிதன்னில் அருண்ட புகைச்சல் தானுண்டாம்
மாயம் போல வந்தடுக்கும் மந்தார காச மெனலாமே. 163

மாலை நேரத்திலும் மழைக்காக மேகமிருக்கும்போதும் சண்டையிட்டாலும்; கசப்பு உணவுப்பொருள்களையும் புளியையும் புளிப்புள்ள உணவுப்பொருள்களையும் விரும்பி உண்டாலும்; சரீரம் கனத்தாலும்; மலபந்தமானாலும்; பெண் போகம் செய்தாலும்; கண்ணுக்குப் புகைச்சலை உண்டாக்குமாதலால் இதற்கு மந்தார காசம் எனப்படும்.

### 78. குவளை விப்புருதி

நீர்விடுக்குங் கடைக்கண்குத்தும் நிமைகனம் சீயும்பாயும்
ஊர்வது மிகவுண்டாகும் உறுத்தியே சிவந்தெரிக்கும்
சீர்பெற விழிக்கவொட்டா சிறிதுநாள் குணமுங்காட்டும்
கூர்குண மிவைகள்தானும் குவளைவிப்புருதி யாமே. 164

கண்ணிலிருந்து நீர்வடியும்; கடைக்கண்ணில் குத்தல் உண்டாகும்; இமை கனக்கும்; சீழும் பெருகும்; மிகுதியாகக் கண் ஊரும்; சிவந்து எரிச்சல் உண்டாகும்; சரியாகக் கண் விழிக்க முடியாது; சில நாளில் குணம் காட்டும். இவை குவளை விப்புருதியின் குணங்களாகும். கடைக்கண் என்பது காதுகளின் பக்கமாகவும், மூக்கின் பக்கமாகவும் இருக்கும் இரண்டு இடங்களையும் குறிக்கும். குவளை விப்புருதி உண்டாவது மூக்கின் பக்கத்துக் கடைக் கண்ணிலேயாம்.

### 79. கும்பிமை தடித்தல்

பொங்கியே பீளையுண்டாம் பொருந்தவே யிமைகனக்கும்
மங்கியே புகைந்துசீரும் மாறுமல் வெளுத்துவீழும்
அங்கிபோல் முகமும் மெய்யும் அருசியும் வாந்தியாகும்
குங்கிய குணங்கள்தானும் கும்பிமை தடித்தல்தானே. 165

கண்ணானது பொங்கி பீளைசேரும்; இமை கனமாயிருக்கும்; பார்வை புகைந்து காட்டும். ஓயாமல் சீழ்வடியும். வடியும் நீரானது வெள்ளைநிறத்தோடிருக்கும்; முகமும் சரீரமும் அக்கினி போல் எரியும்; வாய் சுவையில்லாமலிருக்கும்; வாந்தியாகும்; கும்பிமைதடித்தல் என்னும் வியாதியின் குணங்கள் இவையாகும்.

### 80. குவளை காசம்

புருவத்தில் நொந்து குத்தி புடைத்திடும் கடைக்கண் கூட
கருவுற்ற கருப்பி னுள்ளே கலந்திடும் நீலம் போல
திருவுற்ற மேனியாளே சேர்ந்திடி யதிக மாகும்
குருவுற்ற சூழ வெள்ளை குவளைதன் காச மாமே. 166

புருவம் வலித்துக் குத்தலுண்டாகிக் கனத்திருக்கும்; கடைக் கண்ணிலும் வீக்கமிருக்கும்; பாவையில் காசநீர் கலந்திருப்பதால் நீலநிறமாகக் காட்டும். தலைவலி அதிகமாய் இருக்கும். வெள்ளை விழியைச்சுற்றிக் குருவென்னும் சிறுமுளைகள் காணப்படும். இக் குணங்களைக் கண்டால் குவளைக் காசமென்று கூறுவாயாக.

### 81. நத்தைப் படுவன்

குத்தி யிழுக்குந் தலையடங்கக் கூடும் புருவஞ் சுழிநோகும்
முற்றி வலித்து முன்போல முளைக்குஞ் சோதி கருப்பினுள்ளே
சுற்றி வலித்து புடைத்தெழுந்து துயர மதிக முண்டாகும்
நத்தி யுடைந்து சீழ்பெருகும் நத்தைப் படுவ னெனலாமே. 167

கண்ணுக்குள் இருக்கும் கருவிழியின் மத்தியிலுள்ள பாவையில் ஒரு முளை உண்டாகும்; அதனால் தலை முழுவதும் குத்தி யிழுத்து வலிக்கும்; புருவமும் இரு புருவங்களுக்கு மத்திய இடமும் வலிக்கும். கணணைச் சுற்றிலும் வலி உண்டாகும். விழியில் உள்ள முளை பழுத்து உடைந்து சீழ் வடியும். இக் குணங்களெல்லா மிருந்தால் நத்தைப் படுவன் என்று சொல்லப்படும்.

### 82. குவளைப் படுவன்

கதிக்க வீங்கும் கண்ணடங்கக் கடைக்கண் தன்னில் மிகக் குத்தும்
பதித்த மணிபோ லசையாது பறந்து சிவக்கும் விழிமூடும்
உதிக்கு முளைபோல் சீக்கட்டி உதிரம் நீரும் வீழ்ந்துவிடும்
கொதிக்கு மனல்போல் முகமெல்லாம் குவளைப் படுவ னெனலாமே. 168

குவளையின் அதாவது கீழிமையின் உட்பக்கத்தில் ஒரு முளை உண்டாகும்; அதனால் கண்முழுவதும் வீங்கும்; கடைக்கண்ணில் குத்தலுண்டாகும்; விழியை உருட்ட முடியாது. கண்கள் சிவந்திருக்கும். கண்கள் மூடிக்கொள்ளும்; முளையில் சீழ்திரண்டு உடைந்து சீழும் உதிரமும் வடியும்; முகமெல்லாம் நெருப்பெரிவது போல் உண்டாகும். இக் குணங்கள் இருந்தால் குவளைப் படுவன் எனப்படும்.

### 83. புத்தியழித்தல்

உருவம் பலவாம் தோற்றுமுகம் உதய காலம் புகைந்திருக்கும்
அருவும் நீரும் பீளைகட்டும் அசைந்தே அறிவு பேதிக்கும்
வெருவு மந்தம் மிகவுண்டாம் வேறு கருமந் தனைச்செய்யில்
புருவந் தன்னை மேலிழுக்கும் புத்தி யழித்த லெனலாமே. 169

பார்வை பலவிதமாய்க் காட்டும்; உதயகாலத்தில் பார்வை புகைந்து காட்டும்; கண்ணினது அருவி நீர் வடியும்; பீளை கட்டும்,

அடிக்கடி அறிவு மாறும்; நாளுக்கு நாள் கண்ணில் பார்வை மந்தம் அதிகப்படும்; கண்ணுக்கு வேலை ஏதேனும் கொடுத்தால் புருவத்தை மேலே இழுக்கும். இந்த நோய்க்குப் புத்தியழித்தல் என்னும் பெயராகும்.

## 84. பொங்கிய விதனம்

மங்கியே கண்ணும் வீங்கி மாருதே வீக்கம் பீளை
அங்கிபோ லெரிந்து நொந்து அதிகமாய் நீரும் பாயும்
தங்கியே கங்குல் தேகம் தன்வச மாற நோகும்
பொங்கிய விதன மென்று புவிதனி லுரைத்தார் மேலோர். 170

கண்ணில் வீக்கம் உண்டாகியிருக்கும்; பார்வை மங்கலாய் இருக்கும்; ஓயாமல் பீளைகட்டும்; நெருப்பைப் போல் எரிச்சலைக் கொடுத்து, வலித்து, அதிகமாய் நீர் வடியும்; இரவில் உடல் தன் வசமில்லாமல் வலி காணும். இக் குணங்களிருந்தால் அதற்குப் பொங்கிய விதனமென்று சொல்லப்படும்.

## 85. கண்ணோய்

எந்நாளும் வராது காற்றுக் காலம்
எடுக்குமே வலிகாணு மிமையும் வீங்கும்
புண்ணாகும் நீர்ப்பீளை யுறங்கொட் டாது
புதுமையாய் மூன்றுநாள் போகப் போகும்
விண்ணோக்க வொட்டாது பட்ச மொன்றில்
விதமாகத் தீருமிது தானு மென்று
கண்ணோவுக் குறுகுணங்க ளிவைதா மென்று
கருதினார் புவிமீதில் கண்டு தானே. 171

எந்தக் காலத்திலும் இந்த நோய் உண்டாகாது. காற்றுக் காலத்தில்தான் உண்டாகும். இமைகள் வீங்கி இருக்கும்; கண்கள் புண்ணாகி இருக்கும்; நீர்வடியும்; பீளை கட்டும்; தூக்கம் கொள்ளாது; வியாதி உண்டான மூன்றுநாள் வரையில் தொல்லை அதிகமாக இருக்கும்; வெளிச்சத்தைப் பார்க்க முடியாது. இந் நோய் விலகுவதற்கு ஒரு பட்சம், அதாவது பதினைந்து நாள்கள் செல்லும். கண்ணோய்க்கு ஏற்பட்ட குணங்களிவை ஆகும்.

## 86. சந்திரரோகம்

மூடிநிற்கும் கூச்சமுண்டாம் முன்னே நெற்றிக்குத்துண்டாம்
ஓடுங்கண்ணில் நீர்வடியும் உருட்டிவிழிக்க வொட்டாது
ஆடுஞ்சோதி சிலநேரம் அண்ணாந்துபார்த்தா லிமையில்வலி
சாடுஞ்சதைபோல் வளர்ந்துவரும் சந்திரரோக மெனலாமே. 172

கண்ணுக்குள் சதை வளர்ந்துவரும்; அதனல் கண்கள் மூடிக் கொள்ளும்; கூச்சம் உண்டாகும்; நெற்றியில் வலியுண்டாகும்; கண்ணில் நீர்வடியும்; கண்ணை உருட்டி விழிக்க முடியாது; சில சமயம் விழியை உருட்டவும் கூடும்; நிமிர்ந்து பார்த்தால் இமையில் வலியுண்டாகும். இக் குணங்கள் அமைந்த இந்த வியாதிக்குச் சந்திரநோய் என்று பெயர்.

### 87. எழுநாயிறு

வீழ்வார்படுப்பார் எழுந்திருப்பார் விதனம்பொறுக்க வரிதாகும்
ஆழ்வார்விழியும் பருத்துவரும் அமர்ந்துபின்னே அலறுவிக்கும்
முழுதாய்கண்ணில் முளைபோல முதிர்ந்துபிறக்கு மொருநாளில்
பழுதாமிவை யெழு நாயிறெனப் பகரவுரைத்தார் புவிதனிலே. 173

இந் நோயுற்றவர் கீழே வீழ்வார்; படுப்பார்; எழுந்திருப்பார்; வலி பொறுக்க முடியாததாயிருக்கும்; கண்கள் உள்ளே அடங்கும்; சில சமயம் பெருத்தும் வரும்; கோவென்று அலறும்படி செய்யும்; ஒரே நாளில் கண்ணுக்குள் முளைபோல உண்டாகும். இதனை எழுநாயிறு என்று சொல்லப்படும்.

### 88. கூசி விழித்தல்

மாசுபோல விழிமேலே மறைக்குஞ் சூழத்தினவுண்டாம்
பாசிபோலிருக்குங் கண்ணில் பசக்கும்பீளை நீர்வடியும்
வாசிபோலச் சிறிதுநாள் வளரும்பிறையில் வந்தடுக்கும்
கூசிவிழித்தல் தானெனவே குணமாயுரைத்தார் புவிதனிலே. 174

கண்ணின் விழியின்மேலே மாசு மூடிக் கண்ணை மறைக்கும்; கண் முழுவதும் அரிப்புண்டாகும்; பாவையானது பாசி நிறம்போல் சிறிது பச்சையாய் இருக்கும்; பீளை சேரும்; நீர் வடியும்; சில நாள் குணமாகிவிட்டதுபோல் தோன்றும்; வளர்பிறையில் அதிகரிக்கும். இக் குணங்களிருந்தால் கூசிவிழித்தல் எனப்படும்.

### 89. இரத்தப் படலம்

கருத்திடுங் குமுறுங்காற்றுல் கனத்திடும் பீளைபாயும்
எரித்திடுங் கண்களிரண்டும் இரத்தமே வீழ்ந்துகாட்டும்
நெரித்திடும் பிடரிஉச்சி நீங்கிடாக் குத்துகாணும்
இரத்தமாம் படலமென்ன இயம்பினர் இனிதுமாதோ. 175

உடல் கருத்திருக்கும்; வாயுவினல் உடல் கனத்திருக்கும்; கண்ணில் பீளை சேரும்; கண்கள் எரியும்; கண்களில் இரத்தம் இறங்கிச் சிவந்திருக்கும்; பிடரி, உச்சந்தலை இவைகளில் ஓயாத வலி இருக்கும்; (நாளாக நாளாக இரத்த நிறம் மாறிக் கருஞ்சிவப்பாக இருக்கும்; மேற்கூறிய தொல்லைகள் சிறிதும் இன்றிக் கண்

களில் இரத்த நிறம்மட்டும் பொருந்திபிருப்பதும் உண்டு). இந்தக் குணங்களிருந்தால் இரத்தப் படலம் என்று பெயராகும்.

### 90. நீர்ப் படலம்

சாலவேசிரசில் குத்தித் தாழிமை தடிப்புண்டாகும்
மூலமாம் கருப்புமீதில் முகில்பலமய்க்க முண்டாம்
ஆலவேல் விழியினுளே அருவிநீர் மிகுந்துவிழும்
மூலமாம் முனிவன்கூறும் உண்மைநீர்ப் படலமென்றே. 176

தலையில் வலியுண்டாகும்; கீழிமை தடித்திருக்கும்; கருப்பு விழியில் மேகம் படர்ந்ததுபோலிருக்கும்; பார்வை பேதமாய்க் காட்டும்; கண் அருவி நீர் ஏராளமாய் வடியும்; இத்தகைய குணங்கள் கண்டால் நீர்ப்படலம் என்று சொல்லப்படும்.

### 91. அழற்சி

குறிபடச் சூழநொந்து குத்திடுங் கடைக்கண்வீங்கும்
பறிபடப் பீளைபாயும் பசுவையங் கண்சிவக்கும்
நெறிபட நெற்றிகன்ன நீண்டவே தனையுங்காட்டு
மறிவதே அன்னம்வேண்டா மழற்சியா மென்றுகூறே. 177

கண்ணைச் சுற்றிலும் குறி போட்டதுபோல் கருப்பு உண்டாகி இருக்கும்; கண்ணைச் சுற்றி வலிக்கும்; கடைக்கண்களில் வீக்கம் இருக்கும்; பீளை கட்டும்; கண்கள் இளஞ்சிவப்பாய் இருக்கும்; நெற்றி, கன்னம் இவைகளில் அதிக வலி இருக்கும்; உணவு தேவையில்லாதிருக்கும். இந்தக் குணங்களெல்லாம் இருந்தால் அழற்சி என்று கூறப்படும்.

### 92 பிறவிக் குருடு

மாதாவின் கருவிலுக்ர மருந்துதான் கொண்டதாலும்
போதாங்கால் விடங்கள்தீண்டிப் பொருந்தியே போகாதாலும்
வாகான வன்னந்தண்ணீர் வளமுடன் கொள்ளாதாலும்
போதான மைந்தன்கண்ணும் பிறவியிற் குருடதாமே. 178

தாயினுடைய கர்ப்பத்தில் சிசுவானது இருக்கும்போது தாய் வேகமான மருந்துகள் சாப்பிடுவதாலும், அக் காலத்தில் விடங்கள் தீண்டியிருந்து அவ் விடமானது முழுதும் குணமாகாமல் இருந்தாலும், அக் காலத்தில் சோறும் தண்ணீரும் திருப்தியாக உட்கொள்ளாதிருந்தாலும் பிறக்கிற குழந்தை பிறவிக் குருடாய் இருக்கும்.

### 93. வருஞ்சலரோகம்

பெருஞ்சலம் விழுந்து கண்ணும் பேதமாய்ச் சிறுகிக் காணும்
கருஞ்சலம் போலும் பாயுங் காந்தியு மந்த மாகும்
மருஞ்சல மருவி போல வனலுட னழற்றிக் காட்டும்
தருஞ்சல ரோக மென்று சம்மதித்தனர் மறைவல் லோரே. 179

கண்ணிலிருந்து ஏராளமான நீர் வடியும்; கண் சிறுத்துக் காட்டும்; நீர் கருநிறமாயும் ஒரு சமயம் வடியும்; கண்ணினுடைய பிரகாசமும் மந்தமாய்க் காணப்படும்; அருவியிலிருந்து நீர்வடிவது போல் எரிச்சலுடனே நீர் வடியும்; இவ் விதக் குணங்களிருந்தால் வருஞ்சலரோகம் என்று சொல்லப்படும்.

### 94. கொடும்புழு வெட்டு

போதவே யிமைகனத்துப் பொங்கிய தினவுண்டாகு
முதவே யெரிப்புண்டாகு முதிர்ந்திடும் மயிர்க்கரலெல்லாங்
காதவே தலைகால்மெய்கள் கரகர வென்றுதோன்றுங்
கோதவே யிமைகள்தானுங் கொடும்புழு வெட்டதாமே. 180

இமைகள் கனத்திருக்கும்: இமைகளில் அரிப்புண்டாகும்; இமைகளில் எரிச்சலிருக்கும்; இமைகளிலுள்ள மயிர்கள் எல்லாம் உதிர்ந்துவிடும்; தலை, கால், உடல் முழுவதும் கரகரவென்று இருக்கும். இவ் விதக் குணங்களுள்ள நோய்க்குக் கொடும்புழு வெட்டு என்று பெயர்.

### 95. இமையோடுறுத்தல்

கண்ணிற் புருவங் கீழ்நிமையுங் கனத்துத் துடிக்கு மெந்நேரம்
விண்ணைப் பார்க்கில் மிகக்கூசும் வீணை போலத் தெரித்திருக்கும்
குண்ணிச் சரீரம் பயந்தோற்றுங் குவளைகடுக்கும் நீர்வடியு
மெண்ணித் தலையுந் தினவெடுக்கு மிமையோ டுறுத்த லெனலாமே.

புருவத்தின் கீழுள்ள இமையானது கனத்துக்கொண்டு எப்பொழுதும் துடிக்கும்; ஆகாயத்தைப் பார்த்தால் மிகவும் கூசும்; (வீணையின் ஒரு நரம்புக் கருவி. அதை மீட்டுவதாயிருந்தால் நரம்புகளை அல்லது தந்திகளைத் தெரித்தால்தான் இசைக்கும், அதைப்போல்) கண்கள் தெரிக்கும்; உடலானது குன்றிப் பயம் தோன்றும்; குவளை அதாவது கீழிமை கடுக்கும்; நீர் வடியும் தலையில் அரிப்புண்டாகும். இவையனைத்தும் இமையோடுறுத்தலின் குணங்களாகும்.

### 96. அந்திரகாசம்

சந்திர னுதயந் தன்னிற்பு கைதானே விழியில் வெளியாகு
மிந்திர கோபம் போற்சிவக்கு முற்றுப் பார்க்கிற் பயமாகு
முந்திர கோபம் தானுண்டா முதிர்ந்தாற் கண்ணு மிகவிருளு
மந்திர காச மிதுவென்று மறிய வுலகி லுரைத்தாரே. 182

ஆகாயத்தில் சந்திரன் உதிக்கும்போது விழியிலிருக்கும் புகைச்சல் தானே விலகிப்போகும்; இந்திரகோபப் பூச்சியைப் போலக் கண்கள் சிவப்பாயிருக்கும்; கண்களைப் பிறர் பார்த்தால் பயமாய் இருக்கும்; நோயாளிக்கு அடிக்கடி கோபமுண்டாகும்; நோயானது நாட்பட்டால் கண்களுக்கு அதிக இருளைக் கொடுக்கும்; இவ்வகை குணங்களோடு அந்திரகாச நோய் விளங்கும்.

### சந்தனாதி மாத்திரை

சந்தன் மிரண்டுவிட்சி தக்கநீர்ப் பூலாவின்வேர்
வந்தன மதுரமேலம் மருதவிழ் தாமரைவேர்
முந்து கோமேதகந் தங்கம் வெள்ளிநற் பவளம்முத்து
இந்தபொன் மெழுகுகாவி இவைபன்னீர் வார்த்தரைத்து. 183

வெண் சந்தனம், செஞ் சந்தனம், விட்சி வேர், நீர்ப் பூலாவின் வேர், அதிமதுரம், ஏலரிசி, தாமரைக் கிழங்கு, கோமேதகம், தங்கம், வெள்ளி, பவளம், முத்து, பொன்மெழுகு அதாவது மஞ்சள் மெழுகு, காவிக்கல் இவற்றைச் சமனெடையாகச் சேர்த்துப் பன்னீர் விட்டரைத்து,

### (வேறு)

அரைத்திடு நாலுசாமம் அழகுற வரைத்துப்பின்னை
உரைத்திட வுருட்டிக்கொண்டு உண்மையாய் நிழலுலர்த்தி
உரைத்திடப் படலம் பில்லம் உயர்ந்தசுக் கிரங்கள்குந்தம்
இரைத்தெழுந் தோடும்பார்பார் இயல்சந்த னாதிதானே. 184

நாலுசாமம் அரைத்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, நீர்விட்டு இழைத்துக் கண்ணில் போட, படல வகைகள், பில்லவகைகள், சுக்கில நோய்கள், குந்தம் ஆகியவைகள் தீரும்.

### சந்தனாதி மாத்திரை

பெரியவிச்சி கொழுந்தரும்பும் முருங்கைப் பூவும்
பீங்கான்பொன் மெழுகுமடல் பேசுதுத்தம்
அரியபச்சைக் கற்பூரம் மலாக்கா சந்தம்
ஆனதொரு கல்காவி அதிமதுரத் தோயே
உரியவெள்ளைச் சாரணைவேர் ஒக்கக் கூட்டி
உகந்திடவே பூக்கரைத்து உருண்டை செய்து
வரிசைபெறும் புகழ்சந்த னாதி யென்றும்
வரும்நயனப் பலநோய்கள் தீருந் தானே. 185

பெரிய விச்சியின் கொழுந்து, அதன் அரும்பு, முருங்கைப்பூ, பீங்கான், பொன்மெழுகு, மடல்துத்தம், பச்சைக் கற்பூரம்,

மலாக்கா சந்தனம், காவிக்கல் அதிமதுரம், வெள்ளைச் சாரணை வேர் இவைகளைச் சமனெடையாகச் சேர்த்து நன்ருக அரைத்து மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு நீர் விட்டிழைத்துப் போடக் கண்ணிலுண்டாகும் பலவித நோய்கள் தீரும்.

### சந்தனுதி மாத்திரை

காா்அதி மதுரம்ஒன்றும் கவர்பொன்னின் மெழுகுநாலு
சேரிரு வாட்சிரெண்டு திகழ்பீத ரோணிஇரண்டு
நேர்புளி யம்பூச்சாற்றில் நேகவரைத் துருண்டைசெய்து
பார்சந்த னுதிகண்ணில் பருகிட நோய்கள்போமே. 186

அதிமதுரம் ஒரு பங்கு, பொன்மெழுகு நாலுபங்கு, இருவாட்சி மலர் இரண்டு பங்கு, பீதரோகணி இரண்டு பங்காகச் சேர்த்துப் புளியம்பூச்சாறுவிட்டு மையஅரைத்து உருண்டை செய்து வைத்துக்கொண்டு நீர் விட்டிழைத்துக் கண்ணிலிட அநேகக் கண்ணேய்கள் தீரும்.

### அந்திமாலைக்கு மாத்திரை

நத்தவ துருசி ரண்டு நலமுள்ள சங்கோ ரஞ்சு
கொத்தவை இந்துப் புத்தான் கூறிய காலுங்கூட்டி
சித்தநல் லெலுமிச்சஞ் சாற்றில் சேர்த்தெல்லாம் உருண்டை
மத்தந்தி மாலை மந்தம் வாங்கிடு முண்மை தானே. [செய்து

துருசு இரண்டு, சங்கு ஐந்து, இந்துப்பு கால் எடையாக நிறுத்தெடுத்துக்கொண்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து மாத்திரையாகத் திரட்டி வைத்துக்கொண்டு நீர் விட்டிழைத்துக் கண்ணிலிட அந்திமாலை தீரும்.

### அந்திமாலைக்கு உள்ளுக்கு மருந்து

அந்திமாலைக் கண்மந்தம் கொடுத்திடில்
ஆனகோழி யவரையின் சாற்றினில்
பந்தியாவி னற்பாலும் சமனமாய்ப்
பருகவேழுநாள் பாரீர் இருளறும்
மந்தம்வாங்கிப் பிரகாசம் கொடுத்திடும்
வாகாய்பத்தியம் பாலுட னன்னமும்
நந்திநாயகன் தானுற்ற தேயிது
நாடிநீங்க ளறிந்துகொள் வீர்களே. 188

அந்திமாலை என்ற வியாதியினுல் கண்பார்வை மந்தப்படு மானல், கோழியவரையின் சாறும் பசுவின்பாலும் சமனகச்சேர்த்து

ஏழுநாள் சாப்பிட்டு, பசுவின்பாலும் அன்னமுமாகச் சாப்பிட்டுப் பத்தியமிருந்து வர இருள்நீங்கி, மந்தம் தீர்ந்து கண்ணில் பிரகாசம் கொடுக்கும்.

### காச மாத்திரை

இந்தமா நீல காசம் இயல்பெறு பித்த காசம்
மந்தமாம் படலம்பில்லம் மயிர்க்குத்து புழுவெட் டோடு
சந்தியா மாலைக் கண்ணும் தன்னொளி கண்ணும் நேத்திரம்
வந்திடும் வாய்வுக் கெல்லாம் மருந்துதா னுரைக்கக் கேளே. 189

நீலகாசம், பித்தகாசம், படலம், பில்லம், மயிர்க்குத்து, புழு வெட்டு, மாலைக்கண், நேத்திரவாயு இவைகளுக்கெல்லாம் மருந்து சொல்வேன் கேட்பாயாக.

உரைத்திடு முத்து வெள்ளி உயர்ந்த தாம்பிரம் சங்கு
கரைத்திடுந் துருசு துத்தம் கலந்தலை யோடு பொன்னும்
திரைத்திடு பீத ரோணி சேர்புங்கு நிம்பச் சாற்றில்
அரைத்திடுங் கண்ணில் நோய்தொண் ணூற்றுறும் அகன்று போமே. 190

முத்து, வெள்ளி, தாம்பிரம், சங்கு, துருசு, துத்தம், தலையோடு, பொன், பீதரோகணி, புங்கம்விதை இவைகளைச் சமனெடையாகச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து மாத்திரையாகத் திரட்டி நீர் விட்டிழைத்துக் கண்ணிலிடத் தொண்ணூற்றுறு நோய்களும் தீரும்.

### காசக் குளிகை

சொன்னதோர் பூலா வேரின் தோலது ரெண்ட தாகும்
பன்னிய துத்தம் பாதி பகருநற் றுருசு பாதி
மன்னிய புளியம் பூவில் மாதர்தம் பாலிற் கூட்ட
உன்னிய கண்ணில் காசம் உயர்பில்லம் படலம் போமே. 191

பூலாவேரின் மேற்றோல் இரண்டுபங்கு, துத்தம் அரைப் பங்கு, துருசு அரைப்பங்கு சேர்த்துப் புளியம்பூச் சாற்றாலும், தாய்ப் பாலாலும் அரைத்து, மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்தி, நீர் விட்டிழைத்துக் கண்ணிலிட காசம், பில்லம், படலம் ஆகியவை தீரும்.

### காசக் குளிகை

செய்யகற் பூரஞ் சாதி சேர்கடுக் காய்கச் சோலம்
மையுறு வெள்ளி லோத்திரம் மருவுபச் சிலையுங் கூட்டிக்
கையுறு நிம்பஞ் சாற்றில் கலந்தரைத் துருண்டை செய்து
வெய்யுறு தனப்பால் தன்னில் விரைந்திடக் காசம் போமே. 192

பச்சைக் கற்பூரம், சாதிக்காய், கடுக்காய், கிச்சிலிக் கிழங்கு, வெள்ளி லோத்திரம், பச்சிலை இவைகளைச் சமனெடையாய்ச் சேர்த்து, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு, தாய்ப்பால் விட்டு அரைத்துக் கண்ணிலிடக் காசந் தீரும்.

### கற்பூராதி மாத்திரை

சீராருங்கற்பூர முத்தக்காசு திரிபலை பலகரையிந் துப்புதுத்தம்
பேராருங் கடல்நுரையும் அஞ்சனக்கல் பீதரோகணிமஞ்சள் காவிக் கல்லும்
ஏராரும் அதிமதுரம் வெள்ளிலோத்திரம் இரும்பிலுறும் பொடி யிதெலாம் சரியாக்கொண்டு
காரார்கை யாநீரிலாறுசாமங் கருத்தாகவரைத்துநிழ லுலர்த்திக் கொள்ளே. 193

பச்சைக் கற்பூரம், கோரைக்கிழங்கு, கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிவற்றல் தோல், பலகரை, இந்துப்பு, துத்தம், கடல் நுரை, அஞ்சனக்கல், பீதரோகணி, மஞ்சள்நிறமுள்ள காவிக்கல், அதிமதுரம், வெள்ளிலோத்திரம், இரும்பின் அரப்பொடி இவையெல்லாம் சமனெடையாய்ச் சேர்த்துக்கொண்டு கருப்புக் கையான் சாறுவிட்டு ஆறுசாமம் அரைத்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்.

உலர்த்தி மருந்ததனை நிறையோ டுரைக்க
வுயர்ந்துவருஞ் சூலைமாறும் குந்தந் தீரும்
சலத்திலு ரைத்திடவும் முடமயிர்கள் தீரும்
சிகப்புவரி பற்பரோகம் தாய்ப்பாலில் தீரும்,
நலத்துடனே நன்னீரும் தேசிச் சாற்றால்
நடுமயிர் காயம் வெள்ளெழுத்து தீரும்.
அலைகடலில் விடமருந்து மரனூர் முன்னோர்
வளமை கற்பூராதியென்றே அருளினரே. 194

உலர்த்திவைத்துக் கொண்ட மருந்தை நீரில் இழைத்துக் கண்ணிலிட சூலை, குந்தம் முடமயிர்கள் தீரும். தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிட செவ்வரி, பற்பரோகம் தீரும். தண்ணீர் அல்லது எலுமிச்சம் பழச்சாற்றில் இழைத்துக் கண்ணிலிட வெள்ளெழுத்து தீரும்.

கோரோசனையோடு சாரணைவேர் குலையாக வருமிளகு துருசுதுத்தம்
நேரான கற்பூரம் பீதரோணி நீண்மதுரம் கடுக்காயின் பருப்புங்கூடச்,
சீரான திப்பிலியு மேலத்தோடே சிறந்தநெல்லிக் காய்ச்சாற்றில் உருண்டைசெய்து,
தீராத கண்புகைச்சல் சிவப்புக் கூச்சம் தேனில்தனப் பாலிலிடத் தெளிந்து போமே. 195

கோரோசனை, வெண்சாரணை வேர், மிளகு, துருசு, துத்தம், பச்சைக்கற்பூரம் பீதரோகணி, அதிமதுரம், கடுக்காய்ப்பருப்பு, அரிசித்திப்புலி, ஏலம் இவையெல்லாம் சமனெடையாகச் சேர்த்து, நெல்லிக்காய்ச் சாறு விட்டரைத்து மாத்திரை செய்து வைத்துக் கொண்டு தேனிலாவது, தாய்ப் பாலிலாவது இழைத்துக் கண்ணிலிடக் கண்புகைச்சல், கண்சிவப்பு, கண்கூச்சம் இவைகள் தீரும்.

(வேறு)

முத்தக்காசு கற்பூரம் முதிய கடுக்காய் பலகரை நெல்லி
துத்தத் தோடே அஞ்சனக்கல் தோன்றும் நிமிளை தன்னுடனே
கத்திக் கல்லும் வெள்ளிலோத்திரமும் கடிய இரும்புப் பொடியுடனே
சுத்த பீதரோகணி மஞ்சள் தோன்று மதுர மிவையனைத்தும். 196

கோரைக்கிழங்கு, பச்சைக் கற்பூரம், கடுக்காய், பலக்கரை, நெல்லிவற்றல் தோல், துத்தம், அஞ்சனக்கல், நிமிளை, காவிக்கல், வெள்ளிலோத்திரம், இரும்பு, அரப்பொடி, பீதரோகணி, அதிமதுரம் இவையனைத்தும்.

ஆன படியே ஒருநிறையாய் அந்தக் கற்பூ ராதியென்னும்
தானே தண்ணீர் விட்டரைத்துத் தகரா துருண்டை யானபின்பு
ஊன நயன நோய்களெல்லா முற்ற தனப்பால் தன்னிலிட்டால்
மானே நயனப் பிணிதீரும் வகைதா னிதனைப் பாராயே. 197

சமனெடையாய் நிறுத்தெடுத்துக்கொண்டு தண்ணீர் விட்டு அரைத்து மாத்திரை செய்து நிழலில் உலர்த்தித் தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிட நயன வியாதிகள் தீரும்.

(வேறு)

பருகு கற்பூரம் பாதி பங்கர்மட்டில் துருசு ரெண்டுள்
தருக்கை வெள்ளிலோத்திரம் தான்சாறு நிறை யொன்றுகக்
கருகு மஞ்சனக்கல் லொன்று கடல்நுரை நால தாகப்
பெருகிய நந்திச் சாற்றில் பெயர்ந்தரைத் துருண்டை செய்யே. 198

பச்சைக் கற்பூரம் அரைப்பங்கு, துத்தம் இரண்டு பங்கு, துருசு இரண்டு பங்கு வெள்ளி லோத்திரம் ஒரு பங்கு, அஞ்சனக்கல் ஒரு பங்கு, கடல் நுரை நாலு பங்கு இவ்வாறு நிறுத்து எடுத்துக் கொண்டு நந்தியாவட்டை பூச்சாறு விட்டரைத்து மாத்திரை யாகத் திரட்டிக்கொள்வாயாக.

### கோதந்தாதிக் குளிகை

பசுவின்பல் லானைப்பல் குதிரைப் பல்லும்
பண்பான முட்டைத்தோல் ஆமை யோடும்,
வசையறு சந்தனஞ் சங்கு படிகம்துத்தம்
மனோசிலை மஞ்சள் மெழுகு செம்பு தான்தான்
முசுவன்றிச் சமனாக இவைதா மெல்லா
முறுகுபழச் சாற்றினில்மு விரட்டிச் சாமம்
கசிவன்றி யரைத்துருட்டி நிழலு லர்த்திக்
கனிந்தெடுத்துத் தேனில் உரைத்திடுக வென்றார். 199

பசுமாட்டின்பல், ஆனைப்பல் குதிரைப்பல், அடைவைத்த கோழிமுட்டையின் தோல், ஆமையோடு, சந்தனம், சங்கு, படிகம், துத்தம், மனோசிலை, மஞ்சள் மெழுகு, செம்பு, அரப் பொடி இவையெல்லாம் சமனாகச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஆறு சாமம் அரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தேனிலிழைத்துக் கண்ணிலிடுவாயாக.

என்றுவகை செய்த மருந்திடவே நல்ல
வேந்திழையர் பாலில் பற்பரோகம் தீரும்
மன்றஅதைக் கையானி ருரைத்தே யிட்டால்
வலியுடனேய்ச் சதைப்படல மலறி யோடும்
துன்னுவெள்ளைப் படலமொடு சொல்லும் நாகத்
தொல்படல மிவையிரண்டுஞ் சேர்ந்தே யோடும்
குன்றுருவாய் வருங்கபத்தின் குணமுந்தீரும்
கோதந்தாதிக் குளிகை யென்னலாமே. 200

இவ்வாறு செய்த மருந்தைத் தாய்ப்பால் விட்டிழைத்துக் கண்ணிலிட பற்பரோகம் தீரும். கையாந்தகரைச்சாறு விட்டு இழைத்துக் கண்ணிலிட வலியைக் கொடுக்கும் நோய்கள், சதைப் படலம், வெள்ளைப்படலம், நாகப்படலம், கபத்தினால் உண்டாகும் கண் நோய்களும் தீரும்.

### பஞ்சலோகாதி மாத்திரை

எல்லோர் புகழும் இரத்தின மினிய இந்துப் பதிமதுரம்
பல்லோர் படிக்காரம் கற்பூரம் பஞ்ச லோகங் காவிமண்
கல்லோர் துருசு துத்தமுடன் கலைமான் கொம்பு கடல்நுரையும்
வல்லோர் குங்குமம் கோரோசனை மருவுங் கொடுப்பை
வார்த்தரையே. 201

சிவப்பு இரத்தினம், இந்துப்பு, அதிமதுரம், படிக்காரம், பச்சைக் கற்பூரம், பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவைகளை அராவினபொடி, மஞ்சக்காவிக்கல், துருசு, துத்தம், கலைமான் கொம்பு, கடல் நுரை, குங்குமப்பூ, கோரோசனை

இவைகளைச் சமனெடையாய் நிறுத்து எடுத்துக்கொண்டு பொன்னுங்காணிச் சாறுவிட்டரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்துவாயாக.

அரைத்த உருண்டை தனையெடுத்தே அழகாய்த் தேனி லுரைத் திடவே
பெருத்த பில்லம் படலம்போம் பெரிய காசங் குந்தம்போம்
தரித்த நிம்பச் சாற்றிலிடத் தடிக்குங் கண்ணும் தடியாது
பரித்த குருவின் செயலறியப் பஞ்ச லோகப் பரிசிதுவே. 202

இவ்வாறு செய்த மாத்திரையைத் தேன்விட்டு இழைத்துக் கண்ணிலிடப் பில்லம், படலம், காசம், குந்தம் தீரும். எலுமிச்சம் பழச் சாற்றில் இழைத்துக் கண்ணிலிடத் தடிக்கும்படியான நோய் களையுடைய கண்கள் தடியா.

### அந்தாதி மாத்திரை

துத்தம் திப்பிலி கற்பூரம் துலங்குங் கடுக்கா யுடன் பருப்பு
சித்த பீத ரோகணியும் தீர்க்கும் வெள்ளி லோத்திரமும்
புத்தி மிளகு மஞ்சனக்கல் புகழ்சேர் பளிங்கு தலையோடு
நித்தம் பெருகும் ஓரிதழ்வேர் நிகராய்க் கொடுப்பை வார்த் தரையே. 203

துத்தம், அரிசித்திப்பிலி, பச்சைக் கற்பூரம், கடுக்காய்ப்பருப்பு, பீதரோகணி, வெள்ளிலோத்திரம், மிளகு, அஞ்சனக்கல், அப்பி ரேகம், மண்டையோடு, ஓரிதழ்த் தாமரைவேர் இந்தப் பதினொரு வகைச் சரக்குகளையும் சமனெடையாக நிறுத்துப்போட்டுப் பொன்னுங்காணிச் சாறு விட்டரைப்பாயாக.

### அந்தாதி மாத்திரை (வேறு)

அரைத்திரு நாலுசாம மானபின் நிழலு லர்த்தி
உரைத்திடப் படலம் பில்லம் முதிரும்பூ தேனில்தீரும்
இரைத்தெழுந் திமிரந்தீரு மிசைந்த உப்பிலியின் சாற்றில்
விரைத்திடக் கடிதுநீங்கு மேவுமந்தாதி தானே. 204

எட்டுச் சாமம் அரைத்த பிறகு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தித் தேன்விட்டு இழைத்துக் கண்ணிலிடப் படலம், பில்லம், நாட்சென்ற பூ இவைகள் தீரும். உப்பிலிச்சாற்றில் இழைத்துக் கண்ணிலிடத் திமிரம் தீரும்.

### பூவந்தாதி மாத்திரை

மிஞ்சுநீர் கடப்பம் பூவும் வெள்ளி லோத்திரமு மிக்க
செஞ்சொல்லார் மழலை துத்தம் தீத்தெறி பீத ரோகணி
கஞ்சமா மதுரம் கற்பூரம் கனதலை யோட தெல்லாம்
வஞ்சமாய்க் கேட்க வொவ்வோர் கழஞ்செடை நிறுத்துக் கூட்டே.

கடப்பமலர், வெள்ளிலோத்திரம், துத்தம், பீதரோகணி, அதிமதுரம், பச்சைக் கற்பூரம், தலேயோடு இந்த ஏழு சரக்குகளையும் வகைக்கு ஒரு கழஞ்சுவீதம் நிறுத்துக்கொண்டு,

வகைப்படி மருந்தை யெல்லா மருவுநற் சிறுதேன் விட்டுத்
திகைப்பட நாலு சாமந் திருந்தவே யரைத்துக் கூட்டிச்
சுகத்தினில் பதனி லிட்டால் சுக்கில முதிரிப் பூக்கள்
தகைப்படக் குந்தந் தீர்க்கும் தவிர்பூவந் தாதி யென்றே. 206

மருந்தை எல்லாம் நல்ல தேன்விட்டு நான்கு சாமம் அரைத்து வைத்துக்கொண்டு கண்ணிலிடச் சுக்கில நோய்களும், சிறிய சிதறிய பூக்களும், குந்தமும் தீரும்.

## அஞ்சனுதி மாத்திரை

எங்கும் பெரிய திரிகடுகு இயல்வா லுளுவை புங்கம்விரை
தங்கும் திரிபலை விழலரிசி தன்னிற் பவளம் வசம்புசெம்பு
பொங்கும் பளிங்கோ டஞ்சனக்கல் புகழுஞ் சுக்கான் கல்துத்தம்
தங்குஞ் சமூலம் சிறுகீரைச் சாற்றிலரைத்தே யுருண்டை செய்யே.

சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, வாலுழுவை, புங்கம்வித்து, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல்தோல், விழலரிசி, பவளம், வசம்பு, தாம்பிர அரப்பொடி, பளிங்கு, அஞ்சனக்கல், சுக்கான்கல், துத்தம் இவைகளைச் சமனெடையாய் நிறுத்தி எடுத்துக்கொண்டு சிறுகீரைச் சமூலத்தின் சாறு விட்டு அரைத்து மாத்திரையாகத் திரட்டிக் கொள்வாயாக.

உரைத்திதைத் தனப்பால் தன்னில் உகந்துநீ ரிடுவீ ராகில்
மறைத்திடும் பித்த காசம் வாங்கிடும் புகைச்சல் நீங்கும்
கரைத்திடும் விழிக னப்பை கசிந்தநீர் பீளை மாறும்
தீரைத்திவை நயன ரோகம் தீர்ந்திடும் உண்மை தானே. 208

இந்த மாத்திரையைத் தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணில் இடப் பித்தகாசம், புகைச்சல், விழிகனம், நீர்வடிதல், பீளை கட்டுதல் ஆகியவை தீரும்.

## கபாலாதி மாத்திரை

அலேக்குந் தலேயோ டதுகழஞ்சு அதிமதுரம் பீத ரோகணியும்
மலேக்குந் துத்தம் சங்கிவைதான் மற்றுந்துருசு வெண்கலத்தூள்
இலேக்கு மோரொன் றிருகழஞ்சு இன்னஞ் சொல்வேன் வெட்பூலா
நிலேக்கும் ஓரிலேத் தாமரைவேர் நிசமாய்க் கழஞ்சு நாலாமே. 209

தலேயோடு ஒரு கழஞ்சு, அதிமதுரம், பீதரோகணி, துத்தம், சங்கு, துருசு, வெண்கலத்தூள் இவைகள் வகையொன்றுக் ந

இரண்டு கழஞ்சு, வெட்பூலா வேர், ஓரிதழ்த் தாமரை வேர் இவைகள் வகையொன்றுக்கு நான்கு கழஞ்சு நிறுத்தெடுத்துக் கொண்டு,

புலைக்கும் புளியிலை சாறுதன்னால் பொருந்த அரைத்து உருண்டை செய்து
மலைக்கும் தனத்தாள் பாலிலிட வளரும் படலம் பூகரையும்,
துலைக்கு மாங்கிஷ முளைகழலும் தோன்றிய வேதனை வீக்கம்போம்
இலைக்கும் நோய்கள் மாறிடுமென் றெங்கள் பெருமா னுரைத்ததுவே. 210

புளியிலைச் சாறுவிட்டரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிடப் படலம் பூ ஆகியவை தீரும். மாமிச முளைகள், அதனால் உண்டாகும் வேதனைகள், வீக்கம் இவைகள் தீரும்.

### கபாலாதி மாத்திரை (வேறு)

சிறிய பாலன் தலையோடும் சேர்ந்த துத்தம் அதிமதுரம்
திரிய கடுகு கடல்நுரையும் சேர வோரொன் றிருகழஞ்சு
அரிய நிம்பச் சாற்றரைத்து அறிந்து கண்ணில் விடுவீரேல்
பரியும் காசம் பூப்பில்லம் படலம் போகும் கபாலாதி. 211

சிறு குழந்தையின் தலையோடு, துத்தம், அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடல்நுரை இவைகள் ஒவ்வொன்றும் தனித் தனியே இரண்டு கழஞ்சு நிறுத்தெடுத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சமயோசித அனுபானங்களில் இழைத்துக் கண்ணிலிடக் காசம், பூ, பில்லம், படலம் ஆகியவை தீரும்.

### கபாலாதி பச்சை மாத்திரை

சேர்ந்த நற்றுருசு நாலு செய்துத்த மெட்ட தாகும்
சார்ந்த சீனக்கார மிரண்டு தலையினோ டொன்ப தாகும்
போர்ந்த ஓரிதழ்த் தாமரையி னிரண்டு புகழ் தேசிச் சாற்றில்
ஆய்ந்தரை பச்சை தன்னை அயற்கண்ணில் நோய்தான் போமே.

துருசு நான்கு, துத்தம் எட்டு, சீனக்காரம் இரண்டு, தலையோடு ஒன்பது, ஓரிதழ்த் தாமரையிலை இரண்டு இந்தக் கணக்குப்படி சரக்குகளை எடுத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சமயோசித துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிட கண் வியாதிகள் தீரும்.

### கபாலாதி மாத்திரை

மாண்டார் தலையோ டொருநாலும் மண்ணிற் பிறந்த கலங்கொம்பு
பூண்டார் துத்தம் ஒருநாலும் புதிய சீனக் காரமுடன்
நீண்டார் நிம்பச் சாறுதனில் நேகவரைத்தே யுருண்டை செய்து
தூண்டார் நொந்த கண்ணிலிடத் துய்ய படலம் பூப்போமே. 213

தலையோடு நான்கு பங்கு, கலைமான் கொம்பு ஒரு பங்கு, துத்தம் நான்கு பங்கு, சீனக்காரம் ஒரு பங்கு இந்தக் கணக்குப்படி நிறுத்தெடுத்துக்கொண்டு எலுமிச்சம்பழச் சாறு விட்டு நேக அரைத்து மாத்திரையாகத் திரட்டிவைத்துக்கொண்டு சமயோசித துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிட, நொந்த கண்கள், படலம், பூ இவைகள் தீரும்.

### கனத்த தாம்பிராதி மாத்திரை

துத்தந் துருசு வெண்கலத்தூள் துலங்கும் செம்பு திரிகடுகு
சுத்த சூடன் கற்பூரம் சொர்ண மெழுகு கடுகுமஞ்சள்
நத்த நன்னு கரவண்டு கடனுரை முட்டை இந்துப்பும்
சுத்தவெண் சாரடை காக்கணம் செம்பருத்திப் பிஞ்சையும்
சேரே. 214

துத்தம், துருசு, வெண்கல அரப்பொடி தாம்பிர அரப்பொடி, சுக்கு, மிளகு, திப்பிலி, சூடன், பச்சைக் கற்பூரம், பொன்மெழுகு, பீதரோகணி, நாகரவண்டு, கடல்நுரை, அடை வைத்த கோழி முட்டை ஓடு, இந்துப்பு, வெள்ளைச் சாரணைவேர், வெள்ளைக் காக்கண வேர், செம்பருத்திப் பிஞ்சு இவைகளைச் சமனெடையாகச் சேர்த்து,

சேர்த்துச்செங் கழுநீர் மூலம் சிறுகையாந் தகரைச் சாற்றில்
காத்தரை நாலு சாமம் கனத்த தாம்பிராதி தன்னை
மாத்திரை விதமாய்ப் பண்ணி மாதர்தம் பாலி லிட்டால்
நேத்திர ரோக மெல்லாம் நிலைகெட்டு விட்டுப் போமே. 215

செங்கழுநீர்க் கிழங்குச் சாற்றிலும், சிறுகையாந்தகரைச் சாற்றிலும் நான்கு சாமம் அரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப் பாலில் இழைத்துக் கண்ணிலிட கண் நோய்கள் யாவும் தீரும்.

### சங்காதி மாத்திரை

பலகரை சங்கு பீங்கான் படிகக்கல் குருந்து துத்தம்
அலைகடல் நுரையோ டிந்து அரிதகி முட்டை யோடு
சலசிப்பி பளிங்கு தேத்தான் வித்துடன் துருசு கூட
நிலவெள்ளை சாரணைவேர் நீயரை புங்கம் பாலில் 216

பலகரை, சங்கு, பீங்கான், படிகக்கல், குருந்தக்கல், துத்தம், கடல் நுரை, இந்துப்பு, கடுக்காய், அடைவைத்த கோழிமுட்டை ஒடு, குளத்துக் கிளிஞ்சல், அப்பிரேகம், தேற்றான்கொட்டை, துருசு, சுக்கான்கல், வெள்ளைச் சாரணையின் வேர் இவைகளைச் சம எடையாக நிறுத்தெடுத்துக்கொண்டு புங்கம் பாலை விட்டு,

அரைத்திரு நாலு சாமம் ஆனசங் காதி தன்னை
உரைத்திதை யனுபானத்தி லுவந்துநீரிடு வீராகில்
மறைத்திடும் படலம் குந்தம் வளர்ந்திடு மிதணைப்பூக்கள்
இரைத்தெழுந் தோடுமென்றே இறையவ ருரைத்தவாறே. 217

எட்டுச் சாமம் அரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சமயோசிதமான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடப் படல வகைகள், குந்தம், பூக்கள் முதலிய நோய்கள் தீரும்.

### அரிதகி மாத்திரை

சேர்த்திடும் சமுத்திராப்பழம் திரள் அதிமதுரம் ஏலம்
தேற்றிடும் வித்துரோணி தெசாவரக் கடுக்காய் துத்தம்
மாற்றிடுந் திரிகடுகு மாசிக்காய் சந்தனத் தூள்
தோற்றிடுங் கலைமான்கொம்பு தொடுத்தரை நிம்பஞ்சாற்றில்

சமுத்திராப்பழம், அதிமதுரம், ஏலரிசி, தேற்றான்கொட்டை, பீதரோகணி, தேசாவரம், கடுக்காய், துத்தம், சுக்கு, மிளகு, திப்பிலி, மாசிக்காய், சந்தனத்தூள், கலைமான் கொம்பு இவைகளைச் சமனெடையாய் நிறுத்தெடுத்துக்கொண்டு எலுமிச்சம்பழச் சாற்றில்,

அரைத்திதை நாலு சாமம் அழகதா யுருண்டைசெய்து
உரைத்திட முலைப்பால் தன்னில் உள்புரை காச மந்தம்
கரைத்திடுஞ் சிவப்பும் செவ்வேர் கசிந்தநீ ரிவைகண் மாறும்
இரைத்தெழுந்தோடும் பார்பார் இயலரி தகியின் வாறே. 219

நான்கு சாமம் அரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணில் இட உட்புரைகள், காசத்தினுலுண்டாகும் மந்தம், சிவப்பு, செவ்வேர், நீர்வடிதல் இவைகள் தீரும்.

### சிங்காதி மாத்திரை

அத்திய துருசுதுத்தம் அரிதாரங் காசுக்கட்டி
மெத்திய வெள்ளிலோத்திரம் மிருதார்சிங் கோடுநாவி
பத்திய பச்சைகுங்கிலியம் பகர்தரு கடுக்காய்கூட
முத்திய புங்கம் பாலில் முனைந்தரை நாலுசாமம். 220

துருசு, துத்தம், அரிதாரம், காசுக்கட்டி, வெள்ளிலோத்திரம், மிருதார்சிங்கி, நாவி, பங்காளப்பச்சை, வெள்ளைக் குங்கிலியம், கடுக்காய் இவைகளைப் புங்கம்பால் விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும்.

அரைத்திதை உருண்டைசெய்து அழகதாய் நிழலுலர்த்தி
உரைத்திட முலைப்பால் தன்னி லுச்சிகண் குவளைகுத்தி
நிரைத்தநீர் சீயுமாறி நீங்கிடும் வலியும் வீக்கம்
இரைத்தெழுந் தோடுமென்றே இறையவ ருரைத்தவாறே. 221

அரைத்தபின் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிட, தலையின் உச்சி, கண், குவளை இவைகளில் குத்தலுண்டாகி நீர் நிரம்பி அந் நீர் நாட்சென்றபின் சீழாக மாறி வலி, வீக்கம் இவைகளைக் கொடுக்கும் நோயானது தீரும்.

### சிரவத்தி மாத்திரை

இவத்தில்முத் தெருக்கஞ் செவியிதழ்க் கஞ்ச மீயம் நாகம்
தவத்திற் குங்குமம் இரும்பு தாம்பிரம் சங்கு பீங்கான்
அவத்திற்பொன் துருசு துத்தம் நல்லதி மதுரம் வெள்ளி
தவத்தினல் சாரணைவேர் தான் கழஞ்சியல் பாய்க் கூட்டே. 222

முத்தெருக்கஞ் செவியிலை, வெண்கலம், காரீயம், நாகம், குங்குமப்பூ, இரும்பு, தாம்பிரம், சங்கு, பீங்கான், பொன், துருசு, துத்தம், அதிமதுரம், வெள்ளி, வெள்ளைச்சாரணை வேர் இவைகளில் பொன், வெள்ளி இவைகளைத் தவிர மற்றப் பொருள்களை வகைக்கு ஒரு கழஞ்சு எடை சேர்த்துக் கொள்ளவேண்டும். வெண்கலம் முதலிய உலோக வகைகளை எல்லாம் அரப்பொடியாக அராவிக் கொள்ளவேண்டும்.

கூட்டரைக் கழஞ்சு வெள்ளி கூறிடும் கனகம் காலும்
ஈட்டமாய்ப் புங்கு கையான் இயல்பிலா நிம்பஞ் சாற்றில்
வாட்டமிலொரு சாமந்தான் வளம்பெற அரைத்துப் பின்னைப்
பாட்டவிழ் உருளை சேர்ந்து பவளம்போ லுருட்டிக் கொள்ளே.

வெள்ளி அரைக் கழஞ்சு, பொன் கால் கழஞ்சாகச் சேர்த்துக் கொண்டு புங்கம் பாலில் ஒரு சாமமும், கையாந்தகரைச் சாற்றில் ஒரு சாமமும், எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு சாமமுமாக அரைத்து மாத்திரையாகத் திரட்டிக் கொள்ளவேண்டும்.

உருட்டிநீ நிழலு லர்த்தாய் உலர்த்தியே நிறையோ டிட்டால்
மருட்டிடும் புகைச்சல் தீரும் வாத காசங் கனத்தால்
இருட்டெல்லா மாலை தீரும் இசைந்தெழு பற்ப ரோகம்
திரட்டிவை யெல்லாந் தீர்க்கும் சிரவத்தி யிதன் பேரென்றே. 224

திரட்டிய மாத்திரையை நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சமயோசிதமான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணில் தீட்டி வரப் புகைச்சல், வாதகாசம், அந்திமாலை, பற்பநோய் ஆகியவை தீரும்.

### நவலோக இரத்திஞதி மாத்திரை

நந்தான சங்குவளை வெண்கலப் பொடி மிளகு
நாய்ப்பல் திப்பிலியுடனே
நற்கடுவசம்பு நெல்லிமுள்ளி யுடன்தாணியும்
நல்லேலை மிலவங்கமும்
வந்தாரை யதிமதுரம் வெருகுமுடி தன்னுடன்
மரமஞ்சள் நாகமலரும்
மணம் வீசும் சந்தனம் மாதுளை வேரிதன்
வலித்தோலொடு கந்தமும்
பந்தாடுமாதர் கைப்பவளமும் வெள்ளியும்
பசும்பொன்னுடன் காணிவேர்
பரவுகா ரீயமொடு செம்பிரும் பின்பொடி
பாற்கட னுரையும் செப்பவே
பிந்தாத கொந்தாளை பீதரோ கணிமுத்து
புலிப்பல் அடப்பம் விரையும்
பேசாத ஆமையோடு காக்கணஞ் சாரடை
பெருங்கோழி முட்டைக் கூடும்
சந்தாரும் நந்தியா வட்டமலர் அலரிவேர்
தருசிறு கீரை வேரும்
தா துணந் துளசியுந் துத்தமு மாகத்
தனித்தனி கழஞ்சு கொண்டே
சிந்தாமல் நற்சா றெலுமிச்சை நெல்லிபுளி
செய்ய கையாந்த கரையும்
தேனெழுகு நற்கோவை யின்னீ ருழக்கு
தினமுமொரு சாற்ற ரைத்தே
யுந்தாம லொருபதம் பார்த்தரைத் துண்டைசெய்
தொருநிழற் படஉ லர்த்தி
ஓங்குரண சுக்கிரன் கண்ணில்வரு வியாதிகள்
திமிரொளிவு நீல காசம்
சந்தார நீர்ப்பெருகு மந்தார காசமுஞ்
சதைப்படலம் விழிவே தனையும்
சாறுபா லதனிலிடத் தீரும்நவ ரத்திஞதி
சங்கர ருரைத்த படியே. 225

சங்கு, வெண்கலப்பொடி, மிளகு, நாய்ப்பல், அரிசித்திப்பிலி, வசம்பு, நெல்லி முள்ளித்தோல், தான்றிக்காய்த்தோல், ஏலம், கிராம்பு, அதிமதுரம், வெருகன்கிழங்கு, மரமஞ்சள், சிறுநாகப்பூ, சந்தனம், மாதுளை வேரின் தோல், பவளம், வெள்ளி அரப்பொடி, தங்க அரப்பொடி, பொன்னுங்காணி வேர், காரீய அரப்பொடி, தாம்பிர அரப்பொடி, இரும்பு அரப்பொடி, கடலுரை சமுத்திராப் பழம், பீதரோகணி, முத்து, புலிப்பல், அடப்பம்விதை, ஆமை ஓடு, வெண்காக்கணவேர், வெள்ளைச்சாரணை வேர், அடைவைத்த கோழிமுட்டை ஓடு, நந்தியாவட்ட மலர், அலரி வேர், சிறுகீரை வேர், துளசிவேர், துத்தம் வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் நிறுத்தெடுத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, புளியிலைச்சாறு, கையாந்தகரைச் சாறு, கோவையிலைச் சாறு இவைகளை வகைக்கு அரைக்கால்படி வீதம் விட்டுத் தினம் ஒரு சாறாக விட்டுப் பதமாக அரைத்து,மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, பழச்சாறு, தாய்ப்பால் இன்னும் சமயத்திற்கு ஏற்றதான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணில் இட ரண சுக்கிரன், திமிரம், நீலகாசம், கண்ணில் நீர் வடிதல், மந்தாரகாசம், சதைப்படலம், கண் வேதனைகள் முதலியன தீரும்.

### கனகதாம்பிராதி மாத்திரை

ஆணியோரிதழும் குடோரி வெண்புலியும் ஐயிருவராக ஞேடதனில்
அரசு கங்காளன் கருமணல் சோகி அதனுடன் முத்தமும் பீங்கான்
பேணிய பிரம கபாலமும் நிரைகேள் பின்ஞெருவராகனு யெடுத்துப்
பிரியமாயிடித்து முசுக்கையும் கையான் மின்பழச் சாற்றினல் அரைத்து
வாணியாஞ் சிலையின் மருந்தினை வழித்து மதுரையின் கலந்தனிலுருட்டி
வரிசையாய் நிழலில் உலர்த்திய கயிற்றை வாங்கிமின் ரசந்
தன்னுலெழுதில்
காணுமுன் பில்லம் பிரிச்சலும் எரிச்சல் கடுமையாம் பூப்பருமுளையும்
கலங்கியே மயங்கிக் கருங்கடல் புகுமே, கனக தாம்பிராதியின்
கயிறே. 226

### குங்கும தாம்பிராதி மாத்திரை

குங்குமம் மல்லிவிதை ஏலமுடன் மதுரமும் கூறிலவங்கப் பட்டையும்
கோட்டமுடன் செண்பகம் காய்பத்திரி ரோசனை கூர்சீரகம் லவங்கம்
பங்கு சமனுகவே பதமாயிடித்ததைப் பழச்சாற்றினு லரைத்துப்
பதமுடன் கயிறு செய்து நிழலுலர்த்தாகவே பானமதினு லெழுதிடில்
அங்குவரு நயனமதில் அமரமும் பில்லமும் ஆனதோர் பற்பரோகம்
அடங்காத படலமும் புகைச்சலும் பூமுதலனேக ரோகங்களெல்லாம்
தங்காம லோடுமது தவருமலுண்மையாய்த் தான் குங்குமாதி யெனவே
தரணியிற் பண்டிதர்களுக்கா வகத்தியர் தயவுடனுரைத்ததிதுவே. 227

குங்குமப்பூ, கொத்துமல்லி விதை, ஏலரிசி, அதிமதுரம், இலவங்கப்பட்டை, கோட்டம், செண்பகப்பூ, சாதிக்காய், சாதிப் பத்திரி, கோரோசனை, சீரகம், இலவங்கம் இவைகளைச் சம எடையாய் எடுத்து இடித்துக்கொண்டு, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு, கல்வம் என்ற குழியம்மியில் அரைத்து மாத்திரை செய்து, நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணில் தீட்ட அமரம், பில்லம், பற்பரோகம், படலம், கண் புகைச்சல், பூ முதலான நோய்கள் தீரும். இம் மருந்து அகத்தியர் தயவாக மருத்துவர்களுக்காக உரைத்ததாகும்.

### சங்காதி மாத்திரை

கடுக்காய் திப்பிலி வெங்காரம் கடிய கடல்நுரை லோத்திரமும்
தொடுத்தார் துத்தம் ஓர்கழஞ்சு துருசு சங்கு பதின்கழஞ்சு
தடுத்தார் முருங்கைப் பூச்சாற்றில் சரியாய் மூன்று நாளரைத்துத்
தொடுத்தாற் காசம் பூப்படலம் சுகமே யாம்சங் காதியிதே. 228

கடுக்காய்த்தோல், அரிசித் திப்பிலி, எண்ணெய் வெங்காரம், கடல்நுரை, வெள்ளிலோத்திரம், துத்தம் இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு; துருசு, சங்கு இவைகள் வகைக்குப் பத்துக் கழஞ்சு நிறுத்து எடுத்துக்கொண்டு முருங்கைப்பூச் சாறு விட்டு மூன்று நாள் அரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சமயோசிதமான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிட காசம், பூ, படலம் முதலியவை தீரும்.

### சங்காதி மாத்திரை (வேறு)

சங்கு துருசு தலையோடும் சமனுய் நாலு கழஞ்சுதனில்
பொங்கு துத்த மிருகழஞ்சு ஓரிதழ் தாமரை வேர் பிடியாம்
தங்கும் பழச்சாறு தனிலரைத்துத் தாம்பி ரத்திற் கயிறுசெய்து
பொங்கு தனப்பால் தன்னிலிடப் போகுநோய் தொண்ணூற்ருறும்.

சங்கு, துருசு, தலையோடு இவை வகைக்கு நான்கு கழஞ்சு, துத்தம் இரண்டு கழஞ்சு, ஓரிதழ்த் தாமரை வேர் ஒரு பிடி இவைகளைச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு தாய்ப் பாலில் இழைத்துத் தாம்பிரக்கோலில் மருந்தை எடுத்துக் கண்ணில் இடத் தொண்ணூற்ருறு நோய்களும் தீரும்.

### இரத்தினுதி மாத்திரை

நற்பருதி யொத்த ஒளிபெற்ற நவரத்தினமும்
நவமான பஞ்ச லோகம்
நரியெருமை பரிகழுதை நாய்புலி வண்டினெடு
நற்கரடி பற்க ளிவையும்

பொற்பரவு தாரம் மஞ்சளதிமதுர மேலமும்
பூநாக மாமையோடு
புங்கம் வித்தும் கலங்கொம்பு துத்தம்வளை
புணரிநுரை காக அண்டம்
சிற்பெறவே யிவையெலாந் தன்னிலொக் கக்கூட்டித்
திரிபலை தனிச்சாற்றிலே
தினமே யரைத்துருண்டை சிக்கென வுருட்டியே
சீராக நிழலுலர்த்தி
இற்பரவு மாதர்தனப் பால்பனை நறுக்கியே
இதமான சாறுதேன்நெய்
இவைதனி லுரைத்தெழுத நயனநோய் தீர்ந்துவிடும்
இரத்தினுதி யாவ திதுவே. 230

**நவரத்தினம், பஞ்சலோகம், நரி, எருமை, குதிரை, கழுதை, நாய், புலி, கரடி இவற்றின் பல், வண்டின் ஓடு, அரிதாரம், மரமஞ்சள், அதிமதுரம், ஏலம், பூநாகம், ஆமையோடு, புங்கம் விதை, கலைமான் கொம்பு, துத்தம், சங்கு, கடல்நுரை, காக்கை முட்டைத்தோல் இவை எல்லாம் சமன் எடையாகக் கூட்டித் திரிபலைக் குடிநீர் விட்டு ஏழு நாள் அரைத்து மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பால், பனைமட்டைச் சாறு, தேன், நெய் இவற்றில் இழைத்துக் கண்ணிலிட நயன நோய்கள் தீரும்.**

### இரத்தினுதி மாத்திரை (வேறு)

நயனரோகங் கட்கெல்லாம் நன்றும் ரெத்தி
னுதியென்னும் குளிகை மருந்து கேளாய்
பயனுடன் பவள முத்து பச்சைநீலம்
பாங்கான வைரம் வைடூரியத்தோ
டியல் புஷ்பராகம் கோமேதகம் மாணிக்கம்
இவற்றுடனே பொன்வெள்ளி திரிபலாதி
செயமுடைய செம்பு ரோகணி அஞ்சனக்கல்லும்
சிறுகிரை பொன்னுங்காணி சேர்ந்த தெல்லாம். 231

**கண்வியாதிகள் எல்லாவற்றிற்கும் உபயோகப் படக்கூடிய இரத்தினுதி என்னும் மாத்திரை சொல்லக் கேட்பாயாக. பவளம், முத்து, பச்சை, நீலம், வைரம், வைடூரியம், புஷ்பராகம், கோமேதகம், மாணிக்கம் ஆகிய நவ இரத்தினங்களும் அவற்றோடு பொன், வெள்ளி, திரிபலாதி, செம்பு, பீதரோகணி, அஞ்சனக்கல்.**

ஏலமே துருசு துத்தம் ஏத்திய தேத்தாங் கொட்டை
போலுமே யிரும்பு கஞ்சம் பொடியிவை நிறைக ளொன்றாய்
சாலவே புளியம் பூவின் சாறுவார்த் தரைத்த உருண்டை
மேலுமே லுழன்றோர் கண்ணில் வியாதியொன் றில்லை தானே. 232

ஏலம், துருசு, துத்தம், தேத்தாங்கொட்டை, இரும்பு, வெண் கலம் இவற்றின் அரப்பொடி இவற்றைச் சமன் எடையாய் நிறுத்து எடுத்துக்கொண்டு புளியம் பூச்சாறு விட்டு அரைத்து மாத்திரை களாகத் திரட்டி நிழலில் உலர்த்தி சமயோசிதமான துணைமருந்து களில் இழைத்துக் கண்ணிலிடத் தீராத நாட்சென்ற கண் வியாதிகள் தீரும்.

## இலகு இரத்திஞதி மாத்திரை

துத்தமே துருசு நெல்லி துவர்கடுக்காய்கற் பூரம்
சித்தமே பொன்னுங்காணி சிறுகிரை பூலா வேரும்
வித்தகப் புளியம் பூவும் வெண்டலை யோடு மிக்க
முத்தொடு பவளம் நாகம் இரும்புபொன் செம்பு வெள்ளி
இத்தனை யெல்லாம் பாகம் எலுமிச்சஞ் சாற்ற ரைத்து
உத்தம தனப்பால் தன்னில் உரைத்திரு போது மிட்டால்
பித்தமே படலம் காசம் பில்லமே புகைச்சல் தீரும்
இத்தலம் தன்னைக் காக்கும் இலகுரெத்தி ஞதி தானே. 233

துத்தம், துருசு, நெல்லிவற்றல், கடுக்காய்த் தோல், பச்சைக் கற்பூரம், பொன்னுங்காணி, சிறுகீரை, பூலாவேர், புளியம்பூ, தலை யோடு, முத்து, பவளம், துத்தநாகம், இரும்பு, பொன், செம்பு, வெள்ளி இவை எல்லாவற்றையும் சமன் எடையாய் நிறுத் தெடுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு அரைத்து மாத் திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப் பாலில் இழைத்துக் கண்ணில் காலையிலும் மாலையிலும் இட பித்த ரோகங்கள், படல வகைகள், காச வகைகள், பில்ல வகைகள், கண் புகைச்சல் ஆகிய இவைகள் தீரும்.

## மகா இரத்திஞதி மாத்திரை

துத்த மதிமதுரம் அரிதாரம் வெங்காரமொடு துல்லிய சீனக்காரமும்
துருசொடு பீதரோகணி சவுக்காரமும் துய்ய திப்பிலி சுக்குடன்
அத்தவிழ லரிசியும் நிமிளையும் உப்புமண் நல்லதேத்தான் விரையுடன்
அரவிந்தம் இந்துப்புடன் மகிழவிரை நல்லதாங் காஞ்சியின் விரையுடன்
சுத்தமுள பூவந்தி புங்கம்விரைதன் னுடன்சொல்லெலு மிச்சம் விரையும்
தோன்றிய அடப்பவிரை கொந்தளங் காயினெடுசிறிய வாமணக்கின் வித்தும்
வெள்ளிவிலை பொன்காணிவேர் சிறுகீரைவேர் வெள்காக்கணம் குருஞ்சில்
வேருடன் துளசியும் கற்றுழை யதனுடன் வெள்ளைச் சாரடையின் வேரும்
மற்றுமொரு நந்தியாவட்டம்வேர் பசளைவேர் வளர்தூதுளை வேருடன்
வந்த பூலாவின்வேர் தாதுமாதளையின்வேர் மாஞ்சில் சிறுகாசாவுடன்

சித்தமுள சீதேவி செங்கழுநீர் வேருடன் செவ்வல்லியின் கிழங்கும்
செவ்வையாம் ஓரிதழ்த் தாமரை வேருடன் சிறந்த நன்னரிவேரும்
அத்தியின் பற்குளம் பாவினது பல்லுமே ஆன நரிப்பற் குளம்பும்
அழகான நாய்ப்பல்லும் அப்பில் முதலைப்பல்லும் அடுக்காகவே யெடுத்து
அந்தத்தில் வருமுசல் எலும்புடன் நாகரவண்டோடு தருகருடன் முட்டை
கூடதவளைச் சங்குவளையோடு தலையோடு இரவறிஞ்சான் நெஞ்சு எலும்பு முட்டை
தானமது நற்புலிநகம் வெருகின்முடி கௌதாரி கிளிஞ்சலி னெலும் புடனே
மான்கொம் பிரும்பு வெண்கலஞ்செம்பு கருவெள்ளி மதித்த காரீய முத்து
மாணிக்கமொடு பச்சை கோமேதகம் பவளமானதோர் முழுநீலமும்
முந்தவை டூரியம் புஷ்பராகம் வைரமுற்பட்ட கற்பூரமும்
பத்திசெறி மரகதம் பருமப் பளிங்குடன் பசும்பொன்முருங்கை நட்புயர்
தாளிமலர் நந்தியா வட்டமலர் புளியின்மலர் பரியின்மலர் தாழை மலரும்
இத்தனையும் ஒவ்வொன்று தற்சமனதாகவே இவைதம்மி லொத்த நிறையாம்
இவற்றுடன் சாறுவார்த்தரைக்கும் விதந்தனையா னுரைக்கக் கேண்மினே
தெத்தகை யாந்தகரை பொடுதலை செருப்படை யோடுமாதுளை நெல்லிக்காய்
உயர்பனையின் மட்டை நன்னுயுருவி தேன் எண்ணெய் உறுமெலுமிச்சம் பழம்
புத்தியுடனே நல்ல இளநீர்க ளிவையெல்லாம் போதவே கொண்டு வந்து
பொய்யாம லொவ்வொன்று சாறுழக்காகவே புகழ்வேறு மருந்து தனையும்
நித்தமும் ஒருழக்குச் சாறுவார்த்ததை நேகவே தானரைத்து
நிரையுடன் கயிறுசெய் நிழலுலர்த்தாகவே நேர்ந்தனு பானமிடுக
நேத்திரந் தன்னிலெழு தொண்ணூற்றுறு நோய் நிலைகெட பறக்குமது
மகாரெத்தினுதி யெனும் நூலோர் வகுத்திட்ட ரெத்தினுதி குளிகை யிதுவே. 234

**துத்தம், அதிமதுரம், அரிதாரம், எண்ணெய்வெங்காரம், சீனக்காரம், துருசு, பீதரோகணி நாட்டுசவுக்காரம், அரிசித்திப்பிலி, சுக்கு, விழலரிசி, நிமிளை, உவர்மண், தேத்தான்கொட்டை, தாமரை, இந்துப்பு, மகிழவிதை, காஞ்சிவிதை, பூவந்திகொட்டை, புங்கம்விதை, எலுமிச்சம்பழவிதை, அடப்பம்விதை, கொந்தளங்காய், சிற்ருமணக்கின்விதை, வெள்ளி, பொன், பொன்னுங்காணி வேர், சிறுகீரைவேர், வெள்ளைக்காக்கணவேர், குறிஞ்சிவேர், துளசி**

வேர், சோற்றுக் கற்றாழைவேர், வெள்ளைச்சாரணைவேர், நந்தியா வட்டம்வேர், பசளைவேர், தூதுளைவேர், பூலாவேர், மாதுளைவேர், மாஞ்சில், சிறுகாசாவேர், சீதேவி செங்கழுநீர்வேர், செவ்வல்லிக் கிழங்கு, ஓரிதழ்த் தாமரைவேர், நன்னாரிவேர், யானைப்பல், யானை நகம், பசுவின்பல், நரிப்பல், நாய்ப்பல். முதலைப்பல்,முசல்எலும்பு, நாகர வண்டினோடு, கருடன் முட்டை, சொரிச்சங்கு, சங்கு, தலை யோடு, சேவல்நெஞ்செலும்பு, அடைவைத்த கோழி முட்டை யோடு, புலிநகம், வெருகின்முடி, கௌதாரி எலும்பு, கிளிஞ்சல், மான்கொம்பு, இரும்பு, வெண்கலம், செம்பு, கருக்கன்வெள்ளி, காரீயம், முத்து,மாணிக்கம், பச்சை, கோமேதகம், பவளம், நீலம், வைடூரியம், புட்பராகம், வைரம், பச்சைக்கற்பூரம், மரகதம், பளிங்கு, பொன், முருங்கைப்பூ, தாளிப் பூ, நந்தியாவட்டப்பூ, புளியம்பூ, பரியின்மலர், தாழம்பூ. இத்தனையும், சமன் எடையாக எடுத்துக்கொண்டு கையாந்தகரை, பொடுதலை, செருப்படை, புளிப்பு மாதுளம்பழம், நெல்லிக்காய், பனைமட்டை, நாயுருவி இவற்றின் சாறு தேன், எண்ணெய், எலுமிச்சம்பழச்சாறு, இளநீர், இவைகள் ஒவ்வொன்றிலும் கால்படி சாறுவிட்டு தனித்தனியாக நேக அரைத்து மாத்திரையரகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சமயோசிதமான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடத் தொண்ணூற்றாறு நோய்களும் தீரும்.

### மகா இரத்தினாதி மாத்திரை

காந்தமுடன் பலகறை கிராம்புடன் புங்கம் விதை கனமாசிசுருவரியுடன்
காசினியில் செங்கழுநீர் சீனக்காரமும் கனமுத்து வெள்ளி பீங்கான்
பாந்தமுடன் யானைக்கலங் கொம்பு ஆமையும் பருமிளகு சுக்குபவளம்
பார் சமுத்திராப்பழம் சீரகம் வகையொன்று பலங்காலதாய் எடுத்து
வாந்தமுடன் திப்பிலி மிளகு துத்தம் பீதரோகணி துருசு அயமும்
வளமான தாம்பரம் வெண்கலம் பித்தளை வளமுட னுருக்கு முதலாய்
அந்தமுடன் பலகரை ஆனைகுதிரைப் பல்லும் அன்புடன் வராகனென்று
அண்டவோடு சங்கமும் அன்புடன் பலமொன்று ஆட்டுதற்கினி
கேளுமே. 235

காந்தம், பலகறை, கிராம்பு, புங்கம்விதை, மாசி, சுருவரி, செங்கழுநீர், சீனக்காரம், முத்து, வெள்ளி, பீங்கான், யானைக் கொம்பு, கலைமான்கொம்பு, ஆமையோடு, மிளகு. சுக்கு, பவளம், சமுத்திரப்பழம், சீரகம் இவைகள் வகை ஒன்றுக்குக் கால்பலம்; அரிசித்திப்பிலி, மிளகு, துத்தம், பீதரோகணி, துருசு, இரும்பு, தாம்பிரம், வெண்கலம், பித்தளை, உருக்கு, பலகறை, குதிரைப்பல் இவை வகையொன்றுக்கு ஒரு வராகனெடை, அடைவைத்த கோழிமுட்டை ஓடு, சங்கு இவையிரண்டும் வகைக்கு ஒரு பலம் இவற்றை இனி அரைப்பதற்கு வகையைக் கேட்பாயாக.

கேளுமே கரிசாலை முசுமுசுக்கை
புங்கம்வேர் முருங்கைப் பூவினுடன்
கிருபையுடன் நெல்லிக்காய் பனைமட்டை
பொடுதலை கிருபையா மின்னிருடன்
நாளுமே நிம்பரசம் வகையொன்று
சேரதாய் நற்றேன் சேர்காலதாய்
நன்மை பெறவே நிதம்ஓர்சாறு
வார்த்ததை நலமுடன் தானரைத்து
வாளுமே மதுரைக் கலத்தூரில்
வைத்ததை வகையுடன் கயிறுசெய்து
வரிசையுடன் முன்ரசந் தனிலுரைத்
தெழுதவளர் நயனமீதில் வருநோய்
மீளுமே பில்லமும் படலமும்
குறுமுளையும் மேலான ரணசுக்கிரன்
மேகநீர்ப் பாய்ச்சலும் பூப்படல
மேகுமே மகாரத்தி ஞதியிதுவே. 236

**கையாந்தகரைச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, புங்கம்வேரின்பால், முருங்கைப்பூச்சாறு. நெல்லிக்காய்ச்சாறு, பனைமட்டைச்சாறு, பொடுதலைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு வகைக்கு ஒரு சேர் வீதமும் கால் சேர் தேனும் தினம் ஒன்றுக்கு ஒவ்வொன்றாக விட்டு நேக அரைத்து மதுரைக்கலத்தினடியில் வைத்திருந்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு முன் சொன்ன சாறுகளிலொன்றில் சமயோசிதமாக இழைத்துக் கண்ணிலிடப் பில்லம், படலம், குறுமுளைகள், ரணசுக்கிரன், மேகநீர்ப் பாய்ச்சல், பூ இவைகள் தீரும்.**

### இரத்திஞதி மாத்திரை

சங்கமும் ரோணிபவளம் வெண்புலியும் சதாசிவன் கலப்பரிமதுரம்
சலாசத்து வராலின் சினையுடண் தேத்தாவித்துடன் திரிகடுமதியும்
வங்கமுங் கடுக்காய் கலங்கொம்பு வெள்ளைச் சாரடை வேருடன்மேரு
வானகஸ்தூரி மஞ்சளும் ஆனைக்கோடுடன் வெள்ளைக் காக்கணவேர்
துங்கமாம் வராகனஞ் சதின்கூட சொல்லிய அக்கினிசாலம்
தோத்தும் வங்காளப்பச்சை பூங்காரம் சொல்நிரை யிரண்டரையதனில்
பொங்கமாம் பொன்னின் மெழுகிரு நான்கும் புகழ்திசை சாரணைச் சிலையும்
போட்டதன்கூட கானகசங்கம் புகழ்திரிபலமதாம் நிரையே
நிரையதின்கூட நேகக்கண்ணுடி யதனுடன்செந்தலை நிரைகேள்
நிசமதாமிரண்டும் பலமதாயெடுத்து நீயதைப்பால்தனி லிடித்துப்
பிரியமாய்க்கோவை கரிப்பறுமுசுக்கைப் புளியிலையவரை நிம்பப்பழமும்
பேணியரசமும் படியதாயெடுத்துப் பிழிந்துமே யிடிமருந்ததனை

மதுரையதாஞ் சிலையிலரைத்ததை வழித்துத் துகையுடன் கயிற
தாயுருட்டிக்.
கருதியாய்நிழலி லுலர்ந்ததோர்கயிற்றைச் சொன்னமுன் ரசங்களி
லெழுதில்
வரைகிறேன் விழியி லாணிப்பூ குந்தமானதுர் மாங்கிசமிதனை
மருவுநீர்ப்பில்ல மனைத்தையும் க்ஷணத்தில் அறுக்கும் ரத்திநுதி
யினடைவே. 237

## சத்துரு இரத்திஞதி மாத்திரை

துத்த முந்திரி கடுகுநெல்லி துய்ய கடுக்காய் பீதரோகணி
சித்த மாம்பொன் னுங்காணி சிறுகீரை பூலா வேரும்
வித்தகப் புளியம் பூவும் வெண்டலை யோடு தானும்
முத்தொடு பவளம் கஞ்சம் இரும்புபொன் வெள்ளி கூட்டே. 238

**துத்தம், திரிகடுகு, நெல்லிவற்றல், கடுக்காய், பீதரோகணி, பொன்னுங்காணிவேர், சிறுகீரைவேர், பூலாவேர், புளியம்பூ, தலையோடு, முத்து, பவளம், வெண்கலம், இரும்பு, பொன், வெள்ளி,**

கூட்டிடும் செம்பு தானும் கூட்டெலு மிச்சஞ் சாற்றை
ஊட்டியே அரைத்து நிழலில் உலர்த்தியே முலைப்பால் வார்த்துக்
காத்திரு கண்ணி லிட்டால் கண்பித்தம் படலம் காசம்
ஓட்டிடும் விரைவி லீசன் ஒண்டொடிக் குரைத்த வாறே. 339

**செம்பு இவைகளின் அரப்பொடி, இவைகளைச் சமனெடையாய் நிறுத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு முலைப்பாலில் இழைத்துக் கண்ணிலிடக் கண்பித்தம், படலம், காசம் தீரும்.**

## தந்த இரத்திஞதி மாத்திரை

மானுடன் பரிகழுதை மரைகரடி புலிமுதலை
வன்கிரி ஞமலியுடனே
வளமான நரியெருமை மாவேக முசல்சுணங்கன்
மதித்திடு குரங்குபூனை
கூனுடன் கரிவராகம் கோவுமி வைகள்பல்
குறித்தகரி கொம்பு நகம்பல்
குறிகோழி நாகர வண்டோடு சாரணை
குறித்ததோ ராமை யோடும்
கானதிரி கடுகுடன் திரிபலை நவரெத்தின
கனபஞ்ச லோகம் சங்கு
கருதிடுந் துருசு துத்தமும் நிம்மப்பழக்
கரிசாலம் சாற்ற ரைத்து

ஆனபனை மட்டைமுலைப் பாலிலிடவே ஆணிப்
பூவுடன் படலம் காசம்
திருமிதில் வெகுரோகம் திரிபோக நவரத்தின
தந்தரத்தி னுதி யிதுவே. 240

மான், குதிரை, கழுதை, மரை, கரடி, புலி, முதலை, கீரி, நரி, எருமை, முயல், நாய், குரங்கு, பூனை, ஆமை, பன்றி, பசு இவைகளின் பல், யானைத் தந்தம், யானைநகம், யானைப்பல், அடைவைத்த கோழி முட்டையோடு, நாகரவண்டு, வெள்ளைச் சாரணை, ஆமையோடு, திரிகடுகு, திரிபலை, நவரத்தினங்கள், பஞ்சலோகம், சங்கு, துருசு, துத்தம் இவைகளைச் சமன் எடையாய் நிறுத்தெடுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றிலும், கையாந்தகரைச் சாற்றிலுமரைத்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு பனை மட்டைச்சாறு முலைப்பால் இவைகளில் வியாதிக்குத்தக்க ஒன்றில் இழைத்துக் கண்ணிலிட ஆணிப்பூ, படலம், காசம் முதலியவைகளும் இன்னும் அநேக நோய்களும் தீரும்.

### அமர மாத்திரை

சுத்த வெள்ளைச் சாரணைவேர் துருசு துத்தம் திரிகடுகு
முத்த மஞ்ச ளிந்துப்பு முதிர்ந்த தேத்தாம் விதைக்கடுக்காய்
சித்தம் புளியிலை சாற்றரைத்துச் சிறுவன் கண்ணில் சூட்டியிட
மெத்தப் படர்ந்த பூஅமரம் மெலிவாய் கரைந்து போமன்றே.

வெள்ளைச்சாரணை வேர், துருசு, துத்தம், திரிகடுகு, கறிமஞ்சள், இந்துப்பு, தேத்தாங் கொட்டை, கடுக்காய்த் தோல் இவைகளைச் சமனெடையாய் எடுத்துக்கொண்டு புளியிலைச்சாறு விட்டரைத்துக் குழந்தைகளுக்கு உண்டாகும் அமரத்திற்குக் கண்ணிலிட அமரமும் அதனால் உண்டாகும் பூவும் தீரும்.

நெல்லி யோரிதழ் பொன்காணி துத்தமும்
கல்லில் நேக அரைத்துருண்டை செய்திடில்
இல்லை அமரமும் நோவது மில்லையே
தில்லை யம்பலக் கூத்தர்சீர் பாதமே. 242

நெல்லி வற்றல், ஓரிதழ்த் தாமரை, பொன்னுங்காணி, துத்தம் இவைகளைச் சமனெடையாய் நேக அரைத்துருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தண்ணீரிலிழைத்துக் கண்ணிலிட அமரந் தீரும்.

### மீன் இரத்தினுதி மாத்திரை

தேறி முதிர்ந்த வரால்மீனின் சிரசின் கல்லைத் தானெடுத்துப்
பாரில் மிளகு அஞ்சனக்கல் பகருந் துத்தம் துருசுடனே
சேரீர் வெள்ளைச் சாரணைவேர் சிறந்த சங்கு முத்துநிம்மச்
சாற்றி லரைத்துக்கண்ணிலிடச் சதையும் படலம் பூப்போமே. 243

முற்றின வரால்மீனின் சிரசிலிருக்கும் கல், மிளகு, அஞ்சனக்கல், துத்தம், துருசு, வெள்ளைச்சாரணை வேர், சங்கு, முத்து இவ் வெட்டுச் சரக்குகளையும் சமனெடையாய் எடுத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலிலுர்த்தித் தாய்ப் பாலிலிழைத்துக் கண்ணிலிடச் சதை வளர்த்தி, படலம், பூ முதலியவை தீரும்.

### தாம்பிராதி மாத்திரை

செம்பொடு பளிங்குதுத்தஞ் சேர்வது துருசேயாக
நம்பிடும் சிறுகிரைவேர் நற்பொன்னுங்காணி வேரும்
கம்பணி தேசிச்சாற்றில் கலந்தரைத் துருண்டைசெய்து
அம்பணி விழியாள் பாலிலிட விழிசிவப்புப் போமே. 244

செம்பு, அரப்பொடி, அபிரேகம், துத்தம், துருசு, சிறுகீரைவேர், பொன்னுங்காணி வேர் இவைகளைச் சமனெடையாய் நிறுத்து எடுத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து மாத்திரை யாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப் பாலில் இழைத்துக் கண்ணிலிடக் கண்சிவப்புத் தீரும்.

### தாம்பிராதி மாத்திரை (வேறு)

அஞ்சனக் கல்லு துத்தம் அதனில் தாம்பிரம் ரோகணி
மிஞ்சவே தாலஞ்சாற்றில் மிகவரைத் துருண்டை யாக்கித்
துஞ்சவே முலைப்பால் தன்னில் சூழ்ந்திடும் கண்ணில் போட்
தஞ்சமாம் தாம்பி ராதி சகலரோ கங்கள் போமே. 245

அஞ்சனக்கல், துத்தம், தாம்பிர அரப்பொடி, பீதரோகணி இவைகளைச் சமனெடையாக எடுத்துக்கொண்டு பனைமட்டைச்சாறு விட்டரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு தாய்ப் பாலிலிழைத்துக் கண்ணிலிடக் கண் வியாதிகள் எல்லாம் தீரும்.

### தாம்பிராதி மாத்திரை

நன்ருன தாம்பிராதி செம்பொடு பதினறு வெள்ளி யெட்டதி மதுரமும்
நற்கோட்டம் பன்னிரண்டாகவே யிதனிலே நல்லிந்து எட்டாகவே
இந்தான திப்பிலி நாலாகவே இவைகள் ஏற்றமுடனே யெடுத்து
இதமாகவே நல்ல வெள்ளைச் சாரடையின் வேர் ஏற்றமுடனுலாகவே
சந்தான வெள்ளாட்டுப் பால்வார்த்து ஏழுநா ளதையரைத் துருண்டை செய்து
சதிராக நிழலுற்று அநுபான மதிலிடு சார்ந்த வெகு ரோகமகலும்
பொந்தாம லெழுகின்ற பில்லமும் அமரமும் பொரிகின்ற நிமை அடிசிலும்
போகாத பூவோடு படலமும் காசமும் பொருந்தி யெழுகின்ற முளையும்
மந்தார காசமும் மாங்கிச வளர்த்தியம் அன்னகோபம் சிவப்பும்
அதிராக நயனத்தில் எழுகின்ற நோயெலாம் அகற்றுமிது தாம்பராதியே. 246

தாம்பிர அரப்பொடி 16, வெள்ளி அரப்பொடி 8. அதிமதுரம் 12, கோட்டம் 12, இந்துப்பு 8, அரிசித் திப்பிலி 4, வெள்ளைச் சாரணை வேர் 4 ஆக நிறுத்தெடுத்துக்கொண்டு வெள்ளாட்டின் பால் விட்டு ஏழு நாளரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு நோய்களுக்குத் தக்க துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிட, பில்லம், அமரம் நிமையிலெழுகின்ற சோறு போன்ற கொப்புளங்கள் முதலிய இமைத் தோடங்கள், நாட்பட்டபூ படலம், காசம், முளைகள், மந்தார காசம், மாமிசவளர்ச்சி, அன்ன கோபம், இன்னும் அநேக நோய்களும் தீரும்.

### மகா தாம்பிராதி மாத்திரை

### கலிவெண்பா

ஆதி தனைப்போற்றி அன்பாகத் தேவியுடன்
பேதமுட னிண்ணயமாய்ப் பேசினது—ஓதக்கேள்
அம்மை பகவதி அகிலாண்ட ஈஸ்வரியே
கர்மந் தனையகற்றும் காரணியே—நன்மைபெற்ற
பூவுலகோர் மாதாவே பொற்கொடியே லட்சுமியே
யேக வினையகற்றி ஈடேற்றும்—நாயகியே
சுந்தரியே மாந்தர்கட்குத் தோன்றும் நயனநோய்
அந்தணர்க்கோரவிழ்தம் அருள்வாயே—எந்தனுட
தாயே யெனவினவத் தயாபரியு—மப்பொழுது
பேதமில் லாமலே பேசுவாள்—போதறவே
சுத்தசெம்பு வெண்கலமும் சொல்லுவெள்ளி யண்டமதின்
முத்தினதோர் ஓடதுவும் மொழியக்கேள் இத்தனையும்
ராவி யரப்பொடியாய் நற்சீ ரகமுடனே
தாவியே ஓரிதழ்த் தாமரைவேர்—மேவியே
இத்தனையும் ஓரெடையாய் ஏற்கநன்றாய் ஓர்பலமும்
துத்தம் துருசுவெள்ளைப் பீங்கானும்—மற்றவுமே
சீனம் அரப்பொடியும் சேர்மனிதர் ஓடதுவும்
பானமுள்ள சோழிப் பலகறையும்—ஞானமுடன்
தூக்கு வராகனெடை சொன்னமருந் தத்தனையும்
ஏற்கனவே நீகொண்டு இன்பமுடன்—நோக்கியே
தேசிச்சா றெண்சாமம் சேர்முசுக்கை யெண்சாமம்
வீசியிந்த சாற்றரைத்து மீறியே—காசினியில்
கம்பிபோல் தானுருட்டக் காணுமகா தாம்பிராதி
பம்புஅநு பானம்தனைப் பாலுடனே—இன்புளிப்பு
சாறுபனை மட்டையதன் சாறதுவும் சம்பீரம்
சாறுடனே நீயரைத்துத் தாக்கினால்—ஊரைவிட்டு
ஓடுமே நீர்ப்பில்லம் ஒடுங்கும் படலமதும்
கூடுவிடு மந்தமுதல் கூறக்கேள்—ஓடுதனில்

துர்மாங் கிசமுளதும் சோருமப்போ தேகண்ணில்
நிர்மலமாய்ச் சிவப்புவலி காணுது—நன்மையில்லாக்
குத்தல் கடுப்பதுவும் குலேகுலேந்தே யோடிவிடும்
மற்றுமொரு நோவதுவும் வாராது – இத்தனையும்
போக்கிவிடு மென்ற பொற்கொடியாள் சொற்கேட்டு
நோக்கிக் குறுமுனிதன் வந்திரியா—ரோர்க்கு
ஈனமெய்தா வண்ண மினிதெடுத்து மானேகேள்
ஞானமுடன் சொன்னுர் நலம். 247

செம்பு, வெண்கலம், வெள்ளி இவற்றின் அரப்பொடி, அடை வைத்த கோழிமுட்டைத்தோல், நற்சீரகம், ஓரிதழ்த்தாமரைவேர் இவை வகைக்கு ஒரு பலம், துத்தம், துருசு, வெள்ளேப்பீங்கான், சீனக்காரம், இரும்பு அரப்பொடி, தலேயோடு, பலகரை இவை வகைக்கு ஒரு வராகன் எடையாக நிறுத்துக்கொண்டு நன்ருய் இடித்துத் தூளாக்கிக்கொண்டு கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு எட்டு சாமமும். முசுமுசுக்கைச்சாறு விட்டு எட்டு சாமமுமாக நேக அரைத்துப் பதத்தில் மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ள மகாதாம்பிராதியாகும். இதனைத் தாய்ப்பால், புளிப்பு மாதுளம்பழச்சாறு, பனைமட்டைச் சாறு, எலுமிச்சம்பழச்சாறு இவற்றில் சமயோசிதமான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிட நீர்ப்பில்லம், வரட் பில்லம், சொரிப்பில்லம் முதலிய பில்ல வகைகளும், வெள்ளேப் படலம், சதைப்படலம், இரத்தப்படலம், நீர் எழுச்சிப்படலம், வரியெழுச்சிப்படலம், நாகப்படலம், அதிமாங்கிசப்படலம் ஆகிய ஏழுவகைப் படலங்களும், சிவப்பு, குத்தல், கடுப்பு முதலியவையும் தீரும்.

### தாம்பிராதி மாத்திரை
### வெண்பா

செம்பு கழஞ்சு சேர்பூரம் பாதியுமாம்
நம்பு துத்தந்தான் கால்பாதி—கொம்பனையாய்
கூட்டிப் பழச்சா றதனு லரைத்துருண்டை
நாட்டில்தனப் பாலிலிட நன்று. 248

செம்புஅரப்பொடி ஒன்று, பச்சைக்கற்பூரம் அரை, துத்தம் கால்பங்காக நிறுத்து எடுத்துக்கொண்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிட நன்மையைத் தரும்.

## தாம்பிராதி மாத்திரை

நலமுளசொரியின் சதாசிவன் பீங்கான் நன்மையாங் கருமணல்சோகி
நாட்டினில் மனிதர் கபாலம்வெம்புலியும் நயமுடன் வராகனேடைதனில்
குணமுளமரையின் கிழங்குடன்மதியும் கூர்மையாமந்தலையுருளைக்
குறிப்புடன் சீரகம் பஞ்சமும்வகைக்குக் கூறியதிசையதாயெடுத்துப்
பலமுடனிடித்து முசுக்கையின் பழச்சாற்றுலரை சாமமோரெட்டும்
பேணிநீவழித்துக் கயிறதாயுருட்டிப் பிரியமாய் நிழல்தனில் உலர்த்தி
வலமுளவிழிநீர்ப்பில்லமும் படலம்வாங்குந்துர் மாங்கிசங்குத்தல்
வகைபெறுநாகப் படலமுமனைத்தும் வாங்கும் தாம்பிராதியின் வலிவே.

துத்தம், துருசு, பீங்கான், கருமணல், பலகரை, தலையோடு வெம்புலி இவைகள் வகைக்கு ஒரு வராகன் எடையும் தாமரைக் கிழங்கு, இந்துப்பு, கொத்துமல்லிவிதை, சீரகம் இவை வகைக்கு ஐந்து வராகன் எடையும் எடுத்துக்கொண்டு எல்லாச் சரக்குகளை யும் சேர்த்து இடித்துக் கல்வத்திலிட்டு முசுமுசுக்கைச்சாறுவிட்டு எட்டு சாமமும், எலுமிச்சம்பழச் சாறுவிட்டு எட்டுசாமமுமாக அரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டுசமயோசிதமான துணைமருந்துகளில் இழைத்துக்கண்ணில் விட நீர்ப்பில்லம், படலம், துர்மாமிசம், குத்தல்வலி, நாகப்படலம் முதலியவை தீரும்.

## தாம்பிராதி மாத்திரை

துருசுடன்சோகி கருமணல் சொரியன் அதனுடன்சுத்த வெண்பீங்கான்
சோதனைவராகனெடையுடனதில் சொன்னவெண்காரம் வெம்புலியும்
வரிசையோரிதழின்வேர் செந்தலையும்வகையுடன் திசையதாயெடுத்து
வாகுடனிடித்துச் சேலையால்வடித்து வளர்பெருஞ் சிலைதனிலமைத்துப்
பரிசமாமுசுக்கை கரிப்பநிம்பழச் சாற்றுலரை வாரமோர் தினமாய்ப்
பேணியேவழித்துக் கலந்தனிலுருட்டிப் பிரியமாய் நிழல்தனிலுலர்த்தி
கரிசமாங்கண்ணில் அமரமுந்திமிரம் கதித்தெழு பூமுதலனைத்தும்
கலங்கியேமயங்கிக் கருங்கடல்புகுமே கனகதாம்பிராதியின் கயிறே.

துருசு, பலகறை, கருமணல், துத்தம், வெள்ளைப்பீங்கான் இவைகள் வகைக்கு ஒரு வராகன் எடை, எண்ணெய்வெண்காரம், வெம்புலி, ஓரிதழ்த்தாமரைவேர், குன்றிமணி இவைகள் வகைக்கு நான்கு வராகன் எடையாக எடுத்துக்கொண்டு நன்றாய் இடித்துத் துணியில் வடிகட்டி, கல்வத்திலிட்டு, முசுமுசுக்கைச்சாறு, கையாந்தகரைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு இவற்றை நாள் ஒன்றுக்கு ஒரு சாறு வீதம் விட்டுப் பதமாய் அரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சமயோசிதமான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிட அமரம், திமிரம், பூ முதலியன தீரும்.

### பச்சைத் தாம்பிராதி மாத்திரை

செம்பு துத்த மிந்துப்பும் சீனக் காரம் துருசினுடன்
சங்கு தாமரை வளையமுடன் தலைநிம்பச் சாற் றரைத்துருண்டை
செம்பி லரைத்துத் தானெழுதச் சேர்ந்த பச்சைத் தாம்பிராதி
கம்பி நயனத் தெழுநோய்கள் களவது போல வகன்றிடுமே. 251

செம்பு அரப்பொடி, இந்துப்பு, சீனக்காரம், துருசு, சங்கு, தாமரைவளையம் இவற்றைச் சமன் எடையாய் நிறுத்து எடுத்துக் கொண்டு கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு சமயோசித துணைமருந்துகளோடு ஒரு செப்புத்தகட்டில் இந்தப் பச்சைத் தாம்பிராதி மாத்திரையை இழைத்துக் கண்ணில் விடக் கண்ணில் உண்டாகும் நோய்கள் எல்லாம் தீரும்.

### வேறு

துத்தம் துருசு ஒன்றரையும் துய்ய சங்கு நாலுடனே
மெத்தத் தொண்ணூறு நாழிகையும் மேவு நிம்பச் சாற்றரைத்துச்
சுத்தக் கயிறுபோற் றுனுருட்டிச் சுகமாய் நிழலி லுலர்ந்தபின்பு
மெத்த தனப்பால் தன்னிலிடப் பூப்போம் பச்சைத் தாம்பிராதி.

துத்தம், துருசு வகைக்கு ஒன்றரைப்பங்கும், சங்கு நான்கு பங்குமாகச் சேர்த்துத் தொண்ணூறு நாழிகை எலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைத்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிடப் பூ நீங்கும்.

### வேறு

சங்குமதியொன்று நாகரவண்டிர்பத்து தனங்கள் ரத்தினநிறையுமாம்
தாந்தேத்தானுந்துத்தம் ஓர்பத்துடன் தாம்பிரம் ஆறிலுடனே
இங்கிதமதாய்ச் சிறுகீரையோடு கோவையும் இதில் கையான்பனை
மட்டையும்
இனமுடனே வரிசையுள மருந்ததனையும் இதமுடன் தானெடுத்துப்
பொங்குமிவை யாவையும் இங்கிதத்துடன் வளம் போன்ற அம்மி
தனிலே
கூட்டியிருபத்து நால் சாமமதை யாட்டியே புகழ்ந்து நல்கயிருமாக்கிச்
சொங்கு நிழலுலர்த்தி மின்ரசத்தெழுதத் தோற்கு நோய்தனை யறிகில்
அண்சூடு மதிகோப நீர்ப்பாய்ச்சலுடனே அரும்பச்சைத் தாம்பி
ராதியே. 253

சங்கு ஒருபங்கு, இந்துப்பு ஒருபங்கு, நாகரவண்டு இருபது பங்கு தேத்தான்கொட்டை பத்துபங்கு, துத்தம் பத்துபங்கு, தாம்பிரத்தின் அரப்பொடி ஆறுபங்காகச் சேர்த்துச் சிறுகீரை,

கோவையிலை, கையாந்தகரை, பனைமட்டை இவற்றின் சாற்றைத் தனித்தனியாய் வகைக்கு ஆறு சாமமாகப் பதமாய் அரைத்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு எலுமிச்சம்பழச் சாற்றில் இழைத்துக் கண்ணிலிட அதி உஷ்ண நோய்கள், அன்னகோபம், நீர்ப்பாய்ச்சல் முதலியன தீரும்.

(வேறு)

துத்தமே துருசு சங்கு துய்யநற் பவளம் செம்பு
வைத்திடு மாமை யோடு வகையடி நிரையொன்ருக
எத்திய பனைமட்டைச் சாறு எலுமிச்சம் பழத்தின் சாற்ருல்
ஒத்திட அரைத்து ருட்டி உருண்டைதான் சேர்த்தி டாயே. 254

துத்தம், துருசு, சங்கு, பவளம், தாம்பிரத்தின்அரப்பொடி, ஆமையோடு இவைகளைச் சமனெடையாக நிறுத்துச்சேர்த்துப் பனை மட்டைச்சாறுவிட்டு நன்ருயரைத்துப் பிறகு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்ருயரைத்துப் பதத்தில் மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு,

(வேறு)

உருண்டையைத் தனப்பால் தன்னில் உரைத்திரு கண்ணி லிட்டால்
மண்டையைப் பிளக்கும் பித்தம் மருவிய கண்ணில் காசம்
வண்டுரை பூப் படலம் மணிதனில் நீல காசம்
சண்டப்பிர சண்டன் பச்சைத் தாம்பிராதி யாகுந் தானே. 255

தாய்ப் பாலிலிழைத்து இரண்டு கண்களிலுமிட்டால் பித்த நோய்களும், கண்ணிலுண்டாகும் காச நோய்களும், சுழல் வண் டெரிதலும், பூக்களும், படலங்களும், பாவையிலுண்டாகும் நீல காசமும் தீரும்.

வராகாதி மாத்திரை

ஓங்குந் திப்பிலி கொந்தாழை ஒளிசேர் வெள்ளி லோத்திரமும்
தாங்கும் பீத ரோகணியும் பன்றிக் கொம்பும் சமன்கூட்டிப்
பாங்கும் படியே தானிழைத்துப் பரிசா வரையின் சாற்றிலிட
நீங்கும் காசம் வெள்ளெழுத்து நெடுமா லறிய நிச்சயமே. 256

அரிசித்திப்பிலி, சமுத்திரப்பழம், வெள்ளிலோத்திரம், பீத ரோகணி, பனறிக்கொம்பு இவற்றைச் சமன் எடையாய்ச் சேர்த்து அரைத்து ஆவாரையின் சாற்றில் இழைத்துக் கண்ணிலிடக் காசம், வெள்ளெழுத்து நீங்கும். (இச் செய்யுளில் அரைப்பதற்கு சாறு வகை ஒன்றும் விளங்கவில்லை.)

## விமலாதி மாத்திரை

பளிங்கு துத்தம் கோரோசனை பச்சைப் பாக்கு திரிகடுகு
துளங்குஞ் செம்பு முதலாகத் துறைசேர் நெல்லிக் காய்சாற்றில்
களங்க மறவே யரைத்தெழுதக் காசம் படலம் தான்தீர்ந்து
விளங்கும் பெருமை தவருத விமலா தியாகு மிதுதானே. 257

பளிங்கு, துத்தம், கோரோசனை, பச்சைப்பாக்கு, சுக்கு, மிளகு திப்பிலி, தாம்பிர அரப்பொடி இவற்றைச் சமன் எடையாக நிறுத்தெடுத்துக்கொண்டு நெல்லிக்காய்ச்சாறு விட்டு நேக அரைத்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சமயோசிதமான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடக் காசம், படலம் முதலியவை தீரும்.

## ஒளிவாதி மாத்திரை

கண்டநற் சங்கு நாலு கலந்தநற் றுருசி ரண்டு
கொண்டநல் லிந்து காவி குலவுவங் காளப் பச்சை
திண்டென மிளகு குன்றி தேசிநீர் வார்த்த ரைத்து
வண்டென இலங்குங் கண்கள் வளரும்பூ கரைந்து போமே. 258

சங்கு நாலுபங்கு, துருசு இரண்டுபங்கு, இந்துப்பு, மஞ்சட் காவிக்கல், வங்காளப்பச்சை, மிளகு, குன்றிமணி இவற்றை வகைக்கு ஒரு பங்காக நிறுத்தெடுத்துக் கொண்டு கூறிய சரக்குகளையும் சேர்த்து நன்ருய் இடித்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சமயோசிதமான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடப் பூ கரைந்து கண்கள் வண்டுபோல் விளங்கும்.

## பீதரோகணி மாத்திரை

### அகவல்

மந்தித்த கண்ணுக்கு மருந்துண்டு மாதேகேள்
இந்துப்புத் திப்பிலி இயல்பீத ரோகணி
நந்திப்பூச் சாற்றில் நயந்தரைத் திடவே
அந்திக்கு முன்னே அருந்ததி தோற்றிடும்
நந்திக்கு நாதன் நயந்துரைத் தனரே. 259

பார்வை மந்தமாயிருக்கிற கண்ணுக்கு மருந்துண்டு. அதாவது இந்துப்பு, திப்பிலி, பீதரோகணி இம்மூன்றையும் சமன எடையாக எடுத்துக்கொண்டு நந்தியாவட்டம் பூவின் சாறுவிட்டு நைய அரைத்துப் பதத்தில் எடுத்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சுத்த நீரில் இழைத்துக்

கண்ணிலிடப் பார்வை மந்தம் தீரும். (அசுத்த நீரினாலும், உட்டிணத்தினாலும் ஏற்படும் மந்தத்தை மட்டுமே இம் மருந்து போக்கும். காசநீரினாலும், சூலைகளினாலும், மேகவெட்டையாலும், அடிபட்ட காரணத்தினாலும், பித்தகாசத்தை அகாலத்தில் குத்தி நீர் எடுத்த தோடத்தால் ஏற்படும் மந்தங்களை இது நிவர்த்திக்காது. இம் மருந்தைக் காற்றுப்புகாத சீசாவில் சாக்கிரதையாய் வைத்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால் மழை நாட்களில் நீராய் இளகிவிடும்)

### பீதரோகணி மாத்திரை

இந்தமா நீல காசம் இயல்பெறு பித்த காசம்
மந்தமாம் படலம் பில்லம் மயிர்க்குத்து புழுவெட் டோடு
சந்தியாம் மாலைக் கண்ணும் தழலெரிக்கண்ணும் நேத்திரம்
வந்திடும் வாயுக் கெல்லாம் மருந்துதா னுரைக்கக் கேளே. 260

நீலகாசம், பித்தகாசம், படலம், பில்லம் மயிர்க்குத்து, புழுவெட்டு, மாலைக்கண், கண்ணெரிச்சல், நேத்திரவாயு இவைகளுக்கெல்லாம் மருந்து சொல்லக் கேட்பாயாக.

உரைத்திடும் முத்து வெள்ளி யுயர்ந்த தாம்பிரஞ் சங்கோடு
கரைத்திடுந் துருசு துத்தங் கலந்த கல்லோடு பொன்னுந்
திரைத்திடும் பீத ரோகணி சேர்புங்கு நிம்மச் சாற்றில்
அரைத்திடுங் கண்ணேய் தொண்ணூற் றுறுமே யகன்று போமே.

முத்து, வெள்ளி அரப்பொடி, தாம்பிர அரப்பொடி, சங்கு, துருசு, துத்தம், அஞ்சனக் கல், பொன், பீதரோகணி,' புங்கம் வித்து ஆகியவற்றைச் சமன் எடையாய் நிறுத்து எடுத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு நோய்களுக்குத் தகுந்த சமயோசிதமான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடத் தொண்ணூற்றுறு கண் நோய்களும் தீரும்.

### குக்குடாதி மாத்திரை

துத்தந் தேத்தான் பலகரையுந் தொடுக்கும் புருசர் தலையோடு
மெத்த மிளகு திப்பிலியும் மேவுஞ் சேவக னெஞ்செலும்பும்
உத்த கழஞ்சிவை யோரொன்றே டுகந்த நிம்மச் சாற்றரைத்துச்
சுத்த உருண்டை யுரைத்திடுக தோற்குங் கண்வலி பூப்போமே.

துத்தம், தேற்றான்கொட்டை, பலகரை, மண்டையோடு, மிளகு, அரிசித்திப்பிலி, சேவற்கோழி நெஞ்செலும்பு ஆகியவற்றைச் சமன் எடையாக நிறுத்து எடுத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறு

விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தகுந்த துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடக் கண்ணோய், பூ முதலியன தீரும்.

### புங்காதி மாத்திரை

சங்கு சுக்கொடு மிளகு திப்பிலி தாரமோ டதிமதுரமும்
புங்கம் வித்தொடு பீதரோகணி போற்று துத்த மனோசிலை
அங்க ரைப்பது நந்திபத்திரி தேனளாங் குளிகை கொளக்
கங்குல் பற்றிய விழியில்தீட்டிடக் காசமே படலம் நாசமே. 263

சங்கு, சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, அரிதாரம், அதிமதுரம், புங்கம்வித்து, பீதரோகணி, துத்தம், மனோசிலை ஆகியவற்றைச் சமன் எடையாய் எடுத்துக்கொண்டு நந்தியாவட்டப் பூச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தேனில் இழைத்துக் கண்ணிலிட இருண்ட கண்களும், காசமும், படலமும் தீரும்.

### அப்பிரகாதி மாத்திரை

கண்ணினில் காச முற்றால் கடியதோர் துருசு துத்தம்
நண்ணிய பளிங்கு சங்கு நத்திய சீனக் காரம்
ஒண்ணிம்மப் பழத்தின் சாற்றி லுரைகட லொத்த வுருண்டை
விண்ணிய படலங் காசம் வெருண்டிடு மிதனைப் பாரே. 264

துருசு, துத்தம், அப்பிரேகம், சங்கு, சீனக்காரம் ஆகியவற்றைச் சமன் எடையாய் நிறுத்து எடுத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டுச் சரக்குகள் மடியும் வரையில் அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு பொருத்தமான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடப் படலமும் காசமும் தீரும்.

### திரிகாதி மாத்திரை

கருவிழி சீழ தாகிக் காந்தளின் பூப்போலொத்து
வெருபொரி மின்னும் போல வெருண்டிடுஞ் சலமுங்கொள்ளில்
குருகு பொன் பவழம் வெள்ளி குங்குமம் பூரந் துத்தம்
நிரவிய முலைப்பால் உருண்டை நீரொளி காசம் போமே.

கருப்பு முழியின் கீழும் மேலும் சிவந்து மின்னல்போலச் சுரீர் என்று குத்தல் உண்டாகி, நீர் வடிந்து கொண்டிருக்கும் நீரெழு காசமானது பொன், பவழம், வெள்ளி, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், துத்தம் ஆகியவற்றைச் சமன் எடையாய் நிறுத்துக் கொண்டு தாய்ப்பால் விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரை களாகத்திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு பொருத்த மான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடத் தீரும்.

## இந்தாதி மாத்திரை

மருவியே கயற்கண் ணொந்து வற்றியே யெரிப்பு முண்டாய்க்
கருவிழி கண்ணில் சற்றே கலங்கியே ரூபம் வேருய்ச்
சருவுமிந் துப்பும் மஞ்சள் சாரணை வெள்ளை துத்தம்
அரையான்பாற் கழுதைப் பாலி லகன்றுபோம் மாலை காசம். 266

கண்கள் நொந்து, வறண்டு, எரிச்சல் உண்டாகி, கருவிழி கலக்கமுற்று, ரூபங்களை வேறுபடுத்திக் காட்டும் மாலைகாசம், இந்துப்பு, மஞ்சள், வெள்ளைச்சாரணைவேர், துத்தம் ஆகியவற்றைச் சமன் எடையாய் நிறுத்து எடுத்துக்கொண்டு பசும்பால் விட்டு அரைத்து, பிறகு கழுதைப்பால் விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தகுந்த துணைமருந்துகளிலிட நோய் தீரும்.

## திமிராதி மாத்திரை

திப்பிலி கிராம்பு நெல்லி திரிகடு கரத்தை கோட்டம்
முப்பிய சிறு கீரைவேர் முகிந்தன துருசு துத்தம்
அப்பிய கஞ்சாங் கோரை யதின்விரை பொன்னுர் காரஞ்
செப்பிய தனப்பா லுருண்டை சேர்த்திடத் திமிரம் போமே. 267

அரிசித்திப்பிலி, கிராம்பு, நெல்லிவற்றல், சுக்கு, மிளகு, திப்பிலி, அரத்தை, கோட்டம், சிறுகீரைவேர், துருசு, துத்தம், கஞ்சாங்கோரை, கஞ்சாங்கோரைவிதை, எண்ணெய் வெங்காரம் இவற்றைச் சமன் எடையாய்ச் சேர்த்துப் தாய்ப்பால் விட்டு அரைத்துப் பதத்தில் மாததிரைகளாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு சமயோசிதமான துணைமருந்துகளில் இழைத்து கண்ணிலிடத் திமிரம் தீரும்.

## படலாதி மாத்திரை

வேரும் வெள்ளைச் சாரணையும் மிகுந்த பீத ரோகணியும்
நேராய் சமனமதாய் வாங்கி நீயரை மாதர் தனப்பாலில்
பூராய் கயிறு தான்செய்து பூவையர் பாலி லுரைத்தெழுதில்
தீரும் பில்லம் பூப்படலஞ் சிதறிப் போகுங் கண்டீரே. 268

வெள்ளைச்சாரணை வேரும், பீதரோகணியும் சமன் எடையாய் எடுத்துக்கொண்டு தாய்ப்பால் விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரையாாத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணில் இட பில்லம், பூ, படலம் ஆகியவை தீரும்.

### பஞ்சாதி மாத்திரை வெண்பா

பூலாவேர் தன்னுடனே பொன்பவழம் வெள்ளிமுத்து
சீலார்திப் பிலிமூலஞ் செம்புதுத்தம்—மேலாந்
தலையோடு ரோகணியுந் தானிம்மச் சாற்றிலுருண்டை
விலகிவிடுங் கண்ணோய்கள் விட்டு. 269

பூலாவேர், பொன், பவழம், வெள்ளி, முத்து, திப்பிலி, செம்பு அரப்பொடி, துத்தம், தலையோடு, பீதரோகணி ஆகியவற்றைச் சமன் எடையாய் எடுத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு ஏற்ற துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிட கண் நோய்கள் தீரும்.

### துத்த மாத்திரை

துத்தந்தா னொன்று மிக்க சுக்கது ரெண்டா தாகும்
மெத்தவே பொன்னுங்காணி விரைந்தரை சிறிய கீரை
வைத்திட வளவோ நிம்மம் வார்த்தரைத் துருண்டை யாக்கி
நித்திட வெண்ணேக் காடு நிசமுடன் தீருந் தானே. 270

துத்தம் ஒருபங்கு, சுக்கு இரண்டுபங்கு, பொன்னுங்காணி அரைப்பங்கு, சிறுகீரை அரைப்பங்காகச் சேர்த்து எலுமிச்சபழச் சாறுவிட்டரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு ஏற்ற துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிட வெண்ணேக்காடு நிச்சயமாய்த் தீரும்.

### காக்கண மாத்திரை

வெள்ளைக்காக் காட்டான் பூவும் வேருஞ்சா ரணையுந் தொட்டி
வள்ளல்நா யுருவி கொன்றை வளரடப் பாங்காய் வித்து
மெள்ளஓ ரிதழால் வந்த மேவுந்தா மரையுங் கூட்டித்
தள்ளில்லா தனப்பால் கூட்டில் சார்ந்தசுக் கிரனும் போமே. 271

வெள்ளைக்காக்காட்டான்பூ, வெள்ளைச்சாரணைவேர், தொட்டி விதை, நாயுருவிவிதை, கொன்றைவிதை, அடப்பம்விதை, ஓரிதழ்த்தாமரை ஆகியவற்றைச் சமன் எடையாய் நிறுத்து எடுத்துக்கொண்டு தாய்ப்பால் விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு ஏற்ற துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடச் சுக்கிரநோய் தீரும்.

### தாலாதி உருண்டை

முத்தொடு பவழந் தானும் முதிர்ந்ததோர் கந்தந் தங்கந்
தத்துறு கலையின் கொம்பு தறியுறு மானைக் கொம்புங்
கொத்துறு வெட்டி வேருங் குளிர்ந்ததோர் விச்சிப் பூவும்
வித்தகப் பெண்ணைச் சாற்றில் விரவத்தா லாதி யாமே. 722

முத்து, பவளம், சந்தனம், தங்கம், கலைமான்கொம்பு, யானைக் கொம்பு, வெட்டிவேர், விச்சிப்பூ ஆகியவற்றைச் சமன் எடையாய் நிறுத்துக்கொண்டு பனைமட்டைச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்வாயாக.

### மதுராதி உருண்டை

மருவள ரிலவங்கமொடு மதுரங்கோட்டம்
மணந்தருவாலுளுவை மற்றும் வையமெச்சும்
திருவளருங் குங்குமப்பூ செண்பகப்பூ
திரிகடுகு தேவதாரமுமே கூட்டித்
திரிபலைகள் பொன்னின்ரோ கணியுஞ்சேர்த்து
செப்பியஓ ரிதழ்மரையின் நிரையொன்ருக்கிக்
கருவுடன் காசினிச்சாற்றில் உருண்டைசெய்து
கண்ணிலிடப் புகையெரிவு கடுகிற்போமே. 273

இலவங்கம், அதிமதுரம், கோட்டம், வாலுளுவை, குங்குமப் பூ, செண்பகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, தேவதாரம், தான்றிக்காய், கடுக்காய்த் தோல், நெல்லிவற்றல், பீதரோகணி, ஓரிதழ்த்தாமரை ஆகியவற்றைச் சமன் எடையாக எடுத்துக்கொண்டு காசினிச்சாறு விட்டு அரைத்து பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு ஏற்ற துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடப் புகை, எரிவு இவை தீரும்.

### மதுராதி உருண்டை

மதுரமும் பயமு மன்றி மரமஞ்சள் மிகுதி தானும்
பதிபெறும் வெள்ளி லோத்திரம் பகரும்வெள் ளாட்டுப் பாலால்
மதிபெற உருண்டை யாக்கி மருவுதேன் நெய்யால் போடத்
துதிபெறும் படலம் பில்லஞ் சொல்லிடுஞ் சிவப்பு போமே. 274

அதிமதுரம், மரமஞ்சள், வெள்ளிலோத்திரம் இவற்றைச் சமன் எடையாய் நிறுத்துக்கொண்டு வெள்ளாட்டுப்பாலை இழை நெருக்கமான துணியில் ஏழுதடவை அல்லது ஏழுமடிப்பான துணியில் வடிகட்டிவிட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தேன் அல்லது நெய் யில் இழைத்துக் கண்ணில்போடப் படலம், பில்லம், சிவப்பு இவை தீரும்.

### மாறியாடி உருண்டை

வெட்டிவேர் சடாமாஞ்சில் நல்வியன் பீதரோகணிப்பின்
ஒட்டிய கபாலஞ்சுக்கு ஓரொன்று கழஞ்ச தாக்கி
மட்டில்திப் பிலியுஞ் சங்கும் மலிந்தவெண் காரந்தன்னைத்
திட்டமாய் இடை ரெண்டாக்கிச் சின்னிவேர் பூலாவேரும்

வட்டமாமணலிகஞ்சம் வகையொன்றில் நாலதாக்கித்
துட்டென நந்திச்சாற்றில் துலங்கிட அரைத்துருண்டை
நெட்டைவேல் விழியாய்கண்ணில் நீயிடஇரவில்பார்க்குந்
திட்டமாய் மாறியாடியென்னும்பேர் செப்பலாமே. 275

வெட்டிவேர், சடாமாஞ்சி, பீதரோகணி, தலேயோடு, சுக்கு ஆகியவை வகைக்கு ஒருபங்கு, அரிசித்திப்பிலி, சங்கு, எண்ணெய் வெண்காரம் ஆகியவை வகைக்கு இரண்டுபங்கு,சின்னிவேர்,பூலா வேர், மணலிக்கீரை, தாமரைக்கொழுந்து இவை வகைக்கு நாலு பங்காக நிறுத்து எடுத்துக்கொண்டு நந்தியாவட்டப்பூச்சாறு விட்டு நெகிழ அரைத்துப் பதத்தில் மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு சமயோசிதமான துணைமருந்து களிலிட இராக்காலங்களில்கூடக் கண் தெரியும்.

### பூபதி மாத்திரை

பாண்டவர் மருக்கொழுந்து பகர்நிம்ம விரைநாலேழாந்
தீண்டவெண் காரமூன்று திப்பிலி யெட்டுசுக்கு
நீண்டதோ ரஞ்சுநாலு நிகரில்லா மிளகுபத்து
ஆண்டதோர் மதுரம் நாலாமதில் நிம்பச்சாற்றில்கூட்டே. 276

மருக்கொழுந்து ஐந்துபங்கு, எலுமிச்சம்பழவிதை இருபத்து எட்டுப்பங்கு, எண்ணெய்வெண்காரம் மூன்றுபங்கு, அரிசித்திப்பிலி எட்டு பங்கு, சுக்கு இருபது பங்கு, மிளகு பத்துப் பங்கு, அதுமதுரம் நாலுபங்குகளாக நிறுத்து எடுத்துக்கொண்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு,

கூட்டு பூபதியைக் கண்ணில் கூர்ந்திட வாத காசந்
திட்டுமாம் பித்த காசஞ் சிலேட்டும காச மன்றில்
வாட்டநேத் திரத்தில் வாயு வருந்திய அழிகண் பில்லம்
நாட்டினில் படல மாறும் நயன ரோகங்கள் போமே. 277

பூபதிமாத்திரையைத் தக்க துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணில்லிட வாத காசம், பித்தகாசம், சிலேட்டுமகாசம், நேத்திர வாயு, அழிகண், பில்லம், படலம் முதலியனவும் இன்னும் நயன நோய்கங்களனேகமுந் தீரும்.

### ஜெயசிந்தாமணி மாத்திரை

தெத்திடும் பழத்தின் வித்தும் சிறந்த இந்துப்பு சுக்கு
பத்திடுத் துத்தம் நெல்லி பயன்படு மதுரந் தானும்
செத்திடு மஞ்ச னக்கல் சிறந்த கற்பூரந் தானும்
மத்திடும் பீதரோகணி மாதுளம் பழத்தின் சாறே. 278

தேற்ருன் கொட்டை, இந்துப்பு, சுக்கு, துத்தம், நெல்லி வற்றல், அதிமதுரம், அஞ்சனக்கல், பச்சைக்கற்பூரம், பீதரோகணி ஆகியவற்றைச் சமன் எடையாய் நிறுத்து எடுத்துகொண்டு

மாதுளம் பழத்தின் சாற்ருல் மருவிய புளியஞ் சாற்ருல்
கோதற அரைத்துப் பின்னே குளிரவே யுண்டை பண்ணிப்
போதறக் கண்ணில் போடப் பொருந்திய திமிரங் காசஞ்
சீதளஞ் சிவப்புந் தீரும் ஜெயசிந்தா மணியீ தாமே. 279

புளிப்பு மாதுளம்பழச் சாற்ருலும், புளியிலைச் சாற்ருலும் அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு நோய்களுக்கு ஏற்ற துணைருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடத் திமிரம், காசம்,சிவப்பு ஆகியவை தீரும்.

## தேத்தாதி மாத்திரை

தேத்தான் சங்கு திரிகடுகு சீர்சேர் மஞ்ச ளிந்துப்பு
சேத்தார் புக்குந் திரிபலையுஞ் சிறந்த வசம்பு சமன்கூட்டி
மாத்தால் நிம்பச் சாற்றரைத்து மருவா வுருண்டை தனையாக்கி
* ஆத்தாள் கண்ணில் தான்போட அடுத்த புகைச்சல் போய்விடுமே. 280

தேற்ருன் கொட்டை, சங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள் இந்துப்பு, புங்கம்விதை, கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், வசம்பு இவற்றைச் சமன் எடையாய் நிறுத்து எடுத்துக்கொண்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரை களாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு பொருத் தமான துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடப் புகைச்சல் தீரும்.

## பித்தகாசத்திற்கு மாத்திரை

ஆவின்றன் வெண்ணெய் மற்றும் அபினியுந் தேத்தான் வித்தும்
மேவியா வரையோ டாம்பல் மிகவுமே நெல்லி முள்ளி
தேவியர் தனப்பால் வார்த்துத் திறம்பெற அரைத்து ருட்டித்
தா்வியே கண்ணி லிட்டால் தளர்ந்திடும் பித்த காசம். 281

பசுவெண்ணெய், தேற்ருன் கொட்டை, அபினி, ஆவாரைப் பூ, ஆம்பல் மலர், நெல்லி, முள்ளித்தோல் ஆகியவற்றைச் சமன் எடையாய் எடுத்துக்கொண்டு தாய்ப்பால் விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு தக்க துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணில் இட்டால் பித்தகாசம் தீரும்.

### காச மாத்திரை வெண்பா

இந்தொன்று பூர மிரண்டுகோ ரோசனைமூன்
றந்திப் பிலிநான்கோ டைந்தோமம் — நந்திப்பூச்
சாற்றரைத்துத் தேனிழைக்கில் தன்காசம் பூப்படலம்
மாற்றிவிடுஞ் செய்யாய் மகிழ்ந்து. 282

இந்துப்பு ஒருபங்கு, பச்சைகற்பூரம் இரண்டுபங்கு, கோரோசனை மூன்றுபங்கு, அரிசித்திப்பிலி நாலுபங்கு, ஓமம் அஞ்சுபங்காக நிறுத்து எடுத்துக்கொண்டு தேனில் இழைத்துக் கண்ணிலிடக் காசம், பூ, படலம் ஆகியவை தீரும்.

### காச மாத்திரை

கனவன் மிளகு வேர்க்கொம்பு கடுக்காய் காரம் புளியிந்து
மனையும் ஒவ்வோர் கழஞ்சுக்கு மதுரப் பொடிகள்தான்செய்து
புனல்தேன் குழைத்து இடுவீரேல் போகுங் கதிர்முன் பனிபோலே
சுணாங்கிப் போகுங் கண்ணோவுஞ் சொன்னார் பெரியோர்
சொன்னாரே. 283

மிளகு, சுக்கு, கடுக்காய்த்தோல், வெங்காரம், படிகாரம், இந்துப்பு ஆகியவற்றைச் சமன் எடையாய் நிறுத்து எடுத்துக் கொண்டு தூள்செய்து தண்ணீர் விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தேனில் இழைத்துக் கண்ணிலிடக் கண்ணோய்கள் தீரும்.

### காச மாத்திரை

திரிபலை தேத்தான் திரிகடுகு தியங்கும் பளிங்கு காரீயங்
குறிபடு ரோகணி வெங்காரங் கூடச் சிலையும் அஞ்சனமுந்
திரிபடு செம்பொ னிரும்புரெட்டித் திறமாய் புங்கம் பால்வார்த்து
நெறிபடஅரைத்துக் கண்ணிலிட நீங்கும் காசம் நிச்சயமே. 284

கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிவற்றல், சுக்கு, மிளகு, திப்பிலி, அப்பிரேகம், காரீயம், பீதரோகணி, எண்ணெய்வெங்காரம், மனோசிலை, அஞ்சனக்கல், செம்பு அரப்பொடி ஆகியவை வகைக்கு ஒரு பங்காகவும், இரும்பு அரப்பொடி இரண்டு பங்காகவும் கூட்டிப் புங்கம் பால் விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு நிலைமைக்கேற்றவாறு துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிட, நிச்சயமாய்க் காசம் தீரும்.

### குந்தத்திற்கு மாத்திரை

கற்பூர மஞ்சனமுங் காரீயந் திப்பிலியும்
நற்பெரிய தோர்மிளகு நல்லிரதஞ் — சொற்பெரிய
நந்திப்பூச் சாற்றரைத்து நாளுந்தேன் வார்த்திடினே
குந்தங்கண் தோடங்போங் கூறு. 285

பச்சைக்கற்பூரம், அஞ்சனக்கல், காரீயம், அரிசித்திப்பிலி, மிளகு, இரசம் ஆகியவற்றைச்சமன் எடையாய் எடுத்துக்கொண்டு நந்தியாவட்டப்பூச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தேனில் இழைத்துக் கண்ணிலிடக் குந்தந்தள்ளிய கண்கள் குணமாகும்.

### ஆக்குரோச மாத்திரை

போற்றும்புங்கம் விரைசிலை சங்குடன்
புகல் புளியாரைவேர் சொரிதுத்தமுந்
தேற்றும்ஏலம் மதுரமுந் திப்பிலி
சேர்கடுக்காய்த் தோல்தான்றிக்காய்த் தோலோடு
சாற்றும் நெல்லிவற் றல்லிவையாவுமே
சமனெடைப் புளியாரையின் சாற்றினில்
ஏற்றித் தக்கபதத்துருண்டை யாக்கியே
இமையினிற் றீட்டஏகும் வியாதிகேள். 286

நேர்சி லேத்துமம் நீர்விழு காசமுஞ்
சேர்சி வப்புந் தினவுந் திமிரமுந்
தேர்சி றுமைசெய் பில்லமுந் தீர்த்துபோம்
ஓரிதாக் ரோச மென்ன வுரைப்பரே. 287

புங்கம்விதை, மனோசிலை, சங்கு, புளியாரைவேர், சொரித்துத்தம், ஏலம், அதிமதுரம், அரிசித்திப்பிலி, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல் ஆகியவற்றைச் சமன் எடையாக எடுத்துக்கொண்டு புளியாரைச் சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு நிலைமைக்கு ஏற்றவாறு துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடச் சிலேத்தும தோடங்களும், நீர்விழுகாசமும், சிவப்பு, தினவு, திமிரம், பில்லம் ஆகியவையும் தீரும்.

### சூதாத்திரைதி மாத்திரை

துத்தமே துருசு நெல்லி துய்யதோர் கடுக்காய் கூட
வித்தகப் புளியம்பூவும் வெண்டலை யொடுங் கூட்டிச்
சித்தமாம் பொன்னுங்காணி வெள்ளிபொன் செம்பி ரும்பு
பத்தியா யதனில் கூட்டப் பட்சமாய் மருந்து கேளே. 288

துத்தம், துருசு, நெல்லிவற்றல், கடுக்காய், புளியம்பூ, தலையோடு, பொன்னுங்காணி, வெள்ளி, பொன், செம்பு, இரும்பு இவற்றின் அரப்பொடி,

செறந்திரி கடுகிந் துப்பு திரிபலை மதுர மேலம்
மறந்தரு கரிமாத்தந்தம் மருவு சாரணை பளிங்கு
உறந்தரு முத்த கெந்தம் உயர்ந்ததோர் குதிரைத் தந்தம்
பொறந்தரும் பன்றி யின்பல் புலியின்பல் இவற்றி னோடே. 289

சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், அதிமதுரம், ஏலம், யானைத்தந்தம், வெள்ளைச் சாரணையின்வேர், அப்பிரகத்தகடு, சந்தனம், குதிரைப்பல், பன்றியின்பல், புலியின்பல்,

இலங்குமுத் தெருக்கஞ்செவி இதழ்க்கஞ்சக் குருவிநாக்கு
தலத்தில் குங்குமம் இரும்பு தாம்பிரத்துடனே பீங்கான்
நலத்திதம் புரியுந் துத்தம் துருசினிர் சமம் இரண்டு
தலத்தினிலது வெவ்வேறே தான்கழஞ்சியல்பாய்க் கூட்டே. 290

முத்தெருக்கஞ்செவி, தாமரை, குன்றிமணி, குங்குமப்பூ, இரும்பு, தாம்பிரம, பீங்கான், ஆகியவை வகைக்கு ஒரு கழஞ் சாகவும் துத்தம், துருசு வகைக்கு இரண்டு கழஞ்சாகவும் கூட்டிக் கொள்வாயாக.

கூட்டுநற் கழஞ்சு வெள்ளி கூரிங்கு கனகங் காலும்
ஈட்டமாம் புங்கு கையான் இயல்புட னிம்பச் சாறும்
வாட்டமில் ஒவ்வோர் சாமம் வகையிந்தப் படியே ஒக்க
நாட்டமா யரைத்துக் கூட்டி நலமுட னுருட்டிக் கொள்ளே. 291

வெள்ளி ஒரு கழஞ்சும், பொன் கால் கழஞ்சுஞ் சேர்த்துப் புங்கம் பாலாலும், கையாந்தகரைச் சாற்றினுலும், எலுமிச்சம் பழச்சாற்றினுலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சாமமாக அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு,

உருட்டியே நிழலு லர்த்தாய் உலர்த்தியே நீரிலிட் டால்
மருட்டிய புகைச்சல் தீரும் அல்லது கையா நீரில்
இருட்டில்லா மாலை நிம்பம் எழுபற்ப ரோகம் பித்தந்
திருட்டாமாங் காசம் பில்லந் திரளுமங் குழம்பனேகஞ்
சுரட்டது எல்லாந் தீருஞ் சூதரத்தினுதி யாமே. 292

உலர்த்திய மாத்திரையைத் தண்ணீரில் இழைத்துக் கண்ணில் இட்டால் கண்புகைச்சல் தீரும். கையாந்தகரைச் சாற்றில் இழைத்துக் கண்ணில் விட்டால் மாலைக்கண் தீரும். எலுமிச்சம் பழச்சாற்றில் இழைத்துக் கண்ணில் விட்டால் பற்பநோய், பித்த நோய்கள், காச நோய்கள், பில்லம் முதலியன தீரும்.

### இலகு சந்தனுதி மாத்திரை

வாசமுறு சந்தனம் பிச்ச மலரோ ரொன்று
வருகாசெடை யிரண்டலால்
வரிசையுள காவிக்கல் ரோசனை திப்பிலி
வகை சீரகங் காசெடை

நேசமுடனே தண்ணீர் வார்த்தரைத்தோர் சாமம்
நீளமே கயிறு செய்து
நிழல்தனி லுலர்த்தியே தனப்பாலிலிடு கண்ணில்
எரிவு சதை வளர்த்தி யல்லால்
காசமுடனே திமிரங் கண்குருடு பில்லமுங்
கடியதிவை இழிகண்ணுமே
கனலெரித் திடுமன்ன கோபமற் றதுவுமே
கண்ணுள்ள நோய்க ளெல்லாந்
தேசமுறும் ஆதவன் கண்ட விருள் போலவே
தீருமே யெட்டு நாளில்
சீர்பெற்ற வாகடந் தேர்ந்தவர்கள் கண்டபடி
சேர் சந்தனுதி யிதுவே. 293

**சந்தனம், சிறுசண்பகப்பூ, வகைக்கு இரண்டு காசு எடை, காவிக்கல், கோரோசனை, திப்பிலி, சீரகம் வகைக்கு ஒரு காசு எடை ஆகியவற்றை எல்லாம் தண்ணீர் விட்டு ஒரு சாமம் அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி, நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணில் போடக், கண் எரிவு சதை வளர்த்தி, காசம், திமிரம், கண் குருடு, பில்லம், இழி கண், அன்னகோபமாகிய நோய்களெல்லாம் எட்டு நாளில் சூரியனைக் கண்ட பணிபோல நீங்கும்.**

## நவரத்தினுதி மாத்திரை

தன்னுடன் பரிகழுதை மரைகரடி புலிமுதலை
சார்கின்ற ஒட்டை யுடனே
தள்மான நரியெருமை தங்குமுயல் நாயோடு
சலித்திடும் பூனையுடனே
குன்றுடன் கரிபன்றி கோஇவைகளின் பல்லுங்
கூடியே சேர்த்தெடுத்துக்
கொடிநாகரத்தோடு குக்கிடத் தண்டமுங்
கொன்ற துத்தந் துருசுமே
தன்னுடன் திரிகடுகு தன்னிமிளை யஞ்சனந்
தயங்கிவிளை நவரத்னமுந்
தளராம லுயர்கின்ற அரிதார சங்கமுந்
தான்றிகடு நெல்லிசமனுய்
உண்டிட அரைத்திடு நிம்பப்பழச்சாறு தனில்
உருண்டை செய்நிழலுலற்றி
உத்த படலங் காசந் திமிரமு ஒழியு
நவரத்னுதி யென்பதிதுவே. 294

குதிரை, கழுதை, மரை, கரடி, புலி, முதலை, ஒட்டகம், நரி, எருமை, முயல், நாய், பூனை, பன்றி, பசுமாடு ஆகியவற்றின் பல்லும், நாகர வண்டினோடு, அடை வைத்த கோழிமுட்டையோடு, துத்தம், துருசு, சுக்கு, மிளகு திப்பிலி, நிமிளை, அஞ்சனக்கல், நவரத்தினங்கள், அரிதாரம், சங்கு, தான்றிக்காய், கடுக்காய், நெல்லிவற்றல் ஆகியவற்றை எல்லாம் சமன் எடையாய் எடுத்துக் கொண்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடப் படலம், காசம், திமிரம் இவை தீரும்.

### சூரியகாந்திக் கயிறு

கருங்கொள்ளு முத்துடன் பவழமுந் துருசுமே காசெடை தானெடுத்துக்
காணியிலையும் புளி சங்கிலைச் சாற்றால் கருத்துடனரைத்த பின்பு
மருங்குடன் மதுரைக்கலத்தூரில் வைத்ததை வளர்சங்கிலையிழைத்து
மருவுடன் கயிறு செய்தே நிழலுலர்த்திவை மாதர்பால் பழச்சாற்றினில்
பெருங்கண்ணில் வந்ததொரு பில்லமும் படலமும் புகைச்சலுடனீர்ப்
பாய்ச்சலும்
பெருகுவெங்காசமுந் திமிரமும் போமதின்பேர் சூரியகாந்தி யெளிதில்
அருக்கன்முன் வந்த இருள் அகல்கின்ற தன்மைபோல் அரிய
கண்ணோய்களெல்லாம்
அகலுமென்றே முனம் பெரியோர்கள் சொன்னதிது அருஞ் சூரிய
காந்திக் கயிறே. 295

கருங்கொள்ளு, முத்து, பவழம், துருசு ஆகியவற்றை வகைக்கு ஒரு காசு எடையாக எடுத்துக்கொண்டு, பொன்னாங்காணியிலை, புளியிலை, சங்கிலை ஆகியவற்றின் சாறு விட்டுத் தனித்தனியாய் அரைத்து, செப்புப் பாத்திரத்தில் மருந்தைச் சிலநாள் வைத்திருந்து பிறகு அதையெடுத்து, கல்வத்தில் இட்டுச் சங்கிலைச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தனப்பாலிலாவது, எலுமிச்சம் பழச்சாற்றிலாவது இழைத்துக் கண்ணிலிடப் பில்லம், படலம், கண் புகைச்சல், நீர்ப்பாய்ச்சல், காசம், திமிரம் ஆகியவை தீரும். சூரியன் முற்பட்ட இருளானது விலகுவதுபோல் இம் மாத்திரையைக் கண்டவுடன் முன் கூறிய நோய்கள் நீங்குவதால் இதற்குச் சூரியகாந்திக்கயிறு என்ற பெயராகும்.

### இலிங்காதி மாத்திரை

புளியப் பரணிச் சாம்பலும் லிங்கமும் பொருந்தவே பணவெடையதாய்ப்
புகழ்பெரிய துத்தமுந் துருசுமோரரைப் பலம்போற்று வைரவன்
கபாலந்
தெளியவே காசிடை சீருடனெடுத்ததைச் சேரவே பொடிகள் செய்து
சிறப்புடன் காணியும் புளியிலை முசுக்கையுஞ் சேர்கையின் பழச்சாறதும்

வளியவே பெண்தனப்பால் தனிலரைத் துருண்டைசெய்து பின்னிழ
லுலர்த்தி
வருகின்ற புழுவெட்டு பில்லமும் பிரிச்சலும் வருகதிர் முன்போலவே
வெளியாகுமென்று முன் பெரியோர்கள் சொன்னபடி வேண்டியே
செய்வதன்றி
வீறுபெறு லிங்காதி குளிகையைப் புவிதனில் வெளிப்பட
உரைத்ததிதுவே. 296

**புளியம் பரணியைச் சுட்ட சாம்பல், இலிங்கம் இவ்விரண்டும் வகைக்கு ஒரு பணவிடை, துத்தம், துருசு இவ்விரண்டையும் வகைக்கு அரைப்பலம் நாயின் மண்டையோடு ஒரு காசு எடையாக நிறுத்துக்கொண்டு பொடிசெய்து பொன்னாங்காணி இலைச்சாறு, புளியிலைச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, தாய்ப்பால் முறையே இவற்றை விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி, நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு தாய்ப்பாலிலாவது, தண்ணீரிலாவது, இழைத்துக் கண்ணிலிடப் புழுவெட்டு, பில்லம், பிரிச்சல் ஆகிய நோய்கள் தீரும்.**

### வச்சிராயுத மாத்திரை

கருத்தசே வகனின்பொடியு நெஞ்செலும்புங் காயுடல்செந் தலைராசி
கிராம்புடன் மதியும்மிளகுடன் வெள்ளை சாரடை வேர்நிரை சரியாய்ப்
பெருத்தவெள் ளாட்டின்பித்தி லதனைப்பேணிநீ அரைத்திருசாமம்
பின்னெள்ளின் பூவால் அரைத்ததை மைபோல் பேணிய சீலையுளதனைத்
திருத்தமாய் மதியின் முகந்தனிலமைத்துத் தேயுவின் சுடரொளி
வருமுன்
தென்கையால் வழித்துக் கயிறதாயுருட்டித் திறமுடனிழல்தனிலுர்த்தி
வருத்தமாம் பில்லம் படலமே குந்தம் மருவிய பூமுதல் மந்தம்
வகைபெறு நங்கைமாதர் பால்நெருஞ்சில் வாங்குமிப் மேர்வச்சிரா
யுதமே. 297

### வச்சிராயுத மாத்திரை

செந்தலையுடனே சிறந்தமும் மூர்த்தி சிறப்புடன் சரியெடையெடுத்து
விந்தையாய்வேலிப் பருத்தின் ரசத்தால் மிருதிசை சாமமாயரைத்து
அந்தமாயோசை தனிலதை யுருட்டி அருமையாய் நிழல்தனி லுலர்த்தி
மந்தமாம் படலபூ முதலனைத்தும் வாங்குமிப்பேர் வச்சிராயுதமே. 298

### செம்பிராதி மாத்திரை

பூச்சிலை பவளம்மீது கல்லுஞ்சொரியன் புதுமையாய் மதமுடனதனில்
பின்கருமேகம் பலகரை பருவம்பேணுவான் மூனுடன்பீங்கான்
ஆச்சிது பேசினுறுசாஸ் திரத்தோடக்கினி சாலமீராறும்
அன்புள்ளசங்கு மையரைப்பலமாம் ஆனதோர் உருளைமுப்பலமும்

ஊச்சிது காட்டில் உமுரியின் நிரைகேள் வகைபலம் நாலரையாக
வரிசையாயிடித்து நிம்பச்சாறிட்டு வகையிரு சாமமாயரைத்துத்
தாச்சிதைவழித்துக் கயிறதாயுருட்டித் தயவுடன் னிழல்தனிலுலர்த்தித்
தாக்கிடிற் படலம் பூபில்லமகலுஞ் செம்பிராதியி யல்பிதுவாமே. 299

குருந்தக்கல், பவழம், வரால்மீன்கல், பால் துத்தம், வகைக்கு மூன்று வாரகன் எடை. துருசு, பலகரை ஆகியவை வகைக்கு பதினைந்து வராகன் எடை, வெள்ளி, பீங்கான் வகைக்கு ஆறு வராகன் எடை, கடல்நுரை பன்னிரண்டு வராகன் எடை, சங்கு இருபத்தைந்து வராகன்எடை, குஞ்சுபொரித்த அண்ட ஓடு முப்பது வாரகன் எடை, நாகரவண்டு நாற்பத்தைந்து வராகன் எடை ஆகியவற்றை இடித்துப் பழச்சாறு விட்டு இரண்டு சாமம் அரைத்து பதத்தில் வழித்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு தாய்ப்பாலிலாவது, தண்ணீரிலாவது இழைத்துக் கண்ணிலிடப் படலம், பூ, பில்லம் தீரும்.

### இராமபாண மாத்திரை

வெள்ளை காக்கணம்வேருங் கிராம்புடன்
துள்ளவே யிடித்துப்பழச் சாற்றினில்
மெள்ளமை போலரைத் துருண்டை செய்திடில்
இல்லைப்பூவும் இராமன்கைப் பாணமே. 300

வெள்ளைக்காக்கணம்வேர், கிராம்பு இவ் விரண்டையும் சம எடையாய் எடுத்துக் கொண்டு இடித்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தகுந்த துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடப் பூ தீரும்.

### (வேறு)

திரிகடுகு நலியாலம்வித்து திரிபலையுடன் சேருகறிமஞ்சளினும்
திறமான தாமரை வித்துளபருப்பதும் சேர்பச்சை பூரம்நிரைசேர்
பரிவுடனிடித்து வடிசெய்து சிலைதனிலரை பகர்கரிப்பானதுவுமே
பண்புடனிம்மரசம் விட்டரைநீ மயனப் பதமுடன் தான்வழித்து
வரிசையுள கயிறுசெய் நிழலிலுலர்த் தானதைவாங்கி முன்ரசத்
தெழுதிடில்
வரிசையுள விழிதனில்பரிச ரணசுக்கிரனும் வளர்படல விழிமுதலையும்
அருமையுள ஜெயராம பாணமிதன்பேர் சொலகன்று குடிபோகும்
நோய்கட்
கானதென பொதிகைமாமலை யகத்தியருரை செய்அருளு முறைநகை
பாகமே. 301

சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி. ஆலம்வித்து, கடுக்காய்த்தோல், தான்றித்தோல், நெல்லி முள்ளித்தோல், கறிமஞ்சள், தாமரைக்

கொட்டையினுள்ளிருக்கும் பருப்பு, பச்சைக் கற்பூரம் ஆகியவற்றைச் சமன் எடையாக நிறுத்து எடுத்துக்கொண்டு இடித்து வடிகட்டிக் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாறுவிட்டு அரைத்து, பிறகு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றில் இழைத்துக் கண்ணிலிட விரணசுக்கிரன், படலங்கள், விழி விழுங்கி ஆகியவை தீரும்.

### கனகமாமணி

ஆவினற்பல்லும் உழையதன் கொம்புங் கூனெலும்புடனே மதுரமுஞ் சங்கும்
அன்புடன்சோகி செந்தலைவான்மீன் அக்கினிசாலமும் ஆவினற் குளம்பும்
முத்தமாங்கிழங்கும் மேன்மையதாகச் சரிநிரை எடுத்து மின்பழச்சாறுங்
கோவினீருடனே மெழுகுபோ லதனையரைத்துவழித்து நீயன்பாய்
பூவில்வெண் கலத்துப்புறந் தனிலுருட்டிப் புதுமையாய் நிழலினி லுலர்த்திப்
போகுமேபில்லம் பிரிச்சலு மாணிப்பூமுதல் பொரிகள் கண்பூவுங்
காலினில் மறைந்துபோகு முன்ரசத்தில் கயிறதை இழைத்துமே எழுதில்
கனகமா மணியின்பே ரெனப்புவியில் கருத்தினு லுரைத்தனர்பிரித்தே.

பசுமாட்டின் பல், மான் கொம்பு, ஆமையோடு, அமதிதுரம், சங்கு, பலகரை, வெள்ளி, கடல் நுரை, பசுமாட்டின் குளம்பு, கோரைக்கிழங்கு, செந்தலை இவற்றைச் சமன் எடையாய் நிறுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றுலும், பசுமாட்டின் நீரினுலும் அரைத்து வழித்து வெண்கலத் தட்டில் விட்டு மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றில் இழைத்துக் கண்ணிலிடப் பில்லம், பிரிச்சல், ஆணிப்பூ, பொரிகளாகக் காணும் பூக்களும் தீரும்.

### கருமேக மாத்திரை

சொரியதன் கூடச்சதா சிவஞ்சரியாய்ச்
சொன்னதோர் சங்கமும்பூதஞ்
சோதனைப்படியே இரண்டதையெடுத்துச்
சுருதியாந் தேயுவில் வெதுப்பிப்
பிரியமாய் நிம்பரசந் தன்னலரைத்துப்
பேணியே வழித்ததை யுருட்டிப்
பின்புநீ கயிற்றை நிழல்தனி
லுலர்த்திப் பேதையர் பாலினுலெழுதில்

குறிப்புடன் கண்ணில் அமரமுந்
திமிரமுங் கூறியபூ முதலனைத்துங்
குணமதாங் கருத்தமேக மிட்பேரென்
றுரைத்தன ரறிவுளோ ரவர்முன்
அறிவுடன் புவியில் அகத்திய
முனிவர் அறைந்தனர் ஒருகவியதனில்
அன்பினு லறிந்து தெரிந்தவன்
வைத்தியன் அறிவிலான் மடையனென்றுரைரே. 303

பால்துத்தம், துருசு இவை இரண்டும் வகைக்கு ஒரு வராகன் எடை சங்கு ஐந்து வராகன் எடை எடுத்துக்கொண்டு துருசை நெருப்பில் இட்டுச்சுட்டுச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் வழித்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிட அமரம், திமிரம், பூ முதலியன தீரும்.

## இரணசிங்கி மாத்திரை

பொரியும் பூவிந்தும் தசமொன்றும் நிரைகொண்டு
புகழ்மா வதிலுளுந்தே நிரை அறுகாலரையதனைத்
திருவுஞ் சிலையதனில் பயமதனுல் மெழுகதுபோல்
திறமாயரைத்ததனை வழிபதமாய்க் கயிறளவாய்
அருளும்படி நிழல் மீதினில் கயிறனதை உலர்த்தி
அழகாயதை எடுத்துக் குழலடைத்துத் தினங்குறித்துக்
குருவாகிய கயிற்றை யெழில்ஜலமீதினி லிழைத்துக்
குணமாறிய ரணமீதினில் திலதமதை யிடுகில்
வெடிகின்றதோ ரிரணம்மது படர் தாமரையுடனே
ஏகும் அரிகிரந்தி சொரிகிரந்தி பருமுளையுங்
கொடிய பக்கப்பிளவை உச்சிப்பிளவை ராஜப்பிளவை
குடிபோம் லிங்கப்புற்று கண்டமாலை அழுகணியும்
படுமே பொத்துக்கடியாம் மேகரணம் ஆசனக்கிரந்தி
படும்புண்ணதின் கோழை வெளிகண்ட ரணமுதலாய்க்
கெடுமேயினம் விழிமீதினில் வரும் நோயிதன்விபரங்
கேளுமினி நோயின்வகை கிருபையுடனே யுரைப்பேன் 304

## (வேறு)

உரைப்போம் நிமைமீதில் பருவும் பருமுளையும்
ஓங்கும் ரணசுக்கிரனுடன் வீங்கும் விழிகுந்தம்
மறைப்பரகிவ படலம் சொரிபில்லம் நீர்ப்பில்லம்
வளர்க்கும் நிமைக்கழலையுடன் ஆருமது குவளை

விரைப்பாம் விழிச்சூடும் நிமைத்தடிப்பும் அதிற்சிவப்பும்
வெளிகண்டிடு மிதனையுடன் ஒளிமங்கிடும் ரணமும்
கரையாவிழிப் பூவும் அதில்நோயான தநேகம்
கதிர்முன் பனிபோலே வினைகலங்கிப் பயந்தோடும்
தீரும் வினையுளதும் அதில் இனமும் வினைதீரும்
ஜெயவீரிய ரணசிங்கியின் நாமம் உரைத்திடவே
ஆருமிதன் பொருளோர்ந்திடா அசடர்க்குரையாதே
அருள்மீறிய குணவானிடம் அமையுமிந்த நூலே
தேரும் புவியோர்க் கெய்திய திறமாகிய பொருளைத்
தென் பொதிகையில் முனிவோரதை திறமாய்ப்பின் வலுவாய்
ஆரும் பகிரண்டமெனும் புராணத் தொருவேதப்
புராணந்தரும் பொதிகைமலை முனியோதிய நூலே. 305

சாணிப்பாலில் ஊறவைத்து அலம்பித் தூய்மைசெய்த எண்ணெய் வெங்காரம் பத்து வராகன் எடை, வீரம் ஒரு வராகன் எடை, உளுந்தின்மா இரண்டு வராகன் எடையாக நிறுத்துக்கொண்டு கல்வத்தில் இட்டுத் தண்ணீர் விட்டு அரைத்து மெழுகு பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தண்ணீர் விட்டு மாத்திரையை இழைத்து இரணங்கள், படர் தாமரை, அரிகிரந்தி, சொரிகிரந்தி, பருக்கள், பக்கப்பிளவை, உச்சிப்பிளவை, ராஜப்பிளவை, லிங்கப்புற்று, கண்டமாலை, அழுகணி, பொத்துக்கடி, மேகரணம், ஆசனக்கிரந்தி, புண்களின் மேலுள்ள கோழை, வெளிப்பட்ட ரணங்கள் திரும். இன்னும் இதனுல் தீரும் கண் நோய்களைச் சொல்லுவேன் — இமைப்பரு, பருமுனை, இரணசுக்கிரன், விழிகுந்தம், படலம், சொரிப்பில்லம், நீர்ப்படலம், இமைக்கழலை, குவளை விரைப்பு, கண்சூடு, இமைத் தடிப்பு, இமைச் சிவப்பு, ஒளிமங்கும் நோய்கள் பலவித கண்பூக்கள் ஆகியவை தீரும்.

### மாலைத் திருமணி

துத்தங் கண்டாய் எலிப்புழுக்கை சொல்லோர் நிரையாய்க் காடிதனில்
வெற்றி பெறவே யரைத்துமைபோல் விரல்போல் செய்துலர்த்தி நீரில்
பத்தி யுரைத்துக் கண்ணிலிடப் பறக்கு மந்தி மாலையது
சத்தி யுரைத்த திருமணியைச் சங்கர னருளிச் செய்தாரே. 306

துத்தமும், எலிப்புழுக்கையும் சமன் எடையாய் எடுத்துக் கொண்டு காடிநீர் விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தண்ணீரில் இழைத்துக் கண்ணிலிட அந்திமாலை தீரும்.

### நயனமிர்த மாத்திரை

பந்திப்பரி தந்தத்தொடு பருபன்றியின் கோடும்
பசுவெள்ளியின் பொடியும் மிகுபரிவாகவே கொண்டு
விந்தைப்பட சரியாக வராகனெடை தன்னை
வேண்டிக்கையான் சாற்றிலினி தரைத்தே கயிறிழைத்து
முந்தத்திரிபொழு திட்டிடில் முளைப்பூவுட னிரணம்
மீளும் பதினெண் காசமும் முறிந்தோடுமே பறந்து
தந்திக்குருவருள் பெற்றிடு நயனமிர்தக் கயிற்றைத்
தரைமீதினில் பொதிமாமலை முனியோதினர் நலமே. 307

**குதிரைப் பல், பன்றிக் கொம்பு, வெள்ளி அரப்பொடி இவற்றைச் சமன் எடையாக நிறுத்து எடுத்துக்கொண்டு கையாந் தகரைச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தகுந்த துணைமருந்து களில் இழைத்துக் கண்ணிலிட மூன்று பொழுதில் முளைப்பூ, இரணமும் பதினெண் வகைக் காசமும் தீரும்.**

### சந்திரோதய மாத்திரை

குறித்ததோர் வெண்ணெய் வசம்போடு கோட்டம் கூறிய திப்பிலி மரீசம்
கொடியவெண் சங்குப்பொடி மனேசிலையும் குணம்பெறு மரமஞ்சளதுவும்
திறத்துடன் தான்றிக்காய் விதைப்பருப்பும் சிறப்புடன் சரியெடையெடுத்து
சேரவே பொடித்துப் பிள்ளையின் பாலால் சிலைதனிற் சாமமே யரைத்துச்
சறத்துடன் வழித்து கயிறு நிழலுலர்த்தித்தான் சங்கபானத்தாலிழைத்துத்
தரணியில் பிணியோர் விழிதனி லிடுகில் தானிமைத் தடிப்புடன் சிவப்பும்
உறத்ததுர் மாங்கிசம் பில்லமும் படலமோங்கிடும் தினவுடன்பூவும்
ஓதிடும் பூதநாளையில்கன்று உதித்திடும் சந்திரோதயமே. 308

**பசுவின் வெண்ணெய், வசம்பு, கோட்டம், அரிசித்திப்பிலி, மிளகு, சங்குப்பொடி, மனேசிலை, மரமஞ்சள், தான்றிக்காய் விதைக்குள்ளிருக்கும் பருப்பு இவற்றைச் சமன் எடையாய் எடுத்து நன்றாக இடித்துத் தூளாக்கி வெள்ளாட்டுப்பால் விட்டு நன்றாய் அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தித் தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிட இமைத்தடிப்பு, சிவப்பு, துர்மாமிசம், பில்லம், படலம், தினவு, பூ ஆகியவை ஐந்து நாளையில் அகன்றுபோம்.**

### சந்திரோதய மாத்திரை

கடுக்காய் திப்பிலி மனோசிலையுங் கனத்த சங்கு முடிகோட்டம்
முடுக்கா யுறைக்கும் மிளகுடனே முத்த வசம்பு குறிநிறையாய்
சடக்கா யரைத்து நீரதனுல் சாமம் வெள்ளாட் டுப்பாலால்
மடக்கி யரைத்து மைபோலே மாத்திரை செய்து நிழலுலர்த்தே.

கடுக்காய், திப்பிலி, மனோசிலை, சங்கு, கோட்டம், மிளகு, வசம்பு இவற்றைச் சமன் எடையாய் நிறுத்து எடுத்துக்கொண்டு நல்லநீர் விட்டு ஒரு சாமம் அரைத்துப் பதத்தில் மாத்திரை களாகத் திரட்டி நிழலில் உலர்த்தவும்.

உலர்த்தும் சந்திரோதய வடிவை உறைத்துப் போடு மிளகதுபோல்
பிலத்து வளர்ந்த சதைப்படலம் பித்த காச மாலைக்கண்
வலுத்த கண்ணின் வலியுடனே வருணச் சுக்கிரன் வாங்கிவிடும்
தலத்தோர் புகழும் மலைமுனிவர் சாற்றுமுறையைத் தான்பாரே. 310

உலர்த்திய சந்திரோதய மாத்திரையைத் தகுந்த துணைமருந்து களில் இழைத்துக் (மிளகளவு) கண்ணிலிடப் பலமாய் வளர்ந்து கிடக்கும் சதைப்படலம், பித்தகாசம், மாலைக்கண், கண்வலி, வருணசுக்கிரன் முதலியவை தீரும்.

### நீலகண்ட மாத்திரை

கண்டதொரு துருசொடுகண் ணுடியிதன் பொடிகீழ்க்
காய்நெல்லிச் சிறுகீரை கன்னியின்வே ரிவற்றைக்
கொண்டுகணக் கன்சாற்றி லரைகயிறு செய்பின்
கொடும்புளியின் சாற்றிலுரைத் தேவிழிகட் கெழுதில்
பண்டுவிழியிற் படலம் பில்லமொடு குந்தம்
பதித்திடும் பூவாணியிவை பிரிந்திடுவ துண்மை
நன்றிதரு நீலகண்ட நாமமிதன் பெருமை
நலமுடனே யகத்தியனுர் பலமெனச் செய்தாரே. 311

துருசு, அபிரேக்கத்தூள், கீழ்க்காய்நெல்லிவேர், சிறுகீரைவேர், சுற்றுழைவேர் இவற்றை எல்லாம் சமன் எடையாக நிறுத்து எடுத்துக்கொண்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு புளியிலையின் சாற்றில் இழைத்துக் கண்ணில் இட்டால் படலம், பில்லம், குந்தம், ஆணிப்பூ முதலியவை தீரும்.

### சந்திரப் பிரகாசம்

சந்திரப் பிரகாசமென்னும் உரையதனைச் சாற்றுகிறேன் மரீசமர
மஞ்சளோடு
கந்தக்கோரைக்கிழங்கு வேப்பமொட்டு கடுக்காயும் வாய்விளங்கம்
கனிவாய்த்தேடி
இந்தவகைக்கோர் நிறையா யெடுத்துக்கொண்டு விட்டரை
வெள்ளாட்டுநீர் தன்னால் நீயும்
அந்தமாம் மாத்திரைசெய் நிழலுலர்த்தி அழகான சிமிழிக்குள்
ளடைத்துக்கொள்ளே. 312

மிளகு, மரமஞ்சள், கோரைக்கிழங்கு, வேப்பமொட்டு, கடுக்காய்த்தோல், வாய்விளங்கம், இவற்றை எல்லாம் சமன் எடையாய் எடுத்துக்கொண்டு நன்றாய் இடித்துத் தூள் செய்து கொண்டு கல்வத்தில் இட்டு வெள்ளாட்டு நீர்விட்டு நன்றாய் அரைத்து, பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு,

குடத்தினது தண்ணீரில் உறைத்துப்போடக்
குணமாகுந் திமிரமுடன் கூடுங்கூடும்
அடைத்தேனி லுறைத்திடவே படலம்போகும்
ஆயிழையாள் தனப்பாலில் சுக்கிரன்பேரம்
திடமான கோசலத்தி லுறைத்துப்போடத்
தீங்கான பில்லமது தீர்ந்து போகும்
படைத்தபுவி மனுவோர்கள் பிழைக்கவேண்டிப்
பார்புகழும் மலைமுனிவர் பகர்ந்தநூலே. 313

சுத்த நீரில் இழைத்துக் கண்ணிலிடத் திமிரம் தீரும். தேனில் இழைத்துக் கண்ணிலிடப் படலம் தீரும். தாய்ப்பாலில் இழைத்துப் போடச் சுக்கிரன் தீரும். பசுவின் நீரில் இழைத்துப் போடப் பில்லம் தீரும்.

### விரணச் சதைக்கு

காவிக்கல்லு மரமஞ்சள் காட்டிலரக்குஞ் சந்தனமும்
பூவிற்சிறு சண்பகத்தரும்பும் பொருந்தவிவை தான்தண்ணீரால்
மாவிக்கினஞ்செய் விழிநல்லாய் மசியவரைத்தே கண்ணதனில்
மேவத்தேனில் பலநோவும் விரணஞ்சதையும் வெளியாமே. 314

காவிக்கல், மரமஞ்சள், அரக்கு, சந்தனம், சிறுசண்பக மொட்டு இவற்றைச் சமன் எடையாய் எடுத்துக்கொண்டு தண்ணீர் வார்த்து நன்றாய் அரைத்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தேனில் இழைத்துக் கண்ணி லிட விரணம், சதை வளர்த்தி முதலிய பல நோய்கள் தீரும்.

### பூ, புண்மேல் கொழுப்புக்கு

அடப்பம்விதை தண்ணீர் அதனு லெழுத
மடந்தையே கண்பூவை மாற்றும் – சடக்கெனவே
புண்மேல் கொழுப்புகளும் போமேகண் ணீர்விழுதல்
மண்மேல் மொழிந்தார் மகிழ்ந்து. 315

பாதாங்கோட்டைப் பருப்பைத் தண்ணீர் விட்டு இழைத்துக் கண்ணிலிடக் கண்பூ தீரும். புண்மேலுள்ள கொழுப்புந் தீரும். கண்ணில் நீர் வடிதல் தீரும். இக் காலத்தில் பாதாங் கொட்டை எண்ணெயையும் உபயோகிப்பது உண்டு.

### விழி புகைச்சலுக்கு

துருசு கடலி னுரைமிளகு திப்பிலி தாரந் திரிபலையும்
அரிசன மாமிரோ சனையும் ஆன துத்தம் அதிமதுரம்
பரிசன மான தனப்பாலில் பைய அரைத்தே எழுதிவிடத்
தெரிசன மாகும் விழிபுகைச்சல் தீரும் உள்ள நோய்களுமே. 316

துருசு, கடல்நுரை, மிளகு, அரிசித்திப்பிலி, அரிதாரம், கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளித் தோல், கோரோசனை, துத்தம், அதிமதுரம் ஆகியவற்றைச் சமனெடையாக நிறுத்து எடுத்துக்கொண்டு தாய்ப்பால் விட்டு அரைத்து மாத்திரைகளாகத் திரட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிடக் கண் புகைச்சல் தீரும். இன்னும் அநேக நோய்களும் தீரும்.

### ஆணிப்பூவுக்கு அஞ்சனம்

துத்தமுட னுப்பிலிக் கொடியோ டொக்கத்
துருசுவகை சமனுக நிறுத்து வைத்துச்
சுத்தாவின் வெண்ணெய்சமன் கூட்டி மைபோல்
தோணவரைத் தேசிமிழி லடைத்து வைத்துப்
பத்தியுடன் பயறளவு கண்ணில் போடப்
பலமான கண்ணுணி பூவுந்தீரும்
முத்திபெற்ற தென்பொதிகை மலையில் வாழும்
முனியுரைத்தார் அஞ்சனத்தின் முறைமை தானே. 317

துத்தம், உப்பிலிக்கொடி, துருசு இவற்றைச் சமனுக நிறுத்து எடுத்துக்கொண்டு கல்வத்திலிட்டு நன்ருய் மைபோல அரைத்து உருட்டி எடுத்துக்கொண்டு அதற்குச் சரிஎடையுள்ள பசு வெண்ணெய் சேர்த்து நன்ருய் அரைத்துச் செப்புச் சிமிழில் வைத்துக்கொண்டு சிறுபயிறளவு கண்ணிலிடக் கண்ணுணிப் பூக்கள் தீரும்.

### கண் வியாதிகளுக்கு

பூலாவேர் பத்துடனே பொன்பவளம் வெள்ளிமுத்து
சீலார்திப் பிலிபூரஞ் செம்புதுத்தம்—மேலாம்
தலையோடு ரோசனையுந் சம்பழச் சாற்றில்
விலகிவிடுங் கண்ணோய்கள் விட்டு. 318

பூலாவேரின் மேற்றோல், பொன், பவளம், வெள்ளி, முத்து அரிசித்திப்பிலி, பச்சைக் கற்பூரம், செம்புஅரப்பொடி, துத்தம், தலையோடு, கோரோசனை இவைகளைச் சமனெடையாக நிறுத்து எடுத்துக்கொண்டு பழச்சாறு விட்டரைத்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, துணைமருந்துகளைத் தெரிந்து அதில் மாத்திரையை இழைத்துக் கண்ணிலிடக் கண் நோய்கள் தீரும்.

### கண் வியாதிகளுக்கு

சந்தன மனோசிலை தயங்கிடு பளிங்கு
சங்குகடு காரமொடு பூரமிவைக் கொண்டு
வந்தமர மஞ்சளுட னஞ்சனமோ டிந்து
வண்மைபெற அன்பாக வேசேர்த்து நீதான்
கந்தமுள காந்தமுடன் லிங்கமு தலாகக்
காதல்மிகு பீதரோகணி நீர்வார்த்தரைத்துச்
சிந்தைநல்ல மங்கையர்கள் பாலிலுறையலது
தேனிலுறை யெழுது விழிநோய்கள் பலபோமே. 319

சந்தனம், மனோசிலை, அப்பிரகம், சங்கு, சீனக்காரம், பச்சைக் கற்பூரம், மரமஞ்சள், அஞ்சனம், இந்துப்பு, காந்தம், இலிங்கம், பீதரோகணி இவைகளைச் சமனெடையாய் எடுத்துக்கொண்டு நீர்வார்த்தரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தாய்ப்பாலிலாவது, தேனிலாவது நிலைமைக்கேற்றவாறு இழைத்துக் கண்ணிலிடக் கண் நோய்கள் பலவும் தீரும்.

### கண் நோய் தொண்ணூற்றாறுக்கும்

சூதத் திரட்டிக் காரியஞ் சொரியார் துத்த மதற்கிரட்டி
சாதித் தங்க மதற்கிரட்டி தங்கத் திரட்டி :தாம்பிரமும்
ஏதிட் டரைப்போ மென்றெண்ண திசைந்த திரிபலைச்சாற்றரைத்து
ஓதிக் கண்ணோய் தொண்ணூற்று றென்று மில்லா தோடிடுமே.

சூதம் ஒன்று, காரீயம் இரண்டு, துத்தம் நாலு, சங்கு எட்டு, தங்கம் ஒன்று, தாம்பிர அரப்பொடி இரண்டு இந்த எடையாக நிறுத்தெடுத்துக் கொண்டு திரிபலைக் குடிநீர் விட்டரைத்துப்

பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு பொருத்தமான துணைமருந்துகளிலிழைத்துக் கண்ணில் இடத் தொண்ணூற்றுறு நோய்களும் தீரும்.

### வெள்ளெழுத்துக்கு

புங்கம் விதைகொண்டு புறத்தோ லதைச்சீவிப்
பங்கப் படுத்தியதன் பால்பிழிந்து—நங்காய்கேள்
கோரோ சனைகோட்டங் குங்குமப்பூ கூட்டெழுதில்
ஓரோ சனைதோன்றுங் கண். 321

புங்கம் விதையை மேற்றோலை எடுத்துவிட்டு நறுக்கிப் பால் பிழிந்துகொண்டு, கோரோசனை, கோட்டம், குங்குமப்பூ இவை களைச் சமனெடையாய் நிறுத்துப்போட்டு முற்சொன்ன புங்கம் விதையின் பால் விட்டரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தூய நீரில் இழைத்துக் கண்ணிலிட வெள்ளெழுத்துத் தீரும்.

### வெள்ளெழுத்துக்கு

அகத்திப் பழுப்புச்சா றப்பனே கண்ணிலிட
மகத்துவத்தைக் கேளுமினி மாண்பார்—செகத்தினிலே
வெள்ளெழுத்தை நீக்கும் விளங்குந் திரிபொழுதில்
உள்ளபடி சொன்ன ருவந்து. 322

அகத்திப் பழுப்பை நசுக்கிச் சாறு பிழிந்து வடிகட்டிக் கண்ணி லிட வெள்ளெழுத்துத் தீரும்.

### கண் தெளிவுக்கு

மரிசங்கால் நெல்லியரை வாளரவின் நெல்லின்
பொரியனைய புங்கரிசி முக்கால்—கரிசாலைச்
சாற்றி லரைத்துருண்டை தண்ணீரில் தேய்த்துவிடில்
தோற்றுமீன் தோற்றும் பகல். 323

மிளகு கால் வராகன் எடை, நெல்லிவற்றலின் தோல் அரை வராகனெடை, மேல்தோல் நீக்கிய புங்கம் விதை முக்கால் வராகனெடையாக நிறுத்தெடுத்துக் கொண்டு, கையாந்தகரைச் சாறுவிட்டரைத்துப் பதத்தில் மாத்திரையாகத் திரட்டி, நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு, தண்ணீரிலிழைத்துக் கண்ணிலிட பகலில் சிறு நட்சத்திரங்களும் தெரியும்படி தெளிவடையும்.

### கண்ணோய் தொண்ணூற்றுறுக்கும்

பொன்னாங் காணி சிறுகீரை புளியம் பூவும் பூலாவேர்
சொன்னோங் காணுந் திரிபலையுந் துத்தந் துருசு தானிந்து
தன்னு லொவ்வொன் றிருகழஞ்சு தனியே புளியிலை சாற்றரைத்துச்
சொன்னேங் கண்ணி லுறுபிணிகள் தொண்ணூற் றுறுந்
தீர்ந்திடுமே. 324

பொன்னாங்காணி வேர், சிறுகீரை வேர், புளியம்பூ, பூலாவேர் கடுக்காய்த் தோல், நெல்லி வற்றல் தோல், தான்றிக்காய்த் தோல், துத்தம், துருசு, இந்துப்பு இவைகளைச் சமனெடையாய் நிறுத்து எடுத்துக் கொண்டு புளியிலைச் சாறுவிட்டரைத்துப் பதத்தில் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்திக் கொண்டு துணைமருந்துகளில் இழைத்துக் கண்ணிலிடக் கண் நோய்கள் தொண்ணூற்றுறுந் தீரும்.

### அந்தி மாலைக்கு

காதுக் குறும்பி யொருபங்கு கருந்தே னிரண்டு பங்குகொடு
போதப் பன்னிரு நாழிகைநீ பொருந்த வரைத்தே யந்தியிலே
ஓதுங் கணிலைந் தாறுபோ துகந்திட் டாற்போம் பார்மயிலே
போது மந்தி மாலையென முனிவ ராய்ந்து புகன்றனரே. 325

காதுக்குறும்பி ஒருபங்கு, தேன் இரண்டுபங்கு சேர்த்துப் பன்னிரண்டு நாழிகை அரைத்து வைத்துக் கெண்டு, மாலை நேரங்களிலே கண்ணிலிட்டால், ஐந்தாறு பொழுதில் அந்தி மாலை தீரும்.

### அந்தி மாலைக்கு

மின்மினிப் பூச்சிதன்னை அமுதினுள் வைத்திரவினிலே நீவிழுங்கிடில்
நின்னயத்துடனோர் மூன்றிரவுமே நீ விழுங்கிடிலோ விழிமாலைபோம்
சொன்ன இம்முறைதன்னை நம்மீசனுர் சோதியாருமையாளுட னோதிட
மண்ணில்வாழும் அகத்தியமாமுனி வரிசைபெற்ற வகையிதென்
றோதினுர். 326

மின்மினிப் பூச்சியைப் பிடித்து வெல்லத்தில் வைத்துப் பொதிந்து மூன்று நாள் விழுங்க அந்திமாலை தீரும்.

தும்பை வேர்க்கொம்பு சுகந்தமரீசமுடன்
கம்பிப் பிசின்போலே கண்டரைத்து—அம்புவியில்
மாலைவிழி யோர்தமக்கு மாட்டு திரிபொழுது
வேலைப் பழித்தவடி வேல். 327

தும்பையிலை, சுக்கு, மிளகு இவற்றைச் சமனெடையாய்ச் சேர்த்தரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு தண்ணிரிலிழைத்து மூன்று பொழுது கண்ணிலிட அந்திமாலை தீரும்.

### பூ சதைக்கு உருண்டை

சீமைசவுக் காரமுடன் சேரவே கல்லுப்பும்
வேமைபழச் சாறுவிட்டு வெண்கலத்தில்—போமிழைத்துக்
கண்ணிலிடப் பூமுதலாய்க் கனத்த சதையுளதும்
விண்ணதனி லோடும் விரைந்து. 328

சீமைச்சவுக்காரமும், கல்லுப்புஞ் சமனெடையாய் நிறுத்து எடுத்துக் கொண்டு, வெண்கலக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துக் கண்ணிலிடப் பூக்களும் சதையுங் கரைந்துபோகும்.

### பில்லத்துக்கு உக்கா உருண்டை

உக்கா குழலழுக்கை யோர்ந்துபழச் சாற்றிழைத்து
மிக்கான கண்ணிலிட மேதினியில்—சிக்காஞ்
சதைசதைத்த பில்லமுடன் சண்டாளப் பூவும்
பதைபதைத்தே யோடும் பயந்து. 229

உக்காவின் குழாய்க்குள்ளிருக்கும் அழுக்கை எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றிலிழைத்துக் கண்ணிலிட நீர்ப்பில்லமும் பூவுந் தீரும்.

### கண்பூவுக்குப் பிழிமருந்து

நந்தியின்மலரும் முருங்கையின்மலரும் நெருஞ்சியின்மலரு நீர்முளியும்
விந்தைசேர் சிங்கபாணமா மலரும் விதமுடனறுக்கி யோர்கிழிசெய்
சிந்தையால் விழியில் வந்ததோர் பூவில் செலுத்தியே நீவிடிலன்றே
முந்தித்தீ வினையால்வந்த பூக்கரைந்து விழிசந்திர னொளியதாய்
விடுமே. 330

நந்தியாவர்த்திப்பூ, முருங்கைப்பூ, நெருஞ்சிப்பூ, நீர்முள்ளிப்பூ, ஆடாதோடைப்பூ ஆகியவற்றை யெல்லாம் சமனெடையாய் எடுத்து நறுக்கித் துணியில் ஒரு முடியாகக் கட்டிப் பூ விழுந்த கண்ணில் பிழியத் தீவினையால் வந்த பூக்கள் கரைந்து பகலில் சந்திரனொளியைப் போல் பிரகாசமுண்டாகும்.

### கண் ஆணிப் பூவுக்கு

பீதரோ கணியுஞ் சுக்கும் பொருந்திய தலையி னோடும்
நேதமோ ரிதழின் வேரும் நிரையது மூன்ற தாகத்
தூதனுந் துருசு பச்சை வளையலுஞ் சொல்ரெண் டாக
வேதமாம் வராகக் கொம்பு வெள்ளைகாக் கணத்தின் வேரே. 331

பீதரோகணி, சுக்கு, தலையோடு, ஓரிதழ்த்தாமரைவேர் இந் நான்கும் வகைக்கு மூன்று வராகன் எடை, துருசு, பச்சை வளையல் இவ் விரண்டும் வகைக்கு இரண்டு வராகன் எடை, பன்றிக்கொம்பு, வெண் காக்கணவேர் இவை வகைக்கு நான்கு வராகன் எடை.

இதுதனைக் கொண்டு கூட்டி ஏற்றதோர் தனப்பால் வார்த்துக்
கதிபெற வரைத்துச் சாமங் கயிறதாய்ப் பிடித்து லர்த்தித்
துதிபெறுங் கண்ணிற் ரேட ந் தொண்ணூற்ற றுக்கு மாகும்
மதிசெயு மனுபானத்தில் வைக்கக் கண்ணுணி போமே. 332

**முன் கூறிய எடைப்படி சேர்த்துத் தாய்ப்பால்விட்டு அரைத்து மாத்திரைகளாகத் திரட்டி, நிழலில் உலர்த்தி, துணைமருந்துகளிட ஆணிப்பூ தீரும். தொண்ணுற்ருறு நோய்களும் தீரும்.**

### படலம் திமிரம் தினவுக்கு

பச்சைத்தேன் விட்டுப் பலகறையைத் தேய்த்தெடுத்து
இச்சையுட னேவிழியி லிட்டிடிலோ—மெச்சு
படலந்திமி ரந்தினவும் பரியு மிருபொழுதில்
வடகடலிற் செல்லும்நோய் மாண்டு. 333

**உறைகல்லில் தேன் விட்டுப் பலகரையை இழைத்துக் கண்ணிவிடப் படலம், திமிரம், தினவு, இவை தீரும்.**

### பூ படலங்களுக்கு பிரயோகம்

கல்லின் நன்மை முருங்கைப் பூவாவது கனத்தமாதுளம் பூரசமாவதில்
நெல்லிற் பாதியுரைத்துக் கண்பூவினில் நேரதாயிடக்காலையு மாலையும்
வெல்லுமே யொருவாரம தனிலே விளைந்தபூவும் படலமுந்தன்னுடன்
வல்லமாம் பொதி வாழு மகத்தியர் வரிசைபெற்ற முறையோதினரே

**மச்ச ரத்தினத்தை முருங்கைப்பூ ரசத்திலாவது, மாதுளம் பூ ரசத்திலாவது நெல்லில் பாதியளவு இழைத்துக் காலையிலும் மாலையிலும் கண்ணிலிடக் கண் பூ, படலம் இவை தீரும்.**

### பூவுக்கு

வாய் விளங்கம் போலாலம் பாலெடுத்து வரைக்கடுகு போற்சேரு பச்சைப்பூரம்
ஞாயமுற மத்தித்துவிழி தனிலேஐந்துநாள் போடப்போ மிரண்டுமாதப் பூவும்
மாய்ந்திடும் பாலப் பிரகாசம் உறைக்கில் மகா குணமாம் விழிநோய்க ளகன்று போகும்
ஈய்ந்துலகில் வைத்தியர்கள் பிழைக்கவேண்டி இப்புவியில் மலை முனிவர் இயம்பினரே. 335

### காசக் குழம்பு

மிளகு பெருங்காயம் மேதினிமேல் நாகம்
அளவொன்று இரண்டு மூன்ருகப்—புளியிலையின்
சாற்ருல ரைத்துமிகத் தன்னில்தேன் விட்டிளக்கித்
தோற்ருபின் தோற்றுஞ் சுடர். 336

மிளகு ஒரு வராகன் எடை, பெருங்காயம் இரண்டு வராகன் எடை, சிறு நாகப்பூ மூன்று வராகன் எடையாக நிறுத்து எடுத்துக் கொண்டு, புளியின் இலைச்சாறும் தேனும் விட்டு அரைத்துக் குழம்பாக வைத்துக்கொண்டு சிறு பயறு அளவு கண்ணிலிடக் கண் பிரகாசமாகும்.

### லவணக் குழம்பு

இந்துப்பு மாந்த ரெலும்புபொடி யொன்ருக்கித்
தொந்த முடன்தூ துளம்பழத்தின்—வந்தரசம்
வாங்கிக் கலத்திழைத்து மையாக்கிக் கண்ணிலிட
ஓங்குபில்லங் காசம்போம் ஓது. 337

இந்துப்பு, மனிதர் எலும்பு இவை இரண்டையும் சமன் எடையாக எடுத்துக்கொண்டு தூதுளம்பழச் சாறு விட்டுக் குழம்பாக அரைத்து வைத்துக்கொண்டு கண்ணிலிடப் பில்லமும், காசமும் தீரும்.

### இளநீர்க் குழம்பு

பொன்னாங் காணி சிறுகீரை புதிய கந்தம் விலாமிச்சந்
தன்னுர் நெல்லிக் கடுதான்றித் தாவும் வசம்போ டதிமதுரம்
மன்னுர் நல்ல மரமஞ்சள் மசியக் கொண்டு அரைத்திட்டு
என்னு இளநீ ரெண்ணுழ விதனே டொக்கக் கலந்துகொள்ளே. 338

பொன்னாங்காணி கீரை, சிறுகீரை, புதிதாய் இழைத்த சந்தனம், விலாமிச்சவேர், நெல்லிவற்றல்தோல், கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், வசம்பு, அதிமதுரம், மரமஞ்சள் இவற்றைச் சமன் எடையாய்ச் சேர்த்து மசியும் படியாக நன்ருய் அரைத்துக்கொண்டு எட்டு நாழி இளநீரை வடிகட்டி அதோடு சேர்த்து அரைத்து வைக்கக் குழம்பாகும்.

### நன்னரிக் குழம்பு

நன்னரி பச்சை கற்பூரம் நயந்தே காலதாய்க் கொண்டு
ஒன்ருய்த் தட்டிப் பொடிசெய்து தூவிக் காய்ச்சிக் குழம்பிஞல்
சொன்னேஞ் சொன்னேங் கண்ணிலிடத் தோற்றும் நன்னரிக் குழம்பே
அன்னுன் அழிகண் பற்பமுதல் அடுத்த பில்லந் தான்போமே. 339

நன்னரி வேரை நன்ரு யிடித்துத் தூள்செய்து துணியில் வடிகட்டின தூள் ஒரு வராகனெடை, கால் வராகனெடை பச்சைக் கற்பூரம் இவ் விரண்டையுஞ் சேர்த்துக் குழம்பாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு கண்ணிலிட அழிகண், பற்பரோகம், பில்லம் ஆகியவை தீரும்.

### ஒழுக்கு மருந்து

திரிகடு தேத்தான் கொட்டை தெளிசினிக் காரந் துத்த
முறுமருந் தாறுமொக்க ஒன்றுநீ சமனு னுக்கிக்
கருவுவெட் பூலாச் சாற்றில் கரைத்துநீ தெளித்துக் காய்ச்சி
மறுபட விழியொ ழுக்க எழுச்சிநோய் மாய்ந்து போமே. 340

### இளநீர்க் குழம்பு

இள நீர் பாலும் நன்னாரி இருவேல் மதுரஞ் சந்தனமும்
வளமாய் நெய்தல் நல்லெண்ணெய் மருவும் பதமாய்த் தான்காய்ச்சி
உளையுங் கண்ணில் வார்த்துவிடில் உடைந்தே போகுங் கண்விரணந்
தெளியுங் கண்ணேயுள்ளதெல்லாம் தீரும் பிணிகள் தானிதுவே. 341

**இளநீர், ஆவின்பால், நன்னாரி, விலாமிச்சவேர், அதிமதுரம், சந்தனம், நெய்தல் கிழங்கு, நல்லெண்ணெய் இவற்றைச் சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி வைத்துக்கொண்டு கண்ணிலிடக் கண்ணுளைவு, கண்விரணம் இன்னும் கண்வியாதிகள் அனேகந் தீரும்.**

### வேறு

இள நீரில் திரிபலையை யிட்டு மரமஞ்சள்
வளமாயதிமதுரம் வைத்துக்—களகளெனக்
காய்ச்சிநீ யிந்துப்பு கற்பூரம் தேன்கலந்தால்
வாய்த்தவிள நீர்க்குழம்பாம் வை. 342

கண்ணிற்பூ சதைவளர்ச்சி கனத்தசூ டிவற்றை நீக்கும்
கண்ணெரிச் சலுமே போகும் கண்ணினிற்குளிர்ச்சி யெய்தும்
மண்ணினி லெதனு லென்றல் மைவிழி மாதேகேளாய்
நண்ணிள நீர்க்குழம்பின் நல்லுப யோகத் தானே. 343

**கண்ணில்பூ, தசை வளர்ச்சி, சூடு, கண்ணெரிச்சல் இவற்றை நீக்கிக் குளிர்ச்சி தருவதிதுவே. விபரம்:—**

**இளநீர் சேர் 6. கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல் தோல், தான்றிக்காய்த்தோல் வகைக்கு ஒரு பலம், மரமஞ்சள் 1 பலம். அதிமதுரம் 1 பலம் இவற்றை யிடித்துத் தூளாக்கித் துணியில் வடிகட்டி அதை ஒரு புதிய சட்டியில் இளநீரிவிட்டு மூன்றுநாள் ஊற வைத்து நாலாம் நாள் நன்றாகப் பிசைந்து அடுப்பிலேற்றி நாலில் ஒருபாகமாகச் சுண்டவைத்துத் துணியில்வடிகட்டி ஒரு பீங்கானில் ஊற்றிவைத்து அந்தச் சட்டியை நன்றாய் உள்ளும் புறமுந் தூய்மை செய்துமேற்படி கியாழத்தைச் சட்டியில் ஊற்றி நாலிலொன்றாய்ச் சுண்ட எரித்து வடிகட்டிக்கொண்டு பச்சைக்கற்பூரம் ஒரு வராகன் எடை, இந்துப்பு அரை வராகன் எடை இவை இரண்டையும்**

கல்வத்தில் இட்டு நன்ருய்ப் பொடிசெய்து குடிநீரை அதில் ஊற்றி நல்ல தேன் அரை வராகன் எடை சேர்த்து நன்ருய் அரைத்து வைத்துக் கொள்வாயாக.

வேறு

கற்ருழைக் கையாந்தகரை கடியஆரை சிறுகீரை
பொற்ருங்காணி தாமரையும் போற்றும்நெல்லி முளிவேலி
உற்றேயிடித்துத் தெங்கிள நீருடனேமட்டைச் சாறுவிட்டு
முத்தாஞல் முன்வெயிலில் வைத்துமூடிப் பிழிந்துவடிகொள்ளே.

சோற்றுக் கற்ருழைச்சாறு, கையாந்தகரைச்சாறு, ஆரை இலேச்சாறு, சிறுகீரைச்சாறு, பொன்ஞங்காணிச்சாறு, தாமரை இலேச்சாறு, வேலிப்பருத்திச்சாறு, இவற்றை வகைக்கு அரைச் சேராக எடுத்து ஒன்ருய்ச் சேர்த்துக் கொண்டு அதில் நெல்லி முள்ளித்தோல் ஒரு பலம் நன்ருயிடித்து வடிகட்டிப் போட்டு, இளநீர் அரை சேர், இளநீர் மட்டைச்சாறு அரை சேர், அதில் விட்டுப் பாத்திரத்திற்கு வேடுகட்டி மேலே சட்டிகொண்டு மூடி வெயிலில்வைத்து மூன்ரும் நாள் வடிகட்டிப் பிழிந்து சீசாவில் வைத்துக் கொள்வாயாக.

வேறு

நித்த மஞ்சள் மரமஞ்சள் நேருங் கோட்ட மதிமதுரம்
சித்தார் காவளே யெலுமிச்சம் பழநீர் சமஞய் நிரைகூட்டி
வித்தா ரிவைகள் பொடிதூவி வேகக் காய்ச்சிப் பிழிந்தெடுத்துச்
சுத்தார் சுத்தஞ்சமன் கொண்டு தோன்றும்பூரந் தேன்கொண்டு
பத்தாய்க்கலத்தின் புறத்திழைக்கிற் பகரு மிள நீர்க் குழம்பிதுவே.

மஞ்சள், மரமஞ்சள், கோட்டம், அதிமதுரம் ஆகியவற்றைச் சமன் எடையாய் எடுத்து இடித்து வடிகட்டி, இளநீர், எலுமிச்சம் பழச்சாறு இவ் விரண்டையும் சமஞய்ச் சேர்த்து முற்கூறிய தூளேத் தூவி நாலில் ஒரு பாகமாய்ச் சுண்ட எரித்து வடிகட்டிப் பச்சைக் கற்பூரம், தேன் இவற்றைச் சேர்த்து அரைத்து வைக்க இளநீர்க் குழம்பாகும்.

வேறு

செவ்விளநீர் குறுணியதில் பொன்ஞங் காணி
சிறுகீரை அதிமதுரம் சிறந்த ஏலம்
நவ்விதிரி பலேயும்மர மஞ்சள் கோட்டம்
நற்சீரகம் இருவேலில வங்கப் பட்டை
அவ்வியுளஞ் சந்தனமும் பலமோ ரொன்று
அதற்கெடையாய் இளநீரும் நாலொன் ருக்கிப்
பவ்விபெற வடித்திதனேக் குழம்பு காய்ச்சிப்
பதந்தனிலே யிடுமருந்து பகரக் கேளே. 345

செவ்விளநீர் ஒரு குறுணி ஒரு சட்டியில் விட்டு அதில் பொன்னாங்காணி, சிறுகீரை. அதிமதுரம், ஏலம், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல். நெல்லிமுள்ளித்தோல், மரமஞ்சள், கோட்டம், சீரகம், விலாமிச்சவேர், இலவங்கப்பட்டை, சந்தனம் வகைக்கு ஒரு பலம் எடுத்து இடித்து, வடிகட்டி இளநீரில் போட்டு நான்கில் ஒன்ருகக் காய்ச்சி வடித்துக் குழம்பாக வைத்துக்கொண்டு இன்னும் அதிலிடும் மருந்தைக் கேட்பாயாக.

கேளுமே துருசு துத்தம் பீதரோகணி
கிருபையாம் பூரம் அஞ்சனக்கல் கூட்டி
நாளுமே பூரத்தில் இழைத்துக் கண்ணில்
நன்மைபெற இருபோது நயனத் திட்டால்
மாளுமே நீர்ப்பாய்ச்சல் புகைச்சல் பில்லம்
மயங்கு பற்பரோக முதல்வாத காசம்
பாளுமே படலமுடன் பிரிச்சல் தானும்
பண்பாகத் தீருமென்றே பரமன் சொன்னர். 347

துருசு, துத்தம், பீதரோகணி, பச்சைக்கற்பூரம். அஞ்சனக்கல் இவற்றைச் சேர்த்து அரைத்துக் குழம்பைக் காலையிலும் மாலையிலும் கண்ணிலிட நீர்ப்பாய்ச்சல், புகைச்சல், பில்லம், பற்ப நோய், வாத காசம் முதலியவை தீரும்.

### பொடுதலைக் குழம்பு

தாவுந் தலையில் பொடுதலையைத் தயங்கக் காய்ச்சி வடிகொண்டு
மேவுங்கடுக்காய் இந்துப்பு விரவுந் துத்தந் துருசுபொடி
தாவும் பூரந் தான்சேர்த்துத் துய்ய பரணி தனிலடைத்துக்
கூவும் பொடுதலைக் குழம்பினிடிற் குந்தந் தீருங் கண்டீரே. 348

பொடுதலையை இடித்துச் சாறு பிழிந்து ஒரு புதுச்சட்டியில் ஆறு சேர்விட்டு அதில் கடுக்காய்த்தோல் 1 பலம், துத்தம் 1 பலம், துருசு 1 வராகன் எடை இவற்றைப் பொடி செய்து போட்டுக் காய்ச்சி நான்கில் ஒன்றாய்ச் சுண்டினவுடன் இறக்கிக்கொண்டு இந்துப்பு அரை வராகன் எடை, பச்சைக் கற்பூரம் ஒரு வராகன் எடை சேர்த்து இவற்றைப் பொடித்துப்போட்டுக் குழம்பைப் பரணியில் அடைத்து வைத்துக்கொண்டு கண்ணிலிடக் குந்தந் தீரும்.

### மான் குழம்பு

மானின் கொம்பு வளர்பெற ஆவினெய்
தேனில் நேக உரைத்துச் செலுத்திடக்
ஞான மாமுனி சொன்னதைக் கண்ணினில்
ஊன மான படலங்க ளோடுமே. 349

கலைமான் கொம்பை ஆவின் நெய்யிலும் தேனிலும் நேக இழைத்துக் குழம்பாக வைத்துக்கொண்டு கண்ணிலிடப் படலங்கள் தீரும்.

### காக்கணக் குழம்பு

வெள்ளைக் காக்கண வித்தினை ஆவினெய்
வள்ளத்தின் புறத்தே வைத்துக் கெட்டியாய்
உள்ள செம்பு கொண்டொக்க வரைத்திடக்
கள்ள மான படலங் கரையுமே. 350

வெள்ளைக்காக்கண விதையும் செம்பு அரப்பொடியும் சமன் எடையாய் எடுத்துக்கொண்டு ஆவின் நெய் விட்டுத் தாம்பிரப் பொடி கரையும்படி அரைத்துக் குழம்பாக வைத்துக்கொண்டு கண்ணிலிடப் படலங்கள் தீரும்.

### கற்பூராதிக் குழம்பு

ஓடிடும் புளியம் பூவும் உயர்ந்திடுங் கபாலஞ் சுக்கும்
வாடிடும் பூரங்கண்டு மருவு சர்க்கரை மரீசம்
கூடுதிப் பிலியே தான்றி கூர்திரி பலையும் வித்தும்
நாடுநிம் பத்தால் தேனுல் நயனகற் பூரக் கூட்டே. 351

புளியம்பூ, மனிதர் தலையோடு பச்சைக்கற்பூரம், கற்கண்டு, சர்க்கரை, மிளகு, திப்பிலி, தான்றிக்காய்த்தோல், கடுக்காய்த் தோல் நெல்லிவற்றல் தோல் இவற்றைச் சமன் எடையாய்ச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாறும் தேனும் விட்டு அரைத்து வைக்கக் கற்பூராதிக் குழம்பாகும்.

### வேறு

வெய்யபடிகந் துத்தம் மிளகு திப்பிலி சங்கு வீரசீதைத் துருசியும்
வீசுகற்பூரமும் வெள்ளை நுரை நிமிளையும் மேலான தேற்ருன்விரை
செய்ய மரமஞ்சளும் பீதரோகணி நந்தி திகழ்மனேசிலை தேனுடன்
சேரவே கூடக்குழம்பு செய்தே பின்பு சிந்தாத சிமிழில்வைத்து
ஐயமற வந்ததொரு அந்தகர்கள் கண்ணிலிடு ஐந்தாறு நாளெண்ணியே
அப்பொழுது வெளிசெயும் கற்பூரக் குழம்பினது அடைவுமீ தல்லாமலே
துய்யகாசம் படலம் நொய்ய காசத்தடைவு தொலையாது எண்ணுமலே
தொண்ணூறு மாறுமுள கண்ணேய்கள் தீருமிது சொன்னேமி
தாறுமிகவே. 352

படிகம், துத்தம், மிளகு, திப்பிலி, சங்கு, வீரம், துருசு, பச்சைக் கற்பூரம், கடல்நுரை, நிமிளை, தேற்ருன்கொட்டை, மரமஞ்சள், பீதரோகணி, மனேசிலை, தேனுடன சேர்த்துக் குழம்பாக்கிச் சிமிழில் வைத்துக்கொண்டு ஐந்தாறு நாள் கண்ணிலிட இருண்ட கண்கள் பிரகாசத்தை அடையும். இதுவல்லாமல் காச நோய்களும், படலங்களும், தொண்ணூற்ருறு கண் வியாதிகளும் தீரும்.

### வேட்டுவன் குழம்பு

கருவளையல் கிட்டங் கடுக்காய் நெல்லிதான்றி சுக்கு
பெருகிய மிளகு உப்பும்பொருந்த வேட்டுவன் கூடொக்க
பருகிய புளியஞ் சாறும் பருகநல் லெண்ணெய் தன்னில்
உருகவே அரைத்துப் போட ஓடிடுங் கண்ணேய் தானே. 353

கருவளையல், கிட்டம், கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக் காய்த்தோல், சுக்கு, மிளகு, இந்துப்பு, குளவிக்கூடு இவற்றைச் சமன் எடையாய் எடுத்துக்கொண்டு புளியிலைச்சாறும், நல்லெண்ணெயும் ஓரளவாய் விட்டுக் குழம்பாய் அரைத்து வைத்துக் கொண்டு கண்ணிலிடக் கண்ணேய்கள் தீரும். (குளவிக்கூடு இரு வகைப்படும். மண்கூடு உபயோகப்படுத்தவும்.)

### கோரோசனைக் குழம்பு

நெல்லியும் மல்லியோடு நேர்மிளகுங் கூட்டிளுல்
எல்லியுந் தோன்றும் எழுத்தென்பார்—மெல்லியே
கோரோ சனைகோட்டங் குங்குமப்பூ கூட்டெழுதில்
ஓரோ சனைதோன்றுங் கண். 354

நெல்லிவற்றல், கொத்துமல்லி விதை, மிளகு ஆகியவைகளைச் சமன் எடையாய் எடுத்துக்கொண்டு குடிநீர் போட்டு வடித்து வைத்துக்கொண்டு கோரோசனை, கோட்டம், குங்குமப்பூ ஆகிய வைகளைச் சமனெடையாய் எடுத்துக்கொண்டு முன் கூறிய குடிநீர் விட்டுக் குழம்பாக அரைத்து வைத்துக்கொண்டு கண்ணிலிடக் கண் தெளிவடையும்.

### வஜ்ரகாந்திக் குழம்பு

அறிவுட னுமைதனில் பழமமைத்து அன்புடன் கயந்தனில் விடுத்து
அருமையா யெடுத்துமறு பழமமைத்து அதையுமுன்படியதா யெடுத்துப்
பரிவுட னறுத்ததை விழியினில் விரைவுடன் கடுகென விருபொழுதிடுகில்
பரவியபடலம் குந்தமும்முளையும் விதனமந் தாரமும் பூவுங்
கரிவுடன் கண்ணில் இரணப்பூ முதலாய்க் கலங்கிடும் பக்ஷமாந்
தினத்தில்
கலங்கியே மயங்கிக் கருங்கடல் புகுமேகன வஜ்ரகாந்தியின்
குழம்பென்
றிருநில மதனி லெவர்களு மறிய வியம்பின ருண்மை யோர்ந்தவரே
இவ்விதஞ் சரியா யியற்றிடின் வெற்றியின்புற வடைவது திணமே. 355

ஆமையின் முதுகில் மெழுகுவைத்து அதன்மேல் ஓர் எலுமிச்சம் பழத்தை அமுக்கி ஒட்டிக் கயிறுகொண்டு கட்டி ஆமை யைக் குளத்தில் விட்டுவைத்து மறுநாள் ஆமையைப் பிடித்துப் பழத்தை எடுத்துக்கொண்டு மற்றொரு பழத்தை அப்படியே

வைத்து ஆமையைக் குளத்தில் விட்டுவிடுவாயாக. மறுநாள் அந்தப் பழத்தையும் எடுத்துக் கொண்டு அறுத்துச் சாறு பிழிந்து வைத்துக் கொண்டு கண்ணில் ஒரு துளிவிடப் படலம், குந்தம், முளை, விதன மந்தாரம், பூ, விரணப்பூ ஆகியவை பதினைந்து தினங் களில் தீரும்.

## பூரக் குழம்பு

வாசஞ் சொரியுங் கற்பூரம் மகிழுங் கிராம்பு வாலுளுவை
தேசம் புகழுங் குங்குமப்பூ சிறந்த லவங்கம் பச்சிலையும்
பூசைக் கினிய சந்தனமும் பொன்னின் ரோகணி யிவையெல்லாங்
காசந் திருந் தேனிலிடக் கனகப் பூரக் குழம்பிதுவே. 356

பச்சைக் கற்பூரம், கிராம்பு, வாலுளுவை, குங்குமப்பூ, இலவங்கப்பத்திரி, சந்தனம், பீதரோகணி ஆகியவைகளைச் சமன் எடையாய் எடுத்துத் தேன்விட்டுக் குழம்பாயரைத்து வைத்துக் கொண்டு கண்ணிலிடக் காசம் தீரும்.

## காளமேகக் குழம்பு

மகராசர் மெச்சுமுறை செகமீதில் வெம்புலியும் மரிசைதொடு கருநாகமும்
மதிவயிரவன் சிங்கமோடிதனை யாவையும் மறவாமலே யிடித்துச்
செகமீதில் வளர்சிலையின் நந்திமலர்சாறதும் செயசிங்க பாணமதனுல்
செய்தமுன் மருந்ததனை வைத்துநாற்சாமமரை சேர்த்து மெழுகாய் வழித்துப்
புகழான சிமிழ்தனிலடைத்து விழிதனிலிடப் பொங்கிவரும் நீர்ப் பில்லமும்
போந்தசொரிப் பில்லமும் படலமொடு துன்மாங்கிசம் போகும்விழி பூமுனை
தகைமைபெறு காளமேகக் குழம்பதனை யிடத் தரிபடாதோடி விடுமே
நன்மையுள பொதிகைமலை முனிவரிந்நூ லிங்கு தானுரைக்கின்ற முறையே. 357

## நயனமிர்தமை

சங்கையாஞ் சதுரக்கள்ளிப் பாலதனைச் சலவையாந் துணிதனிலூட்டிச்
சாதித்து ஏழுதரமதை யூட்டிச் சருகது போலவே யுலர்த்தி
அங்கதை யெரித்த கருக்கதை யெடுத்து அதனிடை ஆவெண்ணெய் சேர்த்து
ஆனவெண்கலத்துப் புறந்தனிலமைத்து அழகுடன் செம்பினிலிழைத்து
அங்கையால் வழித்துச் சிமிழினில்வைத்து அரிவையர் பாலினி லிழைத்துத்
தினங்கடுகளவு புழுவெட்டு நிமையில் சாதித்துதிசைப் பொழுதிடுகில்
மங்கையரருளால் அங்கவர்நயனம் மதியொளி போலவே துலங்கும்
மகிமைசேர் நயனமிருதமீதென்று வகையுட னுரைத்தனர் பெரியோர்.

சதுரக்கள்ளிப்பாலைச் சலவை செய்த துணியில் ஏழு நடவை ஊட்டி நிழலில் உலர்த்தி அதை எரித்து அந்தக் கருக்கை எடுத்து அதே அளவு பசு வெண்ணெயும் எடுத்து இரண்டையும் வெண்கலத் தட்டு அல்லது வேறு வெண்கலப் பாத்திரத்தில் வைத்துத் தாம்பிர பாத்திரத்தில் இழைத்து நன்ருய் அரைத்தபின் ஒரு சிமிழில் வைத்துக்கொண்டு அந்த மையைத் தாய்ப்பாலில் இழைத்துத் தினம் கடுகளவு புழுவெட்டுள்ள நிமையில் தடவி வரக் கண் துலக்கமடையும்.

(வேறு)

நலமுடன் முனிவோர் நற்பதியோர்க்கு நன்மையா யுரைத்தமை நவில்வேன்
நாட்டினில் வெள்ளைதுத்த மாமதனை நன்மையாய்ப் பொடித்து நீயதனில்
பெலமுடன் வெள்ளைச்சா ரடைரசத்தால் பேணியே வெண்கலந்தனிலே
பிரியமாயிழைத்து ஆவெண்ணெய்சேர்த்துப் பேணிநீ மைதனை வழித்துக்
குலமுடன் புவியில்மானிடர் விழியில்கூட்டின மைதனையிடிலோ
குடிகெடும் பில்லம் படலமுங் குந்தங் கொடியதோர்நா கமாம்படலம்
சலமுடன் அறுமென விதிமுறைப்படி முன்சாற்றினர் அறிவுள் ளோரவர்முன்
சங்கையாம் நயனமிருத மீதெனமுன் குறுமுனி யுரைத்தமை குறியே.

வெள்ளைத் துத்தத்தைப் பொடித்துக் கொண்டு ஒரு வெண்கலத் தட்டில் வைத்து வெள்ளைச்சாரடைச் சாறுவிட்டு இழைத்து நன்ருய் மசிந்தபின் பசு வெண்ணெய் சேர்த்து இழைத்து மையை வழித்து ஒரு சிமிழில் வைத்துக்கொண்டு கண்ணிலிடப் பில்லம், படலம், குந்தம், நாகபடலம், நீர் வடிதல் முதலியன தீரும்.

(வேறு)

செந்தாமரை மலரில்பெருந் தீயாகு மொட்டதனைத்
திறமாக வேயதனை விழிமீதில் பிழிந்திடவே
முந்தவிழிப் படலமுதல் பூவான தனைத்தும்
முடுகிக்கடல் புக்கேகிடும் முறையா விருபொழுதில்
நந்தாயுனைத் தொழுதோதிய நயனமிர்த முறையை
நாளில்உரை பொதியைத் திருமுனி யோதினர் நலமே
பந்தாடிய விரலாரெழில் பாவாயிதை மகியில்
பரவிச்செய நலமாகும்நீ பரிவாகவே பாரே. 360

செந்தாமரை மொட்டு ஒன்றையெடுத்துச் சிதைத்து வடிகட்டிக் கண்ணில் பிழிந்திடக் கண்படலம் பூக்கள் ஆகியவை தீரும்.

(வேறு)

சுத்தமுள எள்ளதனை முத்துப்போ லேகழுவி
ஒத்தாடி யெண்ணெயதனை
நித்தமுந் திரிபொழுது சற்றுசுடர் காட்டிவிழி
மத்தியினிலே பிழிந்திடில்
மெத்தவிழி குந்தமொடு புத்திரர்கள் சூடறும்
பேர்பெற்ற விழிநோயறுஞ்
சத்திசிவனார் கிருபைமெத்த பொதிகைம்மலை
அகத்திய ருரைத்ததிதுவே. 361

**கல், மண் முதலியவை போக்கிச் சுத்தப்படுத்திய எள்ளை முத்துப்போல் தோல் நீக்கிக் கழுவிக் காயவைத்து ஆட்டிய எண்ணெயைச் சிறிது சூடுகாட்டித் தினம் மூன்று வேளை கண்ணில் விடக் குந்தம், குழந்தைகளுக்குண்டாகும் சூடு, சதை வளர்ச்சி ஆகியவை தீரும்.**

### அஞ்சனம்

பச்சைக் கற்பூரம் இந்து பரிகணத் தோடே யணிந்து
அச்சுக் கழலைப் பொடிசெய்து அமரச் சிமிழி லடைத்துவைத்துக்
கச்சித் துழவுங் காரீயக் கருதுங் கோலால் அஞ்சனத்தை
வச்சித் தெழுத வான்விழிமேல் வரும்நோய் பலவும் வாராவே.

### சூதரஞ்சனம்

நீடல ரஞ்சனமும் நிமிளைரசங் காரியம்
ஏடலர்கற் பூர மிவையாவும்—கூடுகொடி
சேதரஞ்சனம் விழியிற் சேரில் விழியாய
சூதரஞ் சனத்தின் தொழில். 363

**அஞ்சனக்கல், நிமிளை, ரசம், காரீயம், பச்சைக்கற்பூரம் ஆகியவைகளைச் சமன் எடையாய் நிறுத்துக்கொண்டு நன்றாய்ப்பொடித்து வைத்துக்கொண்டு எள்ளளவு அஞ்சனத்தைக் காரீயக் கோல் கொண்டு கண்ணிலிடவும்.**

### அமராஞ்சனம்

கெந்தகம் பலமஞ்சு அஞ்சனம் பலமூன்று கேள்வெள்ளி செம்பிருபலம்
வந்தபொன் னொருபலங் காரீயமுப்பலம் வளமதாய்க் குகையிலிட்டுப்
பிந்திநீ யுருக்கியே சீருடன் பொடிசெய்து பிந்தாத குழல்சேர்ந்தபின்
அந்தக ரானவர்கள் கண்ணிலிடவே தீரும் அமராஞ்சனத்தி னியல்பே.

**கெந்தகம் ஐந்து பலம், அஞ்சனக்கல் மூன்று பலம், வெள்ளி இரண்டு பலம், செம்பு இரண்டு பலம், தங்கம் ஒரு பலம், காரீயம்**

மூன்று பலம் ஆகியவற்றை ஒரு குகையிலிட்டு நன்றாய் உருக்கிப் பொடிசெய்து வைத்துக்கொண்டு அந்தகர் கண்ணிலிடக் கண் நோய்கள் தீரும்.

### மலரஞ்சனம்

மூந்தரசம் அஞ்சனம் தம்பலங் காரீயம் மூன்றுபலம் வளமாகவே
அந்தமுள குகையதனில் வைத்துருக்கிப் பதமாய் வந்தபின் பொடியதாய்
அந்தரத சிமிழிலடை அந்தகர் கண்ணிலிடு வெளியாகு மிவை யுண்மையாம்
அந்தமுள துர்மாங்கிசம் பில்லமும்போகும் அலரஞ்சனத்தினடைவே.

இரசம், அஞ்சனக்கல், வெற்றிலை, காரீயம் ஆகியவை வகைக்கு மூன்று பலம் எடுத்துக்கொண்டு ஒரு குகையில் வைத்துருக்கிப் பதமாக வந்த பிறகு பொடி செய்து அதை வெள்ளிச் சிமிழில் அடைத்து வைத்துக்கொண்டு அந்தகர் கண்ணிலிடப் பார்வை உண்டாவதோடு துர்மாமிசம், பில்லம் ஆகியவை தீரும்.

### அஞ்சனம்

அதிமதுரம் நெய்தல் கடல்நுரை சங்கு சந்தனம் அரிசித்திப்பிலி ரோசனம்
ஆனசிறு சண்பகம் அன்புபெறும் மஞ்சிட்டி அழகான மாஞ்சிலோடு
துதிசேரு மிலவங்கமொரு தாளிசப்பத்திரி சொல்லிவை சரியானபின்
தூயநிலாஞ் சனமிவை யொக்கவே யிவைகள் தூள்செய்து வளமாகவே
புதியசிமிழ்தனிலடை பூவான கண்ணிலிடில் போகுமே பித்தகாசம்
பொல்லாத காசமும் நில்லாத நீர்விழுதல் போகுமே செவ்வேரதும்
மூதியவலி பில்லமும் வளராது உருண்டையிது முண்டகன் சொன்ன தல்லால்
மூன்னோர்கள் செய்தபரிகார முன்னேது மிதைமுனிந்து நீசெய்து பாரே.

அதிமதுரம், நெய்தற்கிழங்கு, கடல்நுரை, சங்கு, சந்தனம், அரிசித்திப்பிலி, கோரோசனை, சிறுசண்பகம், மஞ்சிட்டி, சடா மாஞ்சில், கிராம்பு, தாளிசப்பத்திரி, நீலாஞ்சனம் இவற்றைச் சமன் எடையாய் நிறுத்துக்கொண்டு நன்றாய் இடித்துத் தூள் செய்து மிக நுண்ணிய தூளாகும்படி துணியில் வடிகட்டிக் கண்ணில் இட்டால் பித்தகாசம், காசம், நீர்விழுதல், செவ்வேர், பில்லம் இவை தீரும்.

### நீலகருடாஞ்சனம்

மிக்கதோர் துத்தமிந் துப்பினிய திரிகடுகு வீறுதேற்று மஞ்சனம்
தக்கவெண் காரமொடு திரிபலைசீ னிக்காரம் தரும்பீத ரோகணி ரசம்
தீக்காமி ரும்புசெம் பீயம்நா கம்பூரந் திகழ்மனோ சிலைசங்குடன்
கத்துவேலா மறைவிழியதனி லிட நீல கருடாஞ்ச னத்தினியல்பே. 367

துத்தம், இந்துப்பு, சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, தேற்றான் கொட்டை, அஞ்சனக்கல், வெண்காரம், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், சீனக்காரம், பீதரோகணி, இரசம், இரும்பு, செம்பு, ஈயம், நாகம், பச்சைக்கற்பூரம், மனோசிலை, சங்கு இவற்றைச் சம எடையாய் நிறுத்து எடுத்துக்கொண்டு அரைத்துக் கண்ணிலிடவும்.

### மச்ச இரத்தின அஞ்சனம்

பெரியவரால்மீன் கல்குங்கு மப்பூ பேசும் அந்நிறையாங்
கரியஞ்சனக்கல் துட்டிடையுங் கனக்கக்குழியில் தானிட்டுத்
தெரியப்புளி மாதுளைச்சாற்றில் திறமாயரைத்தே யதிலுலர்த்தி
அரியபொடியைக் கண்ணிலிட அகலும்பூச்சதை அஞ்சனமே. 368

பெரிய வரால்மீன் தலையிலுள்ள கல் (இதை மச்ச இரத்தினம் என்பர்), அந்த எடையுள்ள குங்குமப்பூ, அஞ்சனக்கல் துட்டு எடை இவற்றை எல்லாம் கல்வத்திலிட்டுப், புளிப்பு மாதுளம்பழச்சாறு விட்டரைத்து உலர்த்திப் பொடியாக்கிக் கண்ணிலிடப் பூ, சதை முதலியவை தீரும்.

### சுத்த அஞ்சனம்

அருமையா முனிவோ ரவனியின்மீது அழகுடன் மைதனைப்புகழ்வார்
அன்புள ஆதிசுடலையைத் தூசில் அமர்த்தியே நெய்விளக்கேற்றிப்
பரிவுடன் கருவைப்பிசினு மந்நிறையாய்ப் பண்புள்ள தேசிச்சாறதனல்
பதமுடனரைத்து ஆவெண்ணெய் சேர்த்துப் பரிவுடனுரைத்ததை வழித்துத்
திறமுடனதனைச் சிமிழினிலடைத்துத் தெரிவையே கண்ணை நீ பிரித்துத்
தினங்கடுகளவு பிணியினர் விழியில் செலுத்துமுன் போம்வினைபரிந்து
குறிகெடவந்த பில்லமுங்குந்தம் கூறிய பூமுதல் மந்தம்
குணமதாஞ்சுத்த அஞ்சனமிதனைக் கூறினுர்மலைமுனி விரித்தே. 369

துருசுக்கட்டியைப் பொடித்து மெல்லிய துணியில் வைத்துத் திரித்து ஓர் அகலில் போட்டுப் பசுவின் நெய்விட்டு, விளக்கேற்றி மேலே ஒரு புதிய சட்டிகொண்டு மூடி விளக்கை எரியவிட்டுச் சட்டியின் உட்புறத்தில் படிந்திருக்கும் மையை உதிர்த்து அதற்குச் சமன் எடையான கருவைப்பிசின் சேர்த்து இரண்டையும் எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து உலர்ந்தபின் அதற்குச் சமன் எடை பசுவெண்ணெய் சேர்த்து நன்றாயரைத்து வழித்துச் சிமிழில் வைத்துக்கொண்டு கடுகளவு கண்ணிலிடப் பில்லம், குந்தம், பூ, கண்மந்தம் ஆகியவை தீரும்.

### கண்டர் அஞ்சனம்

கண்டரைப் பொடித்துக் கண்ணில் கடுகென வெழுதும் போது
முண்டிடும் அடுக்குப் பில்லம் முளையெழுஞ் சுக்கிர ரோகம்
கொண்டிடுஞ் சொரியும் பில்லங் குடிகெடும் பற்ப ரோகம்
அண்டிடுங் கழலைப் பூவும் அகன்றிடு மிதனைச் செய்யே. 370

துருசைப் பொடித்துக் கடுகளவு கண்ணிலிட அடுக்குப்பில்லம், சுக்கிரநோய், சொரிபில்லம், பற்ப நோய், கழலை, பூ ஆகியவை நீங்கும்.

### அஞ்சனம்

கருங்கனியும் வெண்கனியுங் கானுநல் மாஞ்சியுடன்
இரும்பதனி லொவ்வொன்று யேத்தியே—திரம்படவே
அஞ்சனங்கள் போட அடைவாய் நயனமதில்
கெஞ்சிவிடு மெப்புவியுங் கேள். 371

### மை

ஓலையுள் சீந்திதன்னை உகந்துள்ளே பொதிந்துபின்னே
ஆலெரியுள்ளே வைத்து ஆவிபின் வாங்கிக்கொண்டே
ஏலிதுசாறுதன்னில் எள்ளெண்ணெய் துளியும்விட்டு
மேலதாங் கலப்புறத்தில் விரவியே தேய்த்திடாயே. 372

கருப்பெனத் தேய்த்துமங்கே கலந்தது கண்ணிலிட்டால்
சுருக்கெனத் தெரிக்குங்குத்தும் சூழ்ந்திடுந் தினவடங்கும்
முரித்திடும் வகையாய்ரோகம் முதற்பல பிணியுமாறுஞ்
செருத்துநீர் பீளையோடுஞ் சிவப்பொடு தினவுபோமே. 373

இவ்வாறு அரைத்த மருந்தைக் கண்ணிலிட்டால் தெரித்தல், குத்தல், அரிப்பு, முறித்தல் முதலிய தொல்லைகளைக் கொடுக்கும் நோய்களும், நீர் விடுதல், பீளை கட்டுதல், சிவப்பு ஆகிய நோய் களும் நீங்கும்.

### கபாலமை

காற்றுப்படாமல் வெண்பஞ்சைக் கள்ளிப்பாலில் தோய்த்துலர்த்தி
ஊற்றுமெண்ணெ யிலுப்பையெண்ணெய் உடனெய்யதையுந்தலையோட்
சேர்த்துவிளக்காய் மையாக்கிச் செலுத்தஅழிகண் திருமென்று [டில்
பார்த்துஇதனைச் செய்திடிலோ பறந்தேபோகுங் கண்டீரே. 374

பருத்திப்பஞ்சைக் கள்ளிப்பாலில் தோய்த்து உலர்த்தித் திரியாகச் செய்து, சிற்றுமணக்கெண்ணெய், இலுப்பை எண்ணெய், பசுவின் நெய் இம் மூன்றையும் ஓரளவாய்க் கலந்து மனிதர் தலை யோட்டில் ஊற்றி அதில் திரியைப்போட்டு விளக்கெரித்து மேலே சட்டி மூடி மையெடுத்துக் கண்ணிலிட அழிகண் நீங்கும்.

### எருக்கிலைமை

எருக்கம்பால் தன்னை யிழைசீலை யூட்டித்
திருக்கறவெள் ளாட்டுநெய்யால் தீபஞ்—சுருக்காமல்
மையாகப் பண்ணி வளரும்அழி கண்ணிலிடப்
பொய்யாது மெய்யே புகல். 375

**எருக்கம்பாலைத் துணியிலூட்டி உலர்த்தித் திரியாக்கி வெள்ளாட்டு நெய்யிலிட்டு விளக்கேற்றி மையெடுத்துக் கண்ணில் இட அழிகண் நீங்கும்.**

### மாலைக்கண்ணுக்கு மை

கானத்தீயுஞ் சங்கிலைரசமுங் கருந்தாய்ச் சரிநிரை தான்பிழிந்து
தானதையே கற்பூரந்தனிலே சரியாயிழைத்ததை வழித்தெடுத்து
ஆனதோர் மாலைக்கண்ணினிலிடவே அப்பொழுதேகுமே யொளித்துப்
பானுமுன் பனிபோல் எனமுன்னோர்கள் பகர்ந்தாரறிவொடு தாம்
விதித்தே. 376

### வரால்மீன் மை

நலமுடன் வரால்மீன் இரைக்குடல் தன்னைநன்னிரை ஆவெண்
ணெயதனை
நன்மையாம் மதுரைக்கலந் தனிலமைத்து நல்முறிச் செம்பதா
லிழைத்துப்
பெலமுடன் வழித்துச் சிமிழ்தனி லடைத்துப் பேணிநீமை தனைக்
குறித்துப்
பிரியமாய்ச்சிறிய பயறளவெழுதிப் பிணியாளர் கண்ணினை விரித்து

வலமதாய் நீயும்மதிமுகம்நோக்கி வரிசையாய்ப் பார்க்குமப் பொழுதில்
வசைகெடவந்த படலமுங்குந்தம் மருவியநாக மாம்படலம்
குலமதாங் கழலைஆணிப் பூமுசலாய்க் குடியொடுங் கடிகைநா லாறில்
குணமுள வமிர்தசஞ் சீவியெனும் பேர்கூறினர் மலைமுனி தெரிந்தே.

**வரால்மீன் இரைக்குடலை எடுத்து அந்த எடையுள்ள பசுவெண்ணெய் இவ் விரண்டையும் செப்புப் பாத்திரத்தில் வைத்து வெண்கலப் பாத்திரத்தால் இழைத்துப் பிறகு அதை வழித்து ஒரு சிமிழிலடைத்துக்கொண்டு ஒரு சிறிய பயறளவு எடுத்துக் கண் இமையில் தடவப் படலம், குந்தம், நாகபடலம், கழலை, ஆணி, பூ ஆகியவை திரும். இதை அமிர்த சஞ்சீவி என்று கூறுவர்.**

### படலாதி மை

சுக்குமில வம்பிசினுந் துத்தமும் ஓரெடையாய்
மிக்கபழச் சாற்றில் அரைத்துருட்டப்—பக்குவமாய்ப்
படலந்துன் மாங்கிசமும் பாயும்நீர்ப் பாய்ச்சலிவை
அடக்கும் படலாதி யாம். 378

**சுக்கு, இலவம்பிசின், துத்தம் இம் மூன்றையும் சம எடையாய் எடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து வைத்துக்கொண்டு கண்ணிலிடப் படலம், துர்மாமிசம், நீர்ப் பாய்ச்சல் முதலியவை தீரும்.**

### குமரி மை

குமரியின் கருவைக் கொடுநிம்பப் பழத்தில் கூர்மையாய் மூன்று
நாள ரைத்துக்
குணமுட னெடுத்து மறுபழந் தனிலே குறிப்புடன் வைத்ததை யெடுத்து
அமுதைமுன் படியாய் அப்பழந்தனில் வைத்து முன்படியதா
யெடுத்து
வரிசையா யதைமுன் ரசந்தனி லரைத்து வகையுடன் விழிதனி லிடுகில்
அமரமும் வெள்ளைப் படலமும் பில்லமும் ஆனநீர்ப் பாய்ச்சலுந்
திமிரம்
அழிகண்ணும் ஆணிப்பூ முதலனைத்தும் அப்பொழு தேகுமே யொழிந்து
திமிர்தமாம் புவியில் மானிடர் தமக்குச் செப்பிய மருந்தினைக்
கவியாய்த்
தென்திசை வாழும் அகத்திய முனிவர் திறமுட னுரைத்தனர் பரிந்தே.

**சோற்றுக் கற்றாழையைத் தோல்நீக்கி, உள்ளிருக்குஞ் சோற்றை நன்றாய் அலம்பிவிட்டு எலுமிச்சம் பழத்திற்குள் மூன்று நாள் வைத்திருந்து எடுத்து, வேறு பழத்தினுல் அந்தச் சோற்றை நன்ருய் அரைத்து மூன்று நாள் வைத்திருந்து எடுத்து, வேறு பழச் சாறுவிட்டு அரைத்து வைத்துக்கொண்டு கண்ணிலிட அமரம், வெள்ளைப் படலம், பில்லம், நீர்ப்பாய்ச்சல், திமிரம், அழிகண், ஆணிப்பூ ஆகியவை தீரும்.**

### குத்துக் கண்ணுக்கு மை

குத்துக் கண்ணுக் குறைக்கும் மருந்துகேள்
அத்தச் செந்தலை யுங்கரு வங்கமும்
பத்தி யாகநீ பாய்ச்சி எடுத்ததை
உத்தம மாதர் பாலில் எழுதிடே. 380

### வல்லாரை மை

வல்லாரை வில்வரசம் வாங்குமொரு நிறையதில் வளராவின் நவநீதமும்
வரிசையாய்ச் சுத்தித்த எள்ளுமதில் சேர்த்ததை வாங்கியே கல்வ
மேற்றிச்
சொல்லரன சுத்த செம்பதனு லிழைத்ததைச் சுருதியுடனே வழித்துச்
சுகமுள்ள செம்பதில் அடைத்தந்த மைதனைச் சொல்லுவது நீர்
கேளுமே

பொல்லாத பில்லமொடு படலமே குருமுளையும் போகுவிழி குந்தமதுவும்
போகாத இமைதடித்தல் விரணசுக்கிரனுடு பொங்கிவரு புழு
வெட்டுடன்
மல்லாடி யோடிவிடும் வராம லிருபொழுதிடில் மாண்டிடும் நேத்திர
ரோகம்
வரிசையுள பொதிகைமாமாலை முனிவருரை செய்த வல்லாரைமை
பாருமே. 381

**வல்லாரைச்சாறு, வில்வ இலைச்சாறு, பசுவெண்ணெய், தோல் நீக்கி உலர்த்திய எள் இவற்றுடன் சாறுகளைச் சமன் எடையாய்க் கல்வத்திலிட்டுச் செப்புக் குழவிகொண்டு நன்றுயரைத்துச் செப்புச் சிமிழில் வைத்துக்கொண்டு கண்ணிவிட, பில்லம், படலம், குருமுளை, விழிகுந்தம், இமைத்தடிப்பு, விரணசுக்கிரன், புழுவெட்டு ஆகியவை தீரும்.**

## புழு வெட்டுக்கு மை

நல்லதோர் வெண்டுசை யெருக்கம் பாலில்
நனைத்துலர்த்தி யைம்முறையிவ் வாறேசெய்து
துல்லியமாந் திரியாக்கிப் பழகிவந்த
துய்யவக லிடைப்பசுநெய் துலங்கவிட்டு
மெல்லியலே யத்திரியை யதனிலிட்டே
விளக்கேற்றிப் புதுச்சட்டி யொன்றினுள்ளே
ஒல்லையூ மத்தினிலைச் சாறுபூசி
யுலர்த்திவ்வா றைந்துமுறை யுலர்த்துவாயே. 382

உலர்ந்ததோர் சட்டி தன்னை யுரைத்தநல் லகலின் மீது
நலந்தர மூடி நெய்யை நன்கது குறையுந் தோறும்
கலந்துசட் டியில்சேர் மையைக் கவின்விளக் கெண்ணெய் விட்டு
வலந்தரக் குழைத்து வையம் மையினுல் மாயும் நோய்கேள் 383

புருவத்தின் கீழு மேலும் பொருந்திய விமையின் மீது
உருவொத்துத் தினைபோற் சின்ன கொப்புளம் உதித்து ரோமம்
திருவொத்த மாதே வீழுந் திண்புழு வெட்டா மிந்நோய்
மருவிடும் வெயில்முன் வந்த மகத்தான பனியாம் பாரே. 384

**வெள்ளைத் துணியை எருக்கம் பாலில் நனைத்து உலர்த்தி மறுபடியும் நனைத்து உலர்த்தி இவ்விதம் ஐந்து முறை செய்து உலர்த்தித் திரியாக்கி அதனைப் பழகிய அகலில் பசு நெய்விட்டு மேற்படி திரியைப் போட்டு விளக்கேற்றிப் புதுச்சட்டியின் உட்பாகத்தில் ஊமத்தம் இலைச்சாறு பூசி உலர்த்தவும். இவ்விதம் ஐந்து முறை பூசி உலர்த்தின சட்டியை மேற்படி அகலின் மீது மூடி வைக்கவும். நெய் குறையக் குறைய விடவும். பின்பு சட்டியினுள்**

பற்றியிருக்கும் மையை எடுத்து விளக்கெண்ணெய் விட்டுக் குழைத்து வைத்துக்கொள்ளவும். இதனல் தீரும் நோய்கள் புருவத்தின் கீழிமை மேலிமை இவற்றின் மேல் திணையளவு சிறு கொப்புளங்கள் ஏற்பட்டு அதனல் மயிர் உதிர்ந்துவிடும். இதுவே புழுவெட்டு நோய்.

**மை**

இந்துப்பு மிளகு நீலாஞ்ச னக்கல்
எடுத்தவெள்ளைச் சாரணைவேர் வெள்ளி லோத்திரம்
மந்தமறு மரமஞ்சள் கடுக்காய் திப்பிலி
மாவெண்ணெய் சங்குமுடி சீனம் சந்தம்
அதிமதுரம் வேப்ப மொட்டு தன்னேடிங்கு
ஆனகடனுரை மனேசிலையுந் துத்தம்
இந்தவகைசமன் பொடித்து வடித்துக் கொண்டு
இருப்புரலி லிட்டுச் செப்புலக் கையாலே. 385

ஆட்டுவாய் தேனைவிட்டு மைபோலாகும்
அத்தனையு மெடுத்தோர் நற்சிமிழில்வைத்து
நீட்டிடவே விழியதனில் கடுகுபோலே
நிலைவிட்டுப் போம்படலந் திமிரஞ் சுக்கிரன்
நாட்டினுர் தென்பொதிகை மலைவாழீசர்
நலமுடனே பிரகாசத் தமிழினுலே
பாட்டாகப் பாடிவைத்தார் உலகத்தோர்கள்
பார்த்தறிந்து பண்டிதர்கள் பிழைக்க வென்றே. 386

இந்துப்பு, மிளகு, அஞ்சனக்கல், வெள்ளைச்சாரணை வேர், வெள்ளிலோத்திரம், மரமஞ்சள், கடுக்காய், திப்பிலி, பசுவெண்ணெய், சங்கு, சீனக்காரம், சந்தனம், அதிமதுரம், வேப்பமொட்டு, பெருங்காயம், கடல்நுரை, மனேசிலை, துத்தம் இவற்றைச் சம எடையாய் எடுத்துக்கொணடு இடித்து, பொடித்து, வடிகட்டிக் கொண்டு இரும்புக் கல்வத்தில் போட்டுத் தேனைவிட்டுத் தாம்பிரக் குழவியினுலரைக்க மைபோலாகும். அதைச் சிமிழில் வைத்துக் கொண்டு கடுகளவு கண்ணிலிடப் படலம், திமிரம், சுக்கிரம் தீரும்.

**சுக்கிரனுக்கு கோகனகநெய்**

உரிக்கீர்வெண் டாமரையி னுள்வளையந் தணக்கொண்டு
நருக்கீர்பின் நெய்யாலும் சர்க்கரையும் நேகவெந்து
சுருக்காய்க் கையாந்தகரை சுந்தரியே கண்ணிலிடப்
பொருக்காகச் சுக்கிரனும் போய்விடுமே போய்விடுமே. 387

வெள்ளைத் தாமரையின் உள் வளையத்தை உரித்து எடுத்ததின் சாறு, பசுவின்நெய், சர்க்கரை, கையாந்தகரைச்சாறு இவற்றைச் சமமாய் எடுத்துக்கொண்டு ஒன்ருய்ச் சேர்த்து, சாறு சுண்டுகிற வரையில் சிறுதீயாக எரித்து வடிகட்டி வைத்துக்கொண்டு கண்ணி லிடச் சுக்கிரன் தீரும்.

### படலங்களுக்கு நெய்

ஆவினெய் தேனுமுட்டை அதில்விட்டுக் காயவைத்து
மேவிய தேசிச்சாறும் வியந்த இந்துப்புமொன்று
காவியின் விழியினுளே கண்ணினில் ஒழுக்கிவிட்டால்
பாவனை யாகச்செய்யப் படலங்கள் தீருமன்றே. 388

பசுவின் நெய், தேன், முட்டை வெண்கரு, எலுமிச்சம்பழச் சாறு, இந்துப்பு இவற்றை எல்லாம் ஒன்ருய்ச்சேர்த்துச் சாறு சுண்டுகிற வரையில் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு கண்ணிவிடப் படலங்கள் தீரும்.

### சந்தனுதி நெய்

சந்தன மதுரம் கோட்டம் தாமரை வளையங் கொட்டி
கந்தமான் கலங்கொம் போடு கருதுவெள் ளாட்டுப் பாலும்
முந்தவே நெய்யும்நாழி முறைமையாய்ப் பண்ணிக் கண்ணில்
சிந்துறப் பித்தம் போக்குஞ் செழுஞ்சந்த னுதி யாமே. 389

சந்தனம், அதிமதுரம், கோட்டம், தாமரைவளையம் கொட்டிக் கிழங்கு, மான்கொம்பு, வெள்ளாட்டுப்பால், பசுவின் நெய் இவற்றைச் சேர்த்துப் பக்குவமாய்க் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு கண்ணிவிடப் பித்தநோய்கள் தீரும்.

### சிறுகீரை நெய்

சிறுகீரை யேமதுரம் சேர்ந்தகந்தங் கருநெய்தல்
உறுகின்ற தாமரையின் உகவளையம்—நறுக்கினபின்
நெய்யிலுஞ் சர்க்கரையும் நேகவெந்து கண்ணிலிடச்
செய்வாய் சிறுகீரை நெய். 390

சிறுகீரைச் சாறு, அதிமதுரம், சந்தனம், கருநெய்தற் கிழங்கு, தாமரையின் உள்வளையம் இவை எல்லாவற்றையும் சிதைத்து ஒரு பாத்திரத்திலிட்டுப் பசுவின்நெய்யும் சர்க்கரையும் சேர்த்து நன்ருய் எரித்து வடிகட்டி வைத்துக்கொண்டு கண்ணிலிடவும்.

### செங்கழுநீர் நெய்

வீசு செங்கழு நீர்முல்லை நெய்தலும் விளங்க வேகொடி யோடுநற் கண்டியும்
பேசு சங்குவீ ரப்புண்ட ரீகமும் பெருத்த சீரக மும்மடை வாகவே
வாசியான மதுரமும் லோத்திரம் வந்த நெய்யுடன் பாலது வுங்கூட்டி
மாசி லாதனல் காட்டி வடித்திட வளரு நோய்கதிர்முன் பனியாகுமே.

செங்கழுநீர்க் கிழங்கு, முல்லைவேர், நெய்தற்கிழங்கு, நெய்தற் கொடியை நறுக்கின துண்டங்கள், சங்குப்பொடி, தாமரைக் கிழங்கு, பெருஞ்சீரகம், அதிமதுரம், வெள்ளிலோத்திரம் இவற்றைச் சிதைத்து நெய்யும். பாலும் சேர்த்துக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு கண்ணிலிட நோய்கள் சூரியன் முற்பட்ட பனியைப் போலாகும்.

### முசுமுசுக்கை மை

சுருதியான முசுமுசுக்கைச் சாறதனைச் சுத்த நாதமதில் விட்டுமே
சோதியான செம்பதனை வாங்கியதைச் சுகமதா யிழைத்தானபின்
உருதிராட்சக் கனியளவதானதிலே உற்றதோர் இடை வராகனென்
றுடைத்ததூளது சேர்த்துச் சங்கிலிழை யுறுதியா யுபய சாமமும்
விருதுமுற்றவிழை செம்பினுல் விபரமாய் அரைமயனமாகவே
வெய்யநீர் சுவரவே வெள்ளெண்ணெய்தனை விட்டிழைத்து வழி மைதனைக்
குருதிசெம்பதனில் வைத்தெடுத்த தனைக் கொடுமையான விழிதனிலிடில்
கோலகாலவிழி நோய்தன்பேர்தனைக் கூறுவேன் சிறிது பாருமே. 392

பாரமான விழிகழலை குந்தமொடு பங்கமான விழிமந்தமும்
பாலர்தங்கள் விழிமிதனை சூடுகளும் பரவலான புழுவெட்டுடன்
ஆரமான நிமைக்கழலை பூமுளைகளான நாகமின் படலமும்
அருவிநீர்விழுகும் பில்லமானதும் அநேகமான விழிநோய்களும்
பேரதான முசுமுசுக்கை மையதனின் பேருரைக்க விழிநோயறும்
பிரியமாகவினி முழுகவேணுமெனில் பேணியா மணக்கெண்ணெயாம்
வீரதாம் பொதிகைவாழ் அகத்தியமுனி மெய்ம்மையான முறை சொன்னதே
விருதுகட்டி விழிமீதி லிட்டிடலோ புழுதுபட்ட விழிபதுமமே. 393

### இளநீர் எண்ணெய்

இளநீர்ப்பாலும் நன்னாரி இதவிலா மிச்ச மதுரகெந்தம்
வளமா நெய்தல் நல்லெண்ணெய் மருவும் பதமாய்க் காய்ச்சியதை
அலையுங் கண்ணில் வார்த்துவிடில் அடைந்த ஏரன் சுக்கிரனும்
தெளியுங்கண் தொண்ணூற்ருறு நோய்தீரிள்நீர் எண்ணெயிதே.

நன்னாரிவேர், விலாமிச்சவேர், அதிமதுரம், சந்தனம், நெய்தற் கிழங்கு ஆகியவற்றை நன்ருயிடித்து இளநீர், பால், நல்லெண் ணெய் இவைகளையும் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு கண்ணிலிட ஏரன் சுக்கிரனும் ஏனைய கண்ணோய்களும் தீரும்.

### அபானசுத்தி (ஐபதிச் சூரணம்)

ஏலமி லவங்கம் நெல்லிமுள்ளி யிசைந்த கோட்டம் வாய்விளங்கம்
மூல முத்தந் திரிகடுகு மூரிக் கடுக்காய் சமனுகச்
சாலச் சிவதை சமன்கொண்டு சரியாய்ச் சர்க்கரை தான்கூட்டிக்
காலைப் பொழுதே கொண்டக்கால் கண்ணில் ரோகம் கழிந்திடுமே. 395

ஏலம், கிராம்பு, நெல்லிமுள்ளி, கோட்டம், வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி கடுக்காய் ஆகியவற்றைச் சமனெடையாய் எடுத்து இடித்து வடிகட்டின தூளுக்குச் சமனெடை, சிவதை வேரைத் தூய்மைசெய்து இடித்து வடிகட்டின தூள் சேர்த்து, இவ் விரண்டுவகைத் தூளுஞ்சேர்த்த எடையளவு சர்க்கரை சேர்த்து, காலையில் சாப்பிடக் கண்வியாதிகள் தீரும்.

(வேறு)

திரிகடு குசிவதை செய்ய சூரணம்
குறிபடு சர்க்கரை கொள்ளுந் தேனதில்
மருவிடும் பைத்தியம் வாய்வு நயனநோய்
தெரிகெட ஓடிடுந் திண்ணந் திண்ணமே. 396

திரிகடுகும் சிவதைவேரும் சேர்ந்த தூளோடு சமன் எடை சர்க்கரை சேர்த்து, தேனில் கொண்டால், பித்தம், வாயுவு, கண் நோய்கள் நிச்சயமாய்த் தீரும்.

(வேறு)

கடுவும் நெல்லி தான்றிக்காய் கனத்தநேர் வாளஞ் சேர்த்துப்
பொடியுங் கழஞ்சு தேனுடனே பொருத்திக் கொள்ள வேகண்ணீர்
வடியும் வாய்வு வயிறுகழிந்து வளமே யாகும் வகையிந்தப்
படியுஞ் செய்ய இம்முறையைப் பாரீ ரிதனைப் பாரீரே. 397

கடுக்காய், நெள்ளிமுள்ளி, தான்றிக்காய், நேர்வாளஞ் சேர்த்த தூளில் ஒரு கழஞ்சு எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடக் கண்ணீர் வடிதலும், வாயுவும், வயிறு பேதியாகித் தீரும்.

(வேறு)

கொன்றைக் கொழுந்துந் திரிபலையுங் கூட்டி யிடித்துப் பொடியாக்கி
நன்ருய்க் காய்ந்த வெந்நீரில் நாளுங் காலை மிசப்பருகில்
கண்ணைக் கடுக்குந் தலைநோவுங் கனத்த மலமும் பைத்தியமும்
மண்ணுக் கிரைய தாய்ப்போகும் வயிறு கழியுங் கண்டீரே. 398

கொன்றைக் கொழுந்தும், திரிபலையுஞ் சேர்த்து இடித்துச் தூளாக்கி வைத்துக்கொண்டு சூடுள்ள வெந்நீரில் போட்டு அதிகாலையில் சாப்பிடக் கண்ணை வலிக்குந் தலையிடி தீரும், மலங்கழியும் பித்தம் நீங்கும்

### சலரூபத்திற்குத் தைலம்

ஆவாரை மணத்தக்காளி ஆடுதீண் டாப்பா ளேயோ
டுரியவரிகற்ருழை ஊழலாத்தி சிந்தில்முட்டி
கூறவே மதுரமேலங் கொடிவிலாமிச்சம் அகில்
சாரவே காய்ச்சித் தேய்க்கில் சலரூபம் போகுந்தானே. 399

**ஆவாரை, மணத்தக்காளி, ஆடுதீண்டாப் பாளே, வரிக் கற்ருழை, ஊழலாத்தி, சிந்தி, பேராமுட்டி, அதிமதுரம், ஏலம், விலாமிச்சவேர், அகில்கட்டை ஆகியவற்றை எண்ணெயில் காய்ச்சி, வடித்து முழுகிவரச் சலரூபம் தீரும்.**

### வாதகாசத்திற்குத் தைலம்

ஏலத்துடவே கல்நாரும் எள்ளின் எண்ணெ யிருநாழி
சாலக்கொதித்து வருகையிலே தகரம்மஞ்சள் சாத்திரபேதி
பாலிலரைத்துக் கரைத்ததனைப் பதத்தில்காய்ச்சி வடித்தபின்பு
வாலிபன் தலையி லப்பிடவே வாதகாச மேகிடுமே. 400

**இரண்டுபடி நல்லெண்ணெயில் ஏலரிசி, கல்நார் இவ் இரண் டையும் அரைத்துக் குழப்பி அடுப்பேற்றி எரித்து எண்ணெய் கொதித்துவரும் சமயத்தில் நிலக்கடம்பு, கஸ்தூரிமஞ்சள், சாத்திரபேதி ஆகியவற்றைப் பால் விட்டு அரைத்துப் பாலில் கரைத்து விட்டு, பதத்தில் வடித்து முழுகிவர வாத காசம் தீரும்.**

### அன்னகோபத்திற்குத் தைலம்

எள்ளின் நல்லெண்ணெய்நாழி இயல்புள்ள தனப்பால்நாழி
தெள்ளியகழுநீர் கோட்டம் செண்பகப் பூவோடேலம்
அள்ளியசடையில் மாஞ்சில் அதிவிலா மிச்சவேரும்
தெள்ளிய பச்சைப்பூரஞ் சீரகந்தகரம் மல்லி
தள்ளியமுத்தஞ் சந்தம் தாழ்விலா வெட்டி வேரும். 401

**நல்லெண்ணெய் ஒரு படி, தாய்ப்பால் ஒரு படி, செங்கழுநீர்க் கிழங்கு, செண்பகப்பூ, ஏலம், சடாமாஞ்சில், விலாமிச்சவேர், பச்சைக்கற்பூரம், சீரகம், நிலக்கடம்பு, மல்லி, கோரைக்கிழங்கு, சந்தனம், வெட்டிவேர்.**

ஒக்கவே பசுவின்பாலும் உகந்துநீ சேருமிட்டு
மிக்கவே அரைத்துக்கொண்டு எண்ணெயில் பதத்தில் காய்ச்சி
மிக்கதோர் எண்ணெய்தன்னை இறுத்துநீ சிரசில்வைக்க
அக்கண மன்னகோபம் அலைகடல் போகுமன்றே. 402

**இவற்ருேடு ஒரு சேர் பசும்பால் விட்டு அரைத்து எண்ணெயில் குழப்பி, காய்ச்சி, பதத்தில் வடித்து முழுக அன்னகோபம் தீரும்.**

### நயன நோய்களுக்குத் தைலம்

வில்வவேர் வேங்கைவேர் அமுக்கராவேர்
வேலிவேர் வெட்டிவேர் விலாமிச்சம்வேர்
நல்லகுருந் தொட்டிவேர் குமரியின்வேர்
நன்னுரிவேர் வனசவளையம் பத்தும்
சொல்லிலொன்று தன்னுடனே பத்துத்தண்ணீர்
தூணிதூள் செய்திடித்துப் போட்டுக்காய்ச்சி
முல்லைநகை மானேகேள் குறுணியானல்
மூலிகை பொன்னுங்காணி யிளநீர்பாலே 403

**வில்வவேர், வேங்கைவேர், அமுக்காரவேர், கொடிவேலிவேர், வெட்டிவேர், விலாமிச்சவேர், குருந்தொட்டிவேர், சோற்றுக் கற்ருழைவேர், நன்னுரிவேர், தாமரை வளையம் இந்தப் பத்து வேர்வகைகளையும் வெட்டி நன்ருய் இடித்துத் தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் கசாயம் எடுத்துக் கொண்டு,**

ஆம்பலோடு செங்கழுநீர்க் கிழங்கு நெய்த
லாமலகக் கனிதாழை விழுதிஞேடு
நாம்புகின்ற செம்பீரப் பழத்திஞேடு
நாழிச்சா றெவ்வொன்று எண்ணெய்நாழி
சோம்புபடா திவைகூட்டித் தேவதாரந்
துன்னேலம் மஞ்சிட்டி கோட்டம் மாஞ்சில்
சாம்பிடாக் கிராம்பிஞேடு சாதிக்காயுஞ்
சண்பகக்கல் நார்மொட்டு சுருக்காய்ச்சேரே. 404

**ஆம்பல்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, நெய்தற்கிழங்கு, நெல்லிக்காய், தாழைவிழுது, எலுமிச்சம்பழம் ஆகியவற்றின் சாறுகளை அளவுப்படி எண்ணெயில் கூட்டி, தேவதாரம், ஏலம், மஞ்சிட்டி, கோட்டம், சடாமாஞ்சில் கிராம்பு, சாதிக்காய், சண்பகமொட்டு, கல்நார்,**

இலவங்கம் திரிகடுகு திரிபலை பூரம்
இனியகந்தம் மகரப்பூ புழுகுசட்டம்
குலவுகிளிப் பட்டைகத் தூரிமஞ்சள்
குங்குமப்பூ வதிவிடையங் கழஞ்சொன்றேடு
பெலமானகெவுளா நீ இவற்றைக் கொண்டு
பேணியே யிடித்ததனைத் தூவிக்காய்ச்சி
நலமுறவே முழுகிவரக் கண்ணில் தோன்றும்
நாலிரண்டு காசமது நாசங்காணே. 405

**இலவங்கப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், பச்சைக்கற்பூரம், சந்தனம், புனுகுச் சட்டம், கிளியூரம்பட்டை, கஸ்தூரிமஞ்சள், குங்குமப்பூ, அதிவிடயம், கெவுளா ஆகியவற்றைச் சேர்த்துக் காய்ச்சி**

வடிகட்டி வைத்துக்கொண்டு முழுகிவரக் கண்ணில் உண்டாகும் எட்டு வகைக் காசங்களும் நசியும்.

### பொன்னுங்காணித் தைலம்

போமிது பொன்னுங்காணி புகழ்சிறு கீரைமுத்தம்
ஓமிது சீந்தில்நிம்பம் உயர்ந்தநாரத்தை கோட்டம்
ஆமிது மதுரமேலம் அலர்ந்தசண் பகம் லவங்கம்
நாமிது சொன்னேமெண்ணெய் நயந்தெரி தலைக்குவாரே. 406

பொன்னுங்காணிச்சாறு, சிறுகீரைச்சாறு, கோரைக்கிழங்கு, சீந்தல், எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, கோட்டம். அதிமதுரம், ஏலம், சண்பகப்பூ, இலவங்கம் ஆகியவற்றைச் சேர்த்துப் பதத்தில் தைலமாக வடித்துக் கொள்வாயாக.

### கையாந்தகரைத் தைலம்

கையாந்தகரை நெல்லிக்காய் கரியசாறு நாழுழி
மையார்எண்ணெய் ஐயொழக்கு மருவும்பாலு மதன்படியே
செய்யா மதுரம் பலமிரண்டு சேரத்திரவிய மதிற்பாதி
பையவரைத்து அடுப்பில் வைத்துப்பதமா யெரித்துத் தலைமுழுக
ஐயா வந்தகண்காசம் அடுத்தசெவி நோய் அகன்றிடுமே. 407

கையாந்தகரைச்சாறு நான்கு படி, நெல்லிக்காய்ச்சாறு நாழுழி, நல்லெண்ணெய் ஐந்து உழக்கு, பால் ஐந்து உழக்கு, அதிமதுரம் இரண்டு பலம், திரவியம் ஒரு பலம் ஆகியவற்றை அரைத்துக் குழப்பி எரித்துப் பதமாய் வடித்துத் தலை முழுகக் கண் காசம், செவிநோய் இவைகள் தீரும்.

### மேருத் தைலம்

எள்ளெண்ணெய் படியொன்று பால்தும்பை
மலரோர்படி எரித்துப் பதத்திறக்கி
இனமுடன் மூன்றுமுறை முழுகுமதின்
விபரமும் எடுத்துரைக்கக் கேளுமே
கள்ளமற சிரசுமட் டாகவேதேய்த்துப்
பின்காய்ச்சு சிகைக்காய தனையே
கருத்துடன் வெந்நீரில் பச்சைசல மன்றியே
கணக்குடன் முழுகி யன்று
தள்ளிவிடு புளிமோர்குளிர்ந்தசல மன்றியே
தானமுது கொண்டு வரிலோ
தாங்காத சிரசிடிகண் பீனிசம் நேத்திரநோய்
தான்பயந் தோடு மிதனில்

வள்ளிதெய் வானை யரனார்கிருபை சேர்பொதிய
மாமலை அகத்திய ரெழில்
வரிசைமே ருத்தைலமாமிதைக் கவிதையாய்
வகுத்துரைத் தனர் பாருமே. 408

ஒரு படி நல்லெண்ணெய், ஒரு படி பால், ஒரு படி தும்பைப் பூவையிட்டு எரித்து வடித்து மூன்றுமுறை தலையில் மட்டும் தேய்த்துக் கொண்டு சிகைக்காய் இட்டு வெந்நீரில் முழுகி அன்றையதினம் புளி மோர், குளிந்த நீர் ஆகியவற்றை நீக்கிப் பத்தியமாயிருந்தால், தாங்காத தலைவலி, பீனிசம் நேத்திர நோய்கள் தீரும்.

பற்று

கடுக்காய் நெல்லிக் காய்மதுரம் கானுங் கருவிலை புளியிலையுந்
தொடுத்திவை யெல்லாம் பொடிசெய்து தொங்கிய குமரி மடல் குடைந்து
அடுத்திவை யெல்லா மதிலடைத்து ஆவாரம் ஈர்க்கிருனல் போக்கி
நடுத்தீ யதனி லெரியவைத்து நல்ல பதத்தில் வாங்கிவிடே. 409

கடுக்காய், நெல்லிவற்றல், அதிமதுரம், கருவேலி இலை, புளியிலை இவற்றையெல்லாம் பொடிசெய்து சோற்றுக் கற்றாழை மடலுக்குள் வைத்து மடலைக் கொண்டுமூடி ஆவாரங் குச்சிகளால் நெருப்புண்டாக்கித் தீயில் கற்றாழை மடலை வைத்து நல்ல பதத்தில் எடுத்து,

வாங்கி யரைத்துத் தனப்பாலால் வழித்துக்குழைத்து இமையிலிடில்
வீங்கும் விழிநோய் நீர்ப்பாய்ச்சல் விதனம் கோபம் எரியழற்சி
ஓங்கி யெழுந்த பூவெழுச்சி உடனே வந்த நோவுகளுந்
தாழ்ந்து கடலில் புகுந்துவிடுந் தம்பிரா னறியத் தப்பாதே. 410

தாய்ப்பால் விட்டரைத்து வழித்துக் குழைத்துக் கண்ணின் இமைகளில் பற்றுப் போடக் கண்வீக்கம், நீர்ப்பாய்ச்சல், விதனம், அன்னகோபம், எரியழற்சி, பூ, எழுச்சி, உடனே வந்த கண் நோய்கள் அநேகமுந் தீரும்.

பற்று

கருவேலி லையும் புளியிலையுங் கதித்த ஓரிலைத் தாமரையுந்
திருவார் பொன்னுங் காணிசிறு கீரை செண்பகப் பூமதுரம்
மருவார் ஏலமி லவங்கம் வயங்கு நெல்லி முள்ளியுடன்
கருவாங் கம்பி பிசின்கூடக் கஸ்தூரி மஞ்ச ளிவையெல்லாம். 411

கருவேலி இலை, புளியிலை, ஓரிலைத்தாமரை, பொன்னுங்காணி, சிறுகீரை, செண்பகப்பூ, அதிமதுரம், ஏலம், கிராம்பு, நெல்லி முள்ளி, கருவப்பிசின், கஸ்தூரிமஞ்சள் இவற்றை எல்லாம்,

கடுக விடித்துக் காடிதனில் காய்ச்சிக் குழம்பு தானுக்கி
இடுகக் கண்ணைத் தான்சுற்றி யெழுந்த கண்ணின் பெருவலியும்
வடுவாங் கண்ணில் நீர்ப்பாய்ச்சல் வாத ரோக மிவையாவும்
பொடிபட் டேகும் எனமுன்னோர் பூதல மீதிற் புகன்றுரே. 412

நன்முக இடித்துக் காடியில்போட்டுக் காய்ச்சிக் குழம்பாக்கிக் கண்ணைச்சுற்றிப் பற்றுப் போடக் கண்வலி, நீர்ப்பாய்ச்சல், வாதநோய் ஆகியவையும் தீரும்.

பற்று

சீரான மலாக்காநற் சாம்பிராணி திண்கருங் குங்கிலியங்குந் தெருக்கம் பிசின்
நேராக இம்மூன்று மரைவராக னெடையாலின் புல்லுருவி பணமதாகக்
கோரான வான்கோழி வெள்ளைக்கருவில் குணமாக வேயரைத்து விழிவனைந்தால்
தீராத ரணசுக்கிரன் சீழ்ப்பிடித்தல் நீர்முட்டு சிவப்புசூலை தீர்ந்துபோமே.

மலாக்கா சாம்பிராணி, கருங்குங்கிலியம், குந்திரிக்கம்பிசின் இம் மூன்றும் வகைக்கு அரை வராகனெடை, ஆலமரத்தி லிருக்கும் புல்லுருவி ஒரு பணவெடை இவற்றை வான்கோழி அல்லது கோழிமுட்டை வெள்ளைக் கருவிட்டு, அரைத்துக் கண்ணைச் சுற்றிப் பற்றுப்போட்டால் சுக்கிரநோய், சீழ்பிடித்தல், நீர்முட்டு, கண் சிவப்பு, சூலை ஆகியவை தீரும்.

பற்று

சாற்றிய சமுத்தி ராவின் பழத்துடன் கடுக்காய் சுக்கு
நேற்றிய விரலி மஞ்சள் சேர்ந்தரை நிம்பஞ் சாற்றில்
தோற்றிய கண்ணைச் சுற்றிச் சூழவே வரைவீ ராகில்
மாற்றிடும் வலிசி வப்பை வளரும்நீர்க் கூச்சம் போமே. 414

சமுத்திரப்பழம், கடுக்காய், சுக்கு, விரலிமஞ்சள் இவற்றை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துக் கண்ணைச்சுற்றிப் பற்றுப் போட வலி, சிவப்பு, நீர்வடிதல், கூச்சம் ஆகியவை தீரும்.

பற்று

கடுக்கா யுடனே படிக்காரம் கரிய போளத் துடன்கூட்டி
நெடுக்க கல்வத் திலிட்டு நிம்பச் சாற்றி லுடனரைத்து
இடுக்கக் காய்ச்சி யிமையின்மேல் இறுகத் தடவக் கண்சிவப்பும்
நடுக்குங் கண்ணில் நீர்விடுதல் நடுங்கி யோடுங் கண்டீரே. 415

கடுக்காய்த்தோல், படிக்காரம், கரியபோளம் இவற்றில் கடுக்காய்த்தோலை நன்ருய்த் தூளாக்கிக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து ஓர் இரும்புக் கரண்டியில் விட்டு நன்ருய்க் காய்ச்சிக் கண்ணைச் சூழப் பற்றுப்போட்டால் கண்சிவப்பு, நீர் வடிதல் முதலியன தீரும். (தண்ணீர் சேர்த்தால் மருந்து கெட்டுப் போகும்).

### பற்று

புழுங்க லரிசி யதன்கரியும் போற்றும் அபினி யதின்மருந்தும்
மழுங்க வரைத்து நன்ருக மத்தைச் சாற்றில் பிறைவளைத்தால்
அழுந்துஞ் சிவப்பு தலைநோவும் அருவிப் பாயுங் கண்ணீரும்
சழுங்கி யேகிப் போமிதனில் தப்பா தென்றுஞ் சத்தியமே. 416

புழுங்கலரிசியைக் கருக்கிக்கொண்டு அதனேடு கொஞ்சம் அபினியைச் சேர்த்து ஊமத்தையிலைச் சாறு விட்டரைத்துக் கண்ணைச் சுற்றிப் பற்றுப்போட்டால் கண்சிவப்பு, தலைவலி, நீர் வடிதல் ஆகியவை தீரும்.

### பற்று

சோற்றுப் பற்றுந் திருநீறுந் தோகை யனையாள் முலைப்பாலும்
போற்றுஞ் செப்புக் கல்வத்திற் பொருந்து குழவி யாலரைத்துக்
காற்றுப் படாமல் காத்திருந்து கண்ணைச் சூழ வரைந்தக்கால்
தோற்றுப் போமே கண்ணேவுஞ் சொன்ஞர் முனிவர் சொன்ஞரே.

ஒரு செப்புக் கல்வத்தில் கொஞ்சம் சோற்றுப் பருக்கையும், வடிகட்டின விபூதியும் வைத்துத் தாய்ப்பால் விட்டுச் செப்புக் குழவியாலரைத்து மினுமினுப்பான களிம்புண்டானவுடன் கண்ணைச் சுற்றிப் பற்றுப் போட்டால் கண்ணேய் தீரும். (செப்புக் கல்வம் கிடைக்கா விட்டால் தாம்பாளத்தைக் கல்வமாகவும் மற்ருெரு தாம்பிரப் பாத்திரத்தைக் குழவியாகவும் உபயோகப் படுத்தலாம்).

### பற்று

கருவேலிலை க்டுக்காய் பீங்கான் கனத்த புழுங்க லரிசியதை
மருவுங் காடி தனிலரைத்து மறுக்கக் காய்ச்சிப் பிறைவளைத்தால்
அருவுங் கண்ணேய் நீர்ச்சிவப்பும் அடர வலிக்குந் தலைநோவும்
வெருவிப் போகும் நிச்சயமாய் வேறு மருந்து வேண்டாமே. 418

கருவேலிலை, கடுக்காய்த்தோல், பீங்கான், புழுங்கலரிசி இவற்றைக் காடிநீர் விட்டரைத்து நன்ருய்க் காய்ச்சிக் கண்ணைச் சூழப் பற்றுப் போட்டால் கண்ணேயும், சிவப்பும், தலைவலியுந் திரும்.

### பற்று

இதிற்சொரிதுத் தந்தன்னி யெலுமிச்சம் பழச்சாற்றில்
கதித்துறத் தேய்த்தே யரைத்துக் கண்ணது சூழப்பூசக்
கொதித்த பதுமச்சிவப்புங் குளிர்ந்திடுங் கோபம்மாறும்
விதித்த பிரமன்ருனே விரைவி னுரைத்தாரன்றே. 419

சொரிதுத் தத்தை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்துக் கண்ணைச் சுற்றிப் பற்றுப் போட்டால் கண்சிவப்பும் அன்னக் கோபத்தாலுண்டாகும் அனலும் மாறிக் குளிர்ந்திடும்.

### பற்று

காசா விலைகடுக்காய் காணுங் கருவேலிலை
வீசார் கற்ருழை விருசீலை—பேசாமல்
கண்ணில் வலிதீருங் கலங்குந் தலைவலிநோய்
எண்ணு மில்லை பாரிலிது. 420

காசாஇலை, கடுக்காய், கருவேலிலை இவற்றைச் சோற்றுக் கற்ருழைச் சாறு விட்டரைத்துப் பற்றுப் போடக் கண்ணோயும் தலைவலியும் தீரும்.

### பற்று

நிம்பப் பழத்தில் அரப்பொடியை நேர்ந்தடைத்துக்
கம்பியிழை சீலைதனில் கட்டிவிடில்—கொம்பியே
குத்துஞ் சிவப்புடனே குத்துங்கண் ணேக்காடு
தத்திப் பறந்துவிடுந் தான். 421

எலுமிச்சம் பழத்தை மேற்புறத்தில் சிறிது அறுத்துவிட்டு அதனுள் இரும்பு அரப்பொடியைக் கொட்டி ஊசியினுல் குத்தி இறக்கி மேலே ஒரு துணியைக் கட்டிக் கண்ணைச் சுற்றிப் பழத்தை ஒற்றிப் பற்றுப்போடக் குத்தல், வலி, சிவப்போடு கூடிய கண்ணேக் காடு ஆகியவை தீரும்.

### பொக்கணம்

உட்டணமா கியநெல் சோறு ஒண்நெய்விட் டெரித்து நல்ல
பொட்டண மாக்கி ஒத்தப் போற்றுமிப் பூத லத்தில்
திட்டென வருகண் கோபந் தீருமே சிவப்பெ ரிப்பும்
பட்டதோர் வலியும் பீளை நீங்கிடும் பார்க்கில் நன்றே. 422

சுடு சோற்றில் கொஞ்சம் நெய்விட்டு ஒரு துணியில் வைத்துப் பொக்கணமாகக் கட்டிக் கண்ணைச் சுற்றி ஒத்தினுல் கண் சிவப்பு, எரிச்சல், வலி, பீளை கட்டுதல் ஆகியவை தீரும்.

### புகை

முருங்கை யிலந்தை முதிர்ந்த வேம்பினில் முளைத்தபிசின்
நெருங்கிய கொம்பரக் கொடுசாம்பி ராணி நிறைகுக்கிலும்
சுருங்கிய நெய்யில் பிசறித் தனித்தனி தூபமிட்டால்
சிறுகிய கண்வலி சலங்களுங் கோபஞ் சிவப்பறுமே. 423

**முருங்கைப் பிசினுவது அல்லது இலந்தை மரத்துப் பிசினுவது அல்லது முதிர்ந்த வேப்பமரத்தின் பிசினுவது ஏதேனும் ஒருவகைப் பிசினும், கொம்பரக்கு, சாம்பிராணி, குக்கில் இவற்றை இடித்துத் தூள்செய்து கொண்டு பசுநெய் விட்டுப் பிசறி வைத்துக் கொண்டு தூபமிட்டால் கண்ணில் வலியும், நீர்வடிதலும் சிவப்புந் தீரும்.**

### புகை (வேறு)

மஞ்சள் பொடியும் சந்தனத்தூள் வன்னங் கருத்த குங்கிலியம்
வஞ்சப் பொடியாய்த் தூள்செய்து உருகுந் தணலில் புகைகாட்ட
மிஞ்சிக் குடையுங் கண்ணுேவும் விளையும் நீரும் தலைநோவும்
அஞ்சிக் குடியோ டும்மென்றே அறியச் சொன்னேங்கண்டீரே.

**கஸ்தூரி மஞ்சள், சந்தனத்தூள், கருங்குங்கிலியம் இவற்றைத் தூளாக இடித்துத் தூபமிட்டால் கண்ணுேவும், நீர்வடிதலும், தலைநோவுந் தீரும்.**

### புகை (வேறு)

எள்ளுடன் பயறு வேம்பி னிலையொடு கடுகுங் கூட்டித்
தெள்ளிதாய்ப் பொடிகள் செய்து திறக்கவே புகையுங் காட்ட
உள்ளது சொன்னே மென்று உவந்துநீ செய்வா யாகில்
மெள்ளவே கண்சி வப்பும் விலகுநீர் தலைநோ வன்றே. 425

**எள், பயறு, வேம்பினிலை, கடுகு இவற்றை நையப் பொடி செய்து தூபமிட்டால் கண்சிவப்பு, நீர்வடிதல் தலைநோய் ஆகியவை தீரும்.**

### செங்கல் வேது

தெள்ளூறு செங்கல் காய்ச்சிச் செம்புவெண் கலத்தி லிட்டு
ஒள்ளிய முலைப்பால் தூவி யுகந்ததோர் புகையுங் காட்ட
நள்ளிய நயன ரோகம் நற்றலை வலியும் போகும்
வள்ளலும் வாகடத்தில் மகிழ்ந்துட னுரைத்த வாறே. 426

**புதிய செங்கல்லைச் சிறு துண்டுகளாக உடைத்து நெருப்பி லிட்டுப் பழுத்தவுடன் ஒரு தாம்பிரப் பாத்திரத்திலாகிலும் அல்லது வெண்கலப் பாத்திரத்திலாகிலும் போட்டுக் கல்லின்மேல் படும்படி கொஞ்சம் தாய்ப்பாலைத் தெளிக்கப் புகையுண்டாகும். அந்தப் புகையைக் கண்ணுக்குள் படும்படி கண்ணைத் திறந்து**

கொடுத்துச் சற்று நேரமிருந்தால் முகத்தில் வியர்வை யுண்டாகும். முக்காடிட்டுக் கொண்டு வேது பிடிப்பது நலம். இவ்வாறு செய்து வந்தால் கண் வியாதிகளும் தலைவலியும் தீரும்.

### காடிவேது

கருவிழி சிவந்து நொந்து கடுப்புடன் தலைக்கு டைச்சல்
பெருகிய கபால சூலை பெயர்ந்ததோர் காடி தன்னில்
திரிபலை யிட்டுக் காய்ச்சிச் செங்கல் வேதுடன் கலந்து
மருவிய விழியில் கொள்ள மறைந்தகண் தெளிந்து போமே. 427

கருவிழியானது சிவப்பாகி, நோக்காடடைந்து தலைவலியோடிருக்குமானால் காடிநீரில் திரிபலையை யிட்டுக் காய்ச்சிச் செங்கல் வேது போட்டதுபோல் தாய்ப்பாலுக்குப் பதிலாய்க் காடிநீர் மருந்தைத் தெளித்து வேதுபோட்டு முற்கூறியவாறு இட வலிகள் நீங்கி மறைந்த கண்களும் பார்வையை அடையும்.

### வத்திப்புகை

சென்னியி லடப்பம் வித்து சேரரைப் பரத்தைக் காரம்
மின்திரி கடுகி னோடு மிகுந்தபேய்ப் பீர்க்கங் கூடுங்
கன்னிய கொட்டாங் கச்சி கரியோடு கிராம்பு மஞ்சள்
நண்ணிய சாம்பி ராணி நற்புகை மருந்தி லூட்டே. 428

அடப்பம்விதை, இலுப்பைக்கட்டி, சிற்றரத்தை, சீனக்காரம், சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, பேய்ப்பீர்க்கங்கூடு, கொட்டாங்கச்சி சுட்ட கரி, கிராம்பு, மஞ்சள், சாம்பி ராணி இவைகளைச் சேர்த்து இடித்துத் திரியாகச் செய்து புகையை மூக்கில் வாங்குவாயாக.

### (வேறு)

ஊட்டிய ஆக்கி ராணம் உவந்திதைச் செய்வீ ராகில்
சூட்டிய கண்ணில் மந்தம் துடர்ந்தநோய் தொண்ணூற் றுறும்
மூட்டிய முழிக் குடைச்சல் முதிர்நிமை யிறுகல் கூச்சம்
பூட்டிய கபாலசூலை பீனிசம் சன்னி போமே. 429

இவ்வாறு புகையை ஊட்டிவந்தால் கண்மந்தம் முதலான தொண்ணூற்றுறு வியாதிகளும், விழிக்குடைச்சல், நிமையிறுகல், கூச்சம், கபாலசூலை, பீனிசம், சன்னி முதலியவைகள் தீரும்.

### வத்திப்புகை

வெள்ளிய சீலை தன்னில் மிகுந்ததோர் சதுரக் கள்ளி
தெள்ளிய பாலை யூட்டித் திரிப்புகை மூக்கில் வாங்கத்
துள்ளிய கபால சூலை தொலைவிலா விரண மாறும்
ஒள்ளிய கண்க டுப்பும் உறுதலுஞ் சிவப்பும் போமே. 430

ஒரு வெள்ளைத்துணியில் சதுரக்கள்ளிப் பாலையூட்டி நிழலில் உலர்த்தி, திரியாகத் திரித்து மூக்கில் புகை பிடிக்க கபாலசூலை, தீராத விரணங்கள், கண்கடுப்பு, உறுத்தல், சிவப்பு ஆகியவை தீரும்.

### வத்திப்புகை (வேறு)

கடுகு சதகுப்பை கருஞ்சீ ரகம்எள்
கொடுமிளகு வேம்புவிரை கோட்டம்—முடுகியரை
வேலைநொச்சிச் சாறுகளை வேண்டுந் திரிமுகர
நாளையில்லை கண்சூலை நாடு. 431

கடுகு, சதகுப்பை, கருஞ்சீரகம், எள், மிளகு, வேப்பம்வித்து, கோட்டம் இவற்றை வேளைச்சாறும், நொச்சிச்சாறும் விட்டரைத்துத் திரிசெய்து கொளுத்தி மூக்கில் புகைபிடிக்கக் கண்சூலை தீரும்.

### வத்திப்புகை (வேறு)

அத்திப் பாலைத் திரியாக்கி அருக மூட்டிப் புகைமுகரச்
சத்திப் பித்தம் நாற்பதும்போந் தலைவலி பீனிசந் தானேடும்
பித்த கரப்பான் செத்துப்போம் பின்னும் நாசி விரணங்கள்
செத்துக் கெட்டுத் தான்போமே தேனே கேளா யிதுதானே. 432

அத்திமரத்துப் பாலை வெள்ளைத் துணியிலூட்டித் திரியாகத் திரித்து நிழலிலுலர்த்திக் கொளுத்தி மூக்கில் புகைபிடிக்க, வாந்தி செய்யும் பித்தநோய்கள் நாற்பதும், தலைவலியும், பீனிசமும் பித்தக்கரப்பானும், நாசி விரணங்களும் தீரும்.

### ஆக்கிராணம் (வேறு)

திரிகடு கரத்தை காரஞ் சிலையொடு நாபி சூதம்
நெரிவிடந் துருசு கூட நிரைசமன் கெந்த கந்தான்
பரிவொடு நாசித் தூளைப் பாங்கதாய் வாங்கும் போது
தெரிகெடு கபால சூலை திகழ்சுரஞ் சன்னி போமே. 433

திரிகடுகு, சிற்றரத்தை, சீனக்காரம், மனேசிலை, நாபி, ரசம், நிர்விடம், துருசு, கெந்தகம் இவற்றைச் சமனெடையாய் எடுத்துத் தூள்செய்து நுண்ணியதூளாய் இருக்கும்படி வடிகட்டி; வைத்துக் கொண்டு கொஞ்சமாய் எடுத்து மூக்கிலிழுக்கக் கபாலசூலை, சுரம், சன்னி ஆகியவை தீரும்.

### ஆக்கிராணம்

சுண்டைவே ரரத்தை பாதி தூள்செய்து மூக்கில் வாங்க
மண்டையில் விளையும் நீரை வாங்கிடுந் தும்ம லாகத்
தொண்டையில் கரக ரப்பு துடங்கிய சன்னிசூலை
பண்டையில் கண்ணேய் வாயு பழஞ்சுரம் பறந்து போமே. 434

மலைநாட்டுச் சுண்டைவேர் ஒருபங்கு, சிற்றரத்தை அரைப் பங்கு இவ் விரண்டையு மிடித்து நுண்ணிய தூளாயிருக்கும்படி வடிகட்டி வைத்துக்கொண்டு கொஞ்சமாய் எடுத்து மூக்கிலிழுக்கத் தலையிலிருக்கும் நீரைத் தும்மலாகக் கொண்டுவந்து கழற்றும். தொண்டையின் கரகரப்பை நீக்கும். சன்னி, சூலை, கண்ணோய், வாயு, பழஞ்சுரம் இவற்றைத் தீர்க்கும்.

### ஆக்கிராணம் (வேறு)

தேற்றும் வித்தோடு திரிகடுகு சீயக்காய்
சேர்த்தா லிருநாசி சேர்பொடித்தூள்—மோர்ந்தக்கால்
சன்னி பலவுந் தலைவலியும் நீரேற்றம்
விண்ணில் விரைந்தோடும் விட்டு. 435

தேற்றுங்கொட்டை, திரிகடுகு, சீயக்காய் (சிகைக்காய்) இவற்றைப் பொடி செய்து நுண்ணிய தூளாயிருக்கும்படி வடிகட்டி வைத்துக்கெண்டு கொஞ்சமாய் எடுத்து மூக்கிலிழுக்கப் பலவகை சன்னியும், தலைவலியும், நீரேற்றமும் தீரும்.

### மூலிகை நசியம்

கூறிய தும்பைப் பூவுங் குறித்திடுந் துளசி நொச்சி
தேறிய பழம்பூ வந்தி திரிகடு கரத்தை காரம்
நாரியர் தனப்பால் வார்த்து நறுக்கியே மூக்கில் வார்க்க
ஆறிடுங் கபால சூலை அதிர்வலி சிவப்பும் போமே. 436

தும்பைப்பூ, துளசியிலை, நொச்சியிலை, பழையபூவந்திக் கொட்டை, திரிகடுகு சிற்றரத்தை, படிக்காரம் இவற்றை யெல்லாம் ஒன்று சேர்த்துத் தாய்ப்பால் வார்த்து நறுக்கிப் பிழிந்து மூக்கில் நசியமிட அதிரும்படியான கபாலசூலை, கண்சிவப்பு ஆகியவை தீரும்.

### நெய் நசியம்

பேய்ப்புடலுங் கொன்றைப் பிசினோ டதிமதுரம்
மூப்பிலாப் பெண்தனப்பா லாவினெய்யில்—நீர்ப்படரும்
நாசியிடக் காய்ச்சி நமைவலிகண் ணோய்தீருங்
காசினியில் மானேநீ காண். 437

பேய்ப்புடல், கொன்றைப்பிசின், அதிமதுரம், தாய்ப்பால் இவற்றைப் பசுவின் நெய் விட்டுக் காய்ச்சி மூக்கில் நசியமிடக் கண்ணிமைவலி, கண்ணோய் ஆகியவை தீரும்.

### நசியம்

ஓடவே மாதுளம்பூச் சாற்றிலுகந் தாவின்நெய்யில்
கூட அருகங் கொழுந்தரைத்து—நாடியிதைப்
பார்த்து வடித்துப் பரிவாக மூக்கிலிடக்
கூர்த்தரெத்த பித்தம்போங் கூறு. 438

மாதுளம் பூச்சாறு, பசுவின் நெய் இவ் விரண்டையும் கலந்து அதில் அருகங் கொழுந்தை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து மூக்கில் நசியமிட இரத்த பித்தந் தீரும்.

நசியம்

எருக்கம் பாலில் நல்லெண்ணெய் இனிய முல்லை கருநொச்சி
நெருக்குஞ் சித்தா முட்டியின்வேர் நீர்முள்ளியுமே சேர்த்தரைத்து
செருக்கக் காய்ச்சி நாசிதனில் செலுத்தக் கண்ணோய் நீர்ச்சிவப்பு
நெருக்குந் தலைநோய் விட்டகலும் நில்லா தோடும் பீனிசமே. 439

எருக்கம்பாலும் நல்லெண்ணெயும் சரியளவாய்க் கலந்து கொண்டு அதில் முல்லையிலை, கருநொச்சி, சிற்றுமுட்டிவேர், நீர்முள்ளி இவற்றை அரைத்துக் குழப்பிக் காய்ச்சி வடித்து நாசியில் நசியமிடக் கண்ணோய், கண்ணில் நீர்வடிதல், கண்சிவப்பு, தலைவலி, பீனிசம் ஆகியவை தீரும்.

நசியம்

நேத்திர வாதம் நீர்முட்டும் நெருக்கல் கூச்சங் கபாலவலி
காத்திர மான சிரசுதனில் கலநீர் கனத்து வீழ்வதற்குப்
பாத்திர மான வேப்பெண்ணெய் பரிவாய் மூக்கில் நசியமிட
நேத்திர வாயு கண்ணோய்கள் நிலைவிட் டோடும் நிச்சயமே. 440

வேப்பெண்ணெயை மூக்கில் நசியமிட நேத்திரவாதம், நீர்முட்டு, நெருக்கல், கூச்சம், தலைவலி, தலையில் நீர்கனத்தல், கண்ணோய்கள் ஆகியவை தீரும்.

மஞ்சட் காமாலைக்கு நசியம்

மிஞ்சக்காய் பீர்க்கம் விரையெடுத் தேஉலர்த்த
மஞ்சக்கா மாலைக்கு வாய்த்ததென்று—மிஞ்சவே
போதவுரைத் தார்புலவர் பொய்யா மருந்திதனை
மாதர்தனப் பால்நசியம் வார். 441

பேய்ப்பீர்க்கம் விரையை உலர்த்தித் தூள்செய்து தாய்ப்பால் கொஞ்சம் விட்டு இரண்டு மணிநேரஞ் சென்றபின் வடிகட்டி விட்டு அப் பாலை மூக்கில் ஒரு சொட்டு இரண்டு சொட்டு நசியமிட்டு வர மஞ்சட்காமாலை தீரும்.

கண்டந் தன்னில் மேற்பட்ட கபால வியாதி தனக்கெல்லாம்
நன்றாய்ச் சொல்வேன் நசியமது நற்கஸ் தூரி பணவிடையும்
வண்டார் குழலி குங்குமப்பூ வாகாய் கிளர்ந்த தேங்காய்நெய்
தின்றால் கசக்கும் வேப்பெண்ணெய் சேரக் கூட்டி மூக்கில்விடே

கழுத்துக்கு மேற்பட்ட கபால நோய்களுக்கெல்லாம் நசியம் கூறுவேனுக. கஸ்தூரி பணவிடை, குங்குமப்பூ, தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய் இவற்றைக் கலந்து மூக்கில் நசியமிடுக.

### நசியம்

மருவுகற் பூரந் தன்னில் மலர்ந்த வேர்க் கொம்புதானும்
பருகுநற் சீனி யோடு பாவையர் தனத்தின் பாலால்
கருவுற வரைத்துப் பின்னை கரைப்பது செய்யு மங்கே
இருளுறு கண்ணோய் போக்கும் இயல்பிது நசியந் தானே. 443

பச்சைக் கற்பூரம், சுக்கு, சர்க்கரை இம் மூன்றையும் தாய்பால் விட்டரைத்துப் பாலில் குழப்பி வைத்திருந்து சிறிது நேரம்சென்றபின் வடிகட்டி மூக்கில் நசியமிட்டுவரப் பார்வையை மறைத்துவரும் கண்ணோய்கள் தீரும்.

### நசியம் (வேறு)

நொச்சிக் கொழுந்து நுகர்மிளகு கற்பூரம்
அச்சமற வேதனப்பா லாட்டியே—கச்சணியும்
மானே நசியமிட வாங்கும் புகைச்சலெல்லாந்
தானே வெளியாகுந் தான். 444

நொச்சிக் கொழுந்து, மிளகு, பச்சைக் கற்பூரம் ஆகியவற்றை தாய்ப்பால் விட்டரைத்து, பாலில் குழப்பி வைத்திருந்து சிறிது நேரம் சென்றபின் வடிகட்டி மூக்கில் நசியமிட்டுவர கண் புகைச்சல் தீரும்.

### தற்பணம்

வேப்பிலை தனையரைத்து வெறுநெய்யாற் குழப்பிக் கண்ணில்
காப்புற விட்ட போது கனத்துறு வலியுந் தீர்ந்து
சீப்பெறு தவமு ருங்கை வேர்முலைப் பாலில் தேய்த்துக்
கோப்புற வளைத்த போது குளிர்ந்திடு நயனந் தானே. 445

வேப்பிலையை அரைத்துப் பசுநெய்யிற் குழப்பி வைத்திருந்து பிழிந்து கண்ணுக்குள் விட்டுவரக் கண்ணிலுண்டாகும் குத்தல்வலி தீரும். தவசுமுருங்கை வேரைத் தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணைச் சுற்றிப் புறவளையமிட்டால் கண் குளிரும்.

### தற்பணம் (வேறு)

கண்ணிமை கனத்து றுத்திக் கசிந்து நீர்ப் பீளை சார்ந்து
விண்ணுறச் சிவந்த ழற்றி விழியுடன் தலைக னக்கில்
எண்ணுநற் காணி வேரை யிழைநறு நெய்யில் பாலில்
நண்ணுறப் பஞ்சி லூட்டி நற்கரு இமையில் போட. 446

கண்ணின் இமையானது கனத்து, உறுத்தி, நீர்வடிந்து, பீளைகட்டி, சிவந்து, அழன்று, கண்ணும், தலையும் கனக்குமேயானல் பொன்னுங்காணி வேரை நெய்யிலாவது, பாலிலாவது இழைத்துப் பஞ்சிலூட்டி இமையின்மேல் போடுவாயாக.

### தற்பணம் (வேறு)

கருணை நற் றண்டு நீரைக் கடுகெனப் பஞ்சி லூட்டிச்
சிறுகிய விழியின் மேலே தீதறப் போட்டு வாங்கக்
குறுகிய பகவ னர்போல் கொதித்தெழும் ஆணிப் பூவும்
அறுமுக னர்தம் பாதம் அருளினேம் மாறுங் கண்டீர். 447

கருணையின் தண்டுநீரைப் பஞ்சில் நனைத்துக் கண்ணின் இமையின் மேல் போட்டுவர ஆணிப்பூக்கள் தீரும்.

### நயனப் படுவனுக்குப் பற்று

நயனப் படுவன் மேற்கோவை
நல்குஞ் சாற்றை நனிபூசி
ஒயிலா யுலர்ந்த பின்சித்தா
மணக்கு நெய்யை வெண்ணெயுடன்
அயிலார் விழியார் தனப்பாலில்
அரைத்துப் பஞ்சாற் படுவன்மேல்
நியம மாய்நா லைந்துநாள்
நெறியாய்ப் போடக் குணமாமே. 448

நயனப்படுவன்மீது கோவையிலைச் சாற்றைப் பூசி உலர்ந்தபின் சிற்றுமணக்கெண்ணெய், வெண்ணெய், தாய்ப்பால் இம் மூன் றையுஞ் சேர்த்தரைத்து வைத்துக்கொண்டு இதனைப் பஞ்சிலூட்டி ஷி படுவன்மீது போடவும். இவ்விதம் நாலைந்து நாள் போட்டுவரக் குணமாகும்.

### முட்டை வெண்கருவிடுதல்

முட்டைவெண் கருவை வாங்கி முதியதேன் முலைப்பால் கூட்டித்
திட்டெனப் பஞ்சி லூட்டித் தீதற இமையிற் போடக்
கெட்டெழுங் கண்ணில் நோவுங் கிளர்ந்தெழு சிவப்பு மாறுஞ்
சுட்டதோர் நெற்றிக் கண்கொள் சோதியே அருளிச் செய்தார்.

கோழிமுட்டையின் வெள்ளைக்கருவுடன் தேன், தாய்ப்பால் கூட்டி நன்றாயரைத்துப் பஞ்சிலூட்டி இமையிற் போட்டால் கண்ணிலுண்டாகும் நோய்களும் கண் சிவப்புந் தீரும்.

## அட்டை விதி

அட்டையின் விதிதனை யறிய யாவருந்
திட்டம தாகவே செப்ப வுன்னினேன்
மட்டமர் குழலினுள் வரன ளித்திடும்
இட்ட விநாயகன் இணையடி போற்றியே. 450

முன்னே கேளட் டையின்குணந்தான் மொய்குழல் மாதே நீகேளாய்
அந்நா ளன்னம் பால்பருகும் அதுபோல் வாங்கும் விடநீரை
நன்னுள் பார்த்து நோயறிந்து நயனந் தன்னில் விடுவாயால்
சொன்னேஞ் சொன்னேம் நாற்றிசையுந் துலங்கச் சொன்னேஞ்
சொன்னேமே. 451

ஆதியோ தியவே தத்தில் அட்டைக்கு மேனி யுந்தான்
ஏதெனில் பல்லு மூன்று மியன்றஅஞ் சடுக்குத் தோலும்
ஓதிய முகமும் பச்சை உதிரமுஞ் சிவப்பாய் பின்னை
தீதிலாப் பக்க மிரண்டும் பருத்திடும் நரம்பு சேரும். 452

அரவின்வாய்த் தேரை போன்றும் அணிமழுத் தலையே போன்றும்
பருதியின் பைங்கண போன்றும் பலமணி சிதறினுப்போல்
விரவியே பல்நெ கிழ்ந்து மெத்தெனக் கடிக்கும் அட்டை
கருதியே காலன் தன்னைக் காட்டிடுங் கரணந் தானே. 453

## சாதி பேதம்

வெள்ளை நிறந்தான் வேதியனுர் மிகுசெங் கழுநீர் சத்திரியன்
சொல்லும் பவளம் வைசியனுஞ் சூத்திர னெலுமிச் சம்பழமாங்
கல்லைப் போலக் கதித்தெழுந்த கருது புறத்தில் விடுவீரேல்
மெள்ள கரைத்திட் டோடுமென விளம்பிச் சொன்னேம்
மேதினிக்கே. 454

## ஆண் பெண் அறிய

அட்டையில் பெண்ணும் ஆணும் அறிந்திட வேணு மாகில்
கொட்டியும் பதுமந் தானுங் கூடவே நீரில் போட்டால்
அட்டையை விட்ட வாறே ஆண்பது மத்திற் சேருங்
கொட்டியிற் பேடு சேருங் குறிதனை யறிந்து கொள்ளே. 455

அட்டை தேற்றும் வகையதனை அறியக் கேளாய் அரக்காம்பல்
கொட்டிக் கிழங்கு பசுமஞ்சள் கோலக்கழுநீர் வார்த்தரைத்து
மட்டித் தாகக் கரைத்ததிலே வாய்த்த உருவைத் தேறவிட்டுக்
கட்டிக் கொண்டு போய்விடுவீர் காலன் தவிர்க்குங் கண்டீரே

வெள்ளை நிறமொன்று மிகுநீலந் தானென்று
கள்ளமிலாப் பொன்மை கருப்பொன்று—எள்ளியதாம்
வாசமிகும் பூங்குழலீர் மற்று மிவைகளெலாந்
தேசகுண மாமென்று செப்பு. 457

நீலநிற மாணுருவம் நிச்சயமோ ரங்குலம்பெண்
சாலவே வெள்ளைநிறந் தானுகும்—மேலுங்
கருப்பு விடங்கண்டால் கருமையுற்ற பெண்மை
உருப்புநிறம் சாதா ரணம். 458

அட்டை தனக்குள்ள அழகான லட்சணத்தைத்
திட்ட முடன்நடுவே செப்பக்கேள்—குட்டிக்குப்
பாலமுத மென்னுமொழி பாவைநல் வாயுருக்கள்
நாலுவகை யுண்டென்றே நாட்டு. 459

மண்ணிற் பிறந்த வட்டைக்கு வகுத்த நாலு குணங்கேளாய்
அண்ணி தான வேதியர்க்கு அடைந்த அட்டை யனல்நிரமாந்
திண்ணி தான மன்னவர்க்குச் செய்யகழுநீர் மலர்நிறமாம்
எண்ணிச் சொன்னேம் வைசியர்க்கே யிசைந்த வட்டை
வரிதானே 460

சொல்லக் கேளாய் சூத்திரர்க்குச் சொன்னேம் பச்சை நிறமாகும்
நல்ல திந்த வகைதன்னை நாடிச் செய்ய நலம்பிறக்கும்
கல்லைப் பழிக்குந் தனத்துடனே கனிந்தகொவ்வை யிதழ்கொண்டு
அல்லைப் பழித்த குழலாளே அமைத்துச் சொன்னேம்
மானிடர்க்கே. 46

அஞ்சுவிரல் நீளத்தில் அட்டை விடலாகும்
மிஞ்சவே அட்டை விடவேண்டாம்—மிஞ்சி
கடிவாய் தினவெழுந்து கடுத்துவலி வீங்குந்
துடியாரு நல்லிடையாய் சொல். 462

விட்டவுருத் தன்னில் விஷஉதிரந் தான்சிக்கிப்
பட்ட உருவைப் பலகாலும்—விட்டுவிடு
மத்தா லுருவடைய மான விஷமாகும்
முத்தார் தனத்தாய் மொழி. 463

விட்டவுரு வேறே விடாதவுரு தான்வேறே
கட்டுங் குடுவைதனில் காதலித்துக்—கட்டுங்
களிமணிட்டு நீர்வார்த்துக் காப்பாற்று மல்லால்
தெளியவரும் நீரில்விடுஞ் சென்று. 464

விட்டவுருத் தானும் விழவுருவே யானக்கால்
வெட்டுருவாய் வீங்குமது வேதனையாந்—திட்டஞ்
சுரமாங் கலக்கமாஞ் சூழ்தினவுங் காணும்
உரமாகும் புண்ணு முதிர்ந்து. 465

உற்ற விருவினக் கோது பரிகாரம்
உற்றவிஷம் ரத்தத்தா லோயுமாம்—முற்ற
இரத்தபித்த மானவர்க்கு ஈதுபரி காரம்
இரத்தமதை ஊற்றிவிடு மென்று. 466

அட்டைதனை விட்டு அதன்மீதி லேசிலை
யிட்டுறையு மல்லாக்கால் ஈயிருந்து—முட்டக்
குடியாது பூசிக் குலைந்துவிடு மென்றே
துடியாரு மெல்லிடையாய் சொல். 467

நிரம்பக் குடித்துருவும் நித்திரை போய்மீள
வரம்பில் கடிகடிக்கிலதனைத்—திரும்பப்
புளியிட்டு வாங்கும் பிடித்திருந்தால் மீளக்
கருவுற்று தான்கடிக்குங் காண். 468

குடித்து வீழட்டை தனைக்கொண்டு தவிட்டிலிட்டுப்
பிடித்த தின்வாய் எள்ளதனைப் பெய்து—பிடித்து
விட்டு ரத்தம் போனல் துலைநீரில் நீந்தவிட்டுக்
கட்டுவது மண்குடுவைக் கண். 469

முன்னே சொன்னேம் முறிவதுவும் மொய்குழல் மாதே நீகேளாய்
அன்னம் பாலில் நீர்பெய்து அயின்ருப் போல விடமகலும்
இன்னஞ் சொல்லி லெண்விரலில் உதிர மெல்லாம் வாங்கிவிடும்
பொன்னே யாணியும் மேனியளே மேலும் புகலக் கேளாயே. 470

சத்தியில் மாந்தருக்குந் தையல்பிள் ளையர் தமக்கும்
ஒத்துநின் றூட்டி வித்து உறக்கமுந் தவிரப் பண்ணி
மத்தியானத்து மேலாய் மண்கொண்டு சுத்தி பண்ணிப்
பற்றிய நோய்கள் தன்னைப் பார்த்துநீ அட்டை கட்டே. 471

கட்டிய வுருக்கள் தானுங் கடுகவே குடித்து வீழில்
விட்டவாய் யுதிர மாறும் வேதனை யில்லை யென்று
முட்டவுங் கடுத்து நொந்து முகஞ்சுளித் துருக்கள் காட்டில்
விட்டவாய் வீங்கு மென்றே மேம்படக் கூறி ஞரே. 472

மட்டுப் புகுந்த வதனுள்ளே வகுத்த சாதி நாலுக்கும்
கட்டு முருவென்றி வற்றிற்குங் கருது குலமும் பிறப்புங்கேள்
ஒட்டிப் பிறக்கு மேழுதோல் உருப்பில் மூன்று நூறுகால்
தொட்ட அஞ்சு நீளமதில் தோன்று நாமஞ் சொல்லக்கேள்,

ஆகா வட்டை யதுகேளாய் அலவன் தவளை நீர்ப்பாம்பு
மேகா சலத்தில் பிறந்தனவும் வேண்டா சருகிற் பிறந்தனவும்
போகாச் சுனையில் பிறந்தனவும் பொல்லா வட்டை யிவை யென்றே
பாகார் மொழிகொள் பைந்தொடியே பாரா யட்டை வகுப்பினையே.

அழுகா சலத்தில் பிறந்தவுரு அறவே மேனி சரசரக்கும்
மெழுகா நிலைநீர்ச் சுனையிலுறு உருவை மொழிய அடைகாக்கும்
கழியா நீரில் பிறந்தவுருக் கழுநீ ரான நிறமதுபோல்
ஒழியா வயிறு சிவந்திருக்கும் உண்மை யிதுவென் றுணர்வாயே.

மண்ணிற் பிறந்த வேதியர்க்கு வகுத்த உருப்பொன் னிறமதுவாம்
கண்ணிற் காக்கும் வேந்தர்க்குக் கருது கழுநீர் நிறமதுவாம்
எண்ணிச் சொல்லும் வைசியர்க்கு இசைந்த வரிசி யதினுருவாம்
பண்ணில் சேர்ந்த மொழிநல்லாய் பச்சை நிறமாஞ் சூத்திரர்க்கே.

பொன்னிற முதிர்ந்த எள்ளைப் பொருகு போலரைத்து இன்னுஞ்
சென்னிற வெண்ணெய் தன்னைச் சிகரத்தே ஞெக்கக் கொண்டு
மின்னனையாய்நீ கேளாய் விரைந்துட னுதிரம் பாய்ந்தால்
புன்னைப்பூ நிறம தாகப் போற்றளள் ளரைத்துப் பூசே. 477

அமிர்த பாகம் விட பாகம் அறிந்தே யட்டை தனைவிடுக
அமிர்த பாகத்தான வட்டை தனையிப்பால் நீதான் விடுக
குமுத மலர்வாய் மடமானே கொடிய விடப்பா கத்தேற்றித்
திமிர மாக பெண்ணுருவைத் திறந்தே விடுகச் செப்பினரே. 478

சாத்திரந் தன்னைக் கற்றுந் தவத்தினிற் பொருளைக் கேட்டுங்
காத்திரந் துய்ய ளுகில் கைவந்தோர் கையைக் கண்டு
பார்த்திடு மிவையே யென்று பரிவுட னிவனைப் பற்றித்
தீர்த்துநோய் தவிர்க்க வேண்டிச் செகந்தனில் விடுவித் தாரே. 479

### அமுதநிலை

சீர்தரு பிரதமை சேர்ந்திடும் பெருவிரல்
நேர்பெறு முள்ளங் காலது துதியை
திரிதிகை முழங்கால் சேர்ந்திடு மென்க
சதுர்த்திப் பெருந்துடை தாவிய பஞ்சமி
குய்யத் திடத்தே குடியிருந் திடுமாம்
ஐயமே சஷ்டி அமர்ந்திடும் நாபி
சப்தமி முலையில் தானிருந் திடுமால்
ஒத்திடு மஷ்டமி ஓதினேங் கரத்தில்
மெச்சிடும் நவமி மேவிய கழுத்தில்
அதரந் தசமி ஆகுமவ் விடத்தே
ஏகா தசியில் இருந்திடும் நாவில்
துவாதசி தன்னில் துயின்றிடும் நெற்றி
திரயோ தசியில் சேர்ந்திடும் புருவம்
சதுர்த்தசி பிடரி தானிருந் திடுமால்
உதித்திடும் பூரணம் உச்சியி லுறையும்
செப்பிய அமிர்தம் நிலைநின் றதனுல்
சத்திரம் பண்ணில் தானெழும் நோய்கள்
கொப்புளித் திடினுங் குத்துப் படினுந்
தப்பிலா அரவந் தான்கடித் திடினும்
அட்டை கடிக்கினும் அடிதடிச் சிலந்தியும்

வயிற்றிற் பிணியென மரணம தாமே
காசினி தனிலே கைவிட தாரி
திதிகளை யறிந்து செய்திடப் பலிக்கும்
மலைதிகழ் முனிவர் மகிழ்ந்துரைத் தனரே. 480

அட்டைவிடக் கொம்புவைக்க ஆனசிலை யாற்குத்த
ஒட்டிச் சுடவாங்க ஒள்ளுதிரம்—பட்டினிதான்
ஆகாதென்றென்று மவனிதனி லுள்ளோர்க்குப்
பாகார் மொழியாய் பகர். 481

அட்டையாற் கொம்பா லடைந்தசிலை குத்துதலால்
மட்டொழிந்து போந்துதிரம் வாங்காதே—திட்டம்
உயிர்க்குயிராய் நிற்கும் ஒழியுமே கண்டால்
பயிர்க்குயிராம் நீர்போல் பறந்து. 482

அட்டை விடிலுதிரம் ஆறிரண் டங்குலம்போம்
எட்டுவிர லாங்கொம்புக் கென்பரால்—திட்டமுடன்
இட்டகுடோ ரிக்குதிரம் ஈரிரண் டங்குலம்போம்
விட்டுவிடுங் கண்டறிவீர் மேல். 483

பூச்சுமருந் தாயிரமும் புண்ணேது மந்திரங்கள்
வாய்ச்சதொரு நாக்கதனில் வாசிபூண்—டேச்சில்
உருவென்று மாதே யுரைத்தார் பெரியோர்
தருவென்ற கையினுற் றூன். 484

இந்திரனுர் கோப மினிதமையுந் தாமரைப்பூ
சுந்தரமாஞ் செம்பஞ் சுகள்குன்றிச்—சொந்தநிறம்
பல்லுயிர்க் காதரவாய்ப் பார்த்திருக்கு மாமெனவே
நல்லுதிர மாமென்றே நாடு. 485

வீக்கம் விதனமிகு வேதனை தான்கடினம்
தாக்கும்விடம் வேற்றுநிறந் தானணுகில்—போக்கி
விடுமட்டை தானென் றவனியிலுள் ளோர்க்குத்
திடமாக வேயிதனைச் செப்பு. 486

அட்டைவிடு வீக்கத்தி லாறிரண் டங்குலத்தே
அட்டைவிடுஞ் சூழவோர் அங்குலத்தே—அட்டைவிடும்
அம்பட்ட தன்னளவே யானலும் வாங்குவது
கொம்பட்ட தன்னளவே கூறு. 487

துட்டரத்தம் போனுக்கால் சோக முடன்கடிய
திட்டமுடன் வேதனையுந் தீருமே—வட்டதன
மானே உருவினுக்கு மற்றென்றும் வாராது
தானே தனக்குநிகர் தான். 488

மடித்தீடுவெண் சீலைசுட்டு மான்பிடித்து நன்கு
கடித்தவுரு வாய்மூக்கில் காய்ச்சித்—தடித்ததோர்
வெள்ளைக் கருபூசி மேலூத்தை தன்னைவிட
உள்ளுடைந்து போம்புண் உலர்ந்து. 489

பலகாலுந்தான் கடித்துப் பற்கூசித் தாகம்
சிலதான தன்வயிறுந் தேக்கி—நலமாகப்
பத்தா வுருபத்தும் பாரறியத் தான்கழுவிப்
புத்தாகு மண்ணிலிட்ட போது. 490

பொரித்த வெள்ளரைத்துப் பூசப்போகுமவ் விரணங் கேளாய்
கருத்துடன் மந்தவாதம் கலந்த பித்தத்தால் வந்த
வருத்தமாம் வலிபெருக்கில் வாதமாஞ்சோ பந்தீர்ந்து
திருத்தமா யட்டையுண்ணந் திறந்தீருந் திண்ணுந்தானே. 491

முற்கூறு பத்தும் முழுநரம்பு குத்தலாம்
பிற்கூறு பத்தில் பெருக்கமாஞ்—சொற்கூறி
நற்பகைக்குஞ் சொன்னேம் நடுபத்து நாழிகையுங்
கொப்புடைக்க லாமென்றே கூறு. 492

வாதநிறம் நெய்த்து வெளுத்திருக்கும் வன்பித்துக்
கோதுநிறம் நீலமே கூறுங்கால்—போதுநடு
ஐயுதிர மீதில் கருத்திருக்க லாமென்றே
மொய்யுதிரஞ் சோராய் மொழி. 493

அத்தி அழனீ ரணிநீர்வஞ் சிம்மேலக்கருப் பஞ்சாற்றில்
சத்தாவின்பால் வார்த்தரைத்துச் சாலநெய்யிற் குழைத்திடவே
நெத்தி நீளவலித்துமா ரிரண முலருமா மென்று
பத்தி யிதுவே கைமுறையாய்ப் பரிந்து செய்தே பாரீரே. 494

காடிதனில் காரெள்ளுஞ் கற்ருழை நன்மணியுங்
கூடவரைத் திட்டால் கொடியிடையீர்—நாடியிடும்
புண்பழுத்த வேதனைபோம் போற்றியிருங் கற்ருழை
யெண்பிளத்து கட்டலுமா மே. 495

பிளந்துமிகச் சீவிப் பெருக்கவே வாட்டி
உளந்தனிலே ஆற்றிஅதை ஊட்டி—வளரவரும்
போதுபக்வ மானாலும் பொன்னேகற் ருழையெப்
போதும்புண் ணுக்கிதமாம் போற்று. 496

விட்டவிரணங்கழுவக் கூசாதே—வட்டதன
குட்டவிர ணங்கழுவக் கூசாதே—வட்டதன
மானே திருத்துழாய் வைத்துக் கசாயத்தில்
தானே கழுவியிடத் தான். 497

என்ளொன்று செம்பீரம் ஏத்துமஞ் சள்மூன்று
ஒள்ளியதெள் ளாவினுட னேகரைத்துக்—கள்ளமுடன்
வெட்டித்தாம் புண்ணிலிட மேலாணி யுங்கழன்று
கட்டிச்சீ ழும்விழுமே காண். 498

அத்திப்பா லாலம்பா லானசேங் கொட்டையில்
ஒத்திப் பழுத்தபுண் ணுள்ளிடவே—செத்துப்
புழுவிழுந்து புண்ணுறும் பூதலத்தோர்க் கெல்லாம்
எழுதியிடு மானே யினி. 499

காடி தனிலவித்துக் கற்ருழை யூன்வாங்கி
வாடி வறுத்ததுவும் வாணுதலீர்—ஓடுஞ்சீழ்
கண்ணேவுந் தீரும் கடுகப் பொடியிடித்துப்
புண்ணேவுந் தீரும் புலர்ந்து. 500

சம்பூரணம்

# அகத்தியர் அறுவைக்கருவி வகை

## (அகத்தியர் சத்திராயுத முறை)

அகவல்

கத்தி சத்திரம் கவின்குறும்பி வாங்கியும்
முக்கவா தனனுடன் முள்ளூ வாங்கியும்
ஆழிக் கோலு மடுத்த பிறையுடன்
கத்தரிக் கையுடன் பரகரை வாங்கியும்
முச்சலா கையொடு முனிமொழி யோட்டும்
மட்டக் கோலும் மாறும் ஊசியும்
செப்புக் குழையுஞ் சீரிய சலாகையும்
வட்டகை தன்னுடன் வளர்பஞ் சமுகமும்
செப்புச் சிலாகையுங் கொம்புங் குடோரியும்
வெங்கலக் குழலும் ஈயச் சலாகையுங்
காயக் கோலுங் கண்கத்தி தண்டும்
இவையிவை யாயுத மிருபத் தாறுஞ்
சிவனவ னருளால் திகழ்சத்ரா யுதமே-இவற்றுள்

1. அறைதருங் கத்தியா றங்குல நீளம்
அகலமோ ரங்குலம் ஆம்முனை வட்டம்
மயிர்க்கத்தி போன்று வழங்கு மென்ப.

2. சத்திர நீளஞ் சாற்றினு றங்குலம்
வேப்பிலை போலும் விளங்குபல் பல்லாய்
நிறைகழஞ் சாறு நெடியதோர் பிளவை
கட்டி யிவற்றைக் கண்டமா யறுக்க
மெத்தவும் பயனும் மேதினி மிசையே.

3. குறும்பி வாங்கியின் கூறே ழங்குலம்
நிறையரைக் கழஞ்சு நெடுங்கைப் பிடியோ
ஐந்தே அங்குலம் ஆமெனப் பகர்வார்.

4. முகவா தனனே முந்நான் கங்குலம்
முக்காற் கழஞ்சு நிறையென மொழிவார்.

5. முள்வாங்கி நீளம் மூவிரண் டங்குலம்
அகலமோ ரங்குலம் அணிநிறை கழஞ்சொன்
றறுக்கவுங் கீறவும் அவிர்நகம் வாங்கவும்
பயனும் என்று பணித்தனர் மேலோர்.

6. ஆழிக்கோல் பத்தே அங்குலம் நிறையோ
அரைப்பலம் ஆகுமென் றறைந்தன ரறிஞர்.

7. பிறைக்கோ லென்பது பேசின்மூ வங்குலம்
நிறைமூன்று கழஞ்சு நிகழெழுத் தாணிபோல்
நீண்ட பிறைக்கோல் மத்தியில் நிலவுறும்.

8. கத்தரி கைச்சீர் கழறெட் டோடரை
அங்குலம் நிறைகாற் பலமே யாகும்.

9. பரகரை வாங்கியோ பதினு றங்குலம்
நிறையரைப் பலமென நிகழ்த்துவ ருணர்ந்தோர்.

10. முச்சிலா கைச்சீர் மொழியினே ழங்குலம்
நிறைநான்கு கழஞ்சே நிலவதன் வடிவோ
ஒருமுன்று தகட்டுவா யுள்ளது பாரே.

11. முனிமொழி யென்பதோர் முக்கிய கருவியே.

12. ஓட்டுக்கோ லங்குலம் ஒன்றொடு பத்தே
தலையொரு கழஞ்சரைப் பலமுடல் நிறையே.

13. அட்டக்கோ லீரொன் பானங் குலமே
காசெடை யெட்டெனக் கழறுவ ருரியோர்.

14. ஊசிமூ வங்குலம் உரைநிறை யரைமா.

15. செப்புக் குழைதான் திரட்சியாங் குழலே
ஒருசா ணளவின துயர்நிறை யரைப்பலம்
தகடோ லேக்கனம் சார்புண்ணில் விடுவது.

16. சலாகை யங்குலந் தாஞெரு நான்கே
அன்றியைந் ததன்நிறை யாறிரு கழஞ்சே.

17. வட்டகை யென்பதோர் வகையா யுதமே.

18. பஞ்ச முகமுமப் பரிசின தாமே.

19. செப்புச் சிலாகை சிறந்ததோர் கருவியே.

20. கொம்பீ ரைந்தங் குலமாம் வாழையின்
குறுத்தொப் பதுபூண் குலவிரண் டங்குலம்
மேனிவீக் கத்தை விட்ட வல்லதே
கீறிக் கட்டியைக் கெட்டசெந் நீரை
வெளியிடத் தக்க மிகுபய னுயதே.

21. குடோரியே ழரையங் குலம்நிறை காற்பலம்.

22. வெண்கலக் குழல்தான் மேவுமெட் டங்குலம்
நிறைபலம் மூன்றே டரையென நிகழ்த்துவர்.

23. ஈயச் சலாகை யியம்பின்மூ வங்குலம்
நிறையோ நான்கு கழஞ்சென நிலவிடும்

24. காயக்கோல் நீளம் கழறினே ழங்குலம்
நிறையிரு கழஞ்சு நெடிய பருமனே
இரண்டங் குலமென விசைத்தனர் பெரியோர்.

25. தெண்டு சலாகை கொண்டவங் குலமோ
ஒன்பதங் குலம்நிறை யோரரைக் கழஞ்சே
ஈர்க்கு போலும் எழில்கனம் வாய்ந்ததே.

26. நயன கத்தியின் நலமூ வங்குலம்
நிறையொரு பணவெடை நிகழ்முனே யூசியே
இன்னசத் திரத்தி னேற்ற முணர்ந்து
அமுத நிலையினை யாய்ந்தறிந் தினிது
பண்டிதஞ் செய்யப் பழகிய ஒருவனே
சத்திரப் பண்டித னுமெனத் தக்கோர்
தண்கட லுலகிற் சாற்றின ரம்மா.

1. **கத்தி**: 6 அங்குலம் நீளம். அகலம் 1 அங்குலம், முனைவட்டம். மயிர்க்கத்தியைப் போன்றது.

2. **சத்திரம்**: 3 அங்குலம் நீளம். வேப்பிலையைப்போல் பல் பல்லா யிருக்கும். நிறை 6 கழஞ்சு. பிளவை, கட்டி இவைகளைக் கண்டமாய் அறுக்க உபயோகப்படுகிறது.

3. **குறும்பிவாங்கி**: 7 அங்குலம். நிறை அரைக்கழஞ்சு. கைப்பிடி மட்டும் 5 அங்குலம்.

4. **முகவாதனன்** : 12-அங்குலம் நிறை முக்காற் கழஞ்சு.

5. **முள்வாங்கி**: 6-அங்குலம் நீளமுள்ளதாய் 1-அங்குலம் அகலமுள்ள தாய் 1-கழஞ்சு நிறையுள்ளதாயிருப்பது. இது அறுக்க, கீற, நகம் வாங்க உபயோகப்படுவது.

6. **ஆழிக்கோல்** : 10 அங்குலம். நிறை அரைப்பலம்.

7. **பிறைக்கோல்** : 3-அங்குலம். நிறை 3-கழஞ்சு. எழுத்தாணிபோல் நீண்ட பிறைக்கோல் மத்தியில் விளங்கும்.

8. **கத்தரிக்கோல்** : 8½-அங்குலம். நிறை கால்பலம்.

9. **பரகரை வாங்கி** : 16-அங்குலம். நிறை அரைப்பலம்.

10. **முச்சிலாகை** : 7 அங்குலம். நிறை 4 கழஞ்சு. மூன்று தகட்டு வாயுள்ளது.

11. **முனிமொழி**: இது ஒரு முக்கிய கருவியாகும்.

12. **ஒட்டுக்கோல்** : 11 அங்குலம். தலைமட்டும் 1 கழஞ்சு. தலை யொழிந்த பாகம் அரைப்பலம் நிறையுள்ளது.

13. **அட்டக்கோல்**: 18 அங்குலம். நிறை 8 காசு எடை.

14. **ஊசி** : 3-அங்குலம். நிறை அரைமா.

15. **செப்புக்குழை**: ஒருசாண் நீளம். நிறை அரைப்பலம், தகடு ஓலைக் கனம், திரட்சியான குழல், புண்ணில் விடுவது.

16. **சலாகை**: 4 அல்லது 5 அங்குலம். நிறை 12 கழஞ்சு. புண்களைக் கீறி மருந்திடக் குணமாம்.

17. **வட்டகை** : ஒரு கருவி.

18. **பஞ்சமுகம்** : ஒரு கருவி.

19. **செப்புச்சிலாகை**: ஒரு கருவி.

20. **கொம்பு** : 10 அங்குலம் நீளம் காளைமாட்டுக் கொம்பிற்கு அடிப் பாகத்தில் பித்தளையினால் பூண்போன்ற பூண் இரண்டங் குலம் கட்டப்பட்டிருக்கும் சரீரவீக்கம், கட்டி இவற்றைக் கீறி இரத்தத்தைக் கொம்புவைத்து வாயினால் உறுஞ்சி உமிழ்தல்.

21. **குடோரி** : $7\frac{1}{2}$-அங்குலம். நிறை கால்பலம்.

22. **வெண்கலக் குழல்** : 8 அங்குலம் நீளம். நிறை $3\frac{1}{2}$-பலம்.

23. **ஈயச்சலாகை**: 3-அங்குல நீளம். நிறை 4-கழஞ்சு. வாதம், பிளவை, கிருமி இவற்றைக் குணப்படுத்துவது.

24. **காயக்கோல்** : 7-அங்குலம் நீளம். பருமன் 2-அங்குலம். நிறை 2-கழஞ்சு.

25. **தெண்டு சலாகை** : 9-அங்குலம். நிறை $\frac{1}{2}$-கழஞ்சு. ஈர்க்குகனம்

26. **நயன கத்தி** : 3-அங்குலம். நிறை ஒரு பணவிடை. ஊசிபோன்ற முனையுள்ளது. (முனையில் புளியிலை கனம்விட்டு மற்ற பாகங்களெல்லாம் நூலால் சுற்றப் பட்டுள்ளது.)

---

# நாகமுனிவர் நயனவிதி இருநூறு

மாதுமைபாகர் சொன்ன வடமொழி நூலையாய்ந்து
போதில் நான்முகத்தோனுயுள் வேதமே புகன்ற பின்னர்
முதுரை யுணர்ந்து நாகமுனிவனுந் தமிழாற் செய்தான்
தீதிலா விழியிலுள்ள தோடத்தைத் தெரிந்து தானே. 1

உமையம்மையாரை இடப்பாகத்தில் கொண்டுள்ள சிவ பெருமான் மலரில் வீற்றிருக்கும் அயனுக்கு உபதேசித்த வடமொழி நூலை ஆய்ந்து பழைமையாகிய உரைகளையும் ஆய்ந்து அறிந்து நான்முகன் ஆயுள் வேதத்தைக் கூறியபின் அழகிய விழிகளிலே உள்ள தோடங்களை உணர்ந்து நாகமுனிவரென்னும் பெரியார் தமிழ் மொழியால் இருநூறு பாக்களைக்கொண்ட இந் நூலை ஆக்கினர் என்றவாறு,

காப்பு

வேகமா நெறி சேரும் வினைகளுந்
தாகபோக விடாயின் தளர்ச்சியுஞ்
சோக வாரியினுல் வருந் துன்பமும்
போகவரனை முகத்தனைப் போற்று வாம். 2

வேகங்களின் வழியே உண்டாகும் தீவினையாகிய நோய் களையும் வெம்மையால் உண்டாகும் எரிச்சல்களையும், புவன போகங்களின்மேல் கொண்ட பெருத்த ஆர்வத்தால் உண்டான பற்பல நோய்களும் அதனுல் மெய்யிலும், உளத்திலும் ஏற்படும் தளர்ச்சிகளும், உலகவாழ்க்கை என்று கூறப்படும், இருநூறு துக்க சாகரத்தால் ஏற்பட்ட துன்பங்களும் நீங்குதல் பொருட்டு யானைமுகத்த விநாயகனைத் துதித்து வேண்டி வணங்குவோமாக.

இதில் பொதுவாக நோய்க்குக் காரணங்களைச் சுருக்கமாக உரைத்துள்ளமை கருதற்பாலது

முதலாவதாக மானிடனென்று பிறந்தபோதே தோன்றி வருத்தும் ''வேகம்'' என்னும் பதினுன்கு நோய்களைக் குறிப்பால் உணர்த்தியுள்ளார். அவை இல்லா மனிதன் தேவனெனப்படுவன். அந் நோய்கள் வருமாறு — சுவாசம், விக்கல், தும்மல், இருமல், கொட்டாவி, பசி, தாகம், சிறுநீர், மலம், இளைப்பு, கண்ணீர்,

விந்து, தூக்கம், கீழ்நோக்கிச் செல்லும் வாயு (அபானவாயு என்பர் சிலர்). பொதுவாக ஆய்ந்தால் மேற்கூறிய நோய்களே உடலில் தோன்றும் எல்லா நோய்களுக்கும் அடிப்படையாக உள்ளன என்பது தெளிவாகும்.

'உடன் பிறந்தே கொல்லும் வியாதி, உடன் பிறவா மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்' என்னும் பிறர் கூற்றாலும் குறிப்பாய் அறியக் கிடக்கிறது.

வெம்மையால் ஏற்படும் நோய்களென்னும்போது உபலட்சண மாக அதிசீதத்தால் உண்டாகும் நோய்களையும் சுட்டுகிறார்.

### கண்ணோய் 96-க்கும் விபரம்

கருவிழி தன்னில் நோய்கள் கலந்திடும் நாற்பத்தஞ்சும்
மருவிய வெள்ளை தன்னில் வந்திடு மிருபதென்க
பெருகவே யிமையில் தோடம் பேர்பதி னறதாகும்
பருவமாங் கடையிரண்டில் பதினைந்து தோடமாமே. 3

கருவிழியில் தோன்றும் நாற்பத்தைந்து நோய்களும், அதைச் சேர்ந்து நிற்கும் வெள்விழியில் வரும் நோய்கள் இருபது என்றும் கூறுக. விரிவான இமைகளில் தோன்றும் தோடங்கள் பதினாறு பேர்களைக் கொண்ட வியாதிகள் கடைக்கண்களில் பதினைந்து நோய்களும் உண்டாகும். ஆக மொத்தம் தொண்ணூற்றாறு நோய்கள் கண்ணில் உண்டாகும் என்றவாறு

### கருவிழி 45-க்கும் விபரம்

தோன்றிய காசமெட்டுப் படலமேழ் குமுத மூன்று
வான்விழி யுந்தல்மூன்று திமிரமேழ் வரியும் மூன்று
நீண்ட சுக்கிரனேயைந்து நெரிசல் குந்தம் மும்மூன்றும்
மான்விழிப்பூவும் மூன்றும் மணியினோய் நாற்பத்தைந்தே. 4

கருவிழியில் தோன்றக்கூடிய நோய்கள்: காசம்எட்டு, படலம் ஏழு, குமுதம் மூன்று, விழியுந்தல் மூன்று, திமிரம் ஏழு, வரி மூன்று, சுக்கிரன் ஐந்து, நெரிசலும், குந்தமும் மும்மூன்று விழிப்பூநோய் மூன்றுமாக மொத்தம் நாற்பத்தைந்தே

குறிப்பு :— கருவிழியிலுண்டாகும் நோய்களின் பெயர்களும் அவ்வவற்றின் எண்ணிக்கைகளும் கூறியபடி மேல்பாக்களில் ஒவ்வொன்றின் பெயர்களும் கூறப்படும்.

### காசம் 8-க்கும் பெயர்

நேத்திர மதனிற் காசம் நினைவுட னுரைக்கக் கேளாய்
பாத்திய நீலகாசம் பண்தரும் பித்த காசம்
மாற்றிய வாத காசம் மதித்திடும் வால காசம்
ஏத்திய பகலெல்மந்தம் இன்பமந் தாரகாசம். 5

மை தீட்டிய கண்ணினளே கண்களில் உண்டாகும் காசம் என்னும் நோயைக் கூறுவேன் மறவாமல் கேட்பாயாக :—

நீலகாசம், பித்தகாசம், வாதகாசம். வாலகாசம், மந்தாரகாசம், சிலேட்டுமகாசம், வலியுங்காசம், விரணகாசம் என்னும் இவ் எண் வகைக்காசங்களும் கருவிழியில் பரந்து மூடினால் கண்பார்வை மறையுமென்று கூறுவார்கள்.

குறிப்பு:— இவ் விரு பாக்களும் கருவிழி நோய்களில் முதலான காசங்களின் பெயர்களையும் அது பரவுங்கால், கண்ணிலேற்படும் பொதுக்குறியையும் கூறுவன என்றறிக.

செப்பு மந்தத்தாற் சேருஞ் சிலேட்டும காசத்தோடு
ஒப்பறு வலியுங்காசம் உற்றதோர் விரணகாசம்
மைப்படி கண்ணினளே வகுத்தவிக் காசமெட்டும்
கப்பிடில் மறையுங்கண்டாய் கண்ணெனக் கழறுவாரே. 6

### காசங்களின் குணமும் சாத்தியா சாத்தியமும்

மணிதனில் வண்டுபோல வண்ணங்கள் பலவுமுண்டாய்த்
தணிவிலா வாதகாசந் தரியாம லோடிநிற்கும்
பிணியெனும் பித்தகாசம் பிறங்கியே பச்சைபோல
மணிதனி லந்தியாக வந்துறுஞ் சிலேட்டும காசம் 7

பல நிறங்கொண்ட வண்டுகளைப்போல நிற பேதங்களைக் கொண்டு நிலையாக இன்றி பரவியோடிக் கருவிழியில் காணப் படுவது வாதகாசமாம். இது மருத்துவத்தில் தீராது.

பித்தகாசம் என்னும் பிணி கருவிழி நடுவில் பச்சைக்கல் (மரகதம்) போல் நிறங்கொண்டு தோன்றும்.

சிலேத்துமகாசம் அந்திம காலத்தில் (உடலை விட்டு உயிர் பிரியும் கடைசி நேரத்தில்) கருவிழிகளில் தோன்றும்.

குறிப்பு :— இந்த செய்யுளில் இரு வித அசாத்திய காசங் களையும் ஒரு சாத்திய காசத்தையும் கூறியதை அறிக.

''தணிவிலா வாதகாசம்'' என்றும் இறுதியாக வந்துறுஞ் சேத்துமகாசம் என்றும் கூறியமையால் அவை யிரண்டும் அசாத்திய

மென்றும் பித்தகாசத்தைப்பற்றி ஏதும் கூறுமையால் சாத்திய மென்றும் கொள்க.

கூறிய வாலகாசங் கொழுப்புகை யார்த்தல் போலாம்
மாறிடும் நீலகாசங் கருவிளம்பூவின் வண்ணஞ்
சீறுமந்தார காசஞ் செம்பஞ்சு மேகம் போலாம்
வேறுள விரணகாசம் வெண்டழும் பாருங்காணே.

வாலகாசமென்று வழங்கும் பிணியில் கருவிழியின் நடுவே புகை அடர்ந்து பரவிப் பொருந்தியதுபோலக் காணப்படும்.

நீலகாசத்தின் நிறம் கருவிளம்பூவை ஒத்திருக்கும்.

வீறுகொண்டு பரவுந்தன்மையுடைய மந்தார காசமானது செம்பஞ்சு போலவும் செந்நிற மேகம்போலவும் கண்மணியில் காணப்படும்.

விரணகாசம் கருவிழியின் நாப்பண் வெண்மையான தழும்பு போல் சற்று மேடாகத் தோற்றமளிக்கும்.

குறிப்பு :— வாலகாசம் என்னும் பெயர் பால பருவத்தில் தோன்றும் கண் காசமென்று பொருள்படும். பெரும்பாலும் கண் காசநோய் முதுமையில் (சற்றேறக்குறைய ஐம்பது வயதுக்கு மேல் தான்) தோன்றும். ஆயினும் மிக்க அருமையாக குழந்தை பிறந்தபோதிலிருந்தே இந் நோய் தோன்றி குழந்தை வளர வளர இந் நோயும் வளர்ந்து வருமென்று அனுபவம். பெரும்பாலும் இந் நோயுற்ற குழந்தைகள் பிள்ளைப் பருவந்தாண்டி அப்பால் னிருந்ததில்லை. பன்னிரண்டு வயதுக்குள் இறக்கும்.

"சீறும் மந்தாரகாச" மென்றமையால் இந் நோயில் மற்ற காசங்கள் போலல்லாமல் நோயும் (தாங்க இயலாத அளவுக்கு) இருக்குமென்று பெறப்படும்.

"வேறுள விரணகாசம்" என்று சாற்றினமையாலும் விரண காசமென்று பெயரிட்டமையாலும் இக் காச நோய் உடலின் முக்குற்ற (வாத, பித்த, கப) மாறுபாட்டால் தோன்றியதல்ல வென்பதும் கண்ணுக்கு ஏதோ ஒருவகை ஆயுதத்தாலோ, பொருளாலோ ஊறு (அடி, உட்காயம்) நேர்ந்தமையால் உண்டானதென்றும் பெறப்படும்.

சொன்னதோர் சிலேட்டுமகாசந் தோன்றிடுங் கருமைபோலாம்
மின்னனுய் பித்தகாசம் விளம்பு மந்தார காசம்
பின்னுமோர் நீலகாசம் பேசிய ரோக மூன்றும்
மன்னு சாத்தியங்கள் மற்ற தஞ்சும சாத்தியமாமே. 9

முன்கூறிய சிலேட்டும காசத்தின் வண்ணம் கருவிழி நாப்பண் கரிய மை போலவாம். மின்னல் கொடிபோன்றவளே! பித்த காசம், மந்தாரகாசம், நீலகாசமென்னும் இம் மூன்றும் சாத்தியப் பிணிகளாம். மற்றைய ஐந்தும் அசாத்தியமாகும்.

குறிப்பு :— ஏழாம் பாடலீற்றில் சிலேட்டுமகாசம் தோன்றும் காலத்தை மட்டும் கூறிவிட்டு அது அசாத்தியமென்பதை "அந்தியாக வந்துறு" மென்று கூறிவிட்டார்.

இப் பாடலில் அதன் வண்ணத்தைக் கருத்த மை போன்றிருக்குமென்று விளக்கியுள்ளார்.

இதுவரை ஏழு காசங்களின் வண்ணங்கள் மட்டும் கூறப்பட்டுள்ளன: எட்டாவதாகிய வலியுங்காசத்தின் குறிகுணம் ஏதும் மேற்படி பாடலில் கூறப்பட்டில: ஆனால், அது அசாத்தியம் என்று மட்டும் மேற்படி பாடலில் காணப்படுகிறது.

பித்தகாசம் குத்துகிற விதம்

தோன்றிய நாலாமாண்டு தூய்விழி சூட்சத்துள்ளே
ஊன்றிய தளிர்போல் நின்றே யொண்விழி யடைத்துக்கன்றி
நான்றிமை நீக்கிப் பார்த்தா லகன்று பின்னடுவே நிற்கில்
தேன்றுளிக் குழலாய் காசங் குத்துமிச் செய்கைகேளே. 10

தேன் துளிக்கும் பூக்களைக் கூந்தலில் சூடிய பெண்ணே! கண்ணின் கருவிழியின் சூக்குமமான மணிக்குள்ளே தோன்றி நாலாண்டுகள் ஆனபின் நிலைத்த தளிர்போல வளர்ந்து தூய விழியை அடைத்துப் பார்வையை மறைத்து விடும்; கண்ணிமைகளை நன்கு மூடிப் பின் நீக்கிப் பார்க்கில் மணி முதலில் விரிந்தும் பின் நடுநிலையடையும். அதுவே அக் காசத்தைக் குத்த ஏற்ற சமயம். ஆதலால் அதைக் குத்தும் செயலைக் கூறுவேன் கேட்பாயாக.

குறிப்பு :— கண்காசம் தோன்றின காலம் தொட்டுப் பழுத்திடச் சாதாரணமாக நான்கு ஆண்டுகளாகும் என்று கூறியுள்ளார்.

காசத்தைக் குத்தியகற்ற ஏற்ற நிலையறியவும் உத்திமை கூறியுள்ள குறிப்பிடத்தக்கதாம்.

மேல்நாட்டு முறையில் கண்மருத்துவம் செய்பவர்களும் இந்தப் பரிசோதனையையே இருட்டறையில் செய்து பார்த்த பின்னரே காசத்தைக் கருவி கொண்டகற்றுவர்.

கூரிய கருவிநீளம் நால்விரலாகக் கொண்டு
நேரிய முனையதாக வகல நெல்வடிவதாகச்
சீர்பெறு கடைக்கண்ணுக்குந் தெளி கருவிழிக்கும் மத்தி
சாரவே யூன்றுந்தாழ்வு சணல் விரையளவதாமே. 11

குத்தியகருவி வாங்கிக் கோதையே செம்பினுலே
மற்றநால் விரலினீளம் வடிவமாம் முனைநெல் நீளம்
முற்றிய விரலிக்காய் போல் முனையில் முப்பட்டமாக
மொத்திடு முருட்சி மத்தின் வடிவமா மொழியக்கேளே. 12

புளியிலை கொண்டு தேய்த்துப் புணைவழி கரத்தைத் தேய்த்து
நழுவிடா தேற்றினுக்கால் நல்விழி நடுவேவிட்டு
கொழுவிய சலாகைகொண்டு குறித்திடும் வலமேசுற்றி
இளகிய நீரைமெல்ல விடுத்திடிற் காசம் போமே. 13

கோதையே! நேரான முனையும், நெல்லின் அகலமுள்ளதாயும் கூர்மையாயும் உள்ள கருவி நான்கங்குல நீளமுடையதாக இருக்க வேண்டும். அத்தகைக் கருவியால் கருவிழுக்கும் கடைக்கண்ணுக் கும் நடுப்பாகத்தில் குத்திச் சணல் விதையளவு சந்து செய்து, இங்ஙனம் குத்திய கருவியைக் கழற்றி விட்டு, நான்கங்குல நீளமும் ஒரு முனையில் ஒரு நெல்லளவு நீளமும் முற்றிய விராலிக்காய் உருவத்தில் முப்பட்டையாகவும், மற்ற பாகங்களெல்லாம் உருட்சியாகவும் வடித்துள்ள மற்றொரு கருவியாகிய சலாகையை நன்ருகப் புளி இலைக்கொண்டு தேய்த்துக் கழுவி சுத்தம் செய்து கொண்டு கையையும் தேய்த்துக் கழுவிக்கொண்டு, முன் செய்து வைத்த புண்ணின் வழியாகக் கண்ணின் நடுவிழியிலிட்டு, உருட்சி யான பாகத்தைக் கையால் பற்றி வலப் புறமாகச் சுழற்றினுல் காசம் கழன்றுபோம். அச் சமயம் கருவியின் சுழற்சியால் இளகிய நீரை வெளிச்செல்ல விடவும்.

குறிப்பு :— பல்லாண்டுகளுக்கு முன் செய்து வந்த மேற்படி காசங்குத்தல் என்ற அறுவை மருத்துவத்திற்கும் தற்காலத்திய மேல்நாட்டு முறை அறுவை மருத்துவத்திற்கும் குறிக்கோள் ஒன்றே என்பதைக்காண்க. பழைய முறையில் காசத்தைக் கூரிய கருவியால் குத்திக் கிழித்து திரவ வடிவிலாக்கி வெளிப்பட வைப்ப ரென்று அறியக்கிடக்கிறது. தற்கால முறையில் காசத்தைச் சிறிதும் காயமேற்படாமல் அதன் பிடிப்புகளிலிருந்துத் துண்டித்து முழுமையாக வெளிப்படுத்தப்படுகிறது. தற்காலச் சிகிச்சை முறை யில் வலி மறத்திருக்கவேண்டி மருந்துகள் உபயோகப் படுத்தப் படுகின்றன. முற்காலத்தில் அத்தகை மருந்துகள் வழக்கிலிருந்த தாக மேற்படி பாக்களில் குறிக்கப்படவில்லை.

நடுவிழி யதனினின்ற காசநீர் நாடாதோடிக்
கடுகவே முன்னே தோன்றும் பதார்த்தமே காணலாகும்
இடருறக் காணுதாகி லெழுச்சி நீர்தாங்கி நிற்கும்
அடைவிலே யாய்ந்து நோக்கு மவ்விழி விசநீர் மாற்றே. 14

நடுக்கண்ணில் தங்கியிருந்த காசநீர் விரைவில் காணப்படாது குத்திய புண்ணின் வழியே ஓடி விட்டபடியால் கண் முன் இருக்கும் பொருள்கள் கண்ணுக்குப் புலனுகும். காசத்தைக் குத்தி வெளிப் படுத்திய பின்னும் கட்புலன் காணுதாகில் கண்ணில் எழுச்சி நீர் கப்பிக் கொண்டிருக்கும். அதை ஆதாரத்தோடு கண்ணுக்குள்ளே பார்த்துப் பரிசோதித்து அத்தகைய நச்சு நீரைத் தங்கவொட் டாமல் வடியச் செய்வாய்.

குறிப்பு:— காசங் குத்திய கண் பொருள்களைக் காணுதாகிவிடில் மிக விரைவில் வினையாற்ற வேண்டுமென்ற குறிப்புத் தோன்ற ''அடைவிலே பாய்ந்து நோக்கு'' என்று கூறியுள்ளாரென்று உணர்க.

வாதனை மத்தம்பூவில் நடுவலித்தண்டு சோரி
வேதனை வரவேயூன்று கோல்வினை மிகுத்திடாமல்
ஓதில் வெள்ளரியின் வித்தின் அகல மேகத்திநீளந்
தீதிலா வெள்ளைபோலச் செய்திடுங் கருவிகொள்ளே. 15

நல்ல எள்ளின் கனத்துக்கு, வெள்ளரி வித்தின் அகல நீளத் துக்குக் கத்தியொன்று ஊமத்தைப் பூவிலுள்ள சூல்தண்டு கனத்துக்குப் பிடியோடுள்ளதைக் கொண்டு காசம் குத்தப்பட்ட கண்ணில் இரத்தம் சிறிது வடியுமளவுக்கு வேதனை காணும்வரை குத்தும் கோலின் திறம் மிகுத்திடாமல் குத்தி மேற்படி நச்சுநீரை வடித்திட வேண்டும்.

### குத்தின கண்ணுக்கு ஒழுக்கு மருந்து

மேவியே விடநீர் மாற்றி வேதனை மிகுந்திடாமல்
ஓவிய மனையாய் கண்ணில் ஒழுக்கிடு மருந்து கேளாய்
ஆவினெய் யதனிற் றுத்தம் அபின்சீனக் காரங் கூட்டிக்
கூவியே வலிக்குங் கண்ணி லூற்றியே குழைத்துப் பூசே. 16

பூசியே நெற்றி மீது புதியவெண் பஞ்சைக் கட்டிக்
கூசிடா திமையின் மீதே கூரிய வெள்ளைச்சீலை
மாசறு ததனைக் கட்டி மறுபடி மூன்று நாளும்
வீசிடும் விழிகன் ருமலனல்காட்டி விழிக்கச் சொல்லே. 17

சித்திரத்தைப் போன்றவளே! காசம் குத்தியதாலுண்டான விடநீரை வெளிப்படுத்தப்பட்ட கண்ணில் வலி அதிகரிக்காமல் இருக்கும் பொருட்டு கண்ணில் சொட்டவிடும் மருந்தைக்

கூறுகிறேன். கேட்டுக் கொள்வாயாக. பால்துத்தம், அபின், படிக்காரம் ஆகிய இம் மூன்றையும் தூள்செய்து பசுவின் நெய்யில் குழைத்து வலிக்கும் கண்ணில் சொட்டு சொட்டாகப் போட்டுக் கண்ணைச் சுற்றியும், இமை குவளை மேல் பூசியும், நெற்றியின்மேல் பஞ்சை வைத்துக் கண்ணின்மேல் மெல்லிய வெண் சீலையால் மூடிக் கட்டி வைக்கவும். இவ் வண்ணம் மூன்று நாட்கள் செய்க. இம் மூன்று நாட்களிலும் விழி சிவக்காமலும் எரிச்சல் கொள்ளாமலும் பக்குவமாக வெப்பம் காட்டவும்வேண்டும். மூன்றும் நாள் கண்ணை விழிக்கச் சொல்லவும்.

குறிப்பு :— கண்ணுக்கு இதமான வெப்பம் தர வேண்டுமென்றுல் சூடான பொருட்களால் ஒற்றடம் தரக் கூடாதென்பதை ''வீகிடும் விழிசுன்றுமல் அனல் காட்டி'' என்று உணர்த்தும் நயம் குறிப்பிடத்தக்கது. அத்தகைய அனல் காட்டும் விதம் அனுபவத்தால் அறிந்துள்ள ஒரு முறையாகும்.

எரியும் அடுப்பில் புதிய செங்கல்லைப் போட்டு நன்கு சூடேறிய பின் ஒரு செம்பு அல்லது வெண்கலப் பாத்திரத்திலிட்டு தாய்ப் பாலைத் தெளித்தால் வெப்பமான ஆவி கிளம்பும். அந்த ஆவி குத்தப்பட்ட கண்ணில் படும்படிச் செய்க.

விழித்திடும் போது குத்தி வேதனை கண்ட போது
கழித்திடு மெட்டு நாளுங் கண்ணுள்ளே ஒழுக்கு நெய்கேள்
தெளித்திடு மதுரந் தாரஞ் சிப்பிநீ ரதன்சீர் கூட்டித்
துளிபட வொழுக்கும் போது விழிவரி துணுக்கும் போமே. 18

அப்படிச் செய்த பிறகும் கண்ணை விழிக்கும் போது குத்தலும் வேதனையும் கண்டால் எட்டு நாட்களுக்குக் கண்ணில் விடத் தக்க மருந்தைக் கூறுகிறேன் கேட்பாயாக.

ஆவின் நெய்யும் அதனளவே சிப்பி நீர் கூட்டி அதில் அதிமதுரமும் தாரமும் தனித்தனியே சமஅளவாக நெய்யின் எடைக்குப் பதினறிலொரு பங்காகக் கூட்டிக் கற்கமாக அரைத்துக் குழப்பிக் காய்ச்சி நெய்யைப் பக்குவமாக வடித்துக் கண்ணில் சொட்ட விடவும். இதனல் காசம் குத்தப்பட்டதாலுண்டாகும் வலி நீங்குவதுடன் கருவிழியில் காணக்கூடிய மூன்று வகை (விழி) வரியென்னும் பிணியும் துணுக்கு என்னும் கண் கூச்சலும் குணமாகும்.

### காசத்திற்கு நெல்லிக்காய்த் தைலம்

சொல்லுநெல் லிக்காய்ச் சாறு துலங்கிய கையான் சாறு
அல்லிய கமல வேரின் சாறுடன் கொடுப்பைச் சாறு
புல்லுபேய்ப் புடலின் சாறு பொருந்துநற் கோவைச்சாறு
நல்லெலு மிச்சஞ் சாறு நவிலும்பா லிளநீ ராமே. 19

இவையிங்ங னுரைத்த வெல்லா மெண்ணெய்க்கு நாலு கூட்டிச்
சுவைமுந் திரிகை பேரீந்து சொல்லுநற் கந்தஞ் சாதி
நவையில்லா மதுரந் தாரம் நாகணங் கோட்ட மேலஞ்
சுவையுறச் சமனுய்க் கூட்டிச் சாரித்து வடித்துக் கொள்ளே. 20

நெல்லிக்காய்ச்சாறு, கரிசாலைச்சாறு, தாமரைக் கிழங்குச் சாறு, பொன்னுங்காணிச்சாறு, பேய்ப்புடல்சாறு, கோவைச்சாறு, எலுமிச்சைச்சாறு, ஆவின் பால், இளநீர்

இவைகளெல்லாம் எள் நெய்க்கு நாலு பங்காகக் கூட்டித் திராட்சை, பேரீச்சம், சந்தனக்கட்டை, சாதிக்காய், அதிமதுரம், தேவதாரம், நாகணம், கோட்டம், ஏலம் இவைகளை கற்கமாய்க் கூட்டி முறைப்படி தைலப் பக்குவத்தில் காய்ச்சி வடிகட்டிக் கொள்வாயாக.

கொண்டதோர் தைல மூன்று நாழிகை குறைந்தி டாமல்
மண்டலஞ் சிரத்தி லப்பி மாலையில் முழுகு வோர்க்குப்
பண்டைநோய் கண்ணி னுள்ளே பகர்ந்திடு காசம்போகும்
மண்டரு மறியச் சொன்னேம் அருமறை நூலை யாய்ந்தே. 21

தினம் காலை வேளையில் மேற்படி தைலத்தைத் தலையில் மூன்று நாழிகை தேய்த்து ஊறி மாலையில் குளிக்கவும். இப்படியே ஒரு மண்டலம் (40 அல்லது 48 நாட்கள்) தலைமுழுகி வந்தால் பழைமையாகத் தோன்றிய கண் நோய்கள், காச நோய்கள் தீரும். இதை அரிய வேதத்தை ஆய்ந்து தேவர்களும் அறியுமாறு கூறினேம்.

குறிப்பு :— இந்த மூன்று பாக்களால் நெல்லிக்காய்த் தைலம் செய்முறை, சரக்கு, தீரும் பிணி முதலியவை கூறப்பட்டுள்ளமை காண்க.

## படலங்களுக்குத் தைலம்

கூறுபடிக் காரந்தோ லுரித்தபூண்டு
குங்குமப்பூலவங்கங் கோரோசனைத்தான்
வீறுமிரு வராகனெடை நீயெடுத்து
மேவிய பொன்னுங்காணி இலையினல்ல
சாறுபலம் பனிரண்டு முசுமுசுக்கைச்
சாறுமவ்வளவே யொன்றின் பின்னொன்றாய்
மாறிமாறிச் சரக்கில் விட்டரைத்து
மற்றுலர்த்திப் பொடிசெய்து வைத்திவற்றில். 22

கழுவியஎள் ளிரண்டுபலஞ் சேர்த்தரைத்துக்
கல்வத்துட் புறவோரந் தனிலேயப்பித்
தழுவுகடும் வெயிலுலர்த்த இறங்குந்துய்ய
சாரமுறு மெண்ணெயதை வைத்துக்கொண்டு
பழுதறவே வந்திசந்தி துளிநீ கண்ணில்
யைவிட்டு வரப்படல முதலாங் கண்ணோய்
வழுவற வெங்கதிர்கண்ட பனியைப்போல
மாறுமிது படலத்தின் தைலமாமே. 23

படிக்காரம், தோலை நீக்கிய பூண்டு, குங்குமப்பூ, இலவங்கம், கோரோசனை வகைக்கு இரண்டு வராகன் எடை எடுத்துப் பொன்னாங்காணிச்சாறு, முசுமுசுக்கைச்சாறு வகைக்கு பன்னிரண்டு பலம் ஒன்றன்பின் ஒன்ருய் மேற்படி சரக்குகளிலிட்டு நன்ருய் அரைத்து வெயிலில் உலர்த்தி நன்ருய்த் தூள்செய்து வைத்துக் கொள்ளவும்.

நன்ருய்க் கழுவித் தோல் போக்கிய எள் இரண்டு பலத்தை மைபோல அரைத்து மேல் சித்தம் செய்யப்பட்ட தூளுடன் கலந்தரைத்துச் சரக்கெல்லாம் ஒக்கக் கலந்தபின் அந்தக் கற்கத்தைக் குழி அம்மியின் ஓரத்தில் அப்பிக் கடு வெய்யிலில் வைக்க மிக்க பரிசுத்தமான தைலம் இறங்கிக் குழி அம்மி நடுவில் தங்கும். அந்தத் தைலத்தைக் காலை, மாலை துளித் துளியாகக் கண்களில் விட்டு வரப் படலம் முதலான கண்ணோய்கள் மெல்ல மெல்ல தீங்கின்றிச் சூரியனைக் கண்டு பனி விலகுவதுபோல் நீங்கும். இது படலத் தைலம் எனப்படும்.

குறிப்பு :— தைல உற்பவம் பன்னிரண்டு வகையில் இது "ஆதவம்" என்ற வகையைச் சார்ந்தது.

### காசத்திற்கு சந்தனாதி எண்ணெய்

நல்ல சந்த மகில்வில்வம் நாரி தேவி விலாமிச்சு
சொல்லுந் திரிபலை யிருவேலி தூய மிளகு கோட்டமுடன்
புல்லுஞ் சீரக முடன்தேற்ருன் பொன்னு வரைவேர் மலைதாங்கி
முல்லை நகையீ ரிவையொன்று முன்னே பலம்பத் தாய்க்கொள்ளே 24

கொள்வாய் தூணி நீரிலிட்டுக் கொதிக்கக் காய்ச்சிக் குறுணிகொண்டு
நள்ளாய் நல்ல ஆவின்பால் நாட்டி யிளநீர் முலைப்பாலுந்
தள்ளா தெண்ணெ யுடன்விட்டுத் தண்ணீர் விட்டான் வல்லாரை
வள்ளைப் பசளை சிறுகீரை வனச வளையங் காணிநெய்தல். 25

மாதுளம் பழநீர் பொந்தை மடற் றெங்கு நெல்லிதான்றி
தாதவிழ் மிச்சி னோடு தழை முன்னை முசுட்டைவீழி
கோதையே யொன்று நாழிச் சாறிவை கூட்டிக் கொண்டு
ஏதமில் கற்கமேல மின்னெரி யரிசிப் பாலே. 26

பச்சைக்கற் பூரந் தாளி பத்திரி பச்சை கல்நார்
நச்சிடும் புனுகு கோரோ சனைநல்ல மதுரந் தார
முச்சிதக் கிராம்பு கோட்டஞ் சாதிக்காய் கிளியூரம் பட்டை
மிச்சமாய்க் கூட்டி யெண்ணெய் வெந்தபின் வடித்துக் கொள்ளே. 27

சந்தனக்கட்டை, அகிற்கட்டை, வில்வவேர்க்கட்டை, நன்னாரி, சீதேவி, விலாமிச்சு, திரிபலை, கொடிவேலி, வேலிப்பருத்தி, மிளகு, பொன்னாவரை வேர், மலைதாங்கி இவைகளை ஒவ்வொன்றும் பத்துப் பலமாக எடுத்து இரு மரக்கால் நீர் விட்டு ஒரு மரக்காலாக வற்றக் காய்ச்சி இறுத்து வடிகட்டி எடுத்து அத்துடன் பசுவின் பால், இளநீர், தாய்ப்பால், எண்ணெய் இவை வகைக்கு ஷெ கியாழத்தினளவு கூட்டித் தண்ணீர்விட்டான்கிழங்கு, வல்லாரை, வள்ளைக்கொடி, பசலை, சிறுகீரை, தாமரை வளையம், பொன்னாங் காணி, நெய்தல் கிழங்கு, மாதுளம்பழம், தென்னம்பாளை, நெல்லிக்காய், தான்றிக்காய், விலாமிச்சு, முன்னை, முசுட்டை வீழி இவைகளின் சாறு வகைக்கு ஒரு படி வீதம் விட்டுக் கலந்து கற்கமாக ஏலம், மின்னெரியரிசிப்பால் என்னும் அம்மான் பச்சரிசி, பச்சைக் கற்பூரம், தாளிசப்பத்திரி, கல்நார், புனுகு, கோரோசனை, அதிமதுரம், தேவதாரம், கிராம்பு, கோட்டம், சாதிக்காய், கிளியூரம்பட்டை இவைகளை இட்டுக்காய்ச்சித் தைலம் வடித்துக் கொள்க.

குறிப்பு :— இந் நான்கு பாடல்களால் சந்தனாதித் தைலம் செய்முறை கூறப்பட்டுள்ளது.

(அ) கியாழச் சரக்குகளில் சிறு செடி கொடிகளாய் உள்ளவை களின் சமூலம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

(ஆ) கற்கச் சரக்குகளுக்கு அளவும் அரைக்கும் சாறும் கூறாத விடத்துத் தலைமைச் சரக்கின் எடைக்குப் பத்திலொரு பங்காகவும் தைலத்தில் [கூறப்பட்டுள்ள பாலிலோ, சேர்க்கும் சாற்றினாலோ அரைத்துக் கலக்க வேண்டும். இதுதான் பொது விதி.

(இ) பச்சைக் கற்பூரம், கோரோசனை, புனுகு முதலான வாசனைச் சரக்குகளை முறைப்படி நுண்ணிய தூளாகச்செய்து தைலம் காய்ச்சி வடிகட்டும் பாத்திரத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். காயும் எண்ணெயில் போடக் கூடாதென்பதை அறியவும்.

(ஈ) இதன் உபயோகம் செய்யுளில் கூறப்படவில்லை; தைலத்துக்குப் பெயரும் பாட்டில் கூறப்படவில்லை என்பதைக் காண்க.

(உ) இதில் சேர்ந்துள்ள சரக்குகளின் பொதுக் குணத்தை அறிந்த புத்திசாலிகள் அவை தீர்க்கும் நோய்களை ஊகித்தறிய முடியும். மேலும் இது ஷெ முனிவரால் கண்ணைப்பற்றிய நூலில் வந்துள்ளமையால் இச் சந்தனாதித் தைலம் கண்ணில் தோன்றும் நாட்பட்ட நோய், காசம், படலம் போன்றவை கண்டபோது கண்ணின் தோடங்கள் குறைந்து பார்வை நரம்புகள் வலிவு பெறத் தலை முழுக்குத் தைலமாக உபயோகிக்கலாமென்பதை அறிந்து கொள்வர்.

### காசத்திற்கு இரத்தினாதி மாத்திரை

நவமணி யேழு லோகம் நற்கொடு சோகி பீங்கான்
இவுளியின் பல்லு நாயின் பல்லொடு பசுவின் பல்லுங்
கவையடி மேதிப் பல்லுங் கமடத்தி னோடும் பன்றி
நவையறக் கொண்டு நன்னீர் முதலைப்பல் ஒட்டைப் பல்லே. 28

(இவுளி-குதிரை; கமடம்-ஆமை)

கலங்கொம்பு ருத்தி ராட்சங் காளைப்பல் கழுதைப் பல்லும்
நலமுறு பீத ரோணி நறுந்துத்தந் துருசு சூதங்
குலவிய சந்தந் தாரங் கோட்டங் கோரோ சனையிந்
திளகிய சீனக் காரம் இனியமுக் கடுகு கேளே. 29

திரிபலை தேற்றங் கொட்டை சித்தோடோ ரிதழின் மூலம்.
உறுவது சமனாய்க் கூட்டி யொன்றித்து அரைக்குஞ் சாறு
இறுமெலு மிச்சஞ் சாற்று லேழுநாளூற வரைத்து
மறுபடி கோழிமுட்டைச் சலத்தை வார்த்தரைத்துக் கொள்ளே. 30

கொண்டதோர் மருந்து நன்றாய்க் குறுகிநின் றெத்த வண்ணம்
உருண்டைசெய் யிரும ருங்குஞ் சுழிவிழா துருட்டி நன்றாய்
மண்டல நிழலுலர்த்தி வளர்கையா்ன் பொன்னுங் காணி
ஒண்டோடி முலைப்பா லாதெய் தேனினி லுரைத்துப் போடே. 31

நவரத்தினங்கள், ஏழுலோகம், சோகி, பீங்கான், குதிரைப்பல், நாய்ப்பல், பசுவின்பல், எருமை மாட்டுப்பல், ஆமை ஓடு, பன்றிப் பல், முதலைப்பல், கலைமான் கொம்பு, உருத்திராட்சம், காளைப்பல், கழுதைப்பல், பீதரோகணி, பால் துத்தம், மயில் துத்தம், இரசம், சந்தனம், தேவதாரு, கோட்டம், கோரோசனை, இந்துப்பு, சீனக்காரம், திரிகடுகு, சுக்கு, திப்பிலி, மிளகு, தேற்றான் கொட்டை, சித்திர மூலம், ஓரிதழ்த்தாமரை வேர்ப்பட்டை,

எல்லாம் சமனுய்ச் சுத்தித்துத் தூளாக்கிச் சேர்த்து எலுமிச்சைச் சாற்ருல் ஏழு நாட்களும், கோழி முட்டை வெண்கருவால் ஏழு நாட்களும் அரைத்து முனையில் சுழி, கொட்டை விழாமல் ஒரே அளவாய் எழுதுகோல்போல நீளப் போக்கில் மேடு பள்ள மில்லாமல் உருட்டி நிழலில் உலர்த்தி பளிங்குக் குப்பியில் வைத்துக் கொள்ளவும். இதை ஒரு மண்டலம் உலரவைக்கவேண்டும். கரிசாலே, தாய்ப்பால், தேன், நெய், பொன்னுங்காணிச்சாறு இவற்றில் ஏதேனுமொன்றில் இழைத்துக் கண்ணிலிடக் கண் காசம் அகலும்.

குறிப்பு :—1. இம் முறைக்கு இந் நூலாசியர் ஷை பாக்களில் பெயர் என்னவென்று கூறவில்லை. மற்றும் இதனுல் தீரக்கூடிய கண் வியாதிகளேயும் கூறவில்லை. இதனே நூலாகப் பதிப்பித்தவர் காசத்துக்கு 'இரத்திஞதி மாத்திரை' என்று தலேப்புக் கொடுத் துள்ளார். அதையே ஆதாரமாகக் கொண்டு இம் மாத்திரையைக் கையாண்டால் கண் காசம் அகலும்.

2. நவரத்தினங்களேயும், ஏழு உலோகங்களேயும் பற்பமாகச் செய்து சேர்த்துக்கொள்ளவும்.

### காசத்திற்கு குழம்பு

கையாந் தகரை நெல்லிக்காய் கமல வளேயங் காணியுடன்
தொய்யில் புளியிலே சீதேவி துலங்குஞ் சாறென் றெருபடிகொள்
நெய்யார் சந்த மகில்தாரம் நெல்லி தான்றி கடுதேற்றுன்
ஐயும் வெட்டி லாமிச்சு சமன்செய் தெட்டொன் றுய்க்காய்ச்சே.

இனிய கசாயத் துடன் கலந்தே இளநீர் மடல்நீர் சரிகூட்டிக்
கனியக் காய்ச்சி யிளம்பதத்தில் கருதும் பீதரோ கணிதுத்தம்
முனியுஞ் சீனக் காரமுடன் முதிருந் துருசொன் றெருகழஞ்சு
நனிசேர் தேன்விட் டளாவியதில் நவிலும் பொடியை மேற்றூவே.

தூவிப் பரணி தனிலிட்டுச் சொன்னேன் விழியி லெழுதிவரக்
கோவித் தெழுந்த காசமுடன் கொள்ளும் புகைச்ச லுட்டணமுங்
காவி மலர்க்கண் மடமானே கண்ணி லனேக தோடமறும்
பாவித் திதனேச் செய்யுமென்று பகர்ந்தார் பழைய
மறையாய்ந்தே. 34

கையாந்தகரை, நெல்லிக்காய், தாமரை வளேயம், பொன்னுங் காணி, புளியிலே, சீதேவி செங்கழுநீர் இவற்றின் ஒவ்வொன்றின் சாற்றையும் ஒவ்வொரு படியாகச் சேர்த்துச் சந்தனம், அகிற் கட்டை, தேவதாரு, நெல்லி வற்றல், தான்றிக்காய்த் தோல், கடுக்காய்த்தோல், வெட்டிவேர், விலாமிச்சைவேர் இவற்றின் மொத்த எடைக்குப் பதினறு மடங்கு ஆற்று நீரிலிட்டு எட்டில்

ஒன்ருகக் குறுகக் காய்ச்சி இறுத்து வடிகட்டிய கியாழம் அவ்வளவே இளநீர், தென்னம்பாளேச்சாறு, இவ் விரண்டையும் ஒன்ருய்க் கூட்டி அடுப்பிலிட்டுக் குழம்புபதம் வரும்வரை சிறு தீயாக எரித்து அதில் பீதரோகணி, பால்துத்தம், படிக்காரம், துருசு இவற்றைத் தனித்தனியே ஒரு கழஞ்சு வீதமெடுத்து நுண்ணிய தூளாகச் செய்து ஒன்ருகக்கலந்து தேன் விட்டு அரைத்து மேற்படி காய்ச்சிய குழம்புடன் ஒன்று படக் கலக்கி தக்க பரணியில் வைத்துக் கொள்க.

காவி மலரை ஒத்த கண்களேயுடைய இளம் மான்போன்ற மங்கையே ! இக் குழம்பைக் கண் காசம், கண் புகைச்சல், கண் சூடு, கண்ணிலேற்படக்கூடிய பற்பல தோடங்களுக்கும் கண்களில் தீட்டி வந்தால் நோய் தீரும். இதைப் பழைய மறையை ஆராய்ந்து கூறியுள்ளார் என்றறிக.

குறிப்பு :— கியாழச் சரக்குகளின் எடை கூறவில்லேயேனும் கைபாகமாக ஒவ்வொரு சரக்கும் அரைப் பலம் வீதம் எடுத்துக் கொள்க.

### காசத்திற்குப் புடலாதி கிருதம்

சொல்லு பேய்ப்புடல் கொடுப்பை தூயவல் லாரை காணி
நல்லபூ சணிக்காய் மூங்கில் நறிய நீர் வள்ளிதாழை
புல்லும்வெள் ளரிக்காயோடு போதுமா துளஞ் சம்பீரம்
மெல்லவோ ரொன்று நாழிச் சாறது விரையக் கூட்டே. 35

குமரிவேர் சிற்ரு முட்டி கொவ்வையின் தண்டு முத்தங்
கமுகுவேர் வனச வேருங் கருதுசீ தேவி வேரும்
நமதுசெங் கழுநீர் மூலம் நன்னுரி சீந்தில் வேலி
அமரவோ ரொன்று பத்துப் பலமெட்டொன் ருகக் காய்ச்சே. 36

காய்ச்சுமந் நீருஞ் சாறுங் கலந்துநெய் நாழி விட்டுப்
பீச்சிடு மான்பால் நாலு படிவிட்டுப் பேசக் கேளாய்
வாய்ச்சநற் சந்தந் தாரம் மதுரஞ்செங் கழுநீர்க் கோட்டங்
கூச்சமில் கூகை நீறு குலாவிய கிராம்பு சாதி. 37

சாதிபத் திரியோ டேலந் தகரங்குங் குமநற் கோட்டம்
பேதித்த சிவதை ரோணி பேசுங்கற் பூரம் பத்திரி
சாதித்த மகரப் பூவுஞ் சாற்றுபே ரீந்து முந்திரி
யீதொக்கக் கழஞ்சொவ் வொன்று மிவைவெந்து சீனி தூவே. 38

காலேயிற் கடுகி ஞேடு கரண்டிநாற் பதுநாட் கொள்ளச்
சாலவே பித்த ரோகந் தலேகிறு கிறுப்பி ஞேடு
மூலவுட் டணங்கண் ஞேவு மொழிந்திடுங் காச மெட்டும்
மேலுநீர்ப் பாய்ச்சல் கண்ணில் மருவுநோய் விரைந்து போமே. 39

பேய்ப்புடல், பொன்னுங்காணி, வல்லாரை, வெள்ளைப் பூசணிக்காய், மூங்கில் குருத்து, நீர் வள்ளி, தாழை விழுது, வெள்ளரிக்காய், மாதுளம் பிஞ்சு, எலுமிச்சம் பழம், ஒவ்வொன்றின் சாறும் ஒவ்வொரு நாழியாகக் கூட்டி கற்றாழை வேர், சிற்றாமுட்டி வேர்ப்பட்டை, கோவைத் தண்டு, கோரைக் கிழங்கு, பாக்குமர வேர்ப்பட்டை, தாமரை வேர், சீதேவிச் செங்கழு நீர் வேர்ப்பட்டை, செங்கழுநீர் மூலம், நன்னாரி வேர்ப்பட்டை, சீந்தில் தண்டு, சித்திரமூல வேர்ப்பட்டை இவற்றை வகைக்குப் பத்துப் பலமாக எடுத்து எட்டு பங்கு தண்ணீர் சேர்த்து எட்டிலொன்றாய் சுண்டக் காய்ச்சி இறுத்து வடித்த கியாழமும் முன்கூறப்பட்ட சாறுகளையும் ஒரு நாழி பசுவின் நெய்யும், நாலு படி பசுவின் பாலையும் சேர்த்துக் கலக்கிக் கொண்டு கற்கத் திரவியங்கள், சந்தனம், தேவதாரு, அதிமதுரம், செங்கழு நீர்க்கிழங்கு, கோட்டம், கூகை நீர், கிராம்பு, சாதிக்காய், சாதிப் பத்திரி, ஏலம், தகரம், குங்குமப் பூ, சிவதைவேர், பீதரோகணி, பச்சைக் கற்பூரம், இலவங்கப்பத்திரி, மகரப்பூ, பேரீந்து, திராட்சை இவற்றைத் தனித்தனியே ஒவ்வொரு கழஞ்சு வீதம் நன்றாய்த் தூள்செய்து நெய் பக்குவமாகும்போது பக்குவமாகத் தூவிக் கிண்டித் தூவியது நன்றாய் வெந்த பிறகு சீனியைத் தூள்செய்து தூவிக் கிளறி இறக்கிக் கொள்ளவும்.

அளவுப்படி கடுகுடன் தினம் இரு வேளை சாப்பிட்டு வர, மூலச்சூடு, கண்ணோய், எண்வகைக் காசம், கண்ணில் நீர் பாய்தல் மற்றும் கண்ணிலேற்படும் நோய்கள் தீரும்.

குறிப்பு :— மேற்படி நெய்யை வடிக்கக்கூடாது. இது கடுகுடன் சாப்பிடவேண்டிய மருந்தாகும்.

2. குங்குமப் பூவும் பச்சைக் கற்பூரமும் ஷை நெய்யைக் கிளறி இறக்கியவுடன் போட்டு கலந்து கொள்ளல் முறையாம். முதலிலேயே போட்டு விட்டால் ஷை சரக்குகளின் செய்கையும் மணமும் கெடும்.

3. ஷை பாக்களில் இந்த மருந்தின் பெயர் குறிக்கப்பட வில்லை. ஆயினும் பேய்ப் புடலை முதலாகக் கொண்டு இம் மருந்து முறை தொடங்குகின்ற காரணத்தால் இந் நூல் பதிப்பாசிரியர் புடலாதிக் கிருதம் என்று பெயர் சூட்டியுள்ளார் போலும்.

படலம் ஏழுக்கும் பெயர்

பேசிய படல மேழும் பெய்வளை மானே கேளாய்
கூசியே விழிசிவந்து கோழைசதைப் படலமற்றும்
மாசுறு படல நீரால் மாரத்தப் படலத் தோடு
வீசியே வரிய டர்ந்த படலமின் னுங்கேள் மின்னே. 40

கார்குழல் மானே கேளாய் கருநாகப் படல மோடு
கூர்விழி மந்த மாகும் மாங்கிசப் படலக் கூறும்
ஏர்பசு விழிய டர்த்தி என்றிவை மூன்றுந் தானே
நேரிலா சாத்தி யத்தின் குணமென நிகழ்த்தி னூரே. 41

மிகுதியாக வளையல்களை அணிந்துள்ள மான் போன்றவளே! மின்னல் போன்றவளே!! கண் சிவந்து கூசச்செய்யும் பீளை மிகத் தள்ளும் (கண்களில் வெள்ளையாய்க் குழகுழப்புடன் வெளியாகும் மலினம்) குணமுடைய சதைப்படலம், இடையருது மாசுற்ற நீர் வடியும் நீர்ப்படலம், இரத்தப்படலம், விரைந்துண்டாம். நெருக்கமான வரிகளைத் தோற்றுவிக்கும் வரிப்படலம், என்பதோடு இன்னும் கூறுகிறேன் கேட்பாயாக

கரிய கூந்தலையுடைய மானே! கருநாகப் படலம், விழியின் கூரிய பார்வையை மந்தமாக்கும் அதிமாங்கிசப் படலம் பசுவிழிப் (அடர்த்தி) படலம் என்பன ஏழு வகைப் படலத்தின் பெயர்களாம். அவைகளில் பின் கூறிய மூன்றும் சாத்தியப் படலம் என்பர்.

## சதைப்படலம்

தெளிவுறு கருப்பி னுள்ளே சிவந்துநின் றுறுத்தி நோவாய்
வெளியானை யடைத்துக் கன்றிப் படலம்வீழ்ந் திடுமே யாகில்
அளியுறு குழலாய் கேளாய் சதையிது படல மென்று
மொழிவதாம் மா மறையின் முறைமையை யறிந்து கொள்ளே

தலையிலணிந்த பூக்களிலுள்ள தேனை உண்ண வண்டு வந்தணையும் கூந்தலையுடையவளே! கருவிழியினுள்ளே சிவந்தும் உறுத்தியும் வலியை உண்டாக்கியும், வெளிப் பார்வையை அடைத்து வெள்விழிக்கன்றி நின்ருல் அதுவே சதைப் படலம் என்று அறிக. குறிப்பு :— மற்றும் பாக்களின் எண் 40-ல் கூறிய இந் நோய்க் குரிய புறக்குறி குணங்களையும் நினைவில் கொள்க.

## நீர்ப்படலம்

சாலவே சிரசில் குத்துந் தாழநீர் விழுங்க னக்கும்
மூலமாங் கறுப்பின் மீது முகில்போலு மயக்க முண்டாம்
ஆலவேல் விழியி னூளே அருவிநீர் மிகுந்து வீழும்
மூலமா முனிவர் கூறு முண்மைநீர்ப் படல மென்றே. 43

நஞ்சூட்டிய வேலைப் போன்ற கண்ணினுளே! கருவிழியின் மீது மேகம் கப்பியதுபோலத் தோன்றலும், தலையில் குத்தலும், கனதி உண்டாகியும் மயக்கம் ஏற்பட்டும் தலையைத் தாழ்த்தினுல் அருவியின் நீர் ஊற்றுவதுபோல விழிநீர்ப் பெருகியும் காணும் குறி குணங்கள் தோன்றினுல் நீர்ப் படலமென்று மூலர் என்னும் மகா முனிவர் கூறுவர்.

### இரத்தப்படலம்

கறுத்திடுங் குமுறுங் காந்துங் கனத்திடு மிமைகள் வீங்கும்
எரித்திடுங் கண்ணி லெங்குமி ரத்தமே யெழுந்து காட்டும்
நெரித்திடப் புருவம் நெற்றி பிடருச்சி நீங்கக் குத்தும்
இரத்தமாம் படல மென்றே இயம்பினு ரியம் பினுரே 44

இமைகள் கனத்தும், குமுறலுண்டாகியும், வெம்மை யுண்டாகி கறுத்துங் காணும், கண்ணிலெல்லாம் (உள்ளும் புறமும்) எரிச்சலுண்டாம். கண்ணில் கருவிழிப் பாகத்தில் இரத்தம் மேலெழுந்து புள்ளி புள்ளியாக உட்புறம் பூராவும் காணப்படும். தலையில் உச்சி நீங்கலாகப் புருவம், நெற்றி, பிடரி ஆகிய இடங்களில் குத்தலுண்டாகும். இக் குறிகுணங்கள் காணுமாயின் அதனை இரத்தப் படலமென்பர்.

### வரியெழுச்சிப்படலம்

கருவிழி யதனின் மீது கயிறுபோல் வளர்ந்து காட்டி
அருவியே பாய்ந்துகுத்தி அழன்றுநொந் துருத்துங் கண்டாய்
முருகவிழ் குழலி னுளே முன்விழி புகைச்ச லுண்டாம்
வருமிது வரியெ ழுச்சிப் படலமாய் வழுத்து வாரே. 45

அழகு மிக்க கூந்தலையுடையவளே! கண்ணின் கருவிழியின் மீது கயிறு போலப் பிரிபிரியாக நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டும், அருவிபோலக் கண்ணீர் பாய்ந்தும், குத்தலும், அழற்சியும், உருத்தலும், வலியும், முன்விழியில் புகைச்சலும் காணுமாகில் அதனை வரியெழுச்சிப் படலமென்று கூறுவார்கள்.

### கருநாகப்படலம்

இந்திர தனுவஃ தேபோல் இயல்நிறம் பலவு முண்டாய்
மந்தமாஞ் சூட தாகும் வருந்தியே குத்தி நோவாஞ்
சிந்துநீர் விழ்ந்து காட்டித் திகழ்விழி யுந்துங் கண்டாய்
கந்தநற் குழலி னுளே கறுநாகப் படல மாமே. 46

மணம் மிக்கக் கூந்தலையுடையவளே! இந்திரவில்லைப் போல பற்பல நிறங்களோடு கருவிழியில் படர்ந்து பார்வை மந்தமாயும், கண்ணில் சூடாகவும், கண்ணுக்குள் குத்தும் வலியும் கண்டு நீர் மிகவாக வடிந்து விழி முன்னுக்குத் தள்ளி வந்துள்ளது போலக் காணில் அதனைக் கருநாகப் படலம் என்பர்.

### அதிமாங்கிசப்படலம்

ஊச்சியின் சதையைப் போலக் கறுவிழி யதனி லூறுங்
கூச்சமு மிடியு முண்டாங் கொதித்துநீர் மிகுந்து வீழுந்
தேச்சிடு விழிநல் லாளே சிரம்பிடச் சீழு மோங்கும்
ஆச்சதி குணங்கள் கண்டால் அதிமாங்கிசப் படல மாமே. 47

தேர்ச்சியில் நல்ல விழியுடைய மாதே ! ஊச்சியின் தசையைப் போலக் கருவிழியின்மீது படர்ந்து, கண் கூச்சம், கண்களில் இடிப்பு, கொதிப்பு, நீர் வடிதல், மிகல், கையால் சீண்டினல் சீழ் வெளிப்படுதலும் ஆகிய துற்குணங்கள் காணுமாயின் அதனை அதிமாங்கிசப்படல மென்பர்.

### பசுவிழிப்படலம்

வசையறு கறுப்பி னுள்ளே மரகதம் போன்று காட்டித்
தசைபறந் திடியும் நீருந் தழலது போலக் காந்தும்
இசையவே ஒளியு மந்தம் இக்குணங் கண்ட வாறே
பசையறு மசாத்திய மாகும் பசுவிழிப் படல மாமே. 48

குற்றமற்றகருவிழியினுள்ளே மரகதம்போலப் பச்சையாகிய நிறம் காட்டித் தசை பரவலாக வளர்ந்தும் கண்ணில் இடியும் நீர் வடிதலும், நெருப்பைப்போல எரிச்சலும், கண்ணொளி மந்தமும் கண்டால் இதுவே அசாத்தியமான பசு விழிப்படல மென்பர்.

### படலங்களுக்கு மருந்து

சீனக் காரம் ஒருகழஞ்சு சிவந்த காவி யரைக்கழஞ்சு
மானே யபினும் பணவெடைகொள் வறுத்தே பின்னும் பொடி யாக்கித்
தேனர் முலைப்பால் தனிற்கலக்கித் தீவத் தண்டி விழியொழுக்கப்
போனர் படலங் கரைந்துதான் பொருந்தா தோடிப் போமென்றே.

படிக்காரம் ஒரு கழஞ்சு, நல்ல சிவப்பான காவிக்கல் அரைக் கழஞ்சு, அபினி ஒரு பணவெடையாக எடுத்து இதில் வறுக்க வேண்டிய படிகாரத்தை ஓட்டிவிட்டு சூடேற்ற நீர்க்கும். அப்போது காவிக்கல்லை (தூய்மை செய்தபின்) தூளாக்கி மேற்படி படிக்காரத்தில் போட்டுக் கிண்டி கீழிறக்கும்போது அபினை (தூய்மை செய்தது) அதிலிட்டுப் புறட்டி நன்கு உறவாய்க் கலந்த பின் அதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வைத்துக் கொள்க.

தேனும், தாய்ப்பாலும் கலந்ததில் மேற்படி தூளை உறவுபடக் கலந்து படலமுள்ள கண்ணில் போட்டுவர படலங்கள் யாவும் நன்கு கரைந்து விலகும்.

### படலங்களுக்கு மருந்து

நறுநெய் யுழக்கு நத்தைச்சிப்பி நவிலு நீருஞ் சரிகூட்டி
யுறுநற் சீர மதிமதுரத் தோடு தேவ தாரமபின்
நறிய சீனக் காரமுடன் நாட்டு முருங்கைப் பூநீருங்
குறையா திதனைக் கூட்டிவெந்து குளிரத் தாரை கூட்டுகவே.

மணமுள்ள பசுவின் நெய் ஓர் உழக்கு, நத்தை நீர், சிப்பி கும்பிடு கிளிஞ்சல் நீர் தனித்தனியே ஓர் உழக்கு, நாட்டு முருங்கைப் பூச் சாறு ஓர் உழக்கு ஒன்று சேர்த்து சீரகம், அதிமதுரம், தேவ தாரு, அபின், சீனுக்காரம் இவற்றைக் கற்கமாக மேற்படிச் சாற்றி லரைத்துக் கலக்கி முறைப்படி காய்ச்சிப் படலம் கண்ட கண்ணில் விடப் படலம் எல்லாம் தீரும்.

### படலங்களுக்குப் புறவளையம்

அரிதகி யெட்டி சந்த மகில்வில்வ மரத்தை யோடு
முரியதோர் மதுரந் தார முடன்தெறுங் கரியின் பல்லும்
அரிவையர் முலைப்பால் விட்டு அரைத்தபின் கலந்து காய்ச்சித்
தெரிவிழி சுற்றிப் பூசத் திகைத்ததி லோடிப் போமே. 51

கடுக்காய்த் தோல், எட்டிக் கொட்டை, சந்தனக் கட்டை, அகில் கட்டை, வில்வ வேர், சிற்றரத்தை, அதிமதுரம், தேவதாருக் கட்டை, யானைத் தந்தம் இவற்றை முறைப்படித் தூய்மைசெய்து தூளாக்கித் தாய்ப்பால்விட்டு வெண்ணெயைப் போல அரைத்துச் சூடாக்கிக் கண்ணைச் சுற்றிலும் பூசப் படல நோய் ஓடிப்போகும்.

குறிப்பு :— இம் மருந்து கண்ணைச் சுற்றிப் பற்றிடக் (புற வளையம்) கூறியதாகும். இம் முறையின் பெயரும் தீர்க்கும் நோயையும் மேற்படி பாலில் கூறப்படவில்லை என்பதைக் காண்க.

### படலங்களுக்கு ரட்சை

இவையற மாரு தாகி லியல்மொழி மடங்க லென்னு
நவையறு கருவி யாலே நடுநரம் பறிந்து கொண்டு
குவையிரண் டதனின் மீதுங் கொதித்தெழும் ரட்சை செய்யச்
சவையுறு முனிவர் சொன்ன தாரணை யறிந்து கொள்ளே. 52

அறிவுசெய் யேழு நாளு மழுந்தவே புண்ண தாக்கிக்
குறியுற முன்னே சொன்ன மருந்தொடு தாரை கொள்நீ
மறுவிலா விழியி னுள்ளே வந்திடும் படலம் போகும்
நறைகமழ் குழலி னுளே நாடிநீ யறிந்து கொள்ளே. 53

தேன் மணம் கமழும் கூந்தலாளே! இத்தகைய மருத்துவத் தால் படலம் தீராவிடில் 'இயல் மொழி மடங்கல்' என்னும் சூடு வைக்கும் கருவியைச் சூடாக்கி கண்ணின் நடு நரம்புத் தானத்தை அறிந்து இரண்டிடத்தில் சூடுவைத்து அந்த வெந்த புண்ணுக்குச் சிகிச்சையும், மேற்படி பா எண் 50, 51-ல் கூறிய மருந்துகளைக் கண்ணுள்ளும் புறமும் செய்துவரப் படலநோய் தீரும்.

குறிப்பு :— சிட்டிகை என்னும் புறச் சிகிச்சை இங்கு கூறப் பட்டுள்ளது. இதனை இரட்சை யென்பர் இந் நூலாசிரியர்.

### குமுதம் மூன்றுக்கும் பெயர்

கூறிய குமுத மூன்றின் பெயருடன் குணத்தைக் கேளாய்
சீறுசெங் குமுதத் தோடு தெளிகருங் குமுத மற்று
மீறுவெண் குமுத மூன்றில் விளங்குசெங் குமுதமொன்றும்
மாறிடும் மற்றி ரண்டு மசாத்திய மென்ன லாமே. 54

முன் கூறப்பட்ட மூன்று குமுதங்களின் பெயர்களையும் குணங்களையும் (கூறுவேன்) கேட்பாயாக. செங்குமுதம், கருங்குமுதம், வெண்குமுதம் என்பனவாகும். இவற்றில் செங்குமுதம் குணமாய் விடும். மற்ற இரண்டும் அசாத்தியம் என்பர்.

### செங்குமுதத்தின் குணம்

சிவந்திடுங் குமுதந் தானே செய்குறி யதனைக் கேளாய்
உவந்தநற் கறுப்பின் மீதே யுற்பல மலர்போ லுண்டாய்த்
தவழ்ந்திடு சதையு நீருந் தழலென வெரித்து குத்துங்
குவிந்திடு முலைநன் மாதே குறித்துநீ யறிந்து கொள்ளே. 55

குவிந்து உயர்ந்த நல்ல முலை மாதே செங்குமுத நோயில் காணும் குறி (குணங்களைக் கேட்பாயாக:

கருப்பு விழியின்மீது செவ்வல்லி மலர்போலக் காணப்பட்டுப் பரவித் தசை வளர்ந்து நீர் தீயைப்போல சூடாய்க் கண்ணிலிருந்து வழிந்து எரிச்சல், குத்தல் இவற்றையுண்டாக்குமாயின் மேற்படி செங்குமுத நோய் என்பதை அறிந்து கொள்வாயாக.

### கருங்குமுதத்தின் குணம்

தொள்கருங் குமுத மஃதின் குணமது கூறக் கேளாய்
தெள்கரு விழியின் மீது செறிந்திடுங் குவளை போல
அள்ளிலை வேற்கண் மானே அரும்பொன்று விரண முண்டாய்
நள்ளிருள் போல மூடு மசாத்திய மென்ன லாமே. 56

அகன்று கூர்மையான இலையை உடைய வேல்போன்ற கண்களையுடைய மான் போன்ற நங்கையே! கருங் குமுதத்தின் குணங்களைக் கூறுவேன் கேட்பாயாக: தெளிந்த கருவிழியின்மீது கருங் குவளையைப்போல நெருக்கமாய் உண்டாகும். அரும்பை ஒத்த விரணம் காணப்படும். நடு இரவு போலக் கண்ணில் இருள் கப்பி கண் பார்வை மங்கும். இது அசாத்திய மெனலாம்.

### வெண் குமுதத்தின் குணம்

மீறுவெண் குமுத மஃதின் குணமதை விளம்பக் கேளாய்
சீறுமே பஞ்சு போலச் சிதறியே புள்ளி யாகும்
வீறெனக் கொதித்துக் குத்தி வேதனை மிகவு முண்டாகும்
மாறிடா திடிக்குஞ் சூட்சம் மழுங்கிடு மசாத்திய மாமே. 57

வெண்குமுதத்தின் குணத்தைக் கேட்பாயாக : பஞ்சு பன்னிச் சிதறவிட்டதுபோலக் கருவிழியில் தோன்றிச் சில காலத்தில் அவை யொன்றி ஒரு புள்ளியாகி நிற்கும். சூடு, குத்தல் வலி மிக உண்டாகும். சிறிதும் குறையாமலும் விடாமலும் இடிப்பு (கண்ணிலும் தலையிலும்) காணும். பார்வை மங்கும். இதுவும் அசாத்திய நோயாம்.

### குமுதங்களுக்குப் பசுவின் பல் மாத்திரை

ஆவின்பல் லதனை நன்று யாம்பற்பூ நீரை வார்த்து
மேவிநீ யரைத்து வட்டாய் விளம்புநாற் பதுநாட் சென்றால்
கூவுவெண் சேவ லென்புங் கோட்டங்கோ ரோசனை யிந்து
தாவுபொன் வெள்ளி கஞ்சஞ் சார்பொடு துருசு துத்தம். 58

சொல்லிய சீனக் காரந் துலங்குமோ ரிதழின் மூலம்
நல்லசா ரடைவேர் சந்தம் நவில்திரி பலையின் வித்தும்
அல்லியங் கோதை நல்லாய் ஓரொன்று கழஞ்சாய்க் கூட்டிப்
புல்லுசம் பீரச் சாற்று லரையெழு பொழுது மின்னே. 59

மின்னே பன்னீர் தன்னாலே மிருது வாக வரைத்துருட்டிக்
கண்ணே செங்கு முதந்தானே கருது பூப்பட லங்காசம்
பன்னோ யோடு திமிரமெல்லாம் பாற வேமுலைப் பால்விட்டுச்
சொன்னே னீயரைத் துப்போடச் சோதி யாய்விளங் குங்கண்ணே.

இருள் கவிந்தது போன்ற கூந்தலையுடைய பெண்ணே! பசுவின் பல்லை ஆம்பல் பூச் சாற்றாலரைத்து வில்லைகட்டி (40) நாற்பது நாள்கள் சூரிய புடம் வைத்துக் கொண்டதில் ஒரு கழஞ்சும், வெள்ளைச் சேவலின் (நெஞ்சு) எலும்பு, கோட்டம். கோரோசனை, இந்துப்பு, பொன், வெள்ளி, வெண்கலம் (அரப் பொடிகள்) துருசு, பால் துத்தம், படிக்காரம், ஓரிதழ்த் தாமரைவேர்ப்பட்டை, சாரடை வேர்ப்பட்டை, சந்தனக் கட்டை, திரிபலையின் வித்துகள், தனித்தனியே ஒவ்வோர் கழஞ்சளவாய்க் கூட்டி எலுமிச்சைச் சாற்றால் ஏழு நாள்கள் நன்றாய் அரைத்துப்பின் பன்னீரால் மேற் கூறிய நாள்கள் அரைத்து நீட்டுப் போக்கான மாத்திரைகள் செய்து உலர்த்தி வைத்துக் கொள்க.

செங்குமுதமுடன், (கருவிழி நோய்களாகிய) பூ, படலம், காசம் முதலான பல பிணிகளுடன், திமிரமும் நீங்கவேண்டி தாய்ப் பாலில் உரைத்து (மேற்படி மாத்திரையைக்) கண்ணில் தீட்டி வந்தால் நீங்கிவிடும். கண்ணொளி பெற்று விளங்கும்.

### குமுதத்திற்குப் பொடி

துருசெவி மருந்து சீனக் காரஞ்சொல் மருந்து மூன்றும்
உருகவே யோட்டின் மீதே வெந்ததை யாற விட்டு
மிருதுவாய் நுணுக்கிக் கொண்டு விளப்பிய குமுதந் தன்னில்
ஒருதினை யளவு பத்துப் பொழுதிட வோடிப் போமே. 61

துருசு, எலிமருந்து, சீனக்காரம் ஆகிய இம் மூன்று மருந்து களையும் முறைப்படி சுத்தித்து புது ஓட்டிலிட்டு) உருக்கிக் கலந்து இறுகியாறியபின் நுண்ணியதாகத் தூள்செய்து ஒரு தினையளவு வீதம் குமுதம் கண்ட கண்ணில் பத்து தினங்கள் தினம் ஒவ்வொரு வேளை வீதம் இட்டு வர அக் குமுதநோய் நீங்கும்.

குறிப்பு :— இம் மருந்தைத் தூளாகவே கண்களிலிடவேண்டு மானதுபற்றி இம் முறைக்குக் 'குமுதத்துக்குப் பொடி' என்று பதிப்பாசிரியர் பெயர் சூட்டியுள்ளார் என்று அறிக.

### குமுதத்திற்குக் குழம்பு

கடல்நுரை துருசு சங்கு கருதிந்து மரிசி தேனும்
மடலுறு துத்த மேழும் மருவுமா வெண்ணெய் கூட்டி
அடர்குழி யம்மி யிட்டு அரையொரு சாமஞ் சென்றால்
இடர்செய்யுங் குமுதந் தன்னி லெழுதிட வியம்பினாரே. 62

கடல் நுரை, துருசு, சங்கு, இந்துப்பு, மிளகு, தேன், பால் துத்தம் இவ் வேழையும் (முறைப்படி சுத்தம் செய்து) சம அளவாக எடுத்து முறைப்படி குழியம்மியிலிட்டுத் தூளாக்கி நன்றாய் உறவாகக் கலந்தபின் போதிய அளவு பசுவின் வெண்ணெய் கூட்டி ஒரு சாமம் கைவிடாமலரைத்து வழித்து வைத்துக்கொள்க.

இம் மருந்தைக் குமுதம் கண்டுள்ள கண்களுக்குத் தினமிரு வேளை தீட்டி வருமாறு கூறுவர்.

குறிப்பு :— மேலே கூறப்பட்ட ஏழு சரக்குகளில் தேனும் ஒன்று. ஆகவே அது ஒன்று தவிர எல்லாவற்றையும் நன்கு தூள் செய்யவேண்டும். பின் தேனைச் சிறுகச் சிறுக ஊற்றியரைத்து யாவற்றையும் ஒன்றுபடக் கலக்க வேண்டும் என்றறிக.

### விழியுந்தல் மூன்றின் குணம்

விழியெழு குமுதத்தாலும் வேறுள வியாதியாலுந்
தெளிகரு விழியினுள்ளே செறிந்திடு நீரினாலும்
மூழியது மயக்கமுண்டாய் மூண்டிடு மூன்றுரோகம்
அளியுறு குழலாய்கேளாய் அசாத்திய மூன்றுமாமே 63

வண்டு மொய்த்த கூந்தலாளே கேட்பாயாக: கண்ணில் தோன்றுகின்றதான குமுதமென்ற நோயாலும், வேறு வகைக் கண்ணோய்களாலும், கருவிழியில் அளவுக்கதிகரித்த நீர் சேர்வதாலும் விழியில் மயக்கமுண்டாய் (விழிவெளிப் படுதல்) விழியுந்தலென்ற மூன்றுவகை நோய்கள் கண்ணில் தோன்றும். இவை மூன்றும் அசாத்திய நோய்கள்.

## விழுயுந்தலுக்கு இரட்சை

காக்கையின் காலேபோலுங் கருவியைச் சிவக்கக்காய்ச்சி
நோக்கிநீ நுதலின்மத்தி நுவன்றிடு பெருநரம்பில்
தாக்கவே பிடரிரோமஞ் சந்தித்த மையமீது
வீக்குவார் த்னங்கொண்மானே விழியிரு புறத்துந்தானே. 64

தானமாய் வைத்தழுத்திச் சங்கொடு கரியின்றந்தம்
தேனமர் தேவதாரஞ் செஞ்சந்தங் கடுக்காயைந்தும்
ஊனமில் தனப்பால்விட்டு உரைத்தபின் கூட்டிக்காய்ச்சிக்
கானவிர் குழாலாய் நெற்றிப் படர்சுற்றுங் கனக்கப்பூசே. 65

வார்கொண்டு கட்டிய முலை உடைய மானே! காக்கையின் பாதத்தைப்போலச் செய்யப்பட்ட கருவியைப் பழுக்கக் காய்ச்சி நெற்றி நடு நரம்பின் மேலும், பிடரியில் மயிர் சந்திப்பின் மத்தியிலும், கண்ணின் இரு புறங்களிலும், (இரு கன்னப் பொட்டுகளில்) அழுத்திச் சூடுவைக்க வேண்டும்.

மணம் வீசும் கூந்தலையுடையவளே! சங்கு, யானைத் தந்தம், தேவதாரக் கட்டை, செஞ்சந்தனக் கட்டை, கடுக்காய்த் தோல் இவை ஐந்தையும் தூளாக்கித் தாய்ப்பால்விட்டு அரைத்து நெற்றி முதலான சூடுவைத்த இடங்களில் கனமாய்ப் பூசவும்.

குறிப்பு:— இதுவும் பா 52, 53-ல் கூறிய படி சிட்டிகைச் சிகிச்சையாகும்.

## நெரிசல் மூன்றின் பெயர்

கண்ணிலுட் டணத்தினாலுங் கடுகிய மருந்தினாலு
முண்ணிறை சிவப்பினாலு மொதுங்கிய நீரினாலுந்
திண்ணமாய் நெரிசலுண்டா மதின்பெயர் செப்பக்கேளாய்
எண்ணுநீர் நெரிசல் சோரி யுட்டண மதின்பேர் மூன்றே. 66

உட்டண நெரிசல், நீர்நெரிசல், சுரோணித நெரிசல் என்பன் 3 கண்ணில் காணப்பட்ட சூட்டாலும், வீரியம் மிக்க மருந்துகளைக் கண்ணிலிட்டக் காரணத்தாலும், கண்ணுக்குள் நிறைந்த சிவப்பாலும், கண்ணுக்குள் நீர் ஒதுங்கித் தேங்கியதாலும் கண்ணில் நெரிசலென்ற நோய் உண்டாகும். அவை நீர் நெரிசல், சோரி நெரிசல், உட்டண நெரிசல் என்று மூவகைப்படும்.

### உஷ்ண நெரிசலின் குணம்

உட்டண நெரிசல்தானே உருண்டெழும் வெளுத்துக்காட்டு
மட்டுநீர் நெரிசல்மையங் குளுந்தென்னின் வடிவுபோலாங்
கட்டமா மிரத்தத்தாலே கன்த்திடு நெரிசல்தானே
மட்டவிழ் குழலினுளே மஞ்சாடி வடிவமாமே. 67

மணம் நிறைந்த கூந்தலையுடையவளே! உட்டண நெரிசலில் கருவிழி வெளுத்தும் உருண்டு மேல் எழும்பியும் காணும்.

நீர் நெரிசலில் கருவிழியின் மையம் நீர்க்குமிழ் போலக் காணப் படும்.

இரத்தத்தாலேற்பட்ட நெரிசல் கண்ட நோயில் கருவிழி மஞ்சாடி போலக் காணும். (மஞ்சாடி = பெருங்குன்றி)

### நெரிசலுக்கு மருந்து

குருதியின் நெரிசல்தானே யசாத்திய மென்றுகூறுந்
தெரியிரு நெரிசலுக்குஞ் செய்மருந் ததனைக்கேளாய்
உருகிய நறுநெய்தன்னி லூரிநீர் முருங்கைப்பூவும்
மருவுநற்சீரஞ்சீனக் காரமுமபினுங் கூட்டே. 68

கூட்டிநீ கொதிக்கவைத்துக் குறித்திரு போதுந்தாரை
நாட்டமாய் விட்டவாறே நவின்றிடு-நெரிசல் நோவு
மீட்டுமோர் குத்துச்சூடு மிகுமிடி போமேயென்று
கேட்டவா முன்னோர் கூறுங் கிரியைநீ யறிந்துகொள்ளே. 69

இரத்த நெரிசல் ஒன்றே அசாத்தியமாம். மற்ற சாத்திய நெரிசல் இரண்டுக்கும் செய்யும் மருத்துவத்தைக் கேட்பாயாக:

உருக்கிய நறுமணமுள்ள நெய்யில் கழுதையின் சிறுநீரும், முருங்கைப் பூச்சாறும் சமமாகச் சேர்த்து அதில் சீரகம், படிக்காரம், அபின் மூன்றையும் கற்கமாகக் கூட்டிப் பதமாய்க் காய்ச்சி வடித்து இரு போதும் கண்ணில் விட்டுவர நெரிசல் நோய் தீரும். மற்றும் குத்தல் மிக்க இடிப்பும் கொண்ட கண்ணோய் தீரும் என்று முன்னோர் கூறியதாமென்று அறிக.

குறிப்பு :— ஊரி நீர் என்பதைத் தேசி நீரென்று கொண்டும், உலக வழக்கில் கழுதையை 'ஊர் சுற்றி' என்று கூறுவதையும் சான்றாகக் கொண்டு கழுதையின் சிறுநீரைக் கூட்டும்படி பொருள் கொள்ளப்பட்டது.

### வரி மூன்றின் குணம்

கூர்கரு விழியின்மீதே கொண்டெழு வரியின்செய்கை
நீரினு லிமையினுள்ளே நிகழ்ந்திடும் வடுவினுலும்
வார்விழி மானேசோரி வைகியே செறிந்ததாலும்
நேர்வரி மூன்றுண்டாகு மிக்குண நிகழ்த்தக்கேளே. 70

கருவிழியினுள்ளே நீரினுலும், இமையின், உட்புறத்தில் கண்ட வடுவாலும், இரத்தம் (சிறு சிறு சோரி நாளம் வெடித்து) சொரிந்த காரணத்தாலும் மூன்று வகையான வரி என்னும் நோய் கண்ணின் கருவிழியில் தோன்றும். அவற்றின் குணங்களைக் கூறுவேன் கேட்பாயாக.

நீர்வரிக் குணங்கள்தாமே வெண்மையாய் நெடுகிக்காணுஞ்
சேரிமை வடிவினுலே செறிவரி பிறையேபோலாங்
கார்குழல் மின்னேசோரி வரியிருகடையுந்தாவும்
பாரிதின் குணங்களெள்லாம் பலன்பட வறிந்துகொள்ளே. 71

சொல்லிமை வடுவினுலே தோன்றிடும் வரியுநீராற்
புல்லிடும் வரியிரண்டும் புகலுங்கால் அசாத்தியமென்ன
ஒல்லேயி லிரத்தத்தாலே யுறுவரி தீருமென்று
பல்பல நூலுஞ்சொல்லும் பழமையை யறிந்து கொள்ளே. 72

கருவிழியில் வெண்மையாயும் நீண்டும் முறுக்கிய பிரி கயிறு போலக் கண்டால் அது நீர் வரியின் குறிக்குணமாகும்.

இமையின் வடு தேய்ந்து தேய்ந்து பிறைபோலக் கருவிழியில் காணப்படுவது இமைவரி என்ற நோயின் குணமாகும். இது பிறை வடிவில் கருவிழியின்மேல் காணப்படும்.

சோரி வரியாவது இரு கடைக்கண்ணிலிருந்து தோன்றி ஒன்றை ஒன்று தாண்டி இரு கடைக் கண்களையும் இணைக்கும்.

இமை வடு வரியும் நீர் வரியும் அசாத்தியமாகும். சோரி வரி சாத்தியமாம். பல நூல்கள் இது குறித்துக் கூறுதலைக் கண்டு இந் நோயின் பழைமையை அறிந்து கொள்வாயாக.

### வரி மூன்றுக்கு அஞ்சனம்

விளம்பு நற்றுத்தந்தன்னே நுணுக்கி வெள்ளாட்டுப்பாலே
வளம்பெற நாழிவிட்டு வற்றவே காய்ச்சிக்கொண்டு
துலங்கு சம்பீரச்சாற்றி லரைத்தடை பிடித்துலர்த்தி
விளங்கிழை மின்னேசட்டி மீதுவைத் தெரித்துக்கொள்ளே. 73

கொண்ணிறம் வெண்மையானுற் கூறும்வெண் சலத்திலிட்டுத்
தண்ணுறு சங்கினுலே சாரமத்தித்துக் கொண்டு
திண்ணமா யெழுதும் போது சேர்ந்திடும் வரிச்சிவப்புங்
கண்ணிலே நில்லாதோடுங் கருதிநீ யறிந்துகொள்ளே. 74

பால் துத்தத்தைத் தூளாக்கி ஒரு நாழி வெள்ளாட்டுப் பாலில் கலக்கி வற்றக்காய்ச்சி இறுகியபின் எலுமிச்சைச் சாற்ருல் அரைத்து அடையாகத் தட்டி உலர வைத்துச் சட்டியில் வைத்து எரித்துக் கொள்வாயாக.

அவ்வண்ணம் எரித்த மருந்து வெண்ணிறமுடையதானால் அதை வெண்கலப் பாத்திரத்தில் இட்டுச் சங்கால் நுணுக்கித் தூளாக்கி வைத்துக் கொள்க. இம் மருந்தைக் கண்ணில் (தாய்ப் பாலில் குழைத்து) எழுதினால் வரியென்ற நோயும் கண் சிவப்பும் நீங்குமென்று அறிவாயாக.

### சுக்கிரன் ஐந்தின் பெயர்

அள்ளிலை நடுவேற்கண்ணாய் சுக்கிரன் ஐந்தின்பேர்கள்
ஒள்ளிய மணியின்மீதே யுறுவது விரணசுக்கிரன்
தெள்விழி சுற்றித் தோன்றித் திரைத்திடு முழுந்துபோலு
முள்ளது கறுத்துக் கண்டாற் கருஞ்சுக்கிரனென்றுபேரே. 75

### விரணசுக்கிரன் - கருத்தசுக்கிரன்

கூரிய வேல் போன்ற கண்களையுடையவளே! சுக்கிரன் ஐந்தின் பெயர்களைக் கூறுவேன். அவை ஒளி பொருந்திய கருவிழியின் மீதே தேன்றும் புண்ணுக்கு விரண சுக்கிரன் என்று பெயராம். கருவிழியைச் சுற்றிப் புண் தோன்றி உளுந்து போலத் திரைந்தும் கருத்தும் கண்டால் அதற்குக் கருஞ் சுக்கிரனென்று பேராம்.

### விழிவிழுங்கி சுக்கிரன்

ஓதிய கருவிழிக்குள் வரியிடை ஒண்ணிதாக
மோதுமு மச்சிபோல முழிதனில் சுத்திமூடும்
வேதனை மிகுதியாக வெரித்திடு மிடியுமாறு
தீதினை விழிவிழுங்கிச் சுக்கிர னென்னலாமே. 76

புகழ்ந்து கூறப்பட்டதான கருவிழிக்குள் அதன் வரியின் இடையே ஒளியுடன் கூடிய கும்பிடு கிளிஞ்சல் போல (ஒரே நேரத்தில் இரு கோடிகளிலிருந்து கிளைத்து) கருவிழியைச் சுற்றி மூடிடும். வேதனை மிகும், கண்ணில் இடிப்பும் எரிச்சலும் நீங்காமல் நின்று வருத்தும். இதையே விழிவிழுங்கிச் சுக்கிரன் என்பர்.

### வெண் சுக்கிரன்

நடுவிழிப் பக்கத் தின்மேல் நனிபனித் துளிபோலுந்தீ
சுடுமணல் போலே காந்தி தோன்றிடு மெழுச்சியோடு
கடலுறுஞ் சோகிபோலுங் கருவிழி மறைத்துத்தாக்கி
யிடர்செயும் வியாதிதானே வெளுத்த சுக்கிரனென்றோதே. 77

நடுவிழியின் பக்கத்தில் நல்ல பனித் துளிபோல எழுச்சிக் காணும்; அது சுடும் அனற் பொரிபோலக் காந்தும்; பையப் பைய வளர்ந்து கடலில் காணப்படும் சோகிபோலப் பெரிதாகி கருவிழியைத் தாக்கி மறைத்துப் பார்வைக்குத் தடைகள் செய்யும்; இத் தகை வியாதிதான் வெண் சுக்கிரன் என்னும் பெயர் பெறும்.

### அனற் சுக்கிரன்

பானலங் கண்ணினுள்ளே பகர்கரு விழியைவிட்டுத்
தானமெண் மேலதாகத் தழலது போலே தோன்று
மூனமா மிடியுண்டாக்கி யுள்ளழல் போலக்காந்தும்
தேனவிழ் குழலாய் கேளா யனற் சுக்கிரனென்று செப்பே. 78

**தேன்துளிக்கும் கூந்தலை உடையவளே! கருவிழியை விட்டுப் பால் போன்ற நல்ல கண்ணின் பாகத்தில் தீப்பொரிபோலத் தோன்றும் பார்வைக்கு ஊனமுண்டாம். கண் விழியில் இடிப்பும், உள்ளே மிக்க அழற்சியும் காணுமானல் அதற்கு அனற் சுக்கிரனென்று பெயராகும்.**

குறிப்பு :— கருவிழியில் தோன்றும் புண்வகைகளே சுக்கிர னென்று கூறப்படுவன என்று தோன்றுகிறது. அவைகளின் தோற் றத்தையும், செய்கைக் குறி குணங்களையும் பார்த்து அவைகள் விரணசுக்கிரன், கருஞ்சுக்கிரன், விழிவிழுங்கிச் சுக்கிரன், வெண் சுக்கிரன், அனற்சுக்கிரன் என ஐவகையாய் கூறியுள்ளார்.

செப்பிய ரோகமைந்துஞ் செய்குணமறிந்து கொண்டு
துப்புறு மசாத்தியங்கள் சாத்தியமுரைக்கக் கேளாய்
ஒப்பிய மணியின்மீதே யுறவெழும் விரணசுக்கிரன்
வெப்புறு கறுத்த சுக்கிரன் விழியினை விழுங்கியாமே. 79

ஆகிய மூன்றுந்தானே சாத்திய மென்னலாகுந்
தோகையே வெள்ளைச்சுக்கிரன் துலங்கனற் சுக்கிரன்ரண்டும்
வேகமே தீரசாத்திய மென்றுதான் விளம்பலாகுந்
தோகையே யிவைக்குச் செய்யும் மருந்தினைச் சொல்லக்கேளே.

**கூறப்பட்ட ஐவகை சுக்கிரனில் அவ்வவற்றின் குறிகுணங்களைக் கண்டறிந்து சாத்தியா சாத்தியங்களைக் கூறுகிறேன் கேள்: கரு விழியின்மேல் தோன்றும் விரணசுக்கிரன், கறுத்தசுக்கிரன், விழி விழுங்கி சுக்கிரன் ஆகிய இவை மூன்றும் சாத்திய நோய்களாகும்.**

**மயில்போன்ற சாயலையுடையவளே, வெள்ளைச்சுக்கிரனும் அனற்சுக்கிரனும் அசாத்திய நோய்களாகும். இவைகளுக்குச் செய்யும் மருந்துகளைக் கூறுவேன் கேட்பாயாக.**

### சுக்கிரனுக்கு நெய்

நறுநெய்யுழக்கு அதிமதுரம் நல்ல சந்தந்தாரமுடன்
உறுவெட் பூலாவேருடனே ஓதுந்திரிபலை யிந்துப்பு
நறுவெள்ளாட்டின் செவியிரத்தம் நத்தைப்பூச்சி சிப்பிவெள்ளம்
பெறுநற் சீரமபின்கூட்டிப் பேணி வெந்து தானெழுக்கே. 81

நன் மணமுள்ள ஆவின் நெய் ஓர் உழக்கு எடுத்து அதில், அதிமதுரம், நற்சந்தனம், தேவதாரு, வெள்ளைப்பூலாவேர், திரிபலை, வெள்ளாட்டின் காதின் ரத்தம், நத்தைப்பூச்சி, சிப்பி, சீரகம், அபின் இவற்றைச் சமமாகத் தூக்கிக், கலக்கிக் காய்ச்சி வடித்துக் கொள்க. அந்த நெய்யைக் கண்ணிலிடவும்.

குறிப்பு :— மேற்படி பாட்டில் கற்கத் திரவியங்களின் எடை கூறப்படாமையால் அவற்றை ஒவ்வொன்றும் அரை வராகன் எடையாகக் கூட்டி நெய் காய்ச்சுக.

2. மேற்படி பாட்டில் மருந்தின் பெயரும் உபயோகமும் கூறப்படவில்லையேனும் மேற்படி பாடல் சுக்கிரன் என்ற நோயைக் கூறும் கடைசி பாடலில் (பா. எண் 80-ல்) கூறிய பின் இப் பாடல் அமைந்துள்ளமையின் பதிப்பாசிரியர் இதற்குச் 'சுக்கிரனுக்கு நெய்யென்று' பெயர் கொடுத்துள்ளார்.

### சுக்கிரனுக்குப் பிரவலையம்

இரும்பது சிவக்கக்காய்ச்சி எலுமிச்சம்பழ நீர்விட்டு
உரம்பெறு கடுக்காய் சுக்கு மிவையந்நீ ராலுரைத்து
நிரம்பவே நெற்றி கண்சுற் றதனினி வலையப்பூசி
லரம்படு மருவிநிரு மனலுறு சிவப்பும் போமே. 82

இரும்பைச் சிவக்கச் காய்ச்சி அதில் எலுமிச்சம் பழச்சாற்றை ஊற்றி மறு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு அந்த நீரில் கடுக் காயையும் சுக்கையும் சமமாக இழைத்துக் குழைத்து நெற்றி யிலும், கண்ணைச் சுற்றிலும் பற்றிட கண்ணில் அருவிநீர்போல வடியும் நோய்களும், கண்ணில் நெருப்பைப்போல எரிகின்ற நோய்களும், கண் சிவப்பும் குணமாகும்.

குறிப்பு:— இப் பாடலில் இப் பற்று கண்ணில் தோன்றும் சுக்கிர நோயைக் குணமாக்கும் என்று கூறப்படவில்லையேனும் சுக்கிரனிற் காணப்படும் குறி குணங்கள் சில தீரும் என்றமையின் இப் பற்றைச் சுக்கிர நோய்களில் புறச் சிகிச்சையாகச் செய்யலாம் என்பது தேற்றம்.

### சுக்கிரனுக்குப் பொடி

சீனக்கார மதைநன்ருய்த் திரப் பொடித்து முக்கூறு
மானே யபினற்சீரகமு மதற்குப்பாதி வடிகாவி
தானெத்தனவொன் ருய்நுணிக்கித்தாயார் தனப்பால்தனிற் கலக்கி
மானே யணத்தித் தானெழுக்க வருத்துமிடிகள் மாய்ந்திடுமே. 83

சீனக்காரத்தை நன்ருகத் தூள்செய்து அதற்கு மூன்றிலொரு கூறு அபினியும் சீரகத்தூளும் அதில் பாதியவு காவிக்கல்லும்

தாய்ப்பாலில் கலக்கித் தெளிவிறுத்து வடிகட்டிக் கண்ணிலிட்டிட கண்ணைத் துன்புறுத்துகின்றதான பற்பல நோய்கள் ஒழிந்துவிடும்.

குறிப்பு :— இது கண்ணோய்கள் எல்லாவற்றுக்கும் பொது மருந்தாகக் காணப்படுகிறது.

சுக்கிரனுக்குச் சுவர்ணதி உருண்டை

கனகங் கழஞ்சு வங்கமிரு கழஞ்சு பீதரோகணியும்
இனிமுக்கழஞ்சு துத்தமுநா லிந்து துருசு மைங்கழஞ்சு
முனியுஞ் சீனக்காரமறு கழஞ்சோரி தழின் மூலமுமேழ்
நனியும்பன்றிக் கோடெட்டுக் கழஞ்சுகரிப்பல் நாலைந்தே. 84

கலையின் கொம்பு பதின்கழஞ்சு காரமைந் தோடையாறு
நலமாய் மதுரம் பன்னிரண்டு நவிலுந்தாரம் பதின்மூன்று
குலவுஞ்சாவல் நெஞ்செலும்பு கூட்டேழிரண்டு முதலைப்பல்
சொல நீகேள்பதினைங்கழஞ்சு சோகிபதினறிவை கூட்டே. 85

கூட்டி அரைநீசம்நீரப் பழச்சா றேழு நாள்கொடுப்பை
யீட்டுஞ்சாற்றி லேழரைப்பு மிளநீர்தன்னி லேழரைப்பும்
நாட்டமுடனே யரைத்துருட்டி நாரிதனப்பால் தனிற்போட
வாட்டமுடன்சுக் கிரன்படலம் மயக்குங்காச மாறிடுமே. 86

பொன் ஒரு கழஞ்சு வங்கம் இரு கழஞ்சு, பீதரோகணி மூன்று கழஞ்சு, பால் துத்தம் நாற்கழஞ்சு, இந்துப்பும், துருசும் ஐங்கழஞ்சு, சீனக்காரம் ஆறு கழஞ்சு, ஓரிதழ்த்தாமரை வேர்ப் பட்டை ஏழு கழஞ்சு, பன்றிக்கோடு எண்கழஞ்சு, யானைத்தந்தம் ஒன்பது கழஞ்சு, மான் கொம்பு பத்துகழஞ்சு, காரமைந்து (சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், இலவங்கம்) தலைக்குப் பதினொரு கழஞ்சு, அதிமதுரம் பன்னிரண்டு கழஞ்சு, தேவதாரு பதின்மூன்று கழஞ்சு, சேவல் நெஞ்செலும்பு பதினன்கு கழஞ்சு, முதலைப்பல் பதினைந்து கழஞ்சு, சோகி பதினறு கழஞ்சு என்ற அளவில் ஒன்று சேர்த்து எலுமிச்சைச்சாறு சிறுகச் சிறுக ஊற்றி நன்ருய் ஏழு நாள்கள் அரைக்கவும். கொடுப்பைச் (பொன்னங்காணி) சாற்ருல் ஏழு நாள்கள் அரைத்து பிறகு இளநீரால் ஏழு நாள்கள் அரைத்து நிழலில் உலர்த்திவைத்துக் கொள்க.

இதை சுக்கிரன், படலம், காசம் என்று கூறப்படும் கண்ணோய் களுக்குத் தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிடத் தீரும்.

குறிப்பு :— இம் மாத்திரைக்குச் 'சுக்கிரனுக்குச் சுவர்ணதி உருண்டை' என்று பதிப்பாசிரியர் பெயர் சூட்டியுள்ளார். இப் பாடலில் இம் மாத்திரை சுக்கிரனைப் போக்குமென்று கூறி யுள்ளார்; ஆயினும் இதன் பெயரைக் கூறவில்லை.

## சுக்கிரனுக்குக் கற்பூராதிப்பொடி

பச்சைக்கற் பூரம்பீத ரோகணி மனேசிலேதுத்தம்
நச்சிடுந்துரு சிந்துப்பும் நாகருஞ் சோகிபீங்கான்
துச்சிடுங் கோழிமுட்டைத் தோடுகாக் கணத்தின்மூலம்
வைச்சவோ ரிதழின்மூலம் வளர்வெண்சா ரடைவேர்சிதை. 87

சிறுகீரை வேரொவ்வொன்று சேரமுக் கழஞ்சுகூட்டி
யுறுமெலு மிச்சஞ்சாற்றி லரைத்துருண்டை ஓட்டின்மீது
மறுபடி வைத்தெரித்துப் பொடிசெய்து மானேகேளாய்
தெறுகனல் போலெழுந்த வியாதிபி லிடவே தீரும். 88

மான்போன்ற பெண்ணே இதைக் கேட்பாயாக: பச்சைக் கற்பூரம், பீதரோகணி, மனேசிலை, பால்துத்தம், துருசு, இந்துப்பு, சுக்கு, சோகி, பீங்கான், கோழிமுட்டையோடு, காக்கணவேர்ப் பட்டை, ஓரிதழ்வேர்ப்பட்டை, வெண்சாரடை வேர்ப்பட்டை, சீதேவி செங்கழுநீர் வேர்ப்பட்டை, சிறுகீரை வேர் ஒவ்வொன்றும் மும்மூன்று கழஞ்சு வீதம் கூட்டி எலுமிச்சம் பழச்சாற்ருல் மை போலரைத்து உருண்டைசெய்து உலர்த்தி ஓட்டிலிட்டு கரி நெருப்பில் எரித்து அது நன்ருக வெளுத்துத் தோன்றும்போது எடுத்து ஆறவிட்டுத் தூள்செய்துப் பரணியில் பத்திரப்படுத்தவும்.

கண்ணில் நெருப்புபோல எரிச்சலை உண்டுபண்ணக்கூடிய நோய்களுக்கு உபயோகிக்கவும். இத் தூளைத் தாய்ப்பாலிலாவது தேனிலாவது இழைத்துக் கண்ணிலிடல் நலம்.

குறிப்பு :— இதில் கூறப்பட்ட சரக்குகளை முறைப்படி தூய்மை செய்து உபயோகிக்கவேண்டும்.

2. இந்த மருந்துக்குத் துணைமருந்து ஏதுங் கூறவில்லையேனும் தாய்ப்பாலும், தேனும் உபயோகிப்பது மரபு ஆதலால் அவ்வண்ணம் உரையில் கூறப்பட்டுள்ளது.

## சுக்கிரனுக்கு ரெட்சை

விரணமே தீராதாகில் மெய்யிது வறியச்சொன்னே
மறிவுசெய் பெருங்கன்மீது மனிநுதல் நரம்பின்மீதுங்
குறியுற ரெட்சைசெய்து குறித்துமுன் சொல்மருந்து
நெறியுடன் செய்யும்போது சுக்கிரன் நீங்கிப்போமே. 89

மேற்கூறப்பட்ட மருந்துகளால் சுக்கிரன் தீரவில்லையாகில் தக்க கருவியால் நெற்றி நரம்புமீதும், கண்ணின் மீதும் சூடுவைத்து, சூட்டுப்புண்ணுக்கும் சுக்கிரனுக்கும் மருத்துவம் செய்ய விரைவில் குணமாகும்:

குறிப்பு :— 64-ம் பாடலில் கூறப்பட்ட கருவி இங்குப் பயன் படும் என்று அறிக.

### திமிரம் 7-க்கும் பெயர்

மின்னனுய் திமிரதோஷக் குணத்தினை விளம்பக் கேளாய்
வன்வழி மயக்கமாகும் மற்றவெள் ளெழுத்தினேடு
பின்மந்தா ரத்தின்மூலை வறட்சிசெய் பித்தசேற்பம்
மன்னுநீர் வாயுமேக மேழ்சாத்திய மூன்றுமாமே. 90

மின்னலன்னவளே ! திமிரமென்ற கண் நோயின் குணங்களைக் கூறுவேன் கேட்பாயாக.

இந் நோயில் கண்பார்வை மயக்க (மாறுபாடுகள்) மாகும். அவை: வெள்ளெழுத்து, மந்தாரம், மூலைவரட்சி, பித்தம், சேற்பம், நீர், வாயு, மேகம் என ஏழு வகையாகத் திமிரநோய்கள் கூறப்படும். இவற்றில் மூன்று சாத்தியம்.

குறிப்பு :— இவ் வேழில் மூன்று சாத்தியமென்றதால் நான்கு வகைத் திமிரங்கள் அசாத்தியமென்று கொள்ளக் கிடக்கிறது.

### வெள்ளெழுத்து

தெளிவற வெளியாய்நிற்குந் தீங்கில்லை முப்பத்தேழில்
ஒளியறப் புகைந்துசற்றே ஒதுங்கிடு நாற்பத் தைந்தில்
வெளியுற விருள்தானுகும் மேவிய ஐம்பத்தேழில்
அழிவுற விருளுங்கண் களாண்டது நூறதாமே. 91

முப்பத்தேழு வயது வரை கண் பார்வை தெளிவாகத் தீங்கின்றி இருக்கும். நாற்பத்தைந்தில் கண் பார்வை சற்று இயற்கைக்கு ஒதுங்கியும், தெளிவின்றி சற்று புகைச்சலாய்த் தோன்றும். ஐம்பத்தேழாம் வயதிலிருந்து சிறிது சிறிதாகக் கண் பார்வை இருளத் தொடங்கும். கண் பார்வை அறவே நீங்கி இரண்டிடும் நூறுமாண்டில்.

குறிப்பு :— கண்பார்வை வயது ஏறயேறக் குறைவதின் விவரத்தை இப் பாடல் குறிக்கின்றது. இவ் வண்ணம் பார்வைத் திறம் ஒடுங்குவது இயற்கை என்பதைக் குறிப்பிடுகிறுர். (திமிரம் = பார்வை ஒடுக்கமும் மாறுபாடுகளும் காட்டும் கண்ணின் நோயாகும்,

கூர்விழி மணியினுள்ளே கொழும்புகை முகிலேபோலக்
கார்கிழிந் தொதுங்கிநிற்குங் காண்பது மஞ்சள்போலாம்
வார்முலை மானேயன்று வைத்தநேர் தப்பிக்கானுந்
தேர்குணங் கண்டவாறே வெள்ளெழுத் தென்றுதேரே. 92

கச்சணிந்த முலையுடைய மானே! கூர்மையான பார்வை தரத் தக்க கருவிழியில் அடர்ந்த புகை கப்பியது போலவும், மேகக் கூட்டம் போலவும், பார்வை தடைப்பட்டுக் காணல், நேராய்க்

காணத்தக்க பொருள் சற்று ஒதுங்கிக் காணப்படலும், பொருள்கள் சற்று மஞ்சளாயும், நேர் பார்வை, சற்று தப்பிக் காணும். இத்தகைக் குறிகள் கண்ணில் தோன்றினுல் அதனை வெள்ளெழுத்து (திமிரம்) என்று அறிந்து கொள்வாய்.

### மந்தாரத் திமிரத்தின் குணம்

சேர்கரு விழியின்மீதே செறிந்திடும் பஞ்சுபோலக்
கூரிருள் நேரமானுல் குழம்பியே யுலையுங்கண்டாய்
சீரொரு சாமஞ்சென்ருல் தெளிவுறு மேதோவென்னில்
வார்தன மானேகேளாய் மந்தார திமிரமாமே. 93

வாரணிந்த தனத்தையுடைய மாதே! கருவிழியின்மீது பஞ்சு நெருக்கமாய்ப் பரப்பியதுபோலத் தோற்றமளிக்கும். இருள் சார்ந்து கப்பிய மாலை காலத்தில் கண்பார்வை குழம்பியும், கலைந் தாற் போலவும் காணப்படும். இருள் கப்பி ஒரு யாமம் சென்ற பின் கண் பார்வை தெளிவுபடும். அத்தகைய பார்வைக் குறைவை மந்தாரத் திமிரம் என்பர்.

### மூளைவறட்சித்திமிரத்தின் குணம்

மூளையிற் பித்தநின்று முதிரவே வறட்சியானுல்
நாளிறே விழியுமந்தம் நடுநரம் புள்ளே குத்தும்
பீளையும் நீருமாரு திக்குணம் பெருகக் கண்டால்
வாளைவென் றிட்டகண்ணுய் வறட்சியாந் திமிரமென்னே. 94

வாளின் கூர்மையை வென்ற கூரிய கண்களையுடையவளே!

பித்ததோடம் மூளையில் தங்கி வறட்சி தந்து பார்வை மந்தமும், நடு நரம்பில் குத்தலும், கண்ணீர்ப் பெருக்கும், பீளைச் சார்தலும் காணப்படும் நோய் மூளை வரட்சித் திமிரம் என்று கூறுவர்.

### நீர்த்திமிரத்தின் குணம்

கபமது அமிர்தமீது கதித்துநீர் மிகுதியாகி
நவிலுமுக் கடைத்துஅண்ணுக் கதுவினிற் புண்ணேயாகும்
குவையிரு புறமுங்குத்துங் கூர்விழி புகைச்சலுண்டாம்
இவையினி நீரால்வந்த திமிரமென் றறிந்துபாரே. 95

கபம் கண்ணில் மிகுந்ததால் நீர் அதிகரித்து மூக்கை யடைத்துக்கொள்ளும். அண்ணுக்கில் புண்ணுண்டாகும். கண்ணின் இரு புரமும் குத்தும். பார்வை புகைச்சலாகும். இது நீரால் தோன்றிய நோயதலால் நீர்த் திமிரம் என்பர்.

### வாயுத் திமிரத்தின் குணம்

உந்தியில் வாயுதாங்கி உச்சியில் குத்தலுண்டாய்
முந்திய விழியும்நொந்து மூடிய விருள்போலாகில்
வந்தது விழியின்மீது வாயுவாந் திமிரமென்று
சுந்தர வதனமாதே தொகுத்துநீ யறிந்து கொள்ளே. 96

அழகிய நெற்றிடைய மாதே! தொப்பூழைச் சுற்றி வாயு தங்கி உச்சித் தலையில் குத்தல்வலி தோன்றி முன் விழியில் வழியும் பார்வை இருண்டும் வருவது வாயுத்திமிரம் எனப்படும் என்பதறிவாய்.

### மேகத் திமிரம்

ஆக்கையிற் ருதுகெட்டு அடர்நரம்புகள் மெலிந்து
நோக்கிடும் விழியுஞ்சுற்றி நொய்மைசே ரொளிமழுங்கி
வீக்கிடும் கனல்மிகுந்து விழியினி லெரிவுங்காணில்
தேக்கியல் மொழியாய்மேகத் திமிரமீ தென்றுசெப்பே. 97

உடலில் தாதுக்கள் கெட்டு முக்கியமாகிய சுக்கிலதாதுகெட்டு நரம்புகள் மெலிந்து வலிவு குன்றியும் பார்வைதரும் விழி சுழற்சி கொண்டும் பார்வை அற்பமாகி விழியில் எரிச்சலும் சூடும் மிகுமாயின் மேகத் திமிரமென்பதை அறிவாயாக.

### திமிரத்திற்குக் குழம்பு

ஆவின்பா லுரியிந்துப்பு அரைப்பல மதனுள்ளிட்டு
மேவியே சுவறக்காய்ச்சி மேலிடு மருந்துகேளாய்
தாவுவெண் கலத்திற்சாறித் தலையோடு துருசுசங்கு
நீவிரைந் தொருகழஞ்சு நிகழ்த்துமா வெண்ணெய்கூட்டே. 98

கூட்டியரைத்துப் பணவிடையாய்க் குறித்துப் பத்துநாளெழுத
ஆட்டுந் திமிரம்படலமுடன் அநேகவியாதி தீருமென்னக்
கேட்டுச்செய்ய முனியுரைத்த கிரியைப்படியே செய்வீரேல்
நாட்டந் துலங்குமெனமறையுள் வேதமுனிவர் நவின்றதுவே. 99

ஒரு நாழி ஆவின் பாலில் அரைப்பலம் உரித்த பூண்டையிட்டு, பால் நன்றாய்ச் சுண்டக்காய்ச்சி அரைப் பலம் இந்துப்பைப் பொடித்துப்போட்டு இன்னும் சுண்டி இளகம்போல ஆனபின் ஒரு வெண்கலப் பாத்திரத்தில் இட்டு மனிதர் தலையோட்டுத் தூளும், துருசுத்தூள், சங்குத்தூள் மூன்றும் தனித்தனியே தாமரைக் கிழங்குச் சாற்றால் மூன்று சாமம் அரைத்துச் சூரியபுடமிட்டு எடுத்ததூள் தனித்தனியே ஒவ்வொரு கழஞ்சளவுமுன் தயாரித்த மருந்திலிட்டு வெண்கலத்தால் இழைத்து ஆவின் வெண்ணெய் மொத்த சரக்கு எடைக்குச் சமமாய்க் கலந்து நன்றாய் இழைத்து வெண்கலப் பரணியில் பத்திரப்படுத்தவும்.

இதைக் கண்ணில் தீட்டிவரப் பத்துநாட்களில் திமிரங்கள் ஏழும் மற்றுமுள்ள அநேக கண் நோய்களும் தீரும். கண்ணும் தெளிந்த பார்வை பெறும். இது வேத முணர்ந்த முனிவர்கள் நவின்ற முறையென்றறிவாயாக,

குறிப்பு :— இம் முறையில் கை பாகமாய்க் குடும்ப வைத்தியர் அனுபவத்தில் செய்துவரும் சிலவற்றைச் செய்முறையில் சேர்த்துள்ளனம்.

## திமிரத்திற்குப் பச்சைத் தாம்பிராதி மாத்திரை

படிகம்பணிலம் நிமிளைதுத்தம் பஞ்சலோகந் தன்னுடனே
கடியகரிப்பல் லேனப்பல் கடலிற்சோகி நிற்றுக்கல்
அடலிலாமை யோட்டோடுசீ ரகமோரிதழின் மூலமுடன்
திடமா முதலைப்பல்தேற்ருன் சிறுகீரையின்வேர் காக்கணமே.

மேவுஞ் சினக்காரமுடன் மிக்கபீத ரோகணியுங்
கூவுஞ்சேவல் நெஞ்செலும்புங் குலவுபீங்கான் கடல்நுரையு
மாவின்பல்லுங் கலைக்கொம்பு மாகவோ ரொன்றரைக்கழஞ்சு
பாவுந்துருசு பதின்கழஞ்சு பரிந்தெலுமிச்சம் பழச்சாறே. 101

சாற்றிலேழு நாளரைத்துத் தயங்குங் கோழிவெண்கருவி
னீற்றினரைத்துக் குளிகைசெய்ய நிழலிலுலர்த்தி வைத்திருந்து
மூத்தகோவின் சுழியுறவே முனிந்தேயுருட்டிக் கொண்டிதனை
நீற்றநனப்பால் தேன்நெய்யி லெழுதத்திமிர நீங்கிடுமே. 102

படிகம், சங்கு, நிமிளை, பால்துத்தம், பஞ்சலோக பற்பம், யானைத்தந்தம், காட்டுப்பன்றியின் பல், சோகி, சுண்ணும்புக் கல், ஆமையோடு, சீரகம், ஓரிதழ்த்தாமரை வேர்ப்பட்டை, முதலைப்பல், தேற்ருன்வித்து, சிறுகீரை வேர், காக்கணவேர்ப் பட்டை, சினக்காரம், பீதரோகணி, சேவலின் நெஞ்செலும்பு, பீங்கான், கடல்நுரை, பசுவின்பல், மான்கொம்பு, ஒவ்வொன்றும் அரை கழஞ்சு வீதம் எடுத்து அத்துடன் துருசு பதினைந்து கழஞ்சு கூட்டிக் குழிக்கல்லிலிட்டு எலுமிச்சைப் பழச்சாற்ருல் ஏழுநாளும் கோழிமுட்டை வெண்கருவிட்டு ஏழுநாளும் அரைத்து நீட்டுப் போக்கான மாத்திரைகளாக உருட்டி நிழலிலுர்த்தி வைத்துக் கொள்க.

தாய்ப்பால், தேன், நெய் முதலிய துணைமருந்தில் இழைத்துக் கண்ணிலிட திமிர நோய்கள் நீங்கும்.

குறிப்பு :— இதற்குப் பச்சைச் தாம்பிராதி மாத்திரை என்று பதிப்பாசிரியர் பெயர் சூட்டியுள்ளார். துருசு மிக்க அளவில் சேர்வதால் இதன் நிறம் பசுமையாக இருக்குமாதலால் இதற்கு

இப் பெயர் பொருந்தியதென்க. இதைத் தாம்பிரச் சிமிழில் பத்திரப்படுத்துக.

### பச்சை மாத்திரை

சங்குதலையோ டோரிதழின் தாமரைமூலம் வான்மேவு
திங்கள்போன்ற நீற்றுக்கல் சிறந்தசோகி கமடவென்பு
பொங்குதுத்தங் கழஞ்சுடனே பொழியுந்துரு சோரறுகழஞ்சு
தங்க நிறைத்துச் சம்பீரச் சாற்ருலரைத்துக் குளிகைசெய்யே

குளிகைதிரட்டும் படிகேளாய் குக்கிடவண்டச் சலம்வாங்கி
நெளியவரைத்தங் குண்டைதன்னை நீளாதளவுங் குறையாமற்
சுழியாயிருக்க விருபுறமுந் தோகையனையார் தனப்பாலில்
பிழியவெழுத நயனமதின் பெருகுந்திமிரம் போய்விடுமே. 104

சங்கு, மனிதர் மண்டையோடு, ஓரிதழ்த் தாமரைமூலம், சுண்ணும்புக்கல், தூய வெண்ணிறமான சோகி, ஆமையோடு, பால்துத்தம் ஒவ்வொன்றும் ஒவ்வோர்கழஞ்சு, மயில்துத்தம் ஆறு கழஞ்சு எலுமிச்சம்பழச் சாற்ருலரைத்து (நீட்டுப்போக்கான) மாத்திரைகளாகச் செய்க.

மேற்படி மாத்திரை செய்யுமுன் கோழிமுட்டை வெண்கருவால் அரைத்து மாத்திரை உருட்டவும். மாத்திரையின் இருமுனையும் சுழியாமல் இருக்கும்படியாகச் செய்யவேண்டும். அப்பொழுதே பிழிந்தெடுத்த தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணில்தீட்ட வளர்ந்து வரும் திமிரமென்ற கண்ணேய் குணமாகிவிடும்.

குறிப்பு :— மேற்படி முறைக்கு 'பச்சை மாத்திரை' யென்று பதிப்பாசிரியர் பெயர் சூட்டியுள்ளார்.

மேற்படி மாத்திரைக்கான மருந்துகளை அரைக்கும் நாள் அளவு கூறப்படவில்லை ஆயினும் அநுபவத்தில் கண்டபடி இம் மருந்தை ஒவ்வொரு சாற்றிலும் ஏழுநாட்களுக்குக் குறையாமல் அரைக்க வேண்டுமென்பதறிக.

### திமிரத்திற்குச் சந்தனுதியுருண்டை

நற்சந்த மகில்செஞ் சந்தம் நவிலதி மதுரந்தாரம்
வைச்சவோ ரிதழின்மூலம் வளர்பிச்சி யரும்புகோட்டம்
பச்சிலை பீதரோகணி பகர்சீனக் காரந்துத்தம்
நச்சிடும் புனுகுகோரோ சனைமுத்தக் காசுதேற்ருன். 105

தாவுகோல் சங்குலிங்கஞ் சாத்திர வேதிபச்சை
மேவிந்து இருபத்தொன்றும் விளம்போரொன் றிருகழஞ்சு
பூவையர் தனப்பால்செந்தெங் கிளநீர்தண் புகலும்பன்னீர்
நீவிரைந் தரைத்தவுருண்டை யெழுதிடத் திமிரநீங்கும் 106

நற்சந்தனக்கட்டை, அகிற்கட்டை, செஞ்சந்தனக்கட்டை, அதிமதுரம், தேவதாருக்கட்டை, ஓரிதழ்த் தாமரைவேர், பிச்சி அரும்பு, கோட்டம், பச்சிலை, பீதரோகணி, சீனுக்காரம், பால் துத்தம், புனுகு, கோரோசனை, கோரைக்கிழங்கு, தேற்றான்வித்து, மூங்கில் குருத்து, சங்கு, இலிங்கம், சாத்திரபேதி, இந்துப்பு ஆகிய இருபத்தோரு சரக்குகளையும் ஒவ்வொன்றுக்கு இரு வராகன் எடை வீதம் சுத்தித்து எடுத்து குழிக்கல்லிலிட்டு தாய்ப்பால், செவ்விள நீர், பன்னீர் ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்ருகச் சிறுகச் சிறுக விட்டுத் தனித்தனியே ஏழுநாட்கள் மைபோல் அரைத்து மாத்திரை செய்க. இம் மாத்திரை திமிரமென்ற கண் நோயை நீக்கும்.

குறிப்பு :— இந்த யோகத்துக்குப் பதிப்பாசிரியர் சந்தனுதி உருண்டை என்று பெயர் சூட்டியுள்ளார்.

2. பாக்களில் கூறப்படாத சில அநுபவ செய்முறைகளை மேற்படி உரையில் எழுதியுள்ளமை காண்க.

### பூமூன்றின் பெயரும் குணமும்

பூவையே பூமூன்றென்று புகலும்பே ரதனைக்கேளாய்
தாவுவை சூரியாலுந் தழலெழு வியாதியாலும்
மேவிய நீரினலும் விழியிடை மூன்றுரோகங்
கூவிய ஆணியுந்தல் குழம்பிய புகையாமூன்றே. 107

நாகணப் புள்போன்ற நங்கையே! கருவிழியில் தோன்றும் நோய்க் கூட்டங்களிலொன்ருன பூவென்று கூறப்படும் மூன்று வகை நோய்களின் பெயர்களைக் கேட்பாயாக.

விரைந்து ஒருவர்க்கொருவர் தொத்தக்கூடியதான வைசூரி (அம்மை) நோயாலும், சூட்டினலும், கெட்ட நீராலும் முறையே ஆணிப்பூ, உந்தற்பூ, பார்வை குழப்பமாகக் காணப்படும் புகைப் பூ என்று மூன்று வகையாம்.

மூன்றினி லாணியுந்த லசாத்திய மென்பர் முன்னேர்
ஊன்றுவெண் புகைப்பூவொன்று மொழியுமென் றறிந்துகொள்நீ
கான்றெழு பூமூன்றுக்குங் கருதிய குணத்தைக்கண்டு
சான்றிடு மருந்துதன்னைச் சாற்றக்கேள் தையலாளே. 108

தையலாளே! கூறப்பட்ட மூன்று பூ நோய்களில் ஆணியும் உந்தலும் அசாத்தியமாம் என்பர் முன்னேர். வெண்புகைப்பூ ஒன்று மட்டும் தீருமென்று நீ அறிந்துகொள்வாயாக. வேக்காட்டால் தோன்றக்கூடியதான பூக்களின் குணத்தைக்கண்டு அவற்றிற்கு இடும் மருந்துகளைக் கூறுவேன் கேட்பாயாக.

### பூவிற்குக் குளிகை

தந்தி யெயிறுதனைப்பொடித்தே எடுத்துக்கொண்டு தானதிலே
அந்தஞ் செறிந்தபுளியாரை யதனைக்கூட்டி யரைத்துவட்டாய்
முந்தமறையோர் மொழிந்தபடி முழுமண்டலமே முதற்கிடந்தாற்
கந்தஞ்செறிந்த குழலீரே கருதி யரைக்கும் படிகாணீர். 109

காணீர்துத்தங் கழஞ்சுடனே கனகச் செம்பின் பொடிகழஞ்சு
ஊணியரைத்துக் குளிகைசெய்து ஒளிர்சம்பீரப் பழச்சாற்றில்
பேணியுரைத்து விழியெழுதப் பேரும்விரண சுக்கிரனும்
ஆணிப்பூவு மதிலுண்டா மரியநோயு மடராதே. 110

இயற்கை மணம் நிறைந்த கூந்தலையுடைய நங்கையே! யானைத்தந்தத்தைப் பொடித்து நன்றாய்ப் புளியாரைச் சாற்றால் அரைத்து முன்னர் மறையவர் கூறியபடி ஒருமண்டலம் சென்ற பின் அத்துடன் துத்தம், கனகச்செம்புத்தூள் தனித்தனி ஒவ்வோர் கழஞ்சு கூட்டி மேற்படி சாற்றால் அரைத்து மாத்திரையாக உருட்டிவைத்துக்கொண்டு எலுமிச்சம்பழச் சாற்றில் குழைத்துக் கண்ணிலிட்டுவர விரணசுக்கிரனும், ஆணிப்பூவும் அவற்றினாலுண் டாகும் நோயும் தாக்காது.

குறிப்பு:— மேற்படி முறையில் ஒரே சரக்காகிய யானைத் தந்தத்தைப் புளியாரைச் சாற்றால் ஒரு மண்டலம் அரைக்கவேணு மென்று புலனாகிறது. யானைக் கொம்பின் அளவு கூறப்பட்டிலது. ஆயினும், மற்ற சரக்கு ஒன்றின் எடைக்குச் சமனாக எடுத்துக் கொள்ள விதியுண்டு. அதுபோல் மேற்படி சரக்கை ஒரு கழஞ்சு எடுத்துக்கொள்க.

2. கனகச்செம்பு செய்யும் முறையை கொங்கணர் வாத காவியம், போகர் ஏழாயிரம் போன்ற நூலை ஆய்ந்துப் பார்த்து செய்துகொள்க.

### குந்தநோய் மூன்றின் குணமும் மருந்தும்

குறித்திடு குந்தமூன்றின் குறிகுணங் கூறக்கேளாய்
உறுத்திய சதையாமொன்று உதிரமொன் றுடனீரொன்று
மறுத்திடு ரோகமூன்று மசாத்திய மாகுங்கேளாய்
செறுத்திடு மணியைவிட்டுத் திரண்டிடிற் சதைநீர்தீரும். 111

மூன்று வகை என்று குறிக்கப்பட்டதான குந்தம் என்னும் நோய்களின் பெயர்களையும் குறிகுணங்களையும் கூறுவேன் கேட்டுக் கொள்வாய்: கண்ணுக்குள் உறுத்தலை உண்டாக்கும் சதைக்குந்த மென்றும், உதிரங்குந்தமென்றும், நீர்க்குந்தமென்றும் கூறப்படும் மூவகைக் குந்தங்களும் அசாத்தியமாம். ஆனால், கருவிழியை விட்டு வெளியே சதைக்குந்தமும், நீர்க்குந்தமும் வெளியே திரண்டிட் டால் அவை இரண்டும் தீரும்.

ஒள்ளல்போ லேயெழுந்த உதிரத்தின் குந்தந்தன்னைத்
தள்ளசாத் தியமாமென்று தசையினிற் குந்தந்தீர
அள்ளிலை நெடுவேற்கண்ணு யளைபீத ரோணிதுத்தந்
துள்ளெலி மருந்திஞேடு துருசுநற் சீனக்காரம். 112

கடனுரை சங்கு சோகி கருதுமொன் பாண்மருந்தும்
அடலிலே நந்திப்பூவி னீரினலரைத் துலர்த்தித்
திடமுற வெளுக்கச் சுட்டுச் சேரமத்தித்துக் கொண்டு
உடனெழு குந்தந்தன்னி லெழுதிட ஓடிப்போமே. 113

சொள்ளையாக்குவதுபோலத் தோன்றியதான உதிரக்குந்தமானது, எவ்வகையாயினும் அசாத்தியமென்று தள்ளத் தக்கது. அகன்ற கூரிய இலையையுடைய வேல் போன்ற கண்களுடையவளே! குந்தம் தீர, பீதரோகணி, எலி மருந்து, (எலிப் பாடாணம்) துருசு, சீனக்காரம், கடல்நுரை, சங்கு, சோகியாகிய ஒன்பது சரக்குகளையும் முறைப்படி சுத்தித்துச் சமனாக எடுத்து நந்தியாவட்டைப் பூவின் சாற்றால் அரைத்து மாத்திரைசெய்து தக்க துணைமருந்துடன் கண்ணிலிடக் குந்த நோய்கள் தீரும்.

### வெள்ளை விழியின் நோய் 20-க்கும் பெயர்

மின்னனாய் வெள்ளைதன்னில் மேவு நோயிருபதுக்கு
மன்னுபேர் குறிகுணங்கள் வகுத்திடுமருந்து கேளா
யன்னதின் செய்கைதன்னைச் சித்த வேதத்தெடுத்துப்
பன்னு நற்றமிழால் முன்னோ ருரைத்தவை பரிந்துசொல்லே.

மின்னற்கொடி போன்றவளே! வெள்விழியில் காணும் நோய்களின் பெயர்களும் குறி குணங்களும் அவற்றிற்கான மருந்துகளையும் கூறுவேன் கேட்பாயாக, அவற்றின் தன்மைதன்னை சித்தவேதம் எடுத்துச் சொன்னவாறு தமிழில் நம் முன்னோர் கூறியவாறு கூறுவேன் கேட்பாய்.

சொல்லிய எழுச்சியைந்து துளங்கிய படர்த்திமூன்று
பில்லிய நெரிசல் மூன்று புற்றொடு குமுளமூன்று
நல்வரி மூன்றுமாக நாலைந்து தோடப் பேர்கள்
வல்லியே எழுச்சியைந்தின் குணத்தினை வழுத்தக்கேளே. 115

எழுச்சி 5, படர்த்தி 3, நெரிசல் 3, புற்று 3, குமுளம் 3, வரி 3 என்பன 20.

எழுச்சி ஐந்து விளக்கமாய்த் தோன்றும் படர்த்தி மூன்று, அணைத்துக்கொண்டுள்ள நெரிசல் மூன்று, புற்று மூன்று, குமுளம் மூன்று, வரி மூன்று ஆக இருபது தோடங்கள் வெள் விழியிற் காணும் நோய்களாகும். கொடி போன்றவளே! ஐந்து வகையான எழுச்சி நோயின் குணங்களைக் கூறுவேன் கேட்பாயாக.

## எழுச்சியின் குணம்

தோன்றிய வரியெழுச்சி சுணங்கு போன்றுருண்டு காட்டுங்
கான்றெழு விரணவெழுச்சி கருங்குன்றி போன்று காட்டும்
ஊன்றியகுவை யெழுச்சி உழுந்ததுபோல வாகு
மான்ற நீரெழுச்சிதானே அப்பினிற்றுளி போலாமே. 116

ஆகுமுத்தெழுச்சிதானே யன்றெழும் பருத்திக்காய்போல்
தோகையே யெழுச்சியைந்தில் தோன்று முத்தெழுச்சியோடு
வேகமாம்விரண வெழுச்சியிரண்டுமே மீளாதென்றே
நாகமா முனிவன் சொன்ன நயனத்தின் விதியிவ்வாறே. 117

ஓங்கிய வரியெழுச்சி ஓடு நீரெழுச்சி மற்றும்
வீங்கிய குவையெழுச்சி மூன்றுமே சாத்தியமென்க
ஆங்கவிக் குணங்களெல்லா மடைவிலே யதிந்துகொண்டு
மூங்கொடியதற்குச் செய்யும் மருந்தினைப் புகலக்கேளே. 118

வரி யெழுச்சியானது, சுணங்கு போல உருண்டு காணும், விரண வெழுச்சியானது கருங்குன்றி போன்று மிக்க அழலை தந்து எழும்பும்; குவையெழுச்சியானது உளுந்துபோன்றுக் காணப்படும். நீரெழுச்சியென்பது நீர் சொட்டுபோலக் காணப்படும்.

தோகை போன்றவளே ! (தோகை=மயில்) முத்தெழுச்சி பருத்திக்கொட்டை போலத் தோன்றும். முத்தெழுச்சியும் விரண எழுச்சியும் அசாத்தியமாம் என்று (நாகமுனிவர் நயனவிதி) இவ்வாறே சாற்றும்.

வரியெழுச்சி, நீரெழுச்சி, குவையெழுச்சி ஆகிய மூன்றும் சாத்திய நோய்களாகும். பூங்கொடி போன்றவளே ! இக் குறி குணங்களையெல்லாம் ஆய்ந்து அறிந்துகொண்டு அவற்றிற்குச் செய்யும் மருத்துவத்தைக் கூறுவேன் கேட்பாயாக.

வெண்ணெயி லபினிந்துப்பு மேவுநற் சீரமுன்று
நண்ணுறக் கூட்டிக்கொண்டு நற்கொதி கொதிக்கவைத்து
ஒண்ணிறத் துணியிலிட்டு ஒழுக்கிடத் தாரையாகக்
கண்ணிடை யெழுச்சிரோகங் கடுகவே ஓடுங்காணே. 119

அபினி, இந்துப்பு, சீரகத்தூள் ஆகிய மூன்றையும் சம அளவாக எடுத்துப் போதிய அளவு வெண்ணெயிலிட்டுக் கொதிக்க வைத்து துணியிலிட்டுக் கண்ணில் பிழிய கண்ணிலெழுந்த எழுச்சி நோய் தீர்ந்திடும்.

## எழுச்சிக்குப் புறவளையம்

பழகிய காடிநீரிற் பழம்புளி தனைக்கரைத்து
இளகிய அபினிந்துப்பு விட்டதை இளகக்காய்ச்சி
மழையென நீர்த்தும் கண்ணிடை வளையம்பூச
அழலெழு விழியெழுச்சி யிடிவலி யகன்றுபோமே. 120

பழைய காடி நீரில் மூன்றுண்டு சென்ற பழைய புளியைக் கரைத்து அதிலுள்ள திப்பியை நன்றாக நீக்கிவிட்டு அதில் தேவையான அளவு அபின், பொடித்த இந்துப்பு ஆகிய இரண்டையும் கரைத்துப் பூசும் சந்தனக்குழம்பு போலக் கொதிக்கவைத்து பதமாக ஆற்றி அதை விழியெழுச்சி, இடிப்பு, வலி கண்ணீர் மழை போல ஊற்றுதல் ஆகியவை தோன்றியுள்ள கண்ணைச் சுற்றிப் பற்று இடத் தீரும்.

### எழுச்சிக்கு இரட்சை

புள்ளடிக் கருவிதன்னை யணைத்துநீ புருவத்தின்மேற்
றுள்ளிட வைத்தணத்தித் தோய்த்திட வழுத்திஏழ்நா
ளுள்ளது கழித்தவாறே எண்ணெயிற் புண்ணையாற்றிக்
கொள்ளவே யெழுச்சியைந்துங் குலேகுலேந் தோடுங்காணே. 121

பறவையின் பாதத்தைப்போல் உள்ளக் கருவியைப் பழுக்கக் காய்ச்சிப் புருவத்தின் மேல் நோயாளி சூடுதாங்காமல் துள்ளும்படி வைத்தழுத்திச் சூடிட்டபின் ஏழு நாட்களில் எண்ணெய்கொண்டு அந்த சூட்டுப் புண்ணை ஆற்றி வர ஐவகை எழுச்சிகளும் தீர்ந்திடும்.

குறிப்பு :— பா எண் 64-ல் கூறப்பட்ட கருவியைச் சூடுதீட்ட உபயோகிக்கலாம்.

### படர்த்தி மூன்றின் குணம்

விளம்பிய சதைப்படர்த்தி மெத்தெனத் தடித்துக்காட்டும்
வளம்பெறு வரிபடர்த்தி வலேயென வளேந்துகாட்டும்
விளங்கிள மின்னேசோரிப் படர்த்தியு மிக்ககுழம்பும்
உளங்கொளிக் குணங்கள் தம்மில் வரியொன்றுஞ் சாத்திய
மாமே. 122

சதைப் படர்த்தியில் வெள்விழி மெத்தெனத் தடித்துக் காணும்; வலேப்படர்த்தியில் வலேயைப்போன்று வளேந்துகாணும்; சோரிப் படர்த்தி மிக்கக் குழம்பிக் காணப்படும்; இவை மூன்றில் வரிப்படர்த்தி மட்டும் சாத்தியமாம்.

### படர்த்திக்கு அமுதாஞ்சனப் பொடி

சிந்திற்றண்டு நற்கடுக்காய் தேற்றான்கொட்டை காக்கணவேர்
போர்ந்தகொடுப்பை சிறுகீரை புரலோரிதழின் முலமுடன்
ஆய்ந்தோரொன்று சமன்கூட்டி யரைநீ பழையகாடியினு
லேத்துதனத்தாய் துருசுதுத்த மினிய சீனக்காரமுமே. 123

மேவுமபின் சுண்ணும்புக்கல் மிக்கநிமிளே சோகிசங்கு
பாவுமருந்து முக்கஞ்சு பகர்சம்பிரப் பழச்சாற்றில்
தாவியரைத்து அடையாக்கித் தழலிலெரித்து நுணுக்கியதைக்
கோவித்தெழுந்த படர்த்தியினிலிடவே குணமாங் குணமாமே.

சீந்தில்தண்டு, கடுக்காய்த்தோல், தேற்றான் கொட்டை, காக்கணம், ஓரிதழ்த்தாமரை, சிறுகீரை இவற்றின் வேர்ப்பட்டை; பொன்னாங்காணி இவற்றைத் தனித்தனியே சம அளவாய்க்கூட்டிப் பழைய காடியாலரைப்பாய்; அத்துடன் துருசு, துத்தம், சீனக் காரம், அபின், சுண்ணாம்புக்கல், நிமிளை, சோகி, சங்கு ஒவ்வொன்றும் தனித்தனியே மூன்று கழஞ்சு வீதம் எடுத்துப் பொடித்து மேற்படி மருந்துடன் கலந்து எலுமிச்சைச் சாற்றால் அரைத்ததை அடையாக்கி புது ஓட்டில் வைத்துலர்த்தித் தழலில் எரித்து நுணுக்கிப் படர்த்தியெழுந்த கண்ணிலிட குணமாகும்.

### நெரிசல் மூன்றின் குணமும் மருந்தும்

துளியுந்து விரண மூன்று சொல்லிய நெரிச லின்பேர்
மொழிவது மூன்று மாகும் மொழிந்திடு மருந்து கேளாய்
தெளியு நெய்யோ டிந்துப்பு திரிகடு துருசு துத்தம்
அளியுறு குழலாய் கூட்டி அரைத்துநீ தாரை வாரே. 125

வண்டு மொய்த்த கூந்தலையுடைய நங்கையே! துளி நெரிசல், உந்து நெரிசல், விரணநெரிசல் என மூவகைப்படும் நெரிசல் நோய்க்குக் கூறப்படும் மருந்தைக் கேட்பாயாக: இந்துப்பு, திரி கடுகு, துருசு, துத்தம் இந் நான்கையும் முறைப்படித் தூளாக்கித் தெளிந்த உருக்கிய நெய்யை விட்டரைத்து அதைத் துணியிலூட்டி வெதுப்பிக் கண்ணில் பிழிந்திடுக.

### நெரிசலுக்கு மருந்து

சீனக் கார முக்கழஞ்சு செரியு மிந்துப் பரைக்கழஞ்சு
பானற் றுருசு காற்கழஞ்சு பகர்கற் பூரம் பணவிடைகொள்
தேனே வெதுப்பி யிவைநுணுக்கிச் செய்ய முலைப்பால் தனிற் கலக்கி
மானே யரைத்து விழியொழுக வருத்து நெரிசல் மாய்ந்திடுமே.

சீனக்காரம் மூன்று கழஞ்சு, இந்துப்பு அரைக்கழஞ்சு, துருசு கால் கழஞ்சு, பச்சைக்கற்பூரம் ஒரு பணவெடை எடுத்துத் தூளாக்கி வைத்துக்கொண்டு, நெரிசல் கண்ட கண்ணுக்கு ஒழுகவிடும்போது தாய்ப்பாலால் நன்கு அரைத்துவிட நெரிசல் தீரும்.

### புற்று மூன்றின் குணம்

அன்னமே சதையின் புற்று அரும்புநீர்ப் புற்றி னோடு
வன்னமா மனலின் புற்று வருத்திடு ரோக மூன்றில்
முன்னுரை மாங்கி ஷத்தின் புற்றுநீர் முந்து புற்று
அன்னது சாத்தி யங்க ளனலொன்று மசாத்திய மாமே. 127

அன்னம் (நடைக்கு) போன்றவளே ! சதைப்புற்று, நீர்ப்புற்று, அனற்புற்று என்று மூவகைப்புற்றுகள் கண்ணில் தோன்றி வருத்திடும். மூவகைப் புற்றுகளில் சதைப்புற்றும் (மாங்கிசப் புற்று) நீர்ப்புற்றும் சாத்தியமாம். அனற்புற்று அசாத்தியம்.

தசைவளர்ந் தெழுந்த புற்றுத் தடித்திடுமி ரத்தம் போன்று
பதையுநீர்ப் புற்றின் செய்கை பிரிந்துவெண் குன்றி போலாம்
விதனமா மனலின் புற்று விம்பம்போன் றெழுந்துகாட்டு
மதையுணர்ந் ததற்குச் செய்யும் மருந்தினை யறிந்து கொள்ளே.

இரத்தம்போன்று சிவப்பாகத் தசை வளர்ந்து தடித்து மேலெழும்பி இருக்குமேல் தசைப்புற்று எனப்படும். வெண் குன்றி போல் வளர்ந்து நீர் சிந்திக்கொண்டு காணப்படும் நீர் (முந்து) புற்று. அனற்புற்று ஒரு பிம்பம்போல வளர்ந்து காணப்படும். இதையறிந்து அதற்குச் செய்யும் மருந்தினை அறிந்து கொள்வாயாக.

### புற்றுக்கு அஞ்சனப் பொடி

உமரிச் சாரம் நவச்சார மோதுந் துருசு எவட்சார
மமையுஞ் சத்தி சாரமைந்து மடுத்தோ ரொன்று கழஞ்சு கொண்டு
குமைய வரைத்துச் சம்பீர குலவு சாற்ரு லடையாக்கி
அமுத மொழியா யோட்டினில்வைத் லனலால்வெளுக்கப்
புடம்வையே. 129

வையே யெடுத்து வெண்கலத்தில் வைத்து வனையால் மத்தித்து
மெய்யே சொன்னே னெள்ளளவு விழியி லெழுதப் புற்றுடனே
தொய்யும் படலம் வரிசிவப்பு தோன்று மெழுச்சி மற்றவையும்
தொய்யிற் றனத்தா யிவைநீருஞ் சொன்னுர் முனிவர் சொன்னுரே.

அமுதம்போன்ற மொழியுடைய பெண்ணே ! உமரிச்சாரம், நவச்சாரம், துருசு, எவாச்சாரம், சத்திச்சாரம் ஆகிய ஐந்தையும் ஒவ்வொன்றும் ஒவ்வோர் கழஞ்சு எடுத்து நன்கு குழைய நுணுக்கி எலுமிச்சம் பழச்சாற்ருல் அரைத்து அடையாக்கிப் புது ஓட்டிலிட்டு நன்கு வெளுத்திடும்படிப் புடமிடவும்.

அப்படிப் புடமிட்ட வில்லையை வெண்கலக் கல்வத்திலிட்டு சங்குகொண்டு தூளாக்கிப் பத்திரப் படுத்துக.

ஓர் எள்ளளவு கண்ணில் தீட்டுக. கண்ணில் தோன்றிய புற்றுகளும், படலம், வரி, சிவப்பு, எழுச்சி முதலிய நோய்கள் தீருமென்று முனிவர் சொன்னுர் என்பதை அறிவாயாக.

### வேறு மருந்து

இவையிலஃ தொழியா தாகி லியல்பிது வறியச் சொன்னேம்
நவையில்லா மத்தம் பூவி னடுவல்லி அளவே செம்பு
அவைமுனை யதையு ழுந்தி னளவொரு பொட்ட தாகக்
குவைவிழி யெழுதப் புற்றின் குறித்தெள்ளுப் புதைய வையே.

இவ் வகை சிகிச்சையால் இப் புற்றுநோய்கள் தீராவிடில், ஊமத்தைப் பூவின் நடுத்தண்டு (சூல்தண்டு) களத்துக்கு தாம்பிரத்தால் ஒரு கம்பியைச் செய்து அதன்முனை ஓர் உழுந்தளவுக்குப் பொட்டாக எள் புதையும் அளவுக்கு கண்ணில் எழுதுக.

குறிப்பு :— மேற்படி மருத்துவத்தில் தாம்பிரக் கம்பியால் எழுதுக என்றார். எள் புதையும் ஆழம் எழுதப்படவேண்டுமென்கிறார். ஆதலால், இது ஒருவகை அறுவைச் சிகிச்சை என்று தோன்றுகிறது. இப் பாடலின் சொல்லமைப்பு தெளிவாக இல்லை.

ஏந்திழை மின்னே கேளா யேழுநா ளளவுஞ் செய்யும்
சாந்தமா மருந்து தானே சாரடைக் கிழங்கிந் துப்பு
சேர்ந்திடு மருந்து துத்தந் துருசெலி மருந்தோ டைந்துங்
காந்திடா தனலில் வெந்து கபிலையின் வெண்ணெய் கூட்டே. 132

கூட்டிநீ அரைத்துக் கொண்டு கூறிலோர் தினையின் மட்டும்
வாட்டடங் கண்ணி னுளே வளர்ந்திடும் புற்றில் வைக்கக்
கேட்டபோ தோடு மென்று கிளிமொழி யுமைக்கே ஈசன்
நாட்டமா யுரைத்த வண்ணம் நவின்றனர் முனிவர் தாமே. 133

ஒளி பொருந்திய விசாலமான கண்களையுடையவளே ! இழை போன்ற இடையும் மின்னல்போன்ற சாயலுமுடைய நங்கையே ! ஏழு நாள்களுக்குச் செய்யும் சாந்தமான மருந்து முறையைக் கூறுகிறேன் கேட்பாயாக.

சாரடைக்கிழங்கு, இந்துப்பு, துத்தம், துருசு, எலி மருந்து ஆகிய ஐந்தையும் அனலில் (காந்திடாமல்) தீந்துபோகாமல் பக்குவப்படுத்தி பசுவின் வெண்ணெய் சேர்த்தரைத்து, புற்றுநோய் உள்ள கண்ணில் ஒரு தினையளவு புற்றின்மேலே வைக்க என்ற கட்டளையைக் கேட்டபோதே புற்றுநோய் தங்காது ஓடுமென்று ஈசனார் கிளிமொழி உமையம்மைக்குக் கூறியபடியே புகன்றதிது என்று முனிவர் நவின்றார்.

### குமிளம் மூன்றின் குணம்

கொடியிடை மானே சொன்ன குமிளமுன் றேதோ வென்னில்
வடியுநீ ரிரத்த மற்ற மாங்கிச மென்று மூன்று
மடைவிலே யறிந்து கொள்நீ யசாத்திய மாங்கிச மற்று
மிடரில்லை நீரி ரத்த மேகுமென் றியம்பி னுரே. 134

கொடிபோன்ற மெல்லிய இடையுடைய மானே ! கூறப்பட்ட மூவகைக் குமிளங்கள் யாவை என்றுயானால், நீர் வடியும் தன்மையுடைய நீர்க் குமிளம், இரத்தக் குமிளம், மாங்கிசக் குமிளம் என்பவையாம். இம் மூன்றில் மாங்கிசக் குமிளம் அசாத்தியம். மற்ற இரண்டும் சாத்தியம். ஒரு துன்பமுமில்லை என்பதை அறிந்து கொள்க.

நாரியே நீரி ஞலே நயந்தெழு கொப்பு ளந்தான்
கூரிய சங்கம் பழம்போல் குமிழிக்கு மிரத்தத் தாலே
சேருமாங் கொப்பு ளந்தான் செங்குன்றி வடிவ தாகும்
பார்தசைக் கொப்பு ளந்தான் பனேத்தெழுங் கருமை யாமே. 135

பெண்ணே! நீரினலே எழும் கொப்புளம் வெள் விழியில் சங்கம்பழம்போல இருக்கும். இரத்தக் குமிளத்தில் எழும் இரத்தக் கொப்புளம் செங்குன்றிபோல இருக்கும். தசைக் குமிளத்தில் கொப்புளம் பெருத்தும் கருமையாகவும் காணப்படுமென்று அறிக.

குறிப்பு :— இந் நோய்கள் மூன்றிலும் கண்களிலிருந்து நீர் வடியுமென்பதை பா. எண் 134-ல் கண்டு கொள்ளலாம்.

## குமிளத்திற்குக் குழம்பு

இந்துப்பு துருசு துத்த மெழுகட னுரையு ரோணி
முந்துநற் சீனக் காரம் மொழியுமா வெண்ணெய் கூட்டி
நந்திஞற் கஞ்சத் திட்டு நையமத் தித்துக் கொண்டு
முந்துறு குமிளத்திட்டாற் றிர்ந்திடு மென்பர்முன்ஞேர். 136

இந்துப்பு, மயில்துத்தம், பால்துத்தம், கடல்நுரை, பீதரோகணி, படிக்காரம், பசுவின் வெண்ணெயில் கூட்டிச் சங்கால் வெண்கலக் கலுவத்தில் இழைத்துக் குமிள நோய்கண்ட கண்ணிலிடத் தீரும் என்று கூறுவர் நம் முன்ஞேர்.

குறிப்பு :— சரக்குகளின் தூய்மைச் செய்வதைக் கூருவிடினும் அதை முறைப்படி செய்யவேண்டும் என்று மருத்துவர்களுக்கு கூற வேண்டியதில்லை என்று மனங்கொண்டே ஒரு யோகத்திலும் தூய்மை செய்கவென்று இந் நூலில் கூறப்படவில்லை என்று காண்கிறது.

2. ரோணி = கடுகுரோகணி, பீதரோகணி என்னும் இரண்டையும் இச் சொல் குறிக்கும். ஆயினும கண் நோய்களுக்குச் சிறப்பாக பீதரோகணியையே உபயோகிப்பர்; ஆதலால் இங்கு அப் பொருளேயே இங்கு எழுதியுள்ளோம். கடுகுரோகணியைக் குழந்தை நோய்களில் மிகுதியாய்க் கையாள்வார். ஆகையால் அதை ஈண்டுசேர்த்தல் பொருந்தாதென்றறிக.

## வரி மூன்றின் குணம்

வம்பவிழ் கூந்தல் மானே வரியதின் குணத்தைக் கேளாய்
பம்புவெள் வரியா மொன்று பகர்நீல வரியா மொன்று
வெம்பிய விரத்தி மொன்று விளம்பிய மூன்று ரோகம்
நம்பிநீ யறிவைநீல வரியொன்று மசாத்திய மாமே. 137

மணம்வீசும் கூந்தலையுடைய மானே! வெள்விழியில் காணும் மூவகை வரியின் குறிகுணத்தைக் கேட்பாயாக: நெருக்கமாய்க்

**காணும் வெள்வரி, நீலவரி, இரத்தவரி என்பவையாம். அவைகளில் நீலவரிமட்டும் அசாத்தியமாம்.**

விளம்புவெண் வரியின் செய்கை மீன்சிலாம் பெழுதல் போலாம்
இயங்கிளே மின்னேநீல வரியது துருசுபோலாம்
துளங்கிய விரத்தத்தாலே சோர்வரி சிவப்பதாமேன்
றுளங்கொள இதற்குச் செய்யும் மருந்தினை யுரைக்கக்கேளே.

**வெள்வரி மீன்முள்மாதிரி வெள்விழியில் எழும்பிக் காணும். நீலவரியானது துருசுபோலக் காணப்படுமென்றறிக. இரத்தவரி சிவப்பாகக் காணப்படும். இவை மூன்றுமே வெள்விழியின்மேல் மேடு மேடாக இருக்கும் என்பதையறிக.**

துருசினை எலுமிச்சி ன்றன் பழத்தினீர் துளங்க விட்டு
அரையடை பிடித்து லர்த்தி யதுதனைச் சட்டி யிட்டு
எரியொரு சாமன் சென்ரு லெடுத்துமத் தித்துக் கொண்டு
வரியிலெள் ளளவ தாக வைத்திட மாய்ந்து போமே. 139

**துருசு ஒன்றுக்கு நான்குபங்கு பழச்சாறிட்டு தாம்பிரப் பாத்திரத்தில் தாம்பிரத்தாலேயே அரைத்தரைத்துச் சாறு சுண்டி இறுகிப் பக்குவமாய் வில்லைதட்டக்கூடிய பக்குவத்தில் வில்லை செய்து உலர்த்தி புதுச்சட்டியிலிட்டு மேல்மூடி ஒரு சாமம் எரித்து ஆறவிட்டுத் தூள் செய்து தாம்பிரச் சிமிழில் பத்திரப்படுத்தவும். இம் மருந்தை வரியுள்ள கண்ணில் ஒரு எள் அளவு தீட்ட நோய்த் தீரும்.**

### இமைத்தோடம் 16-க்கும் பெயர்

சுற்றிய இமையின் தோஷம் தோன்றிய பதிறு றுக்கு
முற்றிடு பெயர்கு ணங்கள் ஓதிய மருந்தி னேடு
கற்றிடும் சாத்தி யங்க ளசாத்திய முறையே காட்டி
விற்பொலி நுதலி னளே விளம்பினர் முனிவர் தாமே. 140

**வில்போன்று அழகுதரும் நெற்றி உடையவளே! கண்ணிமைகளில் தோன்றிடும் நோய்கள் பதினறு என்பர். அவைகளின் பெயர் குறிகுணம், மருந்துகள், சாத்தியா சாத்தியங்கள் முதலியவற்றை முறையாகக் காட்டி விளக்கிக் கூறினர் முனிவர். (அதைக் கூறுகிறேன். நீ கேட்டறிவாயாக)**

**குறிப்பு :— கண்ணுக்கமைந்த மூடிகள் மேலும் கீழுமாக இரண்டு மேல் மூடி இமை என்றும் கீழ்மூடி குவளை என்றும் கூறப்படும். ஈண்டு இமைத்தோடமென்றும் குறிப்பது உபலட்சணமாக குவளையையும் குறிக்குமென்றறிக.**

ஆனதோர் பில்ல மூன்று அணைந்திமைத் தடிப்பிேைடு
நான்முட மயிரி ழிச்சக் கண்பற்ப ரோகம்மூன்று
ஈனமாங் கழலைமூன்று இமையுநீர் சுற்றுநீங்கல்
மானனுய் புழுவிேைடு உயர்ச்சி பன்னுறுந்தானே. 141

***பில்லம் 3. இமைத்தடிப்பு 1. முடமயிர் 1. இழிச்சக்கண் 1. பற்பநோய் 3, கழலை 3, இமைநீர்ப்பாய்ச்சல் 1, சுற்றுக்குலைவு 1, புழுக்கடி 1, இமையுயர்ச்சி 1. என்பன பதினாறாம்.***

### நீர்ப் பில்லம்

மெல்லிய விமையு மூர்ந்து வீழுநீர் மிகுதி யாகிக்
கல்லெனக் கனத்து விம்மிக் கண்சுற்றுப் புருவ முச்சி
சில்லென விடித்து நோவாய்த் திமிர்த்திடும் மிக்கு ணங்கள்
வல்லெனு முலையாய் சொன்னேன் வழுத்துநீர்ப் பில்ல மென்றே.

***சூதாடு கருவி போன்றுள்ள முலைகளை உடையவளே! இயல்பாய் மெல்லியதாய் இருக்கவேண்டிய இமைகள் தடித்தும் கண்ணீர் வடிதல் மிகுத்தும், கல்போன்று கனமாகத் தோன்றியும், கண்ணின் சுற்றுப்புறம், புருவம், உச்சி முதலிய இடங்களில் இடிப்பும், வலியும் திமிர்வும் உண்டாகில் அதை நீர்ப்பில்லம் என்பார்.***

### அமரப் பில்லம்

சொல்லிய விமையி னுள்ளே சோரிபோற் றசையுந் துன்னிப்
புல்லிடு மொளிம யங்கிப் போகநீர் வடிந்து காட்டி
எல்லையி லிமைம டிந்து கீழிமை யுறுமே யாகி
அல்லியங் கோதை நல்லா யமரத்தின் பில்ல மாமே. 143

***இருளைப்போன்ற கரிய நீண்ட கூந்தலையுடைய நல்லாய்! இமையின் உட்புறத்தே இரத்தம் போன்று சிவந்த தசை நெருக்கமாய் வளர்ந்தும் கண்ணொளி மயங்குமாறு நீர்வடிவதும், இமையின் ஓரம் மடிந்தும், அம் மடிப்புகளுக்குத்தக்க கீழ்மை (குவளை) வளைந்து கொடுத்துறுவதும் காணப்படும் நோய் அமரப்பில்ல மென்று பெயர்பெறும்.***

குறிப்பு :— இந் நோயின் குறிகுணங்கள் மேல்நாட்டுக் கண் மருத்துவர் டிரகோமா (Trachoma) என்றுகூறும் நோயின் குறி குணங்களை ஒத்திருக்கின்றது. குறிப்பிடத்தக்கது.

### குடற் பில்லம்

இமையடி புருவ முச்சி யிளகிநீ ரிழிவு மாகி
யமைபசு நரம்பு துன்றி யதுகனத் திடுமே யாகில்
குமுதமாம் விழியி னுளே குடலுறு பில்ல மென்று
இமையவ ரறியச் சொன்னேம் இதுபிறப் பில்ல மாமே. 144

குமுதமலர்போன்ற விழியினுளே! இமையின் அடிப்பாகம், புருவம், உச்சி இவற்றை, இளகியும், விழியினின்று நீர் ஒழுகியும், இமையின் மேற்புறத்தில் பச்சைநரம்புகள் புடைத்துத் தடித்து நெருக்கமாகக் கனத்துக் காணப்படுவதுமாகில் அந் நோய் குடற் பில்லமென்று தேவர்களும் அறியக் கூறினேம். இது பிறப்பில்லம், ஆகும்.

## நீர்ப்பில்லத்திற்கு மருந்து

இவையுள்நீர்ப் பில்லந் தானே சாத்திய மென்னலாகும்
நவையுறு பில்லத் துக்கு நவில்மருந் ததனைக் கேளாய்
சமையுறு சீதை வேரும் சாரடை வேரு மொக்கக்
கவைசிறு கீரை வேறும் காக்கண வேரு மாமே. 145

ஆகுமோ ரிதழின் மூல மவையொன்றோர் பலமுங் கூட்டி
நீவிரைந் தாறு திங்கள் காடிநீர் தன்னி லிட்டுப்
பூவையே கழுவிப் போட்டுப் புகலும்சம் பீரச் சாற்றால்
மேவுநல் மடலின் துத்தம் வேருக்குச் சமனாய்க் கூட்டே. 146

கூட்டுநீ யரைத்து வட்டாய்க் குலவுமோர் பாண்டத் திட்டு
நாட்டமா யெரித்தெ டுத்து நந்தினுற் றேய்த்துக் கொண்டு
ஈட்டுநீர்ப் பில்லத் துக்கு இவைபத்துப் போதி லிட்டால்
வாட்டடங் கண்ணி னாளே நீர்ப்பில்ல மாய்ந்து போமே. 147

இவற்றில் நீர்ப்பில்லம் ஒன்றே சாத்தியமாம். குற்றம் தரும் பில்லத்துக்கு மருந்து கூறுவதும் அதைக்கேட்பாயாக.

சீதேவிசெங்கழுநீர், சாரடை, சிறுகீரை, காக்கணம், ஓரிதழ்த் தாமரை ஆகிய ஐந்தின் வேரையும் ஆறுமாதக் காடியில் ஒருசாமம் ஊறவைத்துச் சுத்த நீரால் கழுவி மேற்படி வேர்களின் மொத்த எடைக்குச் சரியாக மடல் துத்தம் எடுத்துப் பொடித்து பழச் சாற்றால் நன்றாய் அரைத்து வட்டமாய் வில்லைசெய்து உலர்த்தி ஒரு புதுச்சட்டிக்குள் வைத்து மேலே மூடி நன்கு எரித்து வில்லை வெளுத்தபின் ஆறவிட்டு வில்லையைச் சங்கால் தூள்செய்து பத்திரப் படுத்துக.

நீர்ப்பில்ல நோயுற்ற கண்ணுக்கு மேற்படி மருந்தைப் பத்து நாள்கள் இடக்குணமாகும்.

உள்ளிமை தசைவ ளர்ந்து தடித்தொடுப் பாயு மானால்
தெள்ளிய கருவி யாலே உந்திய தசையை நீவித்
தள்ளிடுங் கருவி நீக்கித் திரிகடுப் பொடியைத் தூவி
மெள்ளவே தேய்த்து நாள்மூன் றதுக்குமேல் மருந்து கேளே.

இமையின் உட்புறத்தில் தசைவளர்ந்துத் தடித்திருந்தும் அக் கண்ணிலிருந்து மலின நீர்ப்பாயுமானால் அச் சதையைக் கருவி

கொண்டு உந்தி நீவி அகற்றித் தள்ளிப் பின் கருவியை நீக்கி அந்த இடத்தில் திரிகடுகுத் தூளைத்தூவி மெள்ளத் தேய்த்துவிடவும். இவ் வண்ணம் மூன்று நாட்களுக்கு மேற்படித் தூளைக்கொண்டு தூவி தேய்த்து வரவும். மூன்று நாட்களுக்குமேல் உபயோகிக்கும் மருந்தைக் கூறுகிறேன் கேள்.

வெள்ளைக் கடுக்காய் விதைபோக்கி வறுத்து நுணுக்கிமேலபினுந்
துள்ளுந் துத்த மிந்துப்புந் துருசும் வெதுப்பிப் பொடியாக்கி
உள்ள கடுக்காய்ப் பொடிநேராய்க் கூட்டி யிரத்தப் பில்லமதி
லள்ளி யிடவே குணமாமென் வேத முரைப்பதுவே. 149

வெண்கடுக்காயின்விதை நீக்கி அத்தோலை வறுத்துத்தூளாக்கி அத் தூளுக்குச் சமமாக ஒவ்வொன்றும் தனித்தனியே வறுத்துத் தூளாக்கிய இந்துப்பு, துருசு,பால்துத்தம் ஆகியவற்றைச் சேர்த்துக் கண்ணுக்குள் தூவிவர இரத்தபில்லம் தீரும் எனச் சித்தர்களின் வேதம் கூறும்.

குறிப்பு :— அமரப்பில்லத்தில் வளர்ந்த தசையைக் 'கருவி' கொண்டு நீக்கச் சொல்லியுள்ளது தற்காலம் சுறண்டும் உருளையை (Roller) உபயோகப்படுத்துவதைப்போன்று காண்கிறது. ஆனால், மேற்படிப் பாட்டில் கருவியின் வடிவம் முதலியானவை கூறப்பட்டிலாவது. அத்தகைக் கருவி செய்வித்து அதைப் பயன்படுத்துவது மருத்துவனின் கைத்திறத்துக்கும் உத்திக்கும் விடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2. அமரப்பில்லமாய் இருந்து சுறண்டும் கருவியால் இரத்தம் பாயக்கூடியதாகச் செய்துவிட்டமையால் அதைப் இப் பாடலில் இரத்தப்பில்லம் என்று புதுப்பெயர் சூட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இரத்தபில்லமென்று ஒருவகைப் பில்லம் இல்லை என்பதை நினைவில் கொள்க.

சொல்லுமிதற்கு மாருதால் துத்தம் பலமொன் றதைநுணுக்கி
முல்லை நகையி ராவின்பால் முழுங்கு நாழியதிலிட்டு
மெல்லவெறித்துச் சுவறினுக்கால் மிகுசம்பீரச் சாற்றரைத்து
அல்லுமடையச் சட்டிவைத்து அனலால்வெதுப்பிப் பொடி
செய்யே. 150

செய்தேயெடுத்துப் பில்லமதிற் சேரவரை மண்டலமிடமே
தொய்யுந்தசைகள் நீர்ப்படலந் தோன்று தோடிப்போமென்று
ஐய ருமையா ளுக்குரைக்க வரிவைபிரமற் கோதவதை
செய்யகமலத் தோன்கும்ப முனிக்குச்செப்புஞ் செய்கையிதே.

முல்லைமொட்டு வரிசைபோன்ற பல்வரிசை காட்டி நகும் பெண்களே! முன்சொன்ன மருந்துக்கு அந் நோய் தணிந்து குணம்

அடையாவிட்டால், ஒரு நாழி பசுவின் பாலில் ஒரு பலம் தூய்மை செய்த பால்துத்தத்தைப் பொடித்துப் போட்டுப் பால் சுண்டக் காய்ச்சி அதை வழித்து எடுத்து பழச்சாற்ருல் ஒருவாரம் அரைத்து வில்லைசெய்து புதுச்சட்டியில் வைத்து அனலில் வைத்து எரித்து வில்லை வெளுத்துப் பொடியாகும் பக்குவத்தில் எடுத்து ஆறவிட்டு மேற்படி தூளாக்கிப் பத்திரப்படுத்துக.

அத் தூளை மேற்படி பில்லங்கள் தோன்றிய கண்ணில் அரை மண்டலம் தீட்டிவர தசை, நீர்ப்பில்லங்கள் தீரும் என்று சிவன் உமைக்குக்கூற அவள் அயனுக்கோதியதை அகத்தியர்க்கு உபதேசித்தமுறை இதுவே.

### பில்லத்திற்கு மிரியலாதித் தைலம்

செய்யமிளகு இரண்டுபடி இடித்துச்சீலை தனிற்கட்டி
தொய்யுந்தண்ணீர் நாலுபடி சுவறவிட்டுத் தானெரித்துப்
பையக்காய்ச்சி வடித்ததிலே பகருங்கையான் பாலிளநீ
ருய்யுமெண்ணெ யிவைநாழி யுடனேவிட்டுக் குறுந்தொட்டி. 152

மேவுவேரின் பதின்பலமு மிடித்துப்பதக்கு நீரைவிட்டுத்
தாவ விரண்டு படியினுல் தானே எண்ணெயுடன்விட்டுப்
பாவுந்தேவ தாரமொரு பலமுமிடித்துப் பொடியதனைத்
தூவிப்பதத்தில் மூழ்கிடவே தோன்ருப்பில்லந் தோன்ருவே.

இரண்டுபடி கெட்டிமிளகெடுத்து ஒன்றிரண்டாய் இடித்துத் துணியில் தளர முடிந்து நான்குபடி தண்ணீரிலிட்டு ஒரு நாழியாகச் சுண்ட எரித்து வடித்த கியாழத்துடன் கறிசாலைச்சாறு, பால், இளநீர், எண்ணெய் தனித்தனியே ஒரு படி ஊற்றிக்கலக்கி அதில் சிற்ருமுட்டிவேர்ப்பட்டை பத்துபலம் எடுத்து இடித்து ஒரு பதக்கு (இரண்டுமரக்கால்) நீரிலிட்டுக் காய்ச்சிய கியாழம் இரண்டு படியாகச் சுண்டியபின் இறுத்துவடித்து மேற்படி எண்ணெய்க் கூட்டுடன் சேர்த்துக்காய்ச்சும் போது ஒரு பலம் தேவதாருத்தூளைப் பக்குவமாகத்தூவி பதத்தில் வடித்துத் தலைமுழுகிவர பில்லநோய் தீரும். பில்ல நோயில்லாதவர் இத் தைலத்தைத் தேய்த்து தலை முழுகிவந்தால் எவ் வகைப்பில்லமும், தோன்ருதென்றறிக.

குறித்திடு புருவமையங் குவைபிட ரிவையின்பின்னே
நெறிப்படி பொட்டினுலே நீநரம் பறிந்துகொண்டு
உறுத்திட ரட்சைசெய்து உருகவே புண்ணதாக்கிச்
செரித்திடு விழியினுளே பில்லநோய் தீருந்தானே. 154

புருவமையம், குவை, பிடரி, கன்னப் பொட்டு இவ் விடத்தில் உள்ள நரம்புகளைக் கண்டறிந்து அதன்மேல் தக்க கருவி கொண்டு சிட்டிகை (ரட்சை) யிட்டு மருந்தால் ஆற்றினுல் பில்லநோய் தீரும் சுகன்.

### இமைத்தடிப்பின் குணம்

ஐயரி பரந்து கண்ணிற் பரப்பரப் பதிகமாகி
வெய்யநீர் ததும்பிவிம்மித் திமிர்த்திடும் விருவிருப்பாய்
உய்யிமை விழியுமெத்தக் கணக்கிலொண் டொடியேகேளாய்
செய்யிமைத் தடிப்புத்தானே அசாத்தியமென்று காணே. 155

ஒளிபொருந்திய வளையல் அணிந்தவளே! கண்ணிமை உட்புறம் வரிவரியாக நெருக்கமாகப் பரவியும், கண்ணில் பரபரப்பும் (தினவு) விருவிருப்பும் (எரிச்சலும்) வெந்நீர்போன்று கண்ணீரும் கண்ணில் ததும்பி வழிந்திடுதலுடன் கண்ணிமை வீக்கங்கொண்டு கனத்துத் திமிர்த்திருந்தால் அதுவே இமைத்தடிப்பாம். இது அசாத்தியம்.

### இமைத்தடிப்புக்கு திரிபலாதி எண்ணெய்

திரிபலே வேங்கையோடு செய்யக்கூ விளவேர் சிந்தில்
நறுவிய சிற்றுமுட்டி நல்நன்னு ரிவிலா மிச்சு
உறுவெட்டி மிளகுதான்றி யோடமுக் கிராவேர் மின்னே
நறுவிய பன்னிரண்டும் மருந்தொன்று பலமுநாலே. 156

ஒக்கவே தரித்திடித்து ஒண்றுநாற் குறுணிநீரில்
புக்கியே எட்டொன்ருக்கி வடித்தெண்ணெய் பொருந்தகட்குத்
தக்கபா விளநீர்கையான் சதாவேரி கொடுப்பைசங்கு
மிக்கசம் பீரமத்து வெற்றிலே கொற்ருன்நெல்லி. 157

இவையொன்று சாறுநாழி எண்ணெயிஞேடு விட்டுச்
சுவையுறு மதுரங்கோட்டஞ் சுக்கொடு தேவதாரம்
நவையுறு நாகப்பூவும் நாகண மேலமாஞ்சில்
சவையுறு சாதிபத்திரி சந்தனங் கிராம்புதானே. 158

கச்சோலம் நற்கார்கோலம் கருதுவெட் பாலேலவங்கம்
வச்சவோ ரொன்றுமூன்று கழஞ்சு கொள்மானே நீயும்
வெச்சென விடித்துத்தூவிப் பதத்திஞல்வெந்த எண்ணெய்
இச்சையாய் முழுகுவோர்க்கு இமைத்தடிப் போடுங்காணே. 159

திரிபலே, வேங்கைவைரம், வில்வவேர், சீந்தில்தண்டு, சிற்று முட்டிவேர்ப்பட்டை, நன்னுரிவேர், விலாமிச்சுவேர், வெட்டிவேர், மிளகு, தான்றிவேர், அமுக்குராவேர், ஒவ்வொன்றும் நான்குபலம் வீதம் எடுத்துத் தறித்துச் சிதைத்து நான்கு குருணி தண்ணீரிலிட்டு (8 படி) எட்டில் ஒன்ருக வற்றக்காய்ச்சி வடித்துக் கியாழம் எடுத்துக்கொள்க. அத்துடன் எண்ணெய், பால், இளநீர், கையான், தண்ணீர்விட்டான்கிழங்கு, பொன்னுங்காணி (கொடுப்பை), சங்கிலே, எலுமிச்சம்பழம், வெற்றிலே, முடக்கொற்ருன், நெல்லி' காய் இவற்றின் சாறு வகைக்கு ஒரு நாழி கலந்து அதில், அதிமதுரம் கோட்டம், சுக்கு, தேவதாரம், சிறுநாகப்பூ, நாகணம், ஏலம்,

சடாமாஞ்சில், சாதிப்பத்திரி, சந்தனம், கிராம்பு, கிச்சிலிக்கிழங்கு, தக்கோலம், வெட்பாலையரிசி, இலவங்கம், ஒவ்வொன்றும் முக்கழஞ்சு எடுத்து இடித்து பதத்தில் தூவிக் காய்ச்சிவடித்து அந்த தைலத்தை தேய்த்து மூழ்குவோர்க்கு இமைத்தடிப்பு நீங்கும்.

### இமைத்தடிப்புக்கு அஞ்சனப்பொடி

சீனக்காரந் துருசுதுத்தஞ் செய்யநிமிளை மனேசிலையும்
தானத்தெடுத்துச் சம்பீரப் பழத்தின்சாற்று லரைத்துவட்டாய்
கானக்குழலாய் சட்டிவைத்துக் கனலாலெரித்து வெளுத்த தென்றால்
ஊனத் திடுமவ் விழியெழுத விமையின் தடிப்பங்கோடிடுமே.

படிகாரம், மயில்துத்தம், பால்துத்தம், நிமிளை, மனேசிலை சமன் எடையாக எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து வில்லைசெய்து உலர்த்தி புதுச்சட்டியில் வைத்து கரி நெருப்பில் பக்குவமாய் எரித்து வெளுத்தபின் தூளாக்கி இமைத்தடிப்பு ஏற்பட்ட கண்ணில் எழுத அது தீரும்.

### இழிச்சக் கண்ணின் குணமும் மருந்தும்

கூரிய விமைவிளிம்பு குழகுழத் தேரோடி
யூறிடும் யுண்ணதாகி யுரைத்தது மாருதாகிற்
பார்விழி விழிக்கக்கூசும் பலப்பல விதனமாகும்
வார்தன மானேகேளு மிழிச்சக்கண் சாத்தியமாமே. 161

கச்சணிந்த முலையினளே! கேள். இழிச்சக்கண்ணென்பது இமை விளிம்பு புண்ணாய் அதிலிருந்து வடியும் குழகுழப்பான நீர் மண்டியதால் வழவழப்பாகவும், தினவும், கைகொண்டு இமையைத் தேய்த்தும் கசக்கியும் என்னவிதம் செய்தும் அத் தினவு குறையாமலும் இருக்கும். கண்விழித்துப் பார்க்க இயலாமல் கூசும், பார்க்கும் உருவங்கள் பற்பலவிதமாய் மாறிமாறிக் காணப்படும். இது சாத்திய நோயாகும்.

### இழிச்சக் கண்ணுக்கு நவச்சாரக் குழம்பு

நவசாரங் கழஞ்சிந்துப்பு துருசிவை மூன்றுநன்றாய்ச்
சுவைபெறு வெண்ணெய்கூட்டிச் சணங்குவெண் கலத்திலிட்டு
அவையினிற் சங்கினாலே யரைத்து மத்தித்துக்கொண்டு
இவையினை யிழிச்சக்கண்ணி லெழுதிட வேகுமென்றார். 162

நவச்சாரம், இந்துப்பு, துருசு தனித்தனியே ஒரு கழஞ்சு வீதம் எடுத்துத் தூளாக்கி வெண்கலக் கலுவத்திலிட்டு சங்கால் இழைத்து ஒரு செப்புச்சிமிழில் வைத்துக்கொள்க. இம் மருந்தை இழிச்சக் கண் கொண்ட கண்ணில் தீட்டிவர அந் நோய் குணமாகும்.

முடமயிரின் குணம்

பொருந்திடு மிமைமடிந்து நீரிஞற் புண்ணேயாகிச்
சரிந்திமை ரோமமுள்ளே சாய்ந்தது குத்திநோவாம்
தெரிந்திடு மணி வெளுத்துத் திமிரமே சேருங்கண்டாய்
அருந்ததி யிவ்வுரோக முடமயிர் சாத்தியமாமே. 163

அருந்ததிபோன்ற கற்புடையாளே! ஒன்ருேடொன்று பொருந்திக் கண்ணேமூடும் இயல்புடைய இமையின் ஓரம் உட்புறம் மடிவதால் இமையில் உள்ள மயிர் சாய்ந்தும் ஒருபுறமாய் உட்கையில் வளைந்தும் அம் மயிர் இருக்குமிடத்துக்குத் தக்க கருவிழி, வெள் விழிகளில் குத்தி உராய்வதாலும் கண்ணில்வலியும், கருவிழி வெளுத்தும் திமிரம் உண்டாகும். இத்தகைய நோய்க்கு முடமயிர் நோய் என்பது பெயர். இது சாத்தியமாம்.

குறிப்பு :— இது பில்லத்தைச் சரியான வழியில் குணப்படுத் தாததால் அந் நோய் முதிர்ந்து இமை விளிம்பில் வளைவுகளும் சுருக்கமும் மேடுபள்ளங்களும் உட்புறவளைவும் தோன்றலால் இமை மயிர் உட்புறமாகத் திரும்பி விழிக்குத் தீங்குசெய்வது என்பர் மேல்நாட்டுமுறை கண் மருத்துவர். ஆகையால் இதைப் பில்ல நோயின் துணைநோயாகக் கூறுவர்; தனிநோயாகக் கூருர்.

முடமயிருக்கு கருவியாடல்

சாய்ந்திடு ரோகமூல ஒழுங்கினைத் தவருநோக்கி
ஐந்துமேல் மறித்துக் கொண்டு எள்ளிடை சதையைநீவி
மாய்ந்திட வேரிஞேடே களைந்துமே லிமையில்மானே
சேர்ந்திட வொத்திகட்டத் தீருமென் றுரைத்தார் முன்னே 164

அறுத்திடு ரோமமூல மளவிலோர் கருவிசெய்கை
செறுத்திடும் விழியினுளே திரிந்துள்ளில் வளைந்தகம்பி
குறித்ததை யனற்றிக்கொண்டு கூரிமை விளிம்பில்வேக
மறித்தவை தீருமென்று மாதவனுரைத்தவாறே. 165

மான்போன்ற மருளும் விழியையுடையவளே! கண்ணிமையில் சாய்ந்துள்ள உரோமத்தின் ஒழுங்கினைத் தவருமல் பார்த்து இமையை மேற்புறமாகத் திருப்பி அந்த மயிரின் வேர்ப்பாகத்துடன் இமையின் தசையும் ஓர் எள்ளளவு சேர்த்துக் கருவியால் நீக்கி விடவும். அதனுல் வடியும் குருதியை நன்ருக ஒத்தித் துடைத்துக் கட்டவும்.

அவ்வாறு அறுத்த மயிரின் வேர்ப்பாகத்தினளவுக்கு ஒரே மட்டமான முனையும் உட்புறவளைவுமுள்ள கம்பியை அனலில் காய்ச்சி மயிர்வேருடன் நீக்கப்பட்ட இடத்தில் அழுத்தி வேகவைக் கவும். அப் புண் ஆறுவதற்குத் தக்க மருந்துகளை உபயோகித்துப்

புண்ணை ஆற்றிவிட அவ் விடத்தில் மயிர் மறுபடியும் தோன்றி வருத்தாதென்று மாதவனார் கூறியுள்ளார்.

குறிப்பு :— இத்தகைய மருத்துவம் மேல்நாட்டு முறையிலும் பழக்கத்திலிருக்கிறது. இதனைக் காடரைசேஷன் (Cautrisation) என்று கூறுவர். அப்படி சூடுவைக்கப்பட்ட இடத்தில் தழும்பு ஏற்படும். தழும்பில் உரோமம் முளைக்காதென்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் மருத்துவர்களுக்குத் தெரிந்த உண்மையன்றோ?

## முடமயிருக்கு களிம்பு

சோமனதி முக்கழஞ்சு துருசுகழஞ்சு இவையிரண்டும்
நாமே சொன்னோம் வெதுப்பியதை நவிலும் வெண்ணெய்தனி
சாமமரைத்து முடரோமஞ் சாருமிவையி லெள்ளளவு [லிட்டுச்
வாமதனத்தா யெழுதிடவே வளருமுரோம முதிர்ந்திடுமே. 166

சோமனதி மூன்று கழஞ்சும், துருசு ஒரு கழஞ்சுமாக இவ் விரண்டையும் வெதுப்பித் தூளாக்கி வெண்ணெயிலிட்டுக் குழைத்து முடமயிர் உள்ள இமையில் இடம்பார்த்துத் தடவிவர அம் மயிர் உதிர்ந்துவிடும். மறுபடியும் அவ் விடத்தில் வேறு ரோமம் முளைக்காது.

## பற்பரோகம் மூன்றுக்கும் பெயர்

சொல்லிய பற்பரோக நீர்ச்சதை துலங்கிரத்த
மல்லியங் கோதையேகே ளசாத்தியஞ் சதையாமென்று
வல்லியே நீரிரத்தஞ் சாத்திய மீதுதானே
பல்படத் தீருமென்று பகர்ந்ததை யறிந்துகொள்ளே. 167

இரவைப்போன்று கருங்கூந்தலையுடையவளே! இதைக் கேட் பாயாக. நீர்ப்பற்பநோய், சதைப்பற்பநோய், இரத்த பற்பநோய் என்று மூவகைப் பற்பநோய்கள் உண்டு. சதைப்பற்பநோய் அசாத் தியமாம்; மற்ற நீர், இரத்தபற்ப நோய்கள் சாத்தியமாம் என்று கூறியதை அறிவாயாக.

நீருறு பற்பரோகக் குணங்கண்ணீர் மிகுதியாகி
சோருறு மிமைகனத்துத் தோன்றிடு மிரத்தத்தாயே
சேருமிவ் விரோகச் செய்கை யிமைகளுஞ் சிவந்து செந்நீர்
வாருமாங்கிஷந்தானுள்ளே தடித்தது வளருங்காணே. 168

நீர்ப்பற்ப நோயில் கண்ணில் மிகுதியாக நீர்பாயும். இமை கனத்து வீங்கிச்சோர்ந்திடும்.

இரத்தபற்ப நோயில் இமையின் உட்புறம் சிவந்தும் செந்நீர் வடிதலும் காணப்படும்.

மாங்கிச பற்பத்தில் (சதைப்பற்பம் என்பது ; இதுவே) இமையின் உட்புறம் சதை தடித்து வளந்திருக்கும்.

புருவத்தின் மையமீது பொருந்திடும் பெருநரம்பின்
மருவிய குடோரியிட்டு வடியுநீ ரிரத்தம்போக்கி
யருவுநீர்ப் பற்பரோக மிகைகனப் பதுவுமாறுந்
தெரிவைநீ யிரத்தத்துக்குச் செய்திடுஞ் சிகிச்சைகேளே. 169

நீர்ப்பற்பம் கண்டுள்ள கண்ணின் புருவமத்தியில் பெரும் நரம்புள்ள இடத்தைத்தெரிந்து குடோரி என்னும் கருவியை உபயோகிக்கவும். கண்ணில் வடியும் நீரையும் குடோரி தாக்கிய இடத்தில் வடியும் குருதியையும் துடைத்துச் சுத்தம்செய்து மருந்து விட்டுவந்தால் நீர்பற்பம் நீங்கும். இரத்த பற்பத்துக்கான சிகிச்சையைக் கேட்டுக்கொள்வாயாக.

குறிப்பு :— குடோரி என்னும் கருவியின் உருவம் முதலியன இந் நூலில் எங்கெங்கு கூறப்பட்டிலாவது. அது கத்திபோன்ற கூர்மையான கருவியென ஊகிக்கலாம்.

தெள்ளிய விமைதடித்துக் கனத்தெழு முதிரந்தன்னி
லள்ளிலே நெடுவேற்கண்ணு யமுதமாம் குடோரியிட்டுக்
கொள்தசை யுரோகந்தன்னி லுப்பினுற் குழையத்தேய்த்து
உள்ளிடுஞ் சோரிபோக்கி யிடுமருந் துரைக்கக்கேளே. 170

தெளிவாய் இருந்ததான இமையில் தடிப்பு (வீக்கம்) ஏற்பட்டு கனத்துக் காணும் உதிரப்பற்ப நோய்க்கும் குடோரியைக்கொண்டு சிகிச்சை செய்க. தசைப்பற்ப நோய்க்கும் குடோரியால் தாக்கிய பின் அவ் விடத்தில் உப்புத்தூளால் தேய்த்து இரத்தம் போக்கவும் பிறகு மேற்படி கண்ணுக்குள் இடும் மருந்தைக் கூறுவேன் கேபாயாக.

### பற்ப ரோகத்திற்கு திரிபலாதி அஞ்சனப் பொடி

திரிபலை கடியகாணந் தேறுமோரிதழின் மூலம்
நறுவிய முட்டைக்கூடு நந்துசாறடையின்மூல
மறுபடி மடலின் துத்தம் வருஞ்சிறு கீரைசீதை
யுறுவது சீனக்கார மொன்று முக்கழஞ்சுதானே. 171

இவையெலு மிச்சஞ் சாற்றி லியல்புறவரைத் துலர்த்தி
யவையினைச் சட்டியிட்டு அனலெரி வெளுத்ததாலுல்
நவையறத் தேய்த்துக் கொண்டு நவில்பற்பரோகத்திட்டா
லிவைபொறுத் திடுமேயென்று இயம்பினு ரிறைவன்ருனே. 172

திரிபலை, கொள், ஓரிதழ்த்தாமரையின்வேர், கோழிமுட்டை ஓடு, சங்கு, வெண்சாரடைவேர், மடல் துத்தம், சிறுகீரைவேர், சீதேவிசெங்கழுநீர்வேர், சீனக்காரம் ஒவ்வொன்றும் மூன்று

கழஞ்சாய் எடுத்து, முறைப்படி எலுமிச்சம் பழச்சாற்ருல் அரைத்து வில்லைசெய்து உலர்த்திப் புதுச்சட்டியில் இட்டு கரி நெருப்பில் வைத்து வெளுக்கும்வரை எரித்து ஆறவிட்டு எடுத்துத் தூளாக்கிப் பதனம் செய்க. இதனைப் பற்பநோய் கண்ட கண்ணில் தீட்டிட அவை தாங்குமோ என்று கூறினர் இறைவனர்.

### கழலை மூன்றின் குணம்

இயம்பிய கழலைநீரா லிரத்தத்தாற் றசையினலே
வயங்கிமை மேலெழுந்து வளர்ந்திடு முரோகந்தானே
தயங்கிய விரத்தத்தாலே சார்ந்திடுங் கழலைதீரா
தியங்கிய தசையுநீருந் தீர்ந்திடு மியல்புகேளே. 173

நீராலும், இரத்தத்தாலும், தசையாலும் கண்ணின் இமையின் மேலிருந்து மூவகைக் கழலை நோய்கள் வளர்ந்திடும். இரத்தத்தால் கண்ட கழலை தீராது என்றும் தசைக்கழலையும் நீர்க்கழலையும் தீரும் என்பர். அதன் இயல்புகளைக் கேட்டறிவாயாக.

உருண்டேழு வியாதிதன்னை நேர்பிளந் துள்ளேதோன்று
மருண்டிடு முளையை நீக்கி வழுத்திடு கருவியிட்டுப்
பொருந்திய குருதியுண்டாற் பூவையே யெண்ணெய் நெய்யாற்
றிருந்தவே தாரைகுத்தி வேதனை தீர்த்திடாயே. 174

கழலையாக உருண்டு மேலெழுந்து காணப்பட்ட வியாதியைத் தக்க (கூரிய) கருவியால் நடுவில் நேராகப் பிளந்து அக் கழலையினுள்ளே உள்ள முளையை அறநீக்கி அதனல் குருதிப்போக்கு உண்டானல் எண்ணெய், நெய் இவற்றை ஒழுக்கி நோயைத் தீர்த்திடுவாய்.

குறிப்பு :— இக் கழலைநோய் கட்டியல்லவென்பதை மேற்படி செய்யுளில் கூறியுள்ள பெயர்களாலேயே அறியலாம். கழலை நோயில் தோலுக்கடியில், வெண்மையாய், வழுவழுப்பாய்த் தனிப்பை போலத் திரண்டு அதில் எத்தகை நிறமும் இன்றி நீர் போலத்திரவம் தங்கியுள்ளதை நீர்க்கழலை என்றும், மாமிச உருண்டைபோல் மேற்படி பையில் காணப்பட்டால் அதைத் தசைக்கழலை என்றிம் அறியக் கிடக்கிறது. இத்தகைய உள்ளீட்டை முளையென்பது முன்னேர் வழக்கு. இரத்தக்கழலையை அசாத்தியம் என்று கூறினமையால் அந்தக்கழலைக்கு மிகுந்த இரத்த ஓட்டம் இருக்குமாதலால் அதைக் கருவிகொண்டு அறுத்தால் ஏற்படும் இரத்தப்போக்கை நிறுத்த இயலா மற்போகலாம்: ஆகவே அந்த நோய் தீராதெனவும் கூறியுள்ளார் என்று ஊகிக்க இடந்தருதலை காண்க.

### இமைநீர்ப் பாய்ச்சல்

சிரமதற் கேற்பநின்று செறியுநீர் விழிநரம்பில்
மருவியே கனத்து ஊர்ந்து மந்தித்துத் திமிர்ந்துவீங்கும்
முருகவிழ் குழலினுளே மொழியுநீர்ப்பாய்ச்ச லென்று
விரைவிட னறியச்சொன்னேன் விரும்பிநீ யறிந்துகொள்ளே.

அழகிய கூந்தலையுடையவளே! இமையானது, அதில் மிகுதியாக நீர்ச்செறிந்திடலால் தலை, நெற்றி, புருவம், இமை என்னும் பாகுபாட்டைக் காட்டும் மேடுபள்ளங்களின்றி ஒரே சமானமாய் தலையிலிருந்து இமைகீழ் விளிம்புவரை கனத்தும், திமிர்த்தும், (எறும்பு போல்வன) ஊர்ந்து செல்வன போன்றும், வீங்கிடும் அந்த வியாதியை நீர்ப்பாய்ச்சல் என்று கூறுவர். இதனை நீ அறிவாயாக.

### இமை நீர்ப்பாய்ச்சலுக்கு வில்வாதித் தைலம்

வேங்கை வயிரம் வில்வவேர் மேவு சீந்தில் நன்னாரி
பாங்கார் சிற்ரு முட்டியின்வேர் பலமொவ் வொன்ரு மூன்ருக
வாங்கி நீர்பதி ஞழிவிட்டு வற்றக் காய்ச்சி இரண்டுபடி
பாங்காய் பச்சிலை கச்சோல மடைவா மேல மதிமதுரம். 176

மதுரங் கோட்டங் கொத்தமல்லி வளர்நாகப்பூ சதகுப்பை
இதமாஞ் செவ்வள்ளி சாதிக்காய் இலவங்கத்தோல் வெந்தயமும்
கதமார் மிளகு சீரகமும் கையான்சாறு தானுரியும்
வதை செம்பீரச் சாறுழக்கும் வகையாய்க் கூட்டித் தைலம் வையே. 177

வையே தைலம் பதம்வந்தால் வருடி வடிக்கு நேரமதில்
மெய்யோர் பிடியா மிளகுபொடி மிக்க அபின்காற் கழஞ்சிட்டுப்
பையவடித்து வெந்நீரிற் பதமதாக முழுகிவர
நையுமண்டை நோதல்விடும் நயனநீரும் மாறிடுமே. 178

வேங்கைவயிரம், வில்வவேர், சீந்தில், நன்னாரி, சிற்ருமுட்டிவேர், இவை தனித்தனியே மும்மூன்றுபலமாக எடுத்து பத்து நாழி நீரிலிட்டு அதை அடுப்பேற்றி இரண்டு படியாக வற்றக்காய்ச்சிக் கொண்டு அதில் பச்சிலை, கிச்சிலிக்கிழங்கு, ஏலம், அதிமதுரம், கோட்டம், கொத்துமல்லி, சிறுநாகப்பூ, சதகுப்பை, செவ்வல்லிக் கிழங்கு, சாதிக்காய், இலவங்கப்பட்டை, வெந்தயம், மிளகு, சீரகம் (கற்கமாகவும்) கையான்சாறு இரண்டு உழக்கும், சாம்பீரச் சாறு ஓர் உழக்கும் கலந்து தைலம் காய்ச்சுவாயாக. பதம் வரும் வரை அடிபிடிக்காமல் நன்ருய்ச் சுறண்டிக் கிளறிக் கலக்கி வடிக்கும் நேரத்தில் ஒரு பலம் மிளகுப்பொடியும் கால் கழஞ்சு அபினும் போட்டு வடிகட்டி தலைக்குத் தேய்த்துக்கொண்டு வெந்நீரில் தலை முழுகிவர விழிநீர்ப் பாய்ச்சல், மண்டை நோய் ஆகிய நோய்கள் தீரும்.

குறிப்பு :— இம் முறையில் சேர்க்கவேண்டிய முக்கிய சரக்காகிய எள்நெய்யையும் அதன் அளவைக் கூறப்பட்டிலது. இந்த 'பாக்களில் கூட்டித்தைலம் வையே' என்ற சொற்றொடர் வருவதால் (பா:எண் 177) இதில் தைலம் சேர்க்கவேண்டும் என்று அறியக் கிடக்கிறது. மற்றும் இதில் எண்ணெயின் அளவு மருத்துவச் செய்முறைச் சட்டப்படி முக்கிய கியாழத்துக்கு அரை பங்கு சேர்க்க வேண்டும் என்று கொண்டு ஒரு படி எண்ணெய் கூட்டித் தைலம் காய்ச்சிக் கொள்க.

இது பெரியோர் கூற்றுகையால் இதனை ஏதம் என்று கூறாமல் ஓர் உத்தியென்று கொண்டு அமைத்துக் கொள்வது சாலச்சிறந்த தாகும்.

### சுற்றுக்குலைவு

அன்னமே யிமையுரோம முதிர்ந்தது புண்ணேயாகும்
பன்வித நீரும்பாயும் பல்பட வலிக்குங்குத்தும்
கொன்விழி மயக்கமாகுங் குழகுழத் திழியும் பீளை
இன்னவை குணங்கள் சுற்றுக் குலைவென வியம்பலாமே. 179

அன்னம்போன்ற (நடையுள்ள) வளே! இமையிலுள்ள மயிர் உதிர்ந்து அவற்றின் விளிம்பு முற்றும் புண்ணாகும். அப் புண்ணிலிருந்து பலவகைத் (நீர், சீழ், குருதி, நிணம்போன்ற) திரவங்கள் ஒழுகும். பார்வை மயங்கும். பீளை குழகுழத்து கண்ணிலிருந்து வழியும். இத்தகைக் குறி குணங்கள் கண்டால் சுற்றுக்குலை என்று கூறலாகும்.

### சுற்றுக்குலைவுக்கு மருந்து

பஞ்சலவணம் பொரிகாரம் பகருந் துருசு இவையிரண்டும்
மிஞ்சா தொன்று கழஞ்சுகொண்டு மின்னேவெண்ணெய்தனி
ஒஞ்சாதரைத்து விழியெழுத வோடும் மயக்க முடரோமந் [லிட்டு
துஞ்சுஞ் சுற்றுக் குலைவிவைகள் தோன்றுதோடிப் போமென்றே.

பஞ்சலவணம் (சோற்றுப்பு, கருப்புப்பு, வளையலுப்பு, இந்துப்பு, வெடியுப்பு) நாட்டுவெங்காரம், துருசு ஆகியவை தனித்தனியே ஓர் கழஞ்சு வீதம் எடுத்துத் தூளாக்கி வெண்ணெயில் இட்டு நன்றாக உறவுபட அரைத்துக் கண்ணிலிட, பார்வை மயக்கம், முடமயிர், சுற்றுக்குலைவு ஆகிய நோய்கள் தீரும்.

### புழுக்கடி அல்லது கிருமித்தோலின் குணம்

உள்ளிமை விளிம்பிலூறு முரோமமுமுதிரும் புண்ணாய்த்
தெள்ளழல் போலக்காந்தும் ஓடுமே யிரத்தந்தானும்
வெள்ளிடை சிவக்கவீங்கித் தடித்திடுமிக்குணங்கள்
அள்ளிலை நெடுவேற்கண்ணாய் புழுக்கடிக்குணமதாமே. 181

இமையின் உட்புறத்தில் ஊறல், இமை மயிர் உதிர்ந்துபோதல், இமையின் ஓரம் புண்ணுய் தீப்போல் எரிச்சல் தரும். அப் புண்ணி லிருந்து இரத்தம் கசியும். வெள்விழி சிவந்தும் இமைத்தடித்து வீங்கியும் காணில் அது புழுக்கடிக் குணமாம்.

### புழுக்கடிக்கு மருந்து

நானங்கள்ளி வடக்காக நாடும் வேரைப்பறித்துலர்த்தித்
தேனேசீலேதனிற் சுருட்டிசிற்ருமணக் கினெண்ணெயினுல்
மானேயெரித்து வெண்கலத்தில் மையேபற்றவைத்திதனைக்
காஞர்குழலா யெழுதினக்காற் கருதுங்கிருமி மாய்ந்திடுமே. 182

சதுரக்கள்ளியின் வடக்கிலோடும் வேரைக்கொணர்ந்து வெய்யிலில் உலர்த்தி அதன்மேல் சுத்தமான வெள்ளைத் துணியைச் சுற்றிச் சிற்ருமணக்கு எண்ணெய் ஓர் ஆழமான பெரிய மண் அகலில் விட்டு அதில் முன் தயாரித்த திரியை இட்டு விளக்கேற்றி வெண்கலப் பாத்திரத்தில் அவ் விளக்குமையைப் பிடித்து அந்த மையைக் கண்ணிலெழுதிவரப் புழுக்கடி நீங்கும்.

குறிப்பு :— சிற்ருமணக்கு நெய்யிலேயே மை குழைத்தல் நலம்.

### இமை உயர்ச்சி

வாததோஷம் வசூரியினுல் வருத்தும் விதனவியாதியினு
லேதுவாகவிமையுயரும் இயம்பிஞே மசாத்தியமென்
ருதிமுதல்வ னுரைத்தருளும் சித்தர் வேதச்செய்கைதன்னை
நீதிமுறையை முனியுரைத்து நின்றகுணத்தைநீயறியே. 183

வாததோடத்தாலும், அம்மைநோயாலும், மற்றும் கண்களை வருந்தும் பற்பல நோய்களாலும் இமை உயர்ச்சி என்னும் நோய் உண்டாகும் இது அசாத்தியமாம்.

### கடைக்கண் தோஷம் 15-க்கும் பெயர்

கண்ணேக்காடு1. பூசாந்திரம்2. நீர்ப்படத்தி3. இரத்தப்படர்த்தி. தசைப்படர்த்தி5. நீர்க்குவை6. இரத்தக்குவை7. மாங்கிஷக் குவை8. விழிவாதம்9. விரணப்பரு10. விப்புருதி11. இமைக் குருடு12. இமைக்குமிழ்13. நேத்திரவாயு14. கண்ணேவு15.

### கண்ணேக்காட்டின் குணம்

முக்கடிகடையினுள்ளே முளைத்தெழுகுமிழமாகத்
தாக்கியேசவ்வுமுடி வெடித்திடச் சலமுமாகும்
நோக்கிடில் அசாத்தியமாகும் நுவலுமேசித்தர்வேதம்
வீக்குவார் முலேயினுளே கருவியால் விடுவித்தாற்றே. 184

மூக்கின் அடியிலுள்ள கடைக்கண்ணிலிருந்து குமிழாக எழும்பிச் சவ்வுபோலப் படர்ந்து மூடியிருந்து பின் அது வெடித்து உள்ளேயிருந்து நீர் வரும். இது அசாத்தியமாம். கருவியால் அறுவைசிகிச்சை செய்து அதனுல் ஏற்படும் புண்ணை ஆற்று வாயாக.

குறிப்பு :— இது கண்ணேக்காட்டின் குணமென்று பாட்டில் காணப்படவில்லை.

### பூச்சாந்திரத்தின் குணம்

இளகியே பீளேநிற்கு மிடத்திற்கு எள்ளின்மேலே
வளமுறுபருத்திவித்துப் போலெழுமானே கேளா
யுளேவுறுமொடு வுட்பாயுஞ் சாத்திய முணர்ந்துகொள்நீ
விளேவிஞல் கருவிசெய்திவ் வேதனே தீர்த்திடாயே. 185

கடைக்கண்ணில் பீளேதங்கும் இடத்துக்கு எள்ளளவு மேலே பருத்தி வித்துபோல ஒரு எழுச்சி காணும். கண்ணில் வலியும், கண்ணுள்ளே கூர்மையாகிய கருவி பாய்ந்ததுபோல உளேச்சல் உண்டாகும். இது சாத்தியமான நோயாம். தக்க கருவிகொண்டு எழுச்சியை அகற்றிப் புண்ணே ஆற்றுக.

குறிப்பு:— இது பூசாந்திரத்தின் குணமென்று பாட்டில் காணப்படவில்லை.

### நீர்ப்படர்த்தி, இரத்தப்படர்த்தி, சதைப்படர்த்தி

இளகிய கடையினுள்ளே இளகிநீர் சதையிரத்த
மழலெனப் படருமானே அசாத்தியமல்லமூன்று
வழுவற விதற்குமுன்சொல் பொடிமருந் ததனுற்றீரும்
மழவிடையூர்ந்தோன் சொன்ன வாகடத் தியல்புதானே. 186

கடைக்கண் இளக்கங்கொண்டு அங்கு நீர், சதை, இரத்தம் என்பவை ஏதேனும் ஒன்று எரிச்சலுடன் தோன்றிப் படர்ந்து வரும். இவை மூன்றும் அசாத்தியமல்ல. முன்னேகூறிய கண் மருந்துப் பொடிகளேக் கொண்டு தீர்க்கலாம் என்று இளமை பொருந்திய காளேயை வாகனமாய் ஊர்ந்தோன் கூறிய வாகடத் தின் இயல்பாகும்.

குறிப்பு:— கடைக் கண்ணிலிருந்து படரும் என்பதால் இந்த நோயைப் படர்த்தி என்பார் போலும்.

### நீர்க்குவை, இரத்தக்குவை, மாங்கிஷக்குவை

சொல்லுநீர்த்தசையிரத்தந் தோன்றிய குன்றிபோலக்
கல்லெனப்புடைத் தெழுந்து கடையிரண் டதனிற்ருேன்றும்
முல்லேயின் நகையினுளே கருவியால் முளேயைநீவிப்
புல்லிநேர் துருசால்முன்சொல் பொடியினே யெழுதப்போமே.

இரு கடைக் கண்ணிலும் குன்றி போன்று புடைத்துக் கொண்டும் கல்போலத் திண்மையாயும் தோன்றும். இவற்றுக்குள் தங்கும் நீர், இரத்தம் தசையைக்கண்டு இந்நோய்களுக்கு முறையே நீர்க்குவை, இரத்தக்குவை, மாங்கிசக்குவை எனப்பெயரிட்டார்கள். அதைக் கருவியால் அறுத்து குளேயை நீக்கிவிட்டுத் துருசு சேர்ந்த கண் மருந்துப் பொடிகளால் ஆற்றவும்.

### விழிவாதம்

கண்ணிடை மிக்கவாதத் தோஷங்கள் கழித்துநின்ருல்
நண்ணிமையயர்ந்து கொட்டிநடுங்கிடுங் குறைக்கண்ணுகும்
அண்ணலாருரைத்தசெய்கை சாத்தியமதற்குத்தானே
திண்ணமாய்ப் புருவத்தின்மேல் அருகுசெய்திடவே தீரும். 188

கண்ணில் மிக்க வாததோடம் தங்கினுல் இமையில் அயர்வும் கண்ணிமைத்தல் அதிகரித்தும், இமை நடுக்கம் உண்டாகியும் காணப்பட்டால் அது விழிவாதம் எனப்படும். இது சாத்தியநோய். அதற்குப் புருவத்தின்மேலே 'அருகு' செய்திடத் தீரும்.

குறிப்பு :— அருகு செய்தல் என்பது தக்க கருவிகொண்டு சூடாக்கிக் குறிப்பிட்ட இடத்தில் சுடல்.

### விரணப்பரு, விப்புருதி, இமைக்குரு, இமைக்குமிழ்

கடைவிழியதனிற் ருேன்று விப்புருதி பருப்புண்ணென்னு
மிடருது வியாதிவந்தா லிணக்கமா மருந்துசெய்தே
உடையவிந்நிதானந் தன்னு லோதிய நூலிற்கண்டு
அடைவிலே செய்வைமுன்சொல் பருவொன்று மசாத்தியமாமே.

கடைக்கண்ணில் தோன்றும் விப்புருதி பரு, புண்ணென்னும் துன்பந்தரும் நோய்கள் தோன்றினுல் நூலில் கூறியுள்ள முறைகளே ஆய்ந்து தக்க மருத்துவம் செய்க. கடைக்கண்ணில் தோன்றும் பருவை அசாத்தியம் என்பர்.

### பில்லத்திற்கு மருந்து

செந்தலேவ ராகனிடை கலமிந்துப்பு
திரிதோஷ சமனிசொரி யோன்வகைக்கோ
ரைந்துவளே யாறுவிசு வந்தா னென்று
ஆனபித்த நாசனியி ராறே கண்டாய்
கொந்துதிருஷ் டிப்பிரசா தனியுமாறே
கோழையறுக் குஞ்சூரன் தசமதென்க
இந்தவொன்பதுங்கலூர லிட்டுப்பாரை
யேந்திடித் தம்மியில் வைத்தியம்பக்கேளே. 190

சுத்தநீர் விட்டரைத்துக் கல்வத்திட்டுத்
துய்யகனிச் சாற்றுன்மூ வெழுநாடேய்த்துப்
புத்தமுத மொழியே மாத்திரைக ளாக்கிப்
போந்தநிழ றனிலுலர்த்தி வழங்கு வாயேல்
சத்தியமாய் விழிசூலே வாதகாசஞ்
சதைவளர்ச்சி பில்லமுதலிய நோய்தீருங்
கத்துகடல் சூழுலகோர் கண்டுவாழக்
கனநாக ஞரிதனைக் கழறினுரே. 191

சவ்வீரம் 12 வராகன் எடை; இந்துப்பு, மிளகு, திப்பிலி வகைக்கு 5 வராகன் எடை; சங்கு 6 வராகன் எடை; காவிக்கட்டி 1 வராகன் எடை, சீரகம் 12 வராகன் எடை, திருட்டி பிரசாதினி 6 வராகன் எடை, அதிமதுரம் 10 வராகன் எடை, நன்கிடித்த தூள் மேற்படி அளவில் கூட்டி நீரால் ஒரு வாரம் அரைத்த பின் பழச்சாற்றுல் 21 நாட்கள் அரைத்து மாத்திரையாய் உருட்டி நிழலிலுலர்த்தி உபயோகிப்பாயாக. உண்மையாக விழிசூலே, வாதகாசம், சதைவளர்ச்சி, பில்லம் முதலியவை தீரும் என்று நாகனுர் கூறினுர்.

## நேத்திரவாயுவுக்கு மருந்து

நடுநரம்பதிற்குடோரி செய்திடு நயந்தரத்தங்
கடுகவேபாய்ந்துபோனுல் கருதுவேப் பெண்ணெய்நாழி
உடன்வசம்புள்ளி சன்னி நாயக முசுருமுட்டை
அடைவிலே நாங்கூழ்கோழிக் காரம் வட்டமுந் தாமாமே. 192

ஆந்திரி கடுகுவெட்பா லரிசியொவ் வொன்றுதானே
யேந்திழை நீவிரைந்து கழஞ்சிட்டு வெந்த எண்ணெய்
சேர்ந்த நேத்திரத்தில்வாயு நீர்ந்திடச் சிரத்திலப்பிக்
காய்ந்தநீ ரதனினுலே கழுவிடக் கடுப்புபோமே. 193

கண்ணில் நேத்திரவாயு கண்டவர்க்கு நடு நரம்பில் குடோரிப் பிரயோகம்செய்து இரத்தம் மிகவும் பாய்ந்துபோனுல் அதனுல் ஏற்படும் கடுப்பும் தீர: வேப்பெண்ணெய் ஓர் நாழி எடுத்து அதை அடுப்பிலிட்டுக் காயும்போது வசம்பு, பூண்டு, சன்னி நாயகம், முசுறு முட்டை, நாங்கூழ், கோழிக்காரம் (கோழி மலம்) நந்தியாவட்டம், திரிகடுகு, வெட்பாலேஅரிசி இவை வகைக்கு ஓர் கழஞ்சு எடுத்துப் பொடித்துத் தூவி பதமாய்க் காய்ந்தபின் வடித்து வைத்துக்கொண்டு தலேயில் தேய்த்து வெந்நீரில் மூழ்கவும்.

### கண்ணோவின் குணம்

உட்டணந் தன்னினாலு முறுவெயிற் காற்றினாலுங்
கட்டமாஞ் சுமையினாலுங் கடுகிய நடையினாலும்
மட்டவிழ் குழலினாளே வந்திடும் விழிக்குநோவா
யிட்டமா யறிந்துகொண்டு இதற்கிடு மருந்துகேளே. 194

மிக்க சூட்டாலும், மிக்க வெய்யிலாலும், காற்றாலும் அதிக சுமையைத் தலையில் தாங்குவதாலும், விரைந்த நடையாலும் கண்களுக்கு நோவுண்டாகும். அதையறிந்து அதற்கிடும் மருந்து தன்னைக் கூறுவேன் கேட்பாயாக.

### கண்ணோவுக்கு ஒத்தணம்

ஆவின்பாலு மிரண்டுபடி அதனிற்புளியிலை யிரண்டுபிடி
காவியெழுத்துங் கண்மடவீர் கடுகாய்த் திரளக்காய்ச்சியபின்
சீவிச்சீலை தனிலேயிட்டுத் திரள்பொட்டணந்தான் கட்டியொத்தக்
கூவிவலிக்குங் கண்வலிதான் குணமாங்குணமாங் குணமாமே.

**இரண்டு படி பசுவின் பாலில் இரண்டு பிடி (பலம்) புளியிலையை இட்டுக் கொதிக்கவைத்து அது சுண்டித் திடப்பட்டுத் திரளாக வந்ததை துணியில்வைத்து பொடணமாக்கிக் கண்ணில் ஒற்றடம் கொடுக்க கண்வலி குணமாகும்.**

### கண்ணோவுக்கு மாத்திரை

**ஆறுகூறு கடுப்பருப்பு ஐந்துகூறு கனமிளகு
தேறுந்திப்பிலி முக்கூறு தேற்றான் விதையிந்துப்புடனே
ஏறிட்டேழு நாளரைத்து இந்தக்குளிகை வருகுதெனப்
பாறிக்கண்ணோவுள்ளதெல்லாம் பன்னிருயோசனை ஓடிடுமே. 196**

**கடுப்பருப்பு (கடுக்காய் உள்பருப்பு) 6 பங்கு, மிளகு 5 பங்கு, திப்பிலி மூன்று பங்கு தேற்றான்கொட்டை, இந்துப்பு இவைகளை ஏழு நாட்கள் அரைத்து மாத்திரை செய்க. இதனால் கண்ணோய்களெல்லாம் தீரும்.**

குறிப்பு ;— இதை அரைக்கச் சாறு ஒன்றுங் கூறாமையால், அநுபவத்தை ஒட்டித் தாய்ப்பால் விட்டரைத்துக் கொளல் மிக்க நலம்.

### கண்ணோவுக்குச் சூலை மருந்து

சம்பீரத்தின் சாறுழக்குச் சாருங்கரியி னுப்புழக்கு
வம்பார் முலையாயிந்துப்பு துருசுகழஞ்சு மத்தித்துச்
செம்பா லேவெண்கலமீது சேர்த்துச் சீலையிற்றுவைத்துத்
தம்பாரமதாய்த் தப்பினக்கால் சாரும்பச்சை நிறமாமே. 197

கறியுப்பு ஒரு உழக்கு, இந்துப்பு துருசு வகைக்கு ஒரு கழஞ்சு, இம் மூன்றையும் இரண்டாழாக்கு பழச்சாற்றல் வெண்கலக் கல்வத்தில் செம்பால் அரைத்து, சீலையில் தடவி உலர்த்தி வைத்துக் கொள்க. இது கரும் பச்சை நிறமுடையதாக இருக்கும்.

சீலைபணத்தி னளவெடுத்துத் தேனுர்தனப்பால் தனிற்கரைத்து
ஆலமெனவே நோம்விழியி லனற்றியொழுக்க வலியிடிகள்
மேலுஞ்சிவப்பு நீர்ப்படல மெல்லாந்தீர்க்கு மிதுவென்று
ஆலமிடற்றண் ணலுமுரைக்க அயனுமுரைத்தாரவனியிலே.

மேற்படி சீலையைத் தாய்ப்பாலில் ஊறவைத்து வெதுப்பிக் கசக்கிக் கண்ணிலிட கண்ணில்காணும் வலி, இடிகள், சிவப்பு, நீர்ப்படலம் எல்லாம் தீரும் என்று சிவன் கூறியதை அயன உலகோர்க்கு உபதேசித்தான்.

### கருப்பிலழகிதான குளிகை

சேங்கொட்டை ரோணியிந்து திருகுகள்ளியின் வேர்நாலும்
பூங்கொடி கருக்கிக்கொண்டு புகலுஞ்சம்பீரச் சாற்றல்
ஆங்கரைத் துருட்டிவைத்து அன்னையர் பாலிற்றேய்த்துத்
தீங்குறுங் கிருமிசுற்றுக் குலைவுக்குத் தீட்டப்போமே. 199

சேராங்கொட்டை, இந்துப்பு, பீதரோகணி, திருகுக்கள்ளி வேர் ஆகிய இந் நான்கையும் நன்றாகக் கறுக்கிக்கொண்டு பழச் சாற்றல் நன்கரைத்து மாத்திரையாய் உருட்டி வைத்துக்கொள்க.

மேற்படி மாத்திரையைத் தாய்ப்பாலில் இழைத்துக் கிருமி, சுற்றுக்குலைவு ஆகிய நோய்களுக்குக் கண்ணிலிட அவை குணமாகும்.

### அமிர்தயோகம்

உண்டுகை விளக்கியே உதகங் கண்ணினும்
மண்டல முகத்தினும் வயிற்றி னும்மிடு
விண்டெழு முத்தெனப் பல்வி ளக்கிடு
மண்டை சேர் கண்ணுக்கு அமிர்த யோகமே. 200

உண்டபின் கையைக் கழுவிக்கொண்டு பின் தண்ணீரைக் கண்ணிலிட்டு கண்ணைக் கழுவுக. வயிற்றின்மேல் குளிர்ந்த நீருற்றிக் கழுவுக. பற்களை முத்துப்போல் ஒளிரத் தேய்த்து விளக்குக. இவ்வாறு செய்துவரின் அது கண்ணுக்கு அமிர்த யோகம் எனப்படும்.

நாகமுனிவர் நயனவிதி இருநூறு

முற்றும்.